பஞ்சபாண்டவர் வனவாசம்

1926

உ

முருகன் துணை.

புகழேந்திப்புலவர்

பஞ்சபாண்டவர் வனவாசம்.



மதுரை தாளமுத்துப்பிள்ளைசந்து
அ. ஆதிமூலம் பிள்ளையால்
மதுரை வடக்குமாசிவீதி
மீன்மணி விலாசம் பிரஸில்
பதிப்பிக்கப்பெற்றது.

விலை

1927

உ

கடவுள் துணை.

வித்வசிரோன்மணியாகிய

புகழேந்திப்புலவர்

திருவாய்மலர்ந்தருளிய

பஞ்சபாண்டவர்

வனவாசம்.

இவை,

சிதம்பரம்,

நடராஜசுவாமி யவர்களால்

பார்வையிடப்பட்டு,

மதுரை

புதுமண்டபம் புக்ஷாப்,

இ. மா.

கோபால கிருஷ்ணக்கோனார்

உத்திரவின்படி,

சென்னை,

பி-வே-நமசிவாய முதலியார்

அவர்களது

நிரஞ்சனவிலாச அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

[illegible]] 192[illegible]. [[illegible].

ஸ்ரீ

ஸ்ரீகிருஷ்ணசகாயம்.

பஞ்சபாண்டவர் வனவாசம்.

விநாயகர் தோத்திரம்.

ஐங்கரத்தோனே அரனார்திருமகனே
அறுமுகற்குமூத்தவனே ஆனைமுகப்பிள்ளையரே
தொந்திவிநாயகரே தொப்பைக்கணபதியே
பானைவயிற்றோனே பழமேந்துங்கையோனே
மூலமுதலேநீர் முன்னடக்கவேணுமையா

சரஸ்வதி தோத்திரம்.

நாவிற்சரஸ்வதியே நான்முகனார்தேவியரே
சதுர்முகனார்தேவியரே தாயேசரஸ்வதியே
வாக்குவாமருள்வாய் மறையவனார்தேவியரே
இந்தக்கதைசொல்வதற்கு என்கருத்தில்வாருமம்மா
தப்புகளில்லாமல் தாயேநீவாக்கருள்வாய்
பஞ்சவர்கள் தன்கதைக்கு பாரதியேமுன்னிருந்து
குற்றங்குறைவாராமல் கொண்டணைத்துக்காருமம்மா

கதையின் வரலாறு.

முதலாவது-சூரியவனம்.

காரானைக்கன்னே கணபதியேமுன்னடவாய்
ஐவர்பஞ்சபாண்டவர்கள் ஆரணியம்போனபின்பு
தேசத்தழகுமன்னன் திரியோதிரப்பெருமான்
வனவாசம்போனபின்பு மகாராசனென்னசெய்தான்
அம்மான்சகுனியை அருகாகத்தானழைத்து
மாமன்சகுனியின் மதிமுகத்தைத்தான்பார்த்து
மாநாகங்கொண்டதொரு மகாராசனேதுசொல்வான்
சபைகள்நிறைந்திருக்கச் சர்ப்பக்கொடியோனுரைப்பான்
ஐவர்வனவாசம்போ யஞ்சாறுமாதமுண்டு
செத்தாரோபிழைத்தாரோ சேதிதெரியவில்லை
வனம்போனபாண்டவர்கள் மாண்டபின்வழியேன்
[illegible]ரவத்துசன்கேட்கையில் ...



மாமன்சகுனியுந்தான் மருமானுக்கேதுரைப்பான்
அந்நகரைபோகவிட்டு தொலைதூரமேதேடில்
வனமாய்வனங்களிலே வனவாசஞ்செய்கிறதும்
செத்ததுவும்பிழைத்ததுவும் சேதிதெரியுமென்றார்
என்றதுகேட்டவுடன் எழுந்தானேதிரியோதிரனும்
அவ்விருந்ததூதர்களை அரசமன்னன்தானழைத்து
நீவிர்வனம்போய் அனேகநாளச்சுது
எந்தவனத்தி லிருக்கிறாரென்றறிந்து
ஒருவர்கண்காணாமல் அதிசீக்கிரம்வாருமென்றார்
காத்தாய்ப்பறந்து கடுகியேவாருமென்றான்
தாம்பூலம்வாங்கித் தான்வந்தார் தூதுவர்கள்
கோட்டைகடந்தார்கள் கொத்தளமுந்தான் கடந்தார்
வெங்கைபடர்ந்தவனம் வெண்களாக்காய்பூத்தவனம்
கொங்குபெருத்தவனம் கொன்றைகளாய்பூத்தவனம்
பாதிரிமுல்லை பருத்தவனங்கடந்து
ஒருநாரைக்கிருநாரை உயர்ந்தகொம்பில்தானிருக்கும்
கருநாரைக்கிளைதேடுங் கதலிவனங்கடந்து
சூரியவனத்தினிலே போய்சேர்ந்தார் தூதுவர்கள்
பர்ணசாலைக்குள்ளிருக்கும் பஞ்சவரைக்கண்டார்கள்
இருக்குமிடமறிந்து வகிடந்தார்கள்
வனமாய்வனங்கடந்து வாரார்களம்பலத்தே
திரியோதிரனிருந்தந் சிங்காதனத்தின்முன்பாய்
சாஷ்டாங்கமாயவேதான் சரணமிட்டார் தூதுவர்கள்
மகாராசர்செய்கின்ற மன்னவரேநீர்கேளும்
சூரியவனத்திலவர் சுகமாயிருக்கிறார்கள்
பர்ணசாலைமேலாகப் பஞ்சவரைக்கண்டோமென்றார்
அவ்வார்த்தைகேட்டு அரசமன்னனேதுசொல்வான்
மாமாசகுனி மன்னவரேநீர்கேளும்
எத்தனிதம்பண்ணாலும் இறவாமல்பஞ்சவர்கள்
தப்பிப்பிழைத்து யிருக்கிறார் தாரணியில்
வனவாசந்தீர்ந்து வந்தார்களாமானால்
பங்குள்ளபிரகாரம் பாதிராச்சியங்கேட்பாரே
மாமன்பஞ்சவரை வனத்திலேகொல்லுகைக்கு
ஆலோசனைசொல்லுமையா அம்மானெனவுரைத்தான்
மாமன்சகுனி மருமானுக்கேதுரைப்பான்
செல்வமருமகனே திரியோதிரா அஞ்சாதே
இவரைக்கொல்லவென்றால் ஆலோசனைசொல்லுகிறேன்
தேவலோகத்திலிருக்குஞ் சினமுற்றதுருவாசர்
[illegible] தபசுபண்ணால் வந்திடுவாரிப்பொழுதே

வந்தபொழுதில் வருந்திச்சரணஞ்சொல்லி
அடிசில்சமைத்து அறுசுவைபடைத்தானால்
போசனமிட்டு புகழ்பெற்ற பொற்பாதத்தில்
சரணமடைந்திட்டால் சந்தோஷப்பட்டிடுவார்
துருவாசர் தன்மகிமை சொல்லிமுடியாது
தேவராலாகாது ஜெயிக்கமுடியாது
ஆராலுமாகாது அந்தரிஷியைச்ஜெயிக்க
அப்படிக்கொத்தவரை அழைத்தன்னமிட்டால்
சந்தோஷப்பட்டிடுவார் தபசில்பெரியவரும்
ஐவரைக்கொல்லுதற்கு அவரைமனுக்கேட்டால்
நல்லதென்றுசொன்னால் இராச்சியமுனதுடா
யாராலேயாகும் ஐவரைக்கொல்லவென்றால்
என்றுசொல்லக்கேட்டு இராசன்துரியோதனன்
உள்ளங்குளிர்ந்து உடனேதானெழுந்தார்
அங்கொருவர்தானறியா அரவக்கொடியோனடந்தான்
முத்துமணிபடியைத் தொட்டடைந்தைத்தான்
பூங்காவனம்புகுந்து புதுகங்கைநீராடி
ஸ்நானங்கள்செய்து செபதபமுந்தான்முடித்து
நினைத்தசிவனை நெற்றியில்வெண்ணீறணிந்து
ஆகாரவென்று அள்ளியிட்டான்வெண்ணீறு
சலங்களைக்கொண்டு நிலங்களைச்சுத்திசெய்து
தெற்பாசனம்போட்டு துரியோதனராஜன்
துருவாசமகாரிஷியை அருகில்வரத்தானினைந்து
கண்ணிரண்டுமூடிக் கருத்தில்நினைத்தானே
அருந்தவசுபண்ணுனே அரவக்கொடியோனும்
அப்போது அந்தரிஷி ஞானதிருஷ்டியினால்தானறிந்து
சர்ப்பக்கொடியோன் தபசுநிலையறிந்து
சந்தோஷமாகி தான்வருவாரந்தரிஷி
சடையுஞ்சடைமுடியுந் தம்பிரானைப்போலே
கையில்கமண்டலமுங் காஷாம்பரமணிந்து
தெண்டுகமண்டலமும் திருநீற்றுக்கோபியுடன்
வருகிறாரந்தரிஷி வானுலகந்தான்கடந்து
வனமாய்வனங்கடந்து வாழ்மலையுந்தான்கடந்து
துரியோதனன்தபசு நிலைசேரவந்தரிஷி
கண்டவுடன்மன்னன் [illegible]னெழுந்து
முக்காலுமன்னன் முடிவணங்கித் தெண்டனிட்டு
ஆண்டவரேஐயாவே அடியேன்சரணமென்றான்
சிறந்ததுருவாசரிஷி சித்தமகிழ்ந்துமனங்குளிர்ந்து
என்னையழைத்ததுதானேது கருமமென்றார்
மனதில்நினைத்ததெல்லாம் மன்னவுரையுமென்றார்
அஞ்சிப்பயந்தவனும் அரசன்னவேதுசொல்வான்

ஆமதுபடைக்கவென்று அநேககாலென்மனதில்
எண்ணியிருந்தேன்காண் இதுவேகருமமெல்லாம்
பொறும்மகாரிஷியே வருவீரமுதுசெய்வீர்
யருந்தியமைத்துவந்தான் மாளிகைவாசலிலே
வட்டமணைபோட்டு வந்திருமென்றுசொல்லி
கைக்குச்சலங்கொடுத்தான் சட்டமுசர்கோமானும்
தலைவாழையிலைபோட்டுத் தண்ணீருந்தான்தெளித்தான்
முக்கனியுஞ்சர்க்கரையும் முன்படைத்தான்திரியோதிரன்
சட்டுவர்க்கமுடனே காவலனுந்தான்படைத்தான்
உண்ணுமுன்னுமென்று வுபசாரணைபண்ணலுற்றான்
அத்தனைபோசனமும் அருந்தினாந்தரிஷி
உண்டுபசித்தாராம் உள்ளங்குளிர்ந்தாராம்
கையலம்பிக்கொண்டுமவர் கனிவாயுஞ்சுத்தம்பண்ணி
சிங்காதனத்திலே சேர்த்தாரேயந்தரிஷி
தென்னமுடிவேந்தன் திரியோதிராஜன்
பொற்றம்பாளந்தனிலே புட்பமுஞ்சந்தனமும்
தங்கதாம்பளத்தில் தாம்பூலந்தான்கொடுத்து
மெத்தமகிழ்ந்தாரே மேன்மைதுருவாஷரிஷி
சர்ப்பகொடிபடைத்த சதிமன்னனைப்பார்த்து
உனக்கென்னமனதில் இஷ்டமெல்லாங்கேட்டுவிடும்
மனதில்நினைத்ததாரு வரங்கேளுந்தாரேனென்றார்
என்றவருரைக்கவே யேதுரைப்பான்திரியோதிரன்
ஏதுவரந்தருவீரென்றுரைத்தான்திரியோதிரன்
அப்போதுமாமுனியும் அவ்வார்த்தைக்கேதுசொல்வார்
நீகேட்டவரங்களெல்லாம் கொப்பெனவேதாரேனென்றார்
அப்போதிரியோதிரன் ஆணழகனேதுசொல்வான்
பங்காளிபிள்ளைகளோ பஞ்சவர்களைவருண்டு
ஐவர்வனவாசம் ஆரணியம்போனார்கள்
சூரியன்வனத்திலேதான் இருக்கிறார்கள்பஞ்சவர்கள்
ஐவரைக்கொல்லவென்று அதிகமனதாகி
உம்மைவருந்தினேன் வுண்மையுள்ளமாமுனியே
பஞ்சவரைக்கொல்லவென்று பாவசமாய்ச்சொல்லுமென்றான்
எந்தவகையாலும் இறக்கவகைபண்ணுமென்றான்
பாதம்பணிந்தானே பாம்புக்கொடியோனும்
துருவாசமகாரிஷியுஞ் சொல்லுகிறார்வாய்திறந்து
ஏதுதானும்மைச்செய்தா ரிராசாக்கள்பஞ்சவர்கள்
எப்படிகொல்வேனு னிராசாக்கள்பஞ்சவரை
திரியனுங்கேட்டு செப்புவானவாய்திறந்து
ஆரணியந்தனிலே ஐவருகிற்சென்று
போஜனங்கேட்டீரேலே புகழ்வேந்தர்பஞ்சவரை
ஐவருக்குப்போஜனங்க ளங்கேகிடையாது

வெந்தசோறுண்டு விதமறியார்பஞ்சவர்கள்
போசனமில்லையென்றால் பொட்டெனவேசாபமிட்டு
கல்லாகமண்ணாகக் காவலரைசெய்துவிட்டு
கடுகிவந்துசேதிசொல்லும் கனத்தரிஷியாரே
போய்வாருமென்று பொருந்தவேதெண்டனிட்டான்
துருவாசமகாரிஷிபுஞ் சுருக்காகவேதானடந்து
தெண்டுகமண்டலமுஞ் செம்புலித்தோலாசனமும்
கடுகிநடந்தாரே காடுஞ்செடிநோக்கி
அஸ்திநாபுரந்தாண்டி ஆறுஞ்சுனைதாண்டி
காடுஞ்செடிதாண்டி கரியமலைதான்தாண்டி
சில்லென்றபூத்த செடியும்வனாந்திரமும்
கடுகவருகிறார் கனத்தரிஷியாரும்
ஏழுலகையாண்ட யெம்பெருமாளிதையறிந்தார்
அடியளந்தமாயவனார் ஆதிமூலமேதுசெய்தார்
நம்பினவரைக்காக்கும் நாராயணரெழுந்து
காவலர்கள்பஞ்சவர்க்கு கனமோசம்வந்ததென்று
ஐவர்பஞ்சபாண்டவர்க்கு அனர்த்தம்வருதேதென்று
செல்வத்திரவியங்கள் சீரழிந்துபோகுதென்று
தோளிற்செபமாலை சோரவிட்டாளாச்சே
பாவிகெடுத்தானே பஞ்சவரைக்கொல்லவென்று
என்றும்பகையாளி ஏற்பட்டான்பஞ்சவர்க்கு
இங்கேயிருந்தோமென்றால் இறந்திடுவார்பஞ்சவர்கள்
நம்பினோமென்றவரை நாமல்லோகாக்கவேணும்
என்றெழுந்தாரே யெம்பெருமாள்மாயவரும்
துவாரகாபுரிதாண்டி துழாய்மவுலிதான்வாறார்
காடுஞ்செடிதாண்டி கரியமலைதான்தாண்டி
சிறந்ததுருவாசருடன் சேர்ந்தாரேயெம்பெருமாள்
ஆலிங்கனம்பண்ணினார் ஆயர்பெருமாளும்
இந்தவனத்துக்கு யேதுவகையாய்ப்போதீர்
எங்கேநீபோதீர்காண் என்றார்பெருமாளும்
மகாரிஷிதுருவாசர் வாய்திறந்தேதுசொல்வார்
மாயன்பெருமாளே வந்ததென்னயிவ்வனத்தே
பார்வேட்டையாகவே பாரவனங்கள்வந்தேன்
வனசாரியாகவே வந்தேன்காணிவ்வனத்தே
அவ்வார்த்தைதான்கேட்டு அந்தரிஷியேதுசொல்வார்
பஞ்சவர்கள்தாமிருக்கும் பாரவனங்களிலே
ஐவரிருக்குமந்த அடவியிலேபோய்சேர்ந்து
புண்ணியவானவரையும் போசனங்கேட்கவந்தேன்
என்றுசொல்லக்கேட்டு எம்பெருமானானவரும்
நாமும்வருகிறோம் ராசாக்களைப்பார்க்க
கூடநடந்தாரே கோபாலசுவாமியவர்

இருவருமாகவே இருண்டவனந்தனிலே
ஓங்கிவளர்ந்திதொரு மூங்கில்வனந்தாண்டி
செக்கரய்ப்புளிகாடி சிறும்வனந்தாண்டி
பாதிரிமுல்லை பருத்தவனந்தாண்டி
ஒருகாரைக்கொருகாரை வுயர்ந்தகொம்பில் கனிருக்கும்
கருநாரைக்கிரைதேடுங் கதலிவனந்தாண்டி
கடுகிவருகையிலே கரியமாலென்னசெய்தார்
பலாமரத்தைகண்டவுடன் பாரளந்தாரேதுசொல்வார்
மெத்தப்பெரியவரே வேணதவஞ்செய்தவரே
இந்தப்பலாயிலேதான் எதுக்குதவுமென்றார்
அவ்வார்த்தைகேட்டுமல்லோ அரியரிஷியேதுசொல்வார்
இந்தபலாயிலேயி லினியபோசனங்களுண்டாலே
பலாயிலையிற்போசனங்கள் பண்ணவர்க்குயிட்டாலே
அமரருக்குஅற்புதங்காண் ஆர்க்குங்கிடையாது
எல்லோருக்குங்கிட்டாது ஸ்ரீராமாவென்றுசொன்னார்
உசிதங்கள்தான்கேட்டு வுவந்துநடக்கையிலே
அந்தவனங்கடந்து அடுத்தவனம்போகையிலே
காமதேனுப்பாலை கருங்கல்லுபாறையிலே
கறந்துயிருக்கிறதைக் கண்டார்பெருமாளும்
மாயன்பெருமாளும் வார்த்தையவர்க்கேதுரைப்பார்
மெத்தப்பெரியவரே வேணதவஞ்செய்தவரே
தூயதவத்திற்சிறந்த துருவாசமாமுனிவே
காமதேனுவின்பாலும் காரியத்துக்காகுமோதான்
இதுஎதுக்குதவுங்கா ணென்றார்பெருமாளும்
அவ்வார்த்தைதான்கேட்டு அந்தமுனியேதுசொல்வார்
தேவலோகந்தனிலே தேவருக்குங்கிட்டாது
ஆர்க்குங்கிடையாது அமரருக்குங்கிட்டாது
இதுஎடுத்துபுசித்தாலே எல்லாருக்கற்புதங்காண்
என்றுசொன்னவார்த்தைதன்னை யெம்பெருமாள்தான்கேட்டு
சந்தோஷப்பட்டுமவர் சுவாமிநடந்தாரே
அடுத்தவனந்தனிலே அவரிருவர் போகையிலே
தாமரைத்தடாகத்தை சாமிகண்டேதுசொல்வார்
ஐயாபெரியவரே அமார்க்கரிதானவரே
இந்தஜலந்தானும் எதுக்கு ஆகுமென்றார்
துருவாசமகாரிஷியுஞ் சொல்லுகிறார்பொட்டெனவே
தாமரைப்பொய்கையிலே ஸ்நானங்கள்செய்தாலும்
தபங்கள்ஜெபங்கள்பண்ணி தாகந்தீர்த்துண்டாலும்
சிவனேபவனுதந் செப்பமுடியாது
என்றுசொன்னவார்த்தை யெம்பெருமாள்தான்கேட்டு
சந்தோஷப்பட்டுமப்போ சாமிநடந்தாராம்
இருவருமாகவே ஏகிவழிநடந்தார்

சூரியவனந்தனிலே சேர்ந்தாரிருவருமாய்
பர்ணசாலைமேலிருந்த பஞ்சவர்கள் கண்டுவிட்டார்
மாயன்பெருமாளும் மாமுனியானவரும்
வருகிறாரென்றுமந்த மகாராசர்தானெழுந்து
திடுக்கிட்டுதான்பதைத்துச் சீக்கிரமாய்தானெழுந்து
எதிர்கொண்டோடிவந்து இறங்கியேதெண்டனிட்டார்
சாஷ்டாங்கமாகவே சரணமென்றுதெண்டனிட்டார்
கடுகிமூடிகியே காட்டுத்தழையொடித்து
ஐந்தடுக்குமெத்தையதாய் ஆசனம்போட்டார்கள்
இட்டசிங்காதனத்தில் ஏறியிருவருமாய்
பச்சிலைமெத்தையிலே பதியக்கொலுவிருந்தார்
தக்கப்புகழுடைய தருமாவர்கூறுவார்
துரியோதிரன்செய்த சேதிகளைக்கேட்டீரோ
நாடோடிருந்தவென்னை ராஜமன்னன் தானழைத்து
விருந்தருந்தவாருமென்று விருந்தோலைதானனுப்பி
வருந்தியெனையழைத்து வஞ்சனைகள்பண்ணினனே
கொல்லநினைத்தானே குருடன்மகன்சத்ராதி
வாரவழிதனிலே வசிதனைத்தான்புதைத்தான்
அதுக்கும்பிழைத்தோமே ஆயருடபுண்ணியத்தால்
வசகாபிதண்ணீர்பந்தல் வழியில்வைத்தான்மாபாவி
அதுக்கும்பிழைத்தோமே ஆயருடபுண்ணியத்தால்
பொற்குழிவெட்டியே பொற்சிங்காதனங்களிட்டு
கொல்லநினைத்தானே குடிகேடன்சத்ராதி
அதுக்கும்பிழைத்தோமே ஆயருடபுண்ணியத்தால்
என்னையிட்டுக்கொள்ளுமென்று எங்களையுந்தானழைத்து
அதுக்கும்பிழைத்தோமே ஆயருடபுண்ணியத்தால்
நீரிற்கழுநாட்டி நீராடவாருமென்றான்
குளத்தில்வசிநாட்டிக் கொப்பெனவேபோங்களென்றான்
அதுக்கும்பிழைத்தோமே அரிராமர்புண்ணியத்தால்
உண்ணுகிறசாதத்திலே ஒருக்காலேநஞ்சையிட்டான்
குடிக்கிறதண்ணீரில் கொலைக்காரன்நஞ்சையிட்டான்
கொல்லநினைத்தானே குருடன்மகன்சத்ராதி
அதுக்கும்பிழைத்தோமே ஆண்டவனேயுன்னருளால்
அரசர்சபைநடுவே அம்பலத்தார்தங்கள்முன்னே
சொக்கட்டான்போட்டான்காண் சோழிவினையாடி
பகடசாலைபோட்டு பந்தயங்கள்பேசினான்
நாடுகளுஞ்சீமைகளும் ராச்சியமுந்தான்பறித்தான்
தூயதொருசீமைகளும் துராத்தனமுந்தான்பறித்தான்
பருத்தவில்லுக்குமிட்டு பெருங்கிடங்கிலேயடைத்தான்
காற்றுநுழையாத கல்லறைக்கிடங்கிலிட்டான்

தன்னியிழுத்துவந்து தாள்விலங்குபோட்டுவிட்டான்
அரசர்சபைநடுவே அம்பலத்தார்தங்கள்முன்னே
அறையிலிருந்தபெண்ணை அம்பலத்தில்கொண்டுவந்து
பாஞ்சாலன்பெற்றபெண்ணை பாவையழியவரை
அரசர்சபைநடுவே அம்பலத்தில்பெற்றிவைத்தான்
சொல்லாததுஞ்சொல்லியல்லோ துகிலுரித்தான்மாபாவி
பாய்வரிசையில்லாமல் வம்பாகப்பேசினானே
பாரவனவாசம் பன்னிரண்டுவருடம்வரை
தானியம்போயிருந்து அப்பாலொருவருடம்
அஞ்ஞாதவாசம் யார்க்குந்தெரியாமல்
ஊரில்உருமாறி யொளித்திருந்துவந்தாக்கால்
காடுதிரிந்துவந்தால் காசிநகர்தாரோமென்றான்
பங்குள்ளபிரகாரம் பாதிநாடுதாரோமென்றான்
பாரவனவாசம் பரதேசம்வந்துவிட்டோம்
எங்கள் பொழுதுந்தொலையுமோ பூமியாளுவமோ
என்றுதெளியுமோ எக்காலஞ்சென்றிடுமோ
நாங்கள்முகமேறி ராச்சியத்தையாளுவமே
உம்முடையதிருவுள்ளம் எப்படியோவறியோம்
பாதம்சரணமென்று பணிந்தாரே தருமராயர்
மாயன்பெருமானும் வார்த்தையவரேதுசொல்வார்
தலையிலெழுதினதை தள்ளவொருவருண்டோ
வரும்வினைவந்தக்கால் படியேற்கவேண்டாமோ
ஈசனெழுதியதில் சின்னளவுந்தப்பாது
என்று-பிரியவசனமதை பெருமானுரைத்தாரே
தங்கபுகழ்நீடிய தருமராவரேதுசொல்வார்
இந்திரிப்போரும் ஏதுவகையாகவந்தார்
என்றுமவர்கேட்க யேதுசொல்வார்மாயவரும்
வந்தவருத்தத்தை மாயவரும்கேளுமென்றார்
என்றுசொல்லக்கேட்டு இயலானதர்மலிங்கம்
துருவாசமாமுனிக்குத் தெண்டன்சமர்ப்பித்து
சொல்லுவார்வாய்திறந்து சொற்பெரியதர்மலிங்கம்
அடியேனைத்தேடியே ஆண்டவரேவந்ததென்ன
கமலப்பதம்நொந்திடவே கால்நடையாய்வந்தீரே
செந்தாமரைப்பாதம் செம்புண்ணாய்வந்ததுவே
தேடிவந்தகாரியத்தைச் செப்புமென்றார்மாமுனியே
துருவாசமாமுனியும் சொல்லுகிறார்வாய்திறந்து
குருகுலவங்கிஷத்தில் குந்தியார்புத்திரரே
போசனங்கேட்கவந்தேன் புகழ்பெரியதர்மரேநான்
தேவர்க்குமற்புதமாய் சிவனார்க்குப்பிரீதியாக
இப்போதுபோசனங்க ளிட்டாலேயல்லாது
கல்லாய்ச்சபிப்பேனென்றார் கனத்தரிஷியவரும்

மெத்தப்பயந்தாரே வில்வேந்தர் தருமராஜர்
ஆயரைப்பார்த்துமல்லோ அதிசயவிசாரமிட்டார்
மடிந்துவிடுங்காலம் வந்ததேதென்னசெய்வோம்
என்றுபுலம்புகையில் எம்பெருமானேதுசொல்வார்
வீமாமதகிரியே வேந்தாநீவாருமென்றார்
பருத்தவனங்களிலே பலாயிலைப்பறித்து
கருங்கல்லுமேலாகக் காமதேனுவாயிருக்கும்
காராம்பசும்பாலைக் கடுகியேபோர்த்தெடுத்து
தாமரைப்பொய்கையிலே ஜலங்கொண்டுவாருமென்றார்
என்றுசொல்லமாயன் எழுந்துநடந்தான்வீமன்
கடுகிமுடுகியே காற்றாய்ப்பறந்தவனு
காமதேனின்பாலையவன் கடுகியேபோர்த்தெடுத்து
பருத்தவனங்களிலே பலாயிலைதான்பறித்து
தாமரைப்பொய்கையிலே ஜலங்கொண்டுவந்தான்
துருவாசமாமுனியே சுவாமிபொருந்தியென்றார்
கைக்குச்சலங்கொடுத்து கடுகியேதருமராயர்
வட்டமணைபோட்டு வந்திருந்துசுவாமியென்றார்
பலாயிலையில்போசனங்கள் பாங்காய்ப்படைத்தார்கள்
உபசாரணைபண்ணியே உண்ணுமையாசுவாமியென்றார்
போசனத்தைமாமுனியும் புசித்தபிறகாக
ஆயாசந்தீர்ந்தாரே அந்தரிஷிமாமுனி
கையலம்பிக்கொண்டாராம் கடுகியிருந்தாராம்
தாம்பூலம்வாங்கிச் சந்தனமுந்தானணிந்து
ஐவரைக்கொல்லவந்த அந்தத்துருவாசரிஷி
தேவர்களருந்துகிற திவ்வியமாபோசனங்கள்
போதப்படைத்தார்கள் புகழ்வேந்தர்பஞ்சவர்கள்
இப்படிக்கொத்தவரை எப்படிக்கொன்றிடலாம்
என்றுமனமகிழ்ந்து இராசாக்களைவாழ்த்தினார்
ஐவர்பஞ்சபாண்டவரை அந்தரிஷிவாழ்த்தினார்
ஐவரையும்வாழ்த்தி ஆனந்தங்கொண்டுவிட்டு
இருங்களிருங்களென்று எழுந்துநடந்தாரே
கடுகிமுடுகியே கரியமலைதான்தாண்டி
சூரியவனந்தாண்டி கருக்காயவருகிறாராம்
காடுகள்தாண்டியே கரியமலைதான்தாண்டி
அஸ்தினபுரத்தை அடுத்தாராமந்தரிஷி
திரியோதனனிருக்கும் திருச்சபைதன்னில்வந்தார்
திரியோதனராசன் தெண்டனிட்டான்மாமுனியை
அடிபணிந்துதெண்டனிட்டு ஆசனமிட்டானென்றான்
சிங்காசனம்போட்டு சிறக்கவிருந்தார்
ஆசனத்தின்மேலாக அந்தமுனிவீற்றிருந்தார்
தாமுடிவேந்தன் யோதிடன் கேட்டான்

ஐவரையுங்கொன்று அதம்பண்ணிப்போட்டீரோ
கல்லாய்சபித்தீரோ கடுகிவேவந்தீரோ
என்றுசொல்லிக்கேட்டானே இயலரசதுரை
துருவாசமாமுனிக்குத் தோஷிமொழிகொள்ளாமல்
கோபமிகக்கொண்டு கொப்பெனவேயேதுசொல்வார்
ஐவரையுங்கொல்லவென்று அனுப்பினைப்பாதகனே
ஐவர்போதுபசாரனை ஆரொருவர்செய்ததில்லை
தேவர்கள்தானருந்துந் திவ்வியமாபோசனங்கள்
போதப்படைத்தார்கள் பொன்னடியைத்தாள்வணங்கி
சரணமடைந்தார்கள் சந்தோஷமாகிவந்தேன்
ஐவரையுங்கொல்லவென்று அனுப்பினைப்பாதகனே
உன்னுடையவம்சத்தில் ஒன்றும்விளங்காது
ஒருவருடைவையாலே அனர்த்தமாய்ப்போகவென்று
சாபங்கொடுத்தாரே சமர்த்துள்ளமாமுனியும்
செப்பிநடந்தாரே தெய்வலோகத்திருமுனிவர்
துருவாசமாமுனியுந் துரிதமாய்ச்சென்றாரே
அப்போதுரியோதனன் அனேகவிசனமதாய்
அன்றுதானென்னமெண்ணி இருந்தான்துரியோதனன்
ஐவருக்காகவே ஆயரிருக்கும்போது
மாயன்பெருமானும் வார்த்தைகளைதுசொல்வார்
தென்னமுடிவேந்தன் துரியோதனப்பெருமான்
தூயதேவலகிருக்குந் துருவாசமாமுனியை
ஆவக்கொடியோனும் அனுப்பினானும்மைக்கொல்ல
துரியோதனன்சொற்படிக்குச் சீருந்துருவாசமுனி
உம்மை-கொல்லமனதாகி கோபித்துவந்தாரே
அதுவறிந்துங்கனான் ஆதரிக்கஇங்குவந்தேன்
அல்லாதேயாமானால் அந்தமாய்மாண்டிடுவீர்
என்றுரைக்கமாயவரும் ஏதுரைப்பார்தருமனுமே
உம்மைநம்பியல்லோ உயிர்கொண்டுலாவுகிறோம்
நீரேதுணையுமல்லால் வேறுதுணையுமுண்டோ
நம்பினபேர்களையே ரட்சிக்குந்தேவனல்லோ
அடியாரைக்காக்கின்ற ஆதியாய்ப்பொருளே
ஏழைகளைக்காக்கின்ற எம்பெருமாளாண்டவரே
பன்னிரண்டுதன்வருஷம் பாரவனந்திரியமட்டும்
ஏதுவினைவருமோ எம்பெருமாள்நானறியேன்
இன்னமென்னவஞ்சனையோ எம்பெருமாள்நானறியேன்
வரும்வினையாவும் மாயவரேதுணையாகும்
அரக்குமாமாளிகையில் ஐவரைக்காத்தீரே
அபயமென்றதுரோபதைக்கு அட்சயத்துகில்கொடுத்தீர்
உன்மகிமையாரறிவார் உலகளந்தமாயவரே
சரணஞ்சரணமென்று தாள்பணிந்தார்பஞ்சவர்கள்



பாம்பாக சபிக்கப்பட்டிருந்த இ[illegible]ரிஷி பாண்டவர்களை எடுத்து விழுங்க ஸ்ரீகிருஷ்ணபகவான் எலியாக நுழைந்து விடுதலைசெய்தது.

காட்டானைகளிலே சாணமிட்டோர் பஞ்சவர்கள்
மாயன்பெருமாளும் மனதுமிகக்களித்து
நுவல்மேல்பட்டாம அதிசயப்பிரியமாய்
சந்தோஷப்பட்டுச்சுவாமி தன்னுடைமனங்குளிர்ந்து
மாயன்பெருமாளும் வார்த்தைகளைத்தான்சொல்வார்
இத்தலைத்தாண்டி இனியவனம்போங்களென்றார்
மற்றொருவனத்திலேதான் மன்னவரேபோங்களென்றார்
அந்தவனத்தனிலே இருவருமேபோய்வாசம்பண்ணார்
தெற்குமேற்குமிருந்து ஆனதுமாய்ச்சென்றாலும்
வடக்குதிசையிலேதான் மன்னவரேபோகவேண்டாம்
எதிரினைவைத்தாலும் உன்னைநினைத்திடுங்கள்
என்றுமவர்சொல்லி எம்பெருமாள்தானெழுந்தார்
வட்டமாக்கருடனேறி மாயவரும்போய்நடந்தார்
காடுசெடிதாண்டி கரியமலைதான்தாண்டி
அழகானதுவாரகைக்கு ஆண்டவரும்போய்நடந்தார்

முதலாவது சூரியவனம் முற்றிற்று.

௨-வது ராமரிஷிவனம்

இரண்டாம்வருஷம் பிறந்ததுபஞ்சவர்க்கு
அந்தவனந்தாண்டி அப்பாலேபோகலுற்றார்
ராமரிஷிவனத்தில் நடந்தாரேபஞ்சவர்கள்
கோவிலைத்தான்மேடை கூடாரமிலேவைத்தார்
கடைத்தெருவிலே குடிவாழ்க்கைகானகத்தில்
புன்னைமுகட்டையும் புடைவிரித்துத்துவளை
பண்ணைக்கலையும் பரட்டைபுளிகாலை
நினைத்துதிரிகிறார்கள் தேசாந்திரிபோலே
ராமரிஷிவனத்தில் நடந்தார்கள்பஞ்சவர்கள்
நூற்றடிக்குப்பர்ணசாலை அவ்வனத்திலுண்டுபண்ணார்
ஏழடிக்குப்பர்ணசாலை எழிலாகவுண்டுபண்ணார்
பர்ணசாலைமேலாகப் பஞ்சவர்கள்வீற்றிருந்தார்
அந்த-வனத்திலேதானவர் வனவாசம்செய்தார்கள்
அந்தவனத்திலேதான் அழகானராமரிஷி
தபசில்பெரியவரும் தம்பிரானவரும்
சரணங்கள்பண்ணியுமே சாதங்கள்தந்திடுவார்
போசனங்களிட்டுமலே புட்பங்கள்தான்கொடுப்பார்
கவிகாஷாம்பரமும் கைமணியுந்தான்கொடுப்பார்
புலித்தோலுமாசனமும் பொருந்தவேதான்கொடுப்பார்
சரணமடைந்து சாமிபோல்வாருமெனபார்
தாதர்பெரியவர்கள் தபசுபடுத்துவந்தாலும்
அரிராமவென்றுசொல்லி அனந்தம்பேர்வந்தாலும்

ராமாவென்றசத்தம் ராமரிஷிகேட்டாலும்
அரிகரியென்றசத்தம் அந்தரிஷிகேட்டாலும்
கோவிந்தாவென்றசத்தம் குருமுனிதான்கேட்டாலும்
கோபித்துக்கண்சிவந்து கொப்பெனவேதானெழுந்து
சீறிவரும்புலிபோல் சிவ்வென்றேதானெழுந்து
கையிற்றடியெடுத்து கடிகியடிப்பானே
வாரியெடுத்துமவன் வல்லுயிரைகொள்ளைகொள்வான்
அப்படியாகவே அனேகநாளிருக்கும்போது
மாயன்பெருமாளும் வார்த்தையதுவறிந்து
தள்ளாடுங்கிழவனைப்போல் தானேவடிவெடுத்து
பரந்தமுகம்நிறைந்த பழுத்தமரம்போலே
தாதன்வடிவாக சாமிவருவாராம்
ராமரிஷிதானிருக்கும் நல்லவனந்தனிலே
அந்தரிஷிதானிருக்கும் ஆச்சிரமமுட்புகுந்து
ஹரிவோம்ஹரிவோமென்று அடித்தாரந்தப்பைதனை
சாரங்கபாணியென்று சங்குகளைத்தானூதினார்
அந்தசத்தந்தான்கேட்டு அரியரிஷிதானெழுந்து
கோபித்துகண்சிவந்து கொப்பெனவேதடியெடுத்து
ஆனையின்மேலேதான் ஆண்சிங்கம்புகுந்தாப்போல்
தாதனொருவனையும் தடியாலடிக்கலுற்றான்
மாறியடித்தானே மதம்பெரியராமரிஷி
அந்தவடிபட்டுக்கொண்டு அரிகரிராமாவென்றார்
மறுகாலொருதரம் மாறினான்ராமரிஷி
அவ்வடியும்பட்டுக்கொண்டு அரிகரிராமாவென்றார்
அவன்-மாரியடித்தானே மாயனென்றறியாமல்
சுழட்டியடித்தானே சுவாமியென்றறியாமல்
அவ்வடியும்பட்டவுடன் அரிராமர்கோபமாகி
கண்கள்சிவந்துமல்லோ காந்தாளமாயெழும்பி
ஆகாயமாகவே வளர்ந்தாரேஆயரங்கே
விஸ்வரூபமாகவே மேகவண்ணர்தான்வளர்ந்தார்
கண்டானேராமரிஷி கால்கைதடுமாறி
அடித்தொடையுங்காலும் அதிரவிடவிடென்ன
மெத்தப்பயந்து விழுந்தானடிபணிந்தான்
சுவாமிசரணமென்று தாள்பணிந்தான்ராமரிஷி
மூக்காலுந்தெண்டனிட்டு முடிவணங்கிபோற்றிசெய்தான்
அப்போதுமாயவரும் அருளாளரேதுசொல்வார்
மாயன்பெருமாளும் வார்த்தைகளேதுசொல்வார்
போஜனங்கள்போடுறதும் போதப்பணியுறதும்
மயேஸ்வராடியார்க்கு வணங்குவதேயல்லாது
எந்த அடியாரை இகழ்ச்சியாய்ப்பேசுறதும்
மாறியடித்துமே வாயத்தம்பண்ணுறதும்

அகந்தைகள்பண்ணுறதும் ஆருமோராமரிஷி
ஆசாரகாரியங்கள் அனர்த்தங்கள்தேடிக்கொண்டீர்
இவ்வார்த்தைகேட்டுமே இயலானராமரிஷி
மெத்தப்பயமாகி விஷ்ணுவைத்தான்பணிந்து
கைகட்டிவாய்புதைத்து கடிகியேயேதுசொல்வான்
ஆதிசிவன்பாதம் அடியேனறிந்திருப்பேன்
உன்னுடையபாதம் ஒருக்காலும்நானறியேன்
தேடியுங்காணுமல் தேவரீருன்பாதம்
ஆண்டவரேயுமைக்காண அநேகநாள் தவமிருந்தேன்
கோடித்தவமிருந்துங் கோவிந்தனைகண்டதில்லை
ஆசையினுலேதான் ஆயர்புமைக்காண
உம்முடையவடியவரை உதாசினம்பண்ணுறதும்
இந்தவிதமாக இருந்தேன்நெடுநாளாய்
என்வினையகன்றதின்று எம்பெருமானும்மாலே
உன்-பாதமதைக்கண்டபோதே பாவங்கள்போக்கிவிட்டேன்
அஞ்சிப்பயந்தவனும் ஆசாரம்பண்ணினுன்
காயாம்பூவண்ணருமே கரியமாலேதுசெய்தார்
அகந்தைகள்செய்ததினுல் அனேகபாவமுந்தனுக்கு
சாபம்பிடியுமென்றுர் சௌரிப்பெருமானும்
ஆராயிரவருஷமட்டும் அரவமாய்ப்போகவென்றுர்
காராழக்கண்மலைப்பாம்பாய்ச் சாபமிட்டாரெம்பெருமாள்
அப்போதுராமரிஷி ஆயரையேதுகேட்பார்
எம்பெருமாளேச்சாப மெப்போதுதீருமென்றுர்
அப்போதுமாயவரும் அருளாளரேதுசொல்வார்
ஐவர்பஞ்சபாண்டவர்கள் அடவியிலேதான்வருவார்
மன்னர்பஞ்சபாண்டவர்கள் மாவனந்தான்வருவார்
தருமர்தம்பிநால்வர்களைத் தானெடுத்துவிழுங்கிடுவீர்
வெற்றிமதயானை வீமனருச்சுனரை
நகுலசகாதேவ ராசாக்கள்நால்வரையும்
எடுத்துவிழுங்கியே இருக்கின்றவேளையிலே
அருச்சுனன்வில்லாலுன் அங்கம்பிளந்துவிடும்
அந்தச்சமயத்தில் அங்கேநான்வந்திருப்பேன்
நான்வந்திருந்து நற்காட்சிதாரேனென்றுர்
அப்போதுராமரிஷி ஆயரிடசாபத்தால்
அரிராமர்சாபத்தால் அப்பாம்புவுண்டாச்சு
அநேகநாளாய்ப்பாம்பு அவ்வனத்திலேயிருந்து
அதுவறியார்பஞ்சவர்கள் அவ்வனத்திலேயிருந்து
இராமரிஷிவனத்தில் இராசாக்கள்தானிருந்தார்
பர்ணசாலையுண்டுபண்ணி பஞ்சவர்களங்கிருந்தார்
காயும்பழமுங் கந்தமூலங்களுண்டு
ஐவருமங்கேதான் அமர்ந்திருக்கும்போது

தெற்குமேற்குகிழக்கு தேடிக்கனிபறிப்பார்
வடக்குதிசைநோக்கி மன்னவர்கள்போவதில்லை
அவ்வனத்திலேயொருநாள் அடங்காதவீமனவன்
மெத்தவகங்காரமுடன் வீமனுமங்கேகினைவாய்
கடுகியெழுந்திருந்தான் கனிகள்பறிக்கவென்று
வடக்குதிசைதனிலே மாயவன்போகாதேயென்றார்
காயுங்கனியுமங்கே கடுகியேகிட்டாதோ
வேண்டியராட்சதர்கள் வேதமுனிகளுண்டோ
அவ்விடத்திலதிசயங்களெல்லாமறிவோமென்று
கடுகியெழுந்திருந்தான் கட்டழகன்வீமனவன்
சல்லடங்கள்போட்டுமல்லோ தட்டிவரிந்துகட்டி
தட்டிவரிந்துகட்டி தாமரைப்பூச்சுங்குவிட்டு
கையில்கெதையெடுத்து கடுகியேதானடந்தான்
வடக்குதிசைநோக்கி வாரான்மதகரியான்
காயுங்கனியுமங்கே கடுகப்பழுத்திருக்கும்
அவ்விடத்திலேகனியும் அநேகம்பழுத்திருக்கும்
அருநெல்லிசிருநெல்லி அழகானதமர்த்தைகளும்
கொச்சிதமர்த்தையுடன் குடகுபலாப்பழமும்
மாங்கனியுந்தேங்கனியும் வண்ணப்பலாப்பழமும்
மட்டில்லாப்பழங்களெல்லாம் வனத்திற்சொரிந்திருக்கும்
அளவில்லாகனிகளெல்லாம் அவ்வனத்திற்றானிருக்கும்
கண்டானேவீமனவன் கண்கள்மிகக்குளிர்ந்தான்
பார்த்தானேவீமனவன் பார்வைரெண்டுந்தான்குளிர்ந்தான்
அங்கேகனிகள் அனேகம்பழுத்திருக்கும்
மெத்தகனிகளிங்கே வேணதெல்லாந்தானிருக்க
உண்டுபிழைப்பார்களென்றல்லோவுலகளந்தார்
தின்றுபிழைப்பார்களென்று திருமாலும்
வடக்குதிசைபோகாதேயென்றாரேமாயவரும்
சாமிபெருமாளவர் சதிநினைவைக்கண்டோமே
என்றுமனதிலெண்ணி ஏகிநடந்தானே
எண்ணாதுமெண்ணினான் இயலானவீமனவன்
அந்தவனத்திலவனுகவுள்நுழைந்து
மரத்தின்மேலேறினான் மதவீமராசனவன்
உச்சிற்கனிபறித்து வுகந்துபுசித்தான்காண்
காயுங்கனிபறித்து கங்கேவேதான்புசித்தான்
வாயாரதின்றுமே வயிராரத்தான்புசித்தான்
அண்ணனுக்குந்தம்பியற்கும் அநேகங்கனிபறிக்க
அருநெல்லிசிருநெல்லி அழகாத்தமர்த்தையுடன்
சோலைப்பலாக்கனியும் துய்யவிளாங்கனியும்
கிளையைவளைப்பானுங் கிள்ளியொருபழம்பறிப்பான்
செடியைவளைப்பானும் சிவந்தபழம்பறிப்பான்

அந்தேபழங்க ளனேகம்பரிக்கையிலே
அடுத்தபுதரிலேதா னரவமெழுந்திருந்து
சரிந்தவனத்திலேதான் சர்ப்பமெழுந்திருந்து
மதவீமராசனை மலைப்பாம்புகண்டதுகாண்
தாராழுக்கன்மலைப்பாம்பு சந்தோஷமாகவேதான்
மனதுமிகக்குளிர்ந்து மதகரியானருகில்வந்து
வாயைத்திறந்துமங்கே மதவீமனையெடுத்து
எடுத்துவிழுங்கிற்று இடலானவீமனைத்தான்
பாம்பென்றுபார்த்ததில்லை பாரமதவீமன்
சர்ப்பமென்றுபார்த்ததில்லை சமர்த்துள்ளவீமனவன்
கால்கொண்டதூரமட்டுங் கடுகெனவேதானடந்தான்
விசைகொண்டதூரமட்டும் வீசிநடந்தானே
வழியுந்தெரியாமல் வந்தயிடங்காணாமல்
பாதைதெரியாமல் பாம்பென்றறியாமல்
பெருங்குடல்மேல்சார்ந்துகொண்டான் பெருமாதிகர்வீமன்
அடிக்குடல்மேல்சார்ந்துகொண்டான் அந்தமதவீமன்
பாம்பென்றறிந்தானே பாரமுடிவேந்தன்
சர்ப்பமென்றறிந்தானே சமர்த்துள்ளவீமனவன்
எண்ணாதுமெண்ணி இருந்துவிசாரமிட்டான்
அண்ணரைத்தம்பியரை அல்லவரைநான்பிரிந்து
கூடப்பிறந்தவரை கொற்றவரைநான்பிரிந்து
ஒக்கப்பிறந்தவரை உடன்பிறப்பைநான்பிரிந்து
மாளும்விதிபின்னே வந்தேனறியாமல்
ஆகையினாலேதான் ஆயர்போகாதேயென்றார்
அறியாமல்வீமனிங்கே அகப்பட்டேனென்னசெய்வேன்
மாயன்சொற்கேளாமல் வந்துவிட்டேனிவ்வனத்தில்
அண்ணர்தருமராயர் அழுதுபுலம்புவாரே
தம்பியரைத்தேடியவர் தாமேபுலம்புவாரே
அறியாமல்வந்தேனாண்டவரேயென்னசெய்வேன்
ஆயரேகோவிந்தா ஆதிமூலம்வந்தருளும்
மாயரேகோவிந்தா மகாதேவாகாத்தருளும்
என்றுபுலம்பி யிருந்தானேவீமனவன்
தக்கபுகழுடைய தருமரவரென்னசொல்வார்
அருச்சுனன்கனிபறித்து அண்ணரண்டைவந்தபின்பு
வாய்திறந்துதருமராயர் மதிகலங்கியேதுசொல்வார்
வெற்றிமதயானை வீமன்கனிபறிக்க
மதவீமன்போயுமல்லோ மன்றுநெடும்போதாச்சு
போனவிடத்திலே புதுமையொன்றுநானறியேன்
மதவீமன்போனசெய்தி வார்த்தையொன்றுநானறியேன்
அண்ணரைத்தேடியே அழைத்தோடிவாராயோ
ஓடியழைத்துநீமே ஒருநொடியில்வாராயோ
கண்டுஅழைத்துமே கடுகெனவேவாராயோ

அப்போதுஅருச்சுனரும் ஆணழகனேதுசொல்வான்
அப்படியேபோய்வாரேன் அடியேன்சரணமென்றான்
சரணம்சரணமென்று சாய்த்தான்திருமுடியை
முக்கால்வலம்வந்து முவிருகால்தெண்டனிட்டான்
போகவிடைதாருமென்ன போர்விஜயன்தெண்டனிட்டான்
போய்வாருமென்றுசொல்லி போகவிடைகொடுத்தார்
விடைபெற்றெழுந்தார் விஜயப்பெருமானும்
ஜல்லடங்கள்தான்போட்டு தட்டிவரிந்துகட்டி
தட்டிவரிந்துகட்டி தாமரைப்பூச்சங்குவிட்டு
பில்லைசமுதாடு பிகுவெடுத்தஒட்டியாணம்
பட்டுதட்டிகட்டியல்லோ பாலாவுந்தான்சொருகி
அம்புவில்லுந்தானெடுத்து அருச்சுனன்வாரானே
காடுசெடிதாண்டி கரியமலைதான்தாண்டி
ஆறுகளைதாண்டி அதிகவனந்தான்தாண்டி
சில்லென்றகாடும் செடிமலைதான்தாண்டி
காலடியைத்தேடியல்லோ கடுகியேதான்வருவான்
பாரவனங்களிலே பார்த்திபனும்வாரானே
அவ்வனத்திலேகனிகள் அனேகம்பழுத்திருக்கும்
கண்டானேஅர்ச்சுனனும் காவலனுமேதுசொல்வான்
காலடியைக்கண்டோமே காவலனைக்காணோமே
எங்கிலுங்காணோமே இயலானவீமனைத்தான்
கூவியழைப்போமா வென்றல்லோகொற்றவனும்
அண்ணரேவீமாவென்று அழைத்தானேவாள்விஜயன் !
கூவியழைக்கலுமே குரல்கேட்டுவீமனுக்கு
அருச்சுனன்தேடி அழைக்கிறானென்றுசொல்லி
மாலைமுடியான் மதவீமனேதுசொல்வான்
காளையருச்சுனரே கடுங்காளைதூரநில்லும்
அருகேநீவாராதே அருச்சுனாதூரநில்லும்
கிட்டநீவாராதே எட்டநில்லுஅருச்சுனரே
இங்கேநீவாராதே இறந்திடுவாய்தம்பியரே
தூரநில்லும்அருச்சுனரே சேரவந்தால்மோசமடா
ஏதோபெரும்பாம்பு என்னைவிழுங்கிற்றதுகாண்
அரவத்தின்வாயிலே அகப்பட்டுக்கொண்டேனப்பா
இனிபிழைப்பேனென்றுநீ எண்ணாதேதம்பியரே
தப்பிப்பிழைப்பேனென்று தம்பிநீஎண்ணாதே
மற்றும்பிழைப்பேனென்று மன்னவரேயெண்ணாதே
ஆயாசமாகாதே அண்ணருடன்சொல்லுமப்பா
மனவருத்தங்கொள்ளாதே மன்னருக்குச்சொல்லுமப்பா
தக்கபுகழுடைய தருமர்தானண்ணரவர்
கபடுதெரியாதார் கள்ளமொன்றுந்தானறியார்
வெளுத்ததைப்பாலென்பார் வெள்ளத்தைநீரென்பார்
பொய்சொல்லான்புண்ணியவான் புகழ்வேந்தண்ணருக்கு

மனந்தகலங்காமல் தேறுதலைசொல்லுமப்பா
மனங்கலங்காதே வார்த்தைகளைசொல்லுமப்பா
வனவாசந்தீர்ந்தல்லவோ வையகத்தேபோனபின்பு
சேனைபரிவாரம் துரியோதிரன்பாளையத்தை
செண்டாட்டமாட்டிவைத்த சேனைகளைக்கொன்றழித்து
கர்ணன்சகுனியையுங் கண்டதுண்டமாகவெட்டி
துரியோதிரன்முதலாய்ச் சேர்ந்ததம்பிநூற்றுவரை
மற்றும்படைகளெல்லாம் மண்ணோடேசாய்த்துவெட்டி
அண்ணாருக்குப்பட்டங்கட்டி அரசாண்டிருங்களப்பா
தருமருக்குப்பட்டங்கட்டி தரணியையாண்டிருங்கள்
எப்போதும்போலே இராச்சியத்தையாண்டிடுங்கள்
பெற்றாள்வயாதனில் இட்டேன்பெருநெருப்பை
குந்தியம்மாள் தன்வயிற்றிற் கொடியதணல்வைத்தேனே
எழுத்துப்படியல்லாமல் எவரால்விலக்கவசம்
தலையிலெழுத்துதான் தவறாது தம்பியரே
அன்றெழுதுஞ்சர்த்தனவன் அழித்தெழுதப்போறதில்லை
விதிவசத்தை யாராலும் வெல்லவேகூடாது
இனிபிழைப்பேனென்றுநீ எண்ணாதே தம்பியரே
கிட்டநீவாராதே எட்டநில்லுந்தம்பியரே
போய்வாருமென்றானே போர்க்கடங்காவீமனவன்
அவ்வார்த்தைதான்கேட்டு அர்ச்சுனன் துயரமுற்று
கண்ணீரைச்சோரவிட்டு காளையருச்சுனனார்
மெத்தசலித்துமே விசாரம்பெரிதாகி
அண்ணாவேகான்வீமா அடியேனொருவார்த்தை
பாம்பின்வயிற்றிலேநீர் பார்வேந்தாமாண்டதுவும்
அரவத்தின்வயிற்றிலேநீர் ஆணழகாமாண்டதுவும்
அண்ணன் தருமருடன் அடியேனொருவார்த்தை
உரைத்தேனேயானாக்கால் உள்ளமிகப்பதறி
துள்ளிப்பதைத்துயிரை துடிதுடித்துவிட்டிடுவார்
எப்படிக்குநானுரைப்பேன் என்னுடைய அண்ணாவே
போகமனம்வருமோ போர்வேந்தர் அண்ணாவே
உன்னைவிட்டுநான்பிரிந்து உயிருந்தரிப்பேனோ
இப்பெரியபாம்புதனை இட்சணத்தில்கொன்றிடுவேன்
வயிற்றைக்கிழித்திடுவேன் வந்துவிடுமண்ணாவே
என்றுயெழுந்தானே எழில்சேரருச்சுனனும்
வில்லைத்துநாரிபூட்டி வில்லைக்குணத்தொனித்து
அம்புறாத்தூணியிலே அஸ்திரமெடுக்கையிலே
பாரமலைப்பாம்பு பார்த்தது அருச்சுனனை
கானமலைப்பாம்பு கண்டதருச்சுனனை
அங்கேமலைப்பாம்பு ஆவலுடன் ஓடிவந்து
அருச்சுனனைத்தான்பார்த்து அருகில்வந்துவாய்திறந்து
வாள்விஜயனைப்பார்த்து வாயைத்திறந்துவந்து

எடுத்துவிழுங்கியது இயலானவருச்சுனரை
பார்த்தனெனுமருச்சுனரைப் பாம்புவிழுங்கியது
எடுத்துவிழுங்கியது ஏப்பம்விட்டுத்தானிருக்கும்
அப்போதுவில்வளைத்து அருச்சுனனுமேதுசெய்தான்
அரவத்தின்தன்வயற்றில் அருச்சுனனும்விழுந்தான்
அண்ணாவேயண்ணாவே அடியேனும்வந்துவிட்டேன்
உந்தனுடனாக வந்துவிட்டேனண்ணாவே
நானுமிங்கேவந்துவிட்டேன் நலம்பெரியஅண்ணாவே
அண்ணன்தர்மராயருக்கு ஆர்போயுரைப்பார்கள்
எழுத்துப்படியல்லோ இருவருக்குமொன்றாச்சு
என்செய்வேனென்செய்வே னென்றுபுலம்புகையில்
வெற்றிமதயானை வீமனவனேதுசொல்வான்
வில்விஜயாவேந்தன் விதித்தவிதிப்படியோ
என்று இருவருமா யிருந்துபுலம்புகிறார்
அநேகநெடும்பொழுது ஆனபிறகாக
தக்கபுகழுடைய தருமரவரேதுசொல்வார்
தம்பிநகுலாநீ தாமமுடியானே
வெற்றிமதயானை வீமனைத்தான்தேடி
போனதோர்அருச்சுனரை பின்னேவரக்காணேனே
இன்னம்வரக்காணேன் ஏதொன்றும்யானறியேன்
ஆரோடேசண்டைகள் அமராதுசெய்கிறாரோ
இக்காட்டில்ராட்சதர்கள் எத்தனையோகோடியுண்டு
எவரோடேசண்டைக ளிடுகிறாரென்றறியேன்
காணவும்போரேனோ கட்டழகர்தம்பியரை
பார்க்கவும்போரேனோ பார்மன்னரிருவர்களை
தேடியழைத்து சீர்நகுலாவருவீரோ
பார்த்து அழைத்து பரிநகுலாவருவீரோ
என்றேவுரைத்துமவர் எண்ணமிட்டுக்கொண்டிருந்தார்
இவ்வார்த்தைதான்கேட்டு எழுந்தான்நகுலனுமே
பட்டுதட்டி ஒட்டியாணம் பசும்பொன்னாற்சமுதாடும்
நீண்டிடுங்கால்களுக்கு நெரிஞ்சிப்பூச்சல்லடமாம்
மண்டியிடுங்கால்களுக்கு மாதளம்பூச்சல்லடமாம்
தூக்கிவைக்குங்காலகளுக்கு அத்திப்பூச்சல்லடமாம்
சல்லடங்கள்போட்டல்லவோ தட்டிவரிந்துகட்டி
தட்டிவரிந்துகட்டி தாமரைப்பூச்சுங்குவிட்டு
தன்னாயுதங்கள்தனைத் தானெடுத்துச்சீர்நகுலன்
காடுசெடிதாண்டி கரியமலைதான்தாண்டி
செந்நாய்புலிகரடி சேரும்வனந்தாண்டி
காலடியைப்பார்த்துமல்லோ கடுகியேதேடிவாரான்
அக்கானகந்தனிலே ஆராய்ந்துதேடினபின்
அண்ணாவேயென்வீமா அருச்சுனாவென்றழைத்தான்

கூவியழைத்தானே கோடைநகுலனுமே
அழைத்தகுரல்கேட்டது அருச்சுனற்குவீமருக்கும்
வெற்றிமதயானை வீமனுமேதுசொல்வான்
ஆலிலழகுமன்னன் அருச்சுனனுமேதுசொல்வான்
தம்பிநகுலாநீ தாமமுடியானே
அண்ணனையுமென்னையும் அரவம்விழுங்கினது
மலைப்பாம்புக்கிரையானோம் மன்னவனே தம்பியரே
கிட்டநீவாராதே எட்டிநில்லுமென்பிறப்பே
அண்ணருக்குச்சொல்லும் அரவம்விழுங்கினதாய்
அஸ்தினபுரத்துக்கு அண்ணவைகூட்டிப்போய்
திரியோதிரனுடனே செய்திகள்சொன்னாலே
அருச்சுனரைவீமரை அரவம்விழுங்கிற்றென்றால்
மெத்தமகிழ்ந்திடுவார் விஷநாகங்கொண்டவனும்
தருமாபுரமுள்ளதெல்லாம் தருமரையாளுமென்பான்
எப்போதும்போலேநீங்க ளிராச்சியத்தையாண்டிருங்கள்
நாங்கள்-இனிபிழைப்போமென்று எண்ணாதே தம்பியரே
போங்காணும்நகுலாநீ புத்தியுள்ளகண்மணியே
இவ்வார்த்தைதான்கேட்டு ஏதுசொல்வான்நகுலனுமே
அண்ணாவேநீர்கேளும் அரவத்தைகொல்லுகிறேன்
வெட்டியெறிகிறேன் வெளிப்படுங்களண்ணர்களே
உங்களைவிட்டெனக்குப் போகமனம்வருமோ
விட்டுப்பிரியவே வேறுமனம்வருமோ
அண்ணருட்வயற்றில் அனலைச்சொரிவேனோ
சிறுவன்போய்ச்சொன்னாலே சீவனைவிட்டிடுவார்
மாளநினைப்பாரே மதிகேடுவந்துவிடும்
போகமனம்வருமோ புண்ணியரேயெந்தனுக்கு
அவ்வார்த்தைதான்கேட்டு அருச்சுனனுமேதுசொல்வான்
நீர்தலையிலெழுதினதை தள்ளிவைக்கபோறீரோ
நீர்-ஏட்டிலெழுதினதை யெடுத்தெறியப்போறீரோ
வரும்வினைகள்வந்தாலே மடியேந்தவேண்டாமோ
ஆயனெழுத்தளவு ஆகையினால்மாண்டுவிட்டோம்
இனிநாம்பிழைப்போமென் றெண்ணாதே தம்பியரே
மற்றும்பிழைப்போமென்று மன்னவரேயெண்ணாதே
போடாநகுலாவென்று புகன்றானருச்சுனனும்
செப்புமொழிகேட்டு சீராய்நகுலனுமே
இப்பாம்பைவெட்டி யெறிகிறேனிப்போது
பாம்புதனைக்கொல்வேனென்று பட்டாவுருவிநின்றான்
பார்த்தது அப்பாம்பு பாரமுடிமன்னவனை
கண்திறந்துபார்த்தது கடுகமலைப்பாம்பு
வாயைத்திறந்தவனை வாரிவிழுங்கினது
பாம்பின்வயிற்றிலேதான் பரிநகுலன்போய்விழுந்தான்

அண்ணாவேயென்னையும் அரவம்விழுங்கிற்றென்றான்
என்னையுங்கூட எடுத்துவிழுங்கிற்றென்றான்
உங்களுடனாக ஒருவனுஞ்சேர்ந்துவிட்டேன்
மூவருக்குமொரெழுத்தாய் முடிந்ததேயென்னசெய்வோம்
அண்ணரைத்தம்பியரை ஆரணங்கைகைவிட்டோம்
என்றுபுலம்பியே இருக்கின்றவேளையிலே
வில்லாளிபார்த்தனுமே வீமனங்கேதுசொல்வான்
அப்போதேசொன்னேனே தப்புவருமென்றுசொல்லி
என்வார்த்தைகேளாமல் இங்குவந்தீர்தம்பிரே
வந்தவிடந்தனிலே வல்வினையைக்கண்டீரோ
என்றுமவர்சொல்லி யிருந்துவிசாரமிட்டார்
இப்படிக்காகவேதா னிருக்கின்றவேளையிலே
அநேகநாழிசென்றபின்பு அழகானதர்மலிங்கம்
மெத்தவிசாரப்பட்டு வெகுவாய்மனங்கலங்கி
சகாதேவனைப்பார்த்து தருமருரைக்கலுற்றார்
வீமன்கனிபறிக்கப்போய் வெகுநேரமாச்சுதப்பா
அழைத்தோடிவாருமென்று அருச்சுனனைப்போகவிட்டேன்
அருச்சுனன்தேடிப்போய் அநேகநெடும்போதாச்சு
போனதொருச்சுனனும் பின்புவரக்காணேனே
நகுலனைப்போகவிட்டு ராஜர்களைப்பாருமென்றேன்
காளைநகுலனுமே கடுகவரக்காணேனே
செத்தார்பிழைத்தாரோ செய்திதெரியவில்லை
மாண்டாரோயானறியேன் மன்னவனேயென்னசெய்வேன்
ஆரோடேசண்டை அமரதுசெய்கிறாரோ
எவரோடேசண்டை ஏடாகூடங்களுண்டோ
அவர்களைப்பார்த்துநீ யழைத்தோடிவாராயோ
ஓடியழைத்துநீ ஒருநொடியில்வாராயோ
கண்டுஅழைத்துநீ கடுகெனவேவாராயோ
அண்ணருரைகேட்டு அழைத்துமேவாராயோ
அப்போதுசகாதேவன் ஆணழகன்தானெழுந்து
சல்லடங்களிட்டுமெல்லோ தட்டிவரிந்துகட்டி
தட்டிவரிந்துகட்டி தாமரைப்பூசுங்குவிட்டு
கச்சைவரிந்துகட்டி கருங்கச்சைசுங்குவிட்டு
ஆயுதந்தானெடுத்து அடவாய்நடக்கலுற்றான்
காலடியைதேடியே கடுகிநடக்கலுற்றான்
காடுஞ்செடியுங் கனத்தமலைதான்தாண்டி
ஆறுஞ்சுனையு மதிகவனந்தாண்டி
சில்லென்றகாடுஞ் செடியும்வனந்தாண்டி
தேடியேவாரானே திசைதோறுங்கானகத்தில்
எங்கெங்குந்தேடினானே இனியவிடமாராய்ந்து
கண்ணாலேகண்டதில்லை காளைகளானவரை

பாராளிடங்களிலே பாரமுடிராசர்களை
தேடியேவந்துமவன் திசைக்காற்றேபோல்நின்றுவிட்டான்
அடியாளாந்தமாயவரே ஆதிமூலம்வந்தருளும்
அண்ணுமைதவீமா அருச்சுனரேசீர்நகுலா
என்று-கூவியழைத்தானே கொற்றமன்னவீரியனும்
கூவியழைத்தகுரல் கேட்டதுமூவருக்கும்
ஏன்காண்சகாதேவா எங்குவந்தீர்தம்பியரே
அரவம்விழுங்கினது ஆணழகாமூவரையும்
ஆரவில்லும்தம்பியரே சேரநீவாராதே
எட்டநில்லுந்தம்பியரே கிட்டநீவாராதே
அரவம்விழுங்கினதாய் அண்ணருக்குச்சேதிசொல்லும்
நீ-அழுதுபுலம்பாதே அண்ணரைக்கூட்டிப்போய்
அஸ்திநைபுரிக்கு அடைவுடனேபோய்ச்சேரும்
வீமருச்சுனரை மிக்கநகுலரையும்
அண்ணமார்மூவரையும் அரவம்விழுங்கினதாய்
துரியோதிரனுடனே செய்திநீசொன்னாலே
சந்தோஷமாவான் சர்ப்பக்கொடியோனும்
மெத்தமகிழ்ந்திடுவான் விஷநாகங்கொண்டவனும்
தருமாபுரத்தையல்லோ சர்ப்பக்கொடியோன்கொடுப்பான்
சீமைதருவானே சிறந்ததுரைத்தனமும்
பூமிதருவானே பொல்லாச்சுயோதனனும்
அண்ணரும்நீருமே அவ்வரசையாண்டிருங்கள்
போங்காணும்தம்பியரே புகழ்பெரியராசாவே
என்றுமவருரைத்து இருக்கின்றவேளையிலே
இவ்வார்த்தைதானேகேட்டு இசையசகாதேவன்
அண்ணருரைகேட்டு ஆணழகனேதுசொல்வான்
மன்னருரைகேட்டு மறுவார்த்தையேதுசொல்வான்
போயுரையுமென்றுசொல்லி புண்ணியரேசொல்வார்கள்
புகழ்வேந்தரண்ணருக்குப் போய்நானுரைக்காக்கால்
சொன்னேனேயாமாகில் சொர்க்கபதிசேர்ந்திடுவார்
இவ்வார்த்தைதான்கேட்டு இன்னமிருப்பாரோ
மூவரைபறிகொடுத்து முடிசூட்டியாளுவரோ
அவர்-செத்துமடிந்திடுவார் சிவலோகஞ்சேர்ந்திடுவார்
மாண்டுமடிந்திடுவார் வைகுந்தஞ்சேர்ந்திடுவார்
சென்றுயான்சொன்னாலே சீவன்விடுவாரே
அடித்தபுழுப்போலே துள்ளிவிழுவாரே
அடித்தமயில்போலே அலறிவிழுவாரே
சாகத்துணிவாரே தர்மலிங்கஅண்ணாவும்
போகத்துணிவாரே பொறுமையுள்ளதர்மலிங்கம்
எப்படிக்குப்போயுரைப்பேன் என்னுடையஅண்ணர்களே

என்றுசகாதேவன் ஏங்கிப்புலம்பலுற்றான்
அடியற்றமரம்போலே யலறிபுரண்டழுவான்
மலையேபருவதமே மாண்டுமடிந்தீரோ
செம்மலைபருவதமே செத்துமடிந்தீரோ
உங்களைப்பறிகொடுத்து ஒருத்தனாய்ப்போவேனோ
அண்ணர்களேயென்றுசொல்லி அலறிப்புலம்பினான்
அழுதகுரல்கேட்டு அம்மூவரேதுசொல்வார்
தலையிலெழுதினதைத் தள்ளிவைக்கப்போரீரோ
ஒட்டிலெழுதினதை யெடுத்தெறியப்போரீரோ
ஈசனெழுதியதில் எள்ளளவுங்குறையாது
சொல்லாதேதம்பிநீ சுருக்காகவெழுந்திரென்றார்
பேசாதேதம்பிநீ போய்பிழையும்வையகத்தில்
இவ்வார்த்தைதான்கேட்டு ஏதுசொல்வான்சகாதேவன்
உங்களை-பார்த்துநடக்கவேதான் பாவிமனம்வருமோ
கண்டுநடக்கவேதான் காளைமனம்வருமோ
பொருத்துநடக்கவேதான் போகமனம்வருமோ
இப்பாம்பைக்கொன்றிடுவேன் இயலானராசர்களே
பாம்புதனைக்கொல்லுகிறேன் பாருமென்றுவாளெடுத்தான்
என்றுஉருவினான் இளையசகாதேவன்
கத்தியுருவையிலே கண்டதுவப்பாம்பு
கண்டதுமலைப்பாம்பு கணிதநாற்கோமானை
வாயைத்திறந்து வாரிவிழுங்கினது
எடுத்துவிழுங்கினது இளையசகாதேவனையும்
அப்போசகாதேவன் ஆனலழகுமன்னன்
என்னையும்விழுங்கினது என்னுடையஅண்ணாவே
உங்களுடனாக ஒருவனும்வந்துவிட்டேன்
அவ்வார்த்தைதான்கேட்டு ஆணழகரேதுசொல்வார்
என்வார்த்தைதள்ளி இருந்தீரோதம்பியரே
நால்வருக்குமோரெழுதது நான்முகனெழுதிவைத்தான்
அண்ணர்தருமராசாவை அல்லவருங்கைவிட்டோம்
ஆட்டிதுரோபதையை யரிவையரைக்கைவிட்டோம்
என்றுபுலம்பியேதா னிருந்தார்கள்நாலவருமே
அநேகநெடுநேர மானபிறகாக
தக்கபுகழ்பெரிய தருமரவரேதுசொல்வார்
அன்னமேசொர்னமே அமிர்தப்பசுங்கிளியே
தேனேமடமயிலே தித்திக்குந்தெள்ளமுதே
கன்னல்மொழியாளே கற்கண்டேசர்க்கரையே
சாந்துகழுத்தியரே சந்தனப்பூமேனியரே
கோவைக்கழுத்தியரே குங்குமப்பூமேனியரே
குங்குமமொத்தசாரு கொம்பேரிடையாளே
நெருப்பிற்பிறந்தபெண்ணே நீலவண்ணன்தங்கையரே

கைமோசம்வந்ததுவே கண்மணிகளைக்காணேன்
போகவழியறியேன் புதுமைகளொன்றறியேன்
செத்தார்பிழைத்தாரோ சேதியொன்றுநானறியேன்
மாண்டார்பிழைத்தாரோ மறுவார்த்தைநானறியேன்
கடுகியெழுந்திருங்காண் கானகத்தில்தேடிடுவோம்
என்றுபுலம்பி எழுந்தாரிருவருமாய்
காலடியைப்பார்த்துமே கடுகியேவாரார்கள்
தேடியேவாறார்கள் சீரானகானகத்தில்
அப்பாமதவீமா அழகானவருச்சுனரே
தாமமுடிநகுலா தம்பிசகாதேவனெனக்
கூவிபுலம்புகையில் குரல்கேட்டுதம்பியற்கு
அண்ணன்குரல்கேட்க அர்ச்சுனனேதுசொல்வான்
ஏங்காணும்அண்ணாவே இடையநில்லுமென்பிறப்பே
சேரநீவாராதே தூரநில்லுமென்பிறப்பே
அருகேநீவாராதே அண்ணாவேதூரநில்லும்
பாம்புவிழுங்கினது பாரவனந்தனிலே
இங்கேமலைப்பாம்பு எடுத்துவிழுங்கினது
நால்வருக்குமோரெழுத்து நான்முகனெழுதிவைத்தான்
உன்- அங்கஞ்சலியாதீர் அழுதுபுலம்பாதீர்
இனிபிழைக்கப்போறோமென் றெண்ணாதேஅண்ணாவே
இவ்வார்த்தைதான்கேட்டு இயலானதர்மலிங்கம்
துள்ளிப்புலம்புகிறார் சொரணைதெரியாமல்
வெற்றிமதயானை வீமாமதகரியே
ஏழுபிராயத்தில் இடும்பனைக்கொன்றாயே
பத்துபிராயத்தில் பக்காசூரனைக்கொன்றாயே
அரக்குமாளிகையி லெவரையுநீயெடுத்தாய்
ஐவரையுந்நீயெடுத்தாய் அந்தபலமடங்கி
பாம்புக்கிறையாக இருந்தீரோபார்வேந்தா
ஏழுபதுலட்சம்யானை இழுக்கவொண்ணுகெதையெடுத்து
அமரதுசெய்கின்ற ஆண்மையுள்ளவீமாநீ
மலைப்பாம்பைக்கொல்லுதற்கு மறந்தாயோவீமாநீ
சந்தனமிருபுயத்தைச் சாய்த்தாயோபூமியிலே
குங்குமமிருபுயத்தைக் கொல்லென்றுசாய்த்தாயோ
கல்லானதூணை கரையானரிக்குமோதான்
இரும்பானதூணும் யித்துவிழுமோதான்
நீமடியுங்காரியத்தை நிண்ணயத்தைநானறியேன்
ஆச்சாப்பருவதமே அழிவில்லையென்றிருந்தேன்
ஆச்சாப்பருவதமும் அழியும்நாளாச்சுதோ
கற்பகத்தானுக்கு கலக்கமில்லையென்றிருந்தேன்
கற்பகத்தானுங் கரையுநாளாச்சுதே
என்னையலையவிட்டு இப்பாம்புக்கிறையானாய்

நூலார்கடுந்திரளார் நூறுபேர்மன்னர்களை
கொல்லுவேனென்றுசொன்ன கொடியசபதமெல்லாம்
மறந்தாயோதம்பிநீ மலைப்பாம்புக்கிறையாக
என்னைமறந்துநீ யிறந்துவிடஞாயமுண்டோ
என்றுபுலம்புகிறார் இயலானதருமருநீம
மாரடித்துதலைதோளடித்து மண்மேல்விழுந்தலறி
களைத்துவிழுந்தாரே கட்டழகர்மூர்ச்சையானார்
அப்போதுதுரோபதையும் ஆரணங்குமேதுசெய்தாள்
பச்சைதழையொடித்து தருமருக்குவீசலுற்றாள்
காட்டுத்தழையொடித்து கடுகெனவேவீசலுற்றாள்
வீசினாள்தருமருக்கு விடாய்கள்மிகத்தெளிய
வீசக்களைதெளிந்து வேந்தர்புலம்புகிறார்
அப்பாடாஅப்பாடா ஆணழகாதம்பியரே
காளைஅருச்சுனா கடுங்காளைசேவகனே
எடுக்காதவில்வளைத்து இளங்கொடியைமாலையிட்டாய்
நீர்பார்த்துமீனெய்தாய் நித்திலந்துபூமுடியை
அழகிலமிகுந்தவரே அருச்சுனாதம்பியரே
நீமடியுங்காரியமும் நிண்ணயமும்நானறியேன்
இடதுபுயமான இயலான அருச்சுனரே
என்னைமறந்தீரோ இப்பாம்புக்கிறையாக
உங்களைமடியவிட்டு ஒருநாழிதங்குவேனோ
கூடமடிந்திடுவேன் கொற்றவரேஉங்களுடன்
நானுமடிந்திடுவேன் ராசாக்களேஉங்களுடன்
அங்கமுருகுதையோ ஆவித்துணலாகுதையோ
நெஞ்சந்தனிலேயே நெருப்பாயெரியுதப்பா
ஈரலுக்குள்ளே இருந்துதணல்பத்துதடா
கும்பியினுள்ளேயல்லோ குலவிளக்காயெரியுதடா
மனதுதரிக்கவில்லை வயிற்றெரிச்சல்தீரவில்லை
உங்களைப்பறிகொடுத்து உலகத்திலிருப்பேனோ
நானுமடிந்திடுவேன் ராஜார்களேஉங்களுடன்
உன்னைப்பொசித்தபாம்பு என்னைப்பொசியாதோ
என்றுமனந்தளர்ந்து எழுந்தாரேதர்மலிங்கம்
மலைப்பாம்புதன்னருகே வந்துதலைகொடுத்தார்
இரங்கினார்தருமலிங்கம் எனனையும்விழுங்குமென்றார்
தாராமூக்கன்மலைப்பாம்பு தள்ளிவிடுகுது
எதிரிலேவந்தாலும் இடைந்துவிடுகுது
பக்கத்தில்வந்தாலும் பார்த்துமேபோய்விடுது
தக்கப்புகழுடைய தருமரவருரைப்பார்
சமத்துள்ளமலைப்பாம்பே தம்பியரைவிழுங்கிவிட்டாய்
என்னைவிழுங்குமென்று எதிரேநான்வந்தாலும்
என்னபாவஞ்செய்தேனோ என்னைவிலக்கிவிட்டாய்

ஏதானும்பாவிநான் இருந்தாலுமாகாது
ஐயோவெனத்தருமர் அழுதுபுலம்புகிறார்
அய்யோமுறையோவென்று கூவிப்புலம்புகிறார்
தோராவடிவழகி துரோபதையுங்கூறுவாள்
ஆண்டவரேஐயாவே அழகுள்ள தர்மரேநீர்
மாயவரையிப்போ மனதில்நினையுமென்றாள்
எம்பெருமாள்வந்தாலே எல்லாந்தெரியுமென்றாள்
அப்போது தருமருக்கு அந்தநினைவுவந்து
அவ்வார்த்தைதான்கேட்டு அழகானதருமலிங்கம்
மாயனைத்தானினைந்து வருந்திப்புலம்புகிறார்
மாயன்பெருமாளே வந்தருளவேண்டுமையா
ஆலிலைமேற்பள்ளிகொண்ட ஆதிமூலம்வாருமையா
பாற்கடலிற்பள்ளிகொண்ட பாரளந்தரெம்பெருமாள்
மச்சவவுகொண்ட மாயவரேநின்சரணம்
கூர்மவவுகொண்ட கோபாலநின்சரணம்
கல்லான அகலிகையை நல்லபெண்ணாக்கிவைத்தீர்
எல்லையளந்தீரே எதிரில்லையென்றீரே
மூலமென்றகுஞ்சரத்தை முகில்வண்ணா காத்தீரே
இராமராய்நீர்பிறந்து இராவணனைச்சங்கரித்தீர்
இலங்கையழித்தீரே இராட்சதரைவென்றீரே
அரக்குமாமாளிகையில் ஐவரையுங்காத்தீரே
அம்பலத்துவாசலிலே ஐவரையுங்காத்தீரே
அபயமென்றதுரோபதைக்கு அட்சயத்துகில்கொடுத்தீர்
உன்மகிமையாரறிவார் உம்பர்பிரான்தானறிவார்
தஞ்சமென்றபஞ்சவரை தற்காக்கதெய்வமல்லோ
செல்வத்திரவியங்கள் ஒழிந்துபோனோமையா
கையில்செபமாலை கனங்குலைந்துபோனோமையா
உள்ளங்கைநெல்லிப்பழம் உருகுலைந்துபோனோமையா
இத்தனைநாள்காத்தீரே இன்றல்லோமாண்டுவிட்டோம்
ஏழையழுதகண்ணீர் கூறியவாள்தப்பாது
நானழுதகண்ணீரும் ரம்பங்கொண்டறுக்காதோ
வாராயோகிருஷ்ணாவென் மனத்துயரந்தீராயோ
என்று- அபயப அபயமென்று அழுதுபுலம்புகிறார்
தோராவடிவழகி துரோபதையாளேதுசொல்வாள்
அண்ணாமணிவண்ணா அடியேனுக்குதவிசெய்யும்
மஞ்சளிழந்தேன் மணமிழந்தேன் பூவிழந்தேன்
தாலிசரடிழந்தேன் தலைவிரிக்கநாளாச்சே
ஐவரிட்டமங்கிலியம் அழிவில்லையென்றிருந்தேன்
மங்கிலியந்தானறுந்து மண்ணில்விழநாளாச்சே
ஆரைக்கழுத்தி யாரைக்கழுத்தியானேனே
கோரைக்கழுத்தி நுரைக்கழுத்தியானேனே

செல்வங்குலைந்துநான் சீருமழிந்தேனே
ஐவருங்கைவிட்டாரே அலைந்துவிடநாளாச்சே
மங்கிலியப்பிச்சைநீ தாராயோமன்னவரே
என்குறைதீராயோ இங்கேநீவாராயோ
அபயக்குரலிட்டுமங்கே அழுதாள்துரோபதையும்
மார்கொண்டகண்ணீரை வழித்தெறிந்தாள்மண்மேலே
அப்போதுமாயவரும் ஆதிமூலந்தானறிந்தார்
அழுதகுரல்கேட்டு ஆபன்பெருமாளும்
செல்வத்திரவியங்கள் சீரழிந்துபோகுதே
பெட்டியிலேபூஷணம் பெருமைகுலையுதே
தோளிற்செபமாலை தோடவிழ்ந்துபோகுதே
கையிற்செபமாலை சனங்குலைந்துபோகுதே
வருந்திபுலம்புகிற மனத்துயரந்தீர்க்கவென்று
அழுதுபுலம்புகிற அத்துயரந்தீர்க்கவென்று
ஏழைகள்தன்துயரம் தீர்க்கவென்றுஎம்பெருமாள்
வாரார்பெருமாளும் வட்டமாங்கருடனேறி
துவாரகாபுரியைவிட்டு சுவாமியவர்வாராரே
காடுஞ்செடியுங் கரியமலைதான்தாண்டி
வேங்கையடர்ந்தவனம் வெண்களாப்பூத்தவனம்
கொங்குபெருத்தவனம் கொன்றைகளாப்பூத்தவனம்
பாதிரிமுல்லை பருத்தவனந்தான்தாண்டி
சில்லென்றகாடுஞ் செடியும்வனந்தான்தாண்டி
மூங்கிலடர்ந்திருக்கும் முல்லைவனந்தான்தாண்டி
சூரியன்தன்வனத்தைச் சுருக்காகத்தான்தாண்டி
இராமரிஷிவனத்தில் இராமரும்வந்துவிட்டார்
மாயன்வருகிறதை வழியிலேதான்பார்த்து
தருமருந்துரோபதையும் தாமெதிரேஓடிவந்தார்
இருவருமாகவே சரணமிட்டார்மாயவரை
முக்கால்வலம்வந்து முடிவணங்கித்தெண்டனிட்டார்
நாற்கால்வலம்வந்து நமஸ்கரித்துதெண்டனிட்டார்
அறுகால்வலம்வந்து அடிவணங்கிதெண்டனிட்டார்
சிங்காதனம்போட்டார் ஸ்ரீராமர்தானிருக்க
ஆசனம்போட்டார்கள் அரிராமர்தானிருக்க
இட்டசிங்காதனத்தில் எம்பெருமாள்வீற்றிருந்தார்
மாயன்பெருமாளும் வாய்திறந்தேதுசொல்வார்
அடியளந்தமாயவரும் ஆதிமூலமேதுசெய்தார்
அழுதகுரலேது அழைக்கவந்தகாரணமேன்
வேண்டியழைத்த விபரமென்னசொல்லுமென்றார்
வருந்தியழைத்த வகையதனைச்சொல்லுமென்றார்
வீமருச்சுனர்கள் வேந்தர்களெங்கேயென்றார்
தம்பிமார்நால்வர்களும் தார்வேந்தேயெங்கேயென்றார்

அழுதுபுலம்புவதேன் ஆரணங்குதுரோபதையும்
ஏதுக்கழுதீர்க ளெனக்கரியச்சொல்லுமென்றார்
தக்கப்புகழுடைய தருமரவரேதுசொல்வார்
தம்பிமார்நால்வரையும் சர்ப்பம்விழுங்கிற்றென்றார்
தாராழுக்கன்மலைப்பாம்பு தானும்விழுங்கிற்றென்றார்
என்னையழைத்தவகை யெனக்கரியக்கூறுமென்றார்
தம்பியரைப்பறிகொடுத்து தரிப்பேனோபூமியிலே
மலையைப்பறிகொடுத்து மண்மேலிருப்பேனோ
அங்கம்பொறுக்குமோ அரிராமாயென்னசெய்வேன்
ஆரைச்சதமென்பேன் அன்னியரைத்தஞ்சமென்பேன்
எவரைச்சதமென்பேன் இனியாரைத்தஞ்சமென்பேன்
ஆகையினாலேதான் ஆண்டவரேயுமையழைத்தேன்
என்றுரைக்கத்தான்கேட்டு எம்பெருமாளேதுசொல்வார்
எழுத்துவிதிதன்னை எவரால்விலக்கவசம்
தலையிலெழுதினதை தள்ளிவைக்கப்போகிறோமோ
ஏட்டிலெழுதினதை எடுத்தெறியப்போகிறோமோ
அன்றெழுதியகர்த்தரவர் அழித்தெழுதப்போகிறாரோ
இட்டபடியொழிய எள்ளளவுங்குறையாது
வரும்வினைவந்தாலே மடியேந்தவேண்டாமோ
ஆராலேயாகுமிது ஆயுசுக்குகர்த்தருண்டோ
எவராலேயாகுமிது இவர்களைத்தானெழுப்ப
இவ்வார்த்தைதான்கேட்டு ஏதுசொல்வார்தர்மலிங்கம்
என்னாலேயாகாதென் றேனோகழித்துவிட்டீர்
உம்மாலேயாகாத தொன்றுண்டோவையகத்தில்
எல்லாருமதுமீதில என்றிருந்தேன்மாயவரே
தம்பிமார்தான்பிழைக்கச் சாமிநீகண்பாரும்
உடன்பிறப்புதான்பிழைக்க உத்தமரேகண்பாரும்
என்பிறப்புதான்பிழைக்க எம்பெருமாளேகாத்தருளும்
கண்பாரிவ்வேளையெனக் கண்ணனையுந்தெண்டனிட்டார்
புண்ணியமாய்ப்போகுமென பெருமாளைதெண்டனிட்டார்
அப்போதுரோபதையா ளாரணங்குஏதுசெய்தாள்
முந்தாணியேந்திநின்றாள் முருகுழலாள்துரோபதையும்
மங்கிலியப்பிச்சையல்லோ மாயவாவெனக்கருளும்
வாடாதமங்கிலியம் வல்லவாவெனக்கருளும்
என்றுமவள்சொல்லி இளங்கொடியாள்துரோபதையும்
மாயனுடபாதத்தை வணங்கித்தொழுதுநின்றாள்
இவ்வார்த்தைதான்கேட்டு எம்பெருமாள்மனமிரங்கி
அங்குமொருகிருஷ்ணன் ஆயரிருக்கையிலே
சின்னயெலிபோல சுவாமிவடிவுகொண்டார்
மலைப்பாம்புதன்செவியில் மாயவரும்போய்நுழைந்தார்
அருச்சுனன்வில்நாணிதனை அறுத்தாரேமாயவரும்

வில்நாணிதானறவே வில்நிமிர்ந்துவாய்கிழிந்து
நகுலன்சகாதேவன் நல்விஜயன்வீமனுமே
ராமரிஷியுடனே நன்றாய்வெளிப்பட்டார்கள்
ஐவருமாகவேதா னப்பாய்பில்வெளியானார்
மாயன்பெருமாளை வந்துநமஸ்கரித்தார்
தக்கபுகழுடைய தருமருக்குத்தெண்டனிட்டார்
வாழ்த்திமனமகிழ்ந்து மன்னன்தருமராயருமே
மனதுகுளிர்ந்தாரே மகாராஜர்தர்மலிங்கம
துரோபதைநாயகியுஞ் சிந்தைமிகக்குளிர்ந்தாள்
மலர்ந்தசெந்தாமரைப்போல் மனதுமிகக்குளிர்ந்தார்
அலர்ந்தசெந்தாமரைப்போல் அழகுமிகக்குளிர்ந்தார்
ராமரிஷியார்க்கு நற்காட்சிதந்தாராம்
மாயன்பெருமாளும் வார்த்தைகளங்கேதுசொல்வார்
இந்தவனந்தாண்டி இனியவனம்போங்களென்றார்
அப்போதுதருமலிங்கம் ஆயனைப்பார்த்துரைப்பார்
இந்தரிஷியாரு மிங்குவந்தகன்மமென்ன
வந்தகன்மமத்தனையும் வாய்திறந்துசொல்லுமென்றார்
அப்போதுமாயவரும் அருளாளரேதுசொல்வார்
இந்தரிஷிகாரியத்தை இயம்புவேன்நீர்கேளும்
மாயாண்டிதன்னடியார் வந்தால்வணங்குவார்காண்
எந்தனடியார்கள்வந்தால் இகழ்ச்சிகள்பண்ணுவார்
ஏடாகூடங்கள்பண்ணி எட்டியடிக்கிறதும்
இப்படியாகவேயிருந்தாவெகுகாலம்
அப்போதுநாளொருநா ளங்கேவடிவெடுத்தேன்
தாதன்வடிவெடுத்து தப்புகொட்டிபிச்சையென்றேன்
அரிகரிராமாவென்று ஐயாவேபிச்சையென்றேன்
அப்போதுராமரிஷி அவசரமாயோடிவந்து
என்னையடித்தாரே இயலானராமரிஷி
அடிபட்டுக்கொண்டதொரு ஆக்ருஷைமானதினால்
நான்பட்டஅடியாலே இட்டேன்பெருஞ்சாபம்
அப்போதுராமரிஷி ஆபரேயென்றழுது
வல்லாளன்ராமரிஷி வாய்திறந்துயேதுசொல்வான்
என்சாபமெப்போதுதொலையுமையாசுவாமியென்றான்
ஐவர்பஞ்சபாண்டவர்க ளாரணியம்வந்தாக்கால்
நாலுபேரையெடுத்து நன்றாய்விழுங்கிடுவாய்
அப்போதுவுன்சாபம் அடைவுடனேதீர்த்திடுவேன்
என்றுமேவுரைத்து என்பதிக்குப்போய்நடந்தேன்
அப்போதிட்டசாபமது இப்போதொலைந்ததுகாண்
நீங்களிந்தவனத்தைவிட்டு இனியவனம்போங்களென்று

அப்போதுஎம்பெருமாள் அரிராமர்தானெழுந்தார்
ராமரிஷிஜுவர்களும் தங்கைதுரோபதையும்
எம்பெருமாள்மாயவற்கு எல்லோரும்தெண்டனிட்டார்
பஞ்சவர்களைவருக்கும் பாஞ்சாலிதுரோபதைக்கும்
மாயன்பெருமாளும் மனங்குளிரவாழ்த்தியபின்
எந்தவனங்களிலே இடராதுவந்தாலும்
இடராதுவந்தாலே என்னைநினையுங்கள்
என்றுமவருரைத்து எம்பெருமாள்போகலுற்றார்
வெட்டமாங்கருடனேறி மாயவரும்போகலுற்றா
காடுஞ்செடிதாண்டி கரியமலைதான்தாண்டி
ஆறுஞ்சுனையு மதிகவனந்தான்தாண்டி
செங்கையடர்ந்தவனம் வெண்களாப்பூத்தவனம்
கொங்குபெருத்தவனம் கொன்றைகளாப்பூத்தவனம்
வனமாய்வனந்தாண்டி வந்துவிட்டார்மாயவரும்
துளபமணிமார்பன் துவாரகைபோய்சேர்ந்தார்
சிங்காதனத்தின்மேல் ஸ்ரீகிருஷ்ணர்தானிருந்தார்
மாயவனார்போனபின்பு மகாராஜர்பஞ்சவர்கள்
ஐவர்பஞ்சபாண்டவரும் ஆரணங்குதுரோபதையும்
மன்னர்பஞ்சபாண்டவரும் மயிலனையாள்துரோபதையும்
அந்தவனத்தி லனேகநாள்சென்றபின்பு
இப்படியாக யிவரிருக்கும்வேளையிலே
மூன்றும்வருஷம் பிறந்ததுபஞ்சவர்க்கு
இரண்டாவது இராமரிஷிவனம் முற்றிற்று.

௩-வது முருக்கமகாரிஷிவனம்.

அந்தவனத்தைவிட்டு அப்பாலேபோகலுற்றார்
கூடைதலைமேலே குடிவாழ்க்கைகானகத்தில்
கோலிவைத்தசிமாடு கூடைதலைமேலேவைத்தார்
மண்ணிவைத்தசிமாடு வனமேகுடித்தனமாய்
முருக்கமகாரிஷிவனத்தில் முடிகிவந்தார்பஞ்சவர்கள்
அந்தவனத்திலேதான் அல்லோரும்வந்தார்கள்
ஓரடுக்குபர்னசாலை உண்டுபண்ணார்பஞ்சவர்கள்
மூன்றடுக்குபர்னசாலை முடிமன்னருண்டுபண்ணார்
ஆறடுக்குப்பர்னசாலை ஆணழகருண்டுபண்ணார்
ஏழடுக்குப்பர்னசாலை எழிலாகவுண்டுபண்ணார்
பர்னசாலைமேலெல்லோ பஞ்சவர்கள்வீற்றிருந்தார்
இப்படியாக யிவரிருக்கும்வேளையிலே
தென்னமுடிவேந்தன் திரியோதிரனேதுசொல்வான்
சபைகள்நிறைந்திருக்க சர்ப்பக்கொடியோனும்

ஆர்காணும்ராசர்களே அழகானமன்னர்களே
வச்சிரக்கிரீடம் தரித்தவொருமன்னர்களே
முத்துக்கிரீடம் முடிசூடுமன்னர்களே
மாணிக்கக்கிரீடந் தரித்தவொருமந்திரிகளே
அத்தண்டபேரையும் அனைவரையுந்தான்பார்த்து
மாநாகங்கொண்டவொரு மகாராஜனே துரைப்பான்
ஐவர்வனம்போய் அநேகநெடுநாளாச்சே
மூன்றும்வருஷமது மொழியலாம்பஞ்சவர்க்கு
(அவர்) எந்தவனத்திலே இருக்கிறாரென் றறியேன்
செத்தார்பிழைத்தாரோ சேதிதெரியவில்லை
மாண்டார்பிழைத்தாரோ மறுவார்த்தைதெரியவில்லை
ஆரடாதூதுவரே அங்கிருக்குமல்லர்களே
பாரப்புலிபோலே பஞ்சவர்களைவருமே
வீரப்புலிபோலே வேந்தர்களைவருமே
எந்தவனத்தி லிருக்கிறாரென் றறிந்து
ஐவருமைப்பாராமே அறிந்தோடிவாருமென்றான்
காவலர்களுமையவர் காணுமேவாருமென்றான்
இவ்வார்த்தைதான்கேட்டு எழுந்திருந்தார் தூதுவர்கள்
ஒற்றுளொருவனவனுடைனன் கானகத்தே
காடுஞ்செடியுங் கரியமலைதான் தாண்டி
ஆறுஞ்சுனையுமல்லோ அதிகவனந்தாண்டி
வேங்கையடர்ந்தவனம் வெண்களாப்பூத்தவனம்
கொங்குபெருத்தவனம் கொன்றைகளாப்பூத்தவனம்
வனமாய்வனந்தாண்டி வாரார்கள் தூதுவர்கள்
சூரியன்தன்வனத்தே சுருக்காய்நடந்துவாரார்
ராமரிஷிவனத்தே நடந்தார்நலமாக
முருக்கமகாரிஷிவனத்தே முடிமன்னர்போய் நுழைந்தார்
அந்தவனத்திலே ஐவரையுங்கண்டார்கள்
பர்னசாலைமேலாகப் பஞ்சவரைக்கண்டார்கள்
ஆருமறியாமல் ஆணழகர்திரும்பிவந்தார்
காடுஞ்செடியுங் கரியமலைதாண்டிவந்தார்
அஸ்தினபுரம்நாடி ஆணழகர் திரும்பிவந்தார்
தென்னமுடிவேந்தன துரியோதனன்முன்னேவந்தார்
ஆண்டவரேஐயாவே அடியேன்சரணமென்றார்
தென்னமுடிவேந்தன் துரியோதனனேதுசொல்வான்
போனீரேதூதுவரே புதுமையென்னசொல்லுமென்றான்
காளிபெரண்டனவன் கடிகியேயேதுசொல்வான்
முருக்கமகாரிஷிவனத்தே முடிமன்னரைக்கண்டுவந்தோம்
பர்னசாலைமேலேயல்லோ பஞ்சவரைக்கண்டோமையா
அவ்வார்த்தைகேட்டானே அரவக்கொடியோனும்
சிந்தைகலங்கியே திடுக்கிட்டுமெய்மறந்து

மனமுந்திடுக்கிட்டு வாய்திறந்தேதுசொல்வான்
இப்பெரியசபைதனிலே யிருக்கின்றராஜர்களே
அம்பலத்திற்கொலுவிருக்கும் அரசர்முடிமன்னர்களே
இத்தண்டராசர்களே இயலானமந்திரிகளே
கத்திகட்டுந்துரைகளே கனத்தமுடிமன்னர்களே
ஆண்மையுள்ள துரைகளே அல்லவருங்கேட்டிருங்கள்
என்வார்த்தைதள்ளாமல் ராஜர்களேகேட்டிருங்கள
பாஞ்சாலன்பெற்றெடுத்த பைங்கிளியாள்துரோபதைமேல்
தோளுவடிவழகி துரோபதைமேலெந்தனுக்கு
ஆசையலையுதுகாண் ஆரணங்குதுரோபதைமேல்
நினைக்கநினைக்கவேதான் நெஞ்சமுருகிடுது
ஆசையவள்மேலே ஆதரவுபாய்மேலே
சிந்தையவள்மேலே சிவன்பதைக்குதுகாண்
கன்னியர்மேலாசையல்லோ காமவிடாய்கொள்ளுதுகாண்
மயிலின்மேலாசையல்லோ மறக்கவில்லையெந்தனுக்கு
அவளாசையினாலே யவளைவரவழைத்தேன்
வணங்குவாயென்றுசொல்லி வார்த்தைபலபேசினேனே
இணங்குவாயென்று எத்தனையோசொன்னேன்காண்
வணங்காமற்போனாளே மாதுகருங்குழலாள்
இணங்காமற்போனாளே ஏலப்பசுங்கிளியாள்
வந்திருந்து அம்பலத்தில் வார்த்தைகள்பேசினேனே
வாருமிருமென்றேன் மடிமேலேயேறுமென்றேன்
மார்போடுமார்பணைத்து மருவிமுத்தந்தாருமென்றேன்
தோளோடுதோளணைத்துச்சேர்த்துமுத்தந்தாருமென்றேன்
வாரும்நீதுரோபதையே வலதுதுடையேறுமென்றேன்
அவள்மெத்தப்பேச்சுகளு மகந்தைகளும்பண்ணினாளே
அகந்தைகள்பண்ணுகிறாள் ஆகடியஞ்சொல்லுகிறாள்
ஆகையால்துரோபதையை அடித்துநானோட்டிவிட்டேன்
ஆரணங்கைகூடுகைக்கு ஆசைமெத்தத்தோணுகுது
மயிலினையகூடுகைக்கு மனதுமெத்தத்தோணுகுது
அவள்மீதிலாசைகொண் டல்லவர்க்குஞ்சொல்லுகிறேன்
துரோபதையைகொண்டுவா துரைகளுண்டோசொல்லுமென்றான்
பாஞ்சாலன்பெண்ணை பாவைதுரோபதையை
சிறைபிடித்துக்கொண்டுவா துரைகளுண்டோசொல்லுமென்றான்
கொண்டுவருவோர்க்கு கோடிதனந்தருவேன்
அழைத்துவருவோர்க்கு ஆனைசேனைநான்தருவேன்
சீமையும்பூமியும் துரைத்தனங்கள்நான்கொடுப்பேன்
ஒருவரறியாமல் ஆரணங்கைக்கொண்டுவந்தால்
துரோபதையைக்கொண்டுவந்து தூங்குமஞ்சமேத்திவைத்தால்
பாவையரைக்கொண்டுவந்து படுக்கைமஞ்சமேத்திவைத்தால்
என்னுடையநாடுகளும் எழில்கருணன்ஆதீனம்

சீமைகளும்பூமிகளும் செல்வமும்நான் தருவேன்
வல்லாண்மைக்காரருண்டோ மந்திரியெழுந்திருங்கள்
போரதுரைகளுண்டோ புண்ணியசேனைகளே
பிடியுங்கள் தாம்பூலம் பேர்பெரியராசர்களே
என்றுசொல்லத்தான்கேட்டு இயலானராஜாக்கள்
ஆனவரும்பேசாம லஞ்சிப்பயந்திருந்தார்
சிந்துதேசாதிபதி திரன்மகன்சயிந்தவனும்
சொல்லுவான்வாய்திறந்து துரைகளறிந்திருக்க
மைத்துனரேநீர்கேளும் மகாராஜபூபதியே
தோருவடிவழகி துரோபதைநாயகியை
பத்துநாட்குள்ளாகப் பைங்கிளியைக்கொண்டுவாரேன்
எட்டுநாட்குள்ளாக இளங்கொடியைக்கொண்டுவாரேன்
ஐவரறியாமல் ஆரணங்கைக்கொண்டுவாரேன்
மன்னரறியாமல் மயிலனையைக்கொண்டுவாரேன்
தாம்பூலந்தான்பிடித்தான் தாமமுடியானும்
அந்தமொழிதான்கேட்டு அரவக்கொடியோனும்
சந்தோஷப்பட்டானே சர்ப்பக்கொடியோனும்
மெத்தமகிழ்ந்தானே வேந்தன்துரியோதிரனும்
உள்ளங்குளிர்ந்துகிலிர்த்து உடம்பெங்கும்பூரித்து
அள்ளியேதாம்பூலம் ஆணழகர்கைகொடுத்தார்
போட்டிருந்தஆபரணம பொட்டெனவேதான்கொடுத்தான்
இட்டிருந்தபூஷணங்கள் இஷ்டமுடன்தான்கொடுத்தான்
பொன்னிழைத்தபட்டாடை போர்த்தானேமேலாக
போய்வாருமென்றுசொல்லி புகழ்வேந்தன்தானுரைத்தான்
வெகுமானம்பெற்றுமல்லோ விடைபெற்றுமன்னவனும்
பயணம்பயணமெனப் பயணபேரியடியுமென்றான்
ஆனைசேனைபரிவாரம் அடங்கலும்பயணமென்றான்
ஆனையின்மேல்சண்டாவும் அழகுநிஜான்பிடியுமென்றார்
ஆனையின்மேல்பேரிகையை அடியுமென்றார்ஓசையுடன்
குதிரையின்மேல்டங்காவும் கொடிமுரசுசிலைகளும்
பாஞ்சசன்யம்தேவதத்தம் பலவாத்தியம்தான்முழங்க
சச்சரிகைவீராணம் தசக்கிமுரசரைய
அக்ரோணிசேனை அடங்கலும்பயணமென்றார்
அமரதரும்சமாதரும் அர்த்தரதத்தானவரும்
கலிங்கர்தெலுங்கர்களும் காஸ்மீரகன்னடரும்
ஈழத்துவங்கணரும் இளநாட்டுச்சோனகரும்
சட்டைகழட்டாத சகலவாரானவரும்
போட்டசட்டைவாங்காத பொந்திலியரானவரும்
இட்டசட்டைவாங்காத எழிலானமன்னவரும்
குப்பாயம்வாங்காத குச்சிலியர்மன்னவரும்
ஆனையாகரிமை அளவற்றவன்னியரும்

வெள்ளரித்தடிக்காரர் வேளைலட்சங்கோடியுண்டு
மகுடமுடிதரித்த மன்னவர்களானவரும்
பட்டணத்துராசர்களும் பார்மகுடவர்த்தனரும்
அத்தனைபெயருடனே ஆணழகன்பயணமானான்
நீண்டிடுங்கால்களுக்கு நெரிஞ்சிப்பூசல்லடமாம்
தூக்கிவைக்குங்கால்களுக்கு துத்தியப்பூச்சல்லடமாம்
குந்தியிடுங்காலகளுக்கு குரிஞ்சிப்பூச்சல்லடமாம்
மண்டியிடுங்கால்களுக்கு மாதளம்பூச்சல்லடமாம்
சல்லடங்கள்தான்போட்டு தட்டிவரிந்துகட்டி
தட்டிவரிந்துகட்டி தாமரைப்பூச்சுங்குவிட்டு
பட்டுதட்டிகட்டியல்லோ பாங்கெடுத்துதான்சொருகி
முத்தினுருமாலை முகத்தழகாய்கட்டினனே
இட்டான்திருநாமம் எரிகின்றசூரியன்போல்
பொன்னிழைத்தபட்டாடை போர்த்தானேமேலாக
அம்புவில்லுங்கைபிடித்து ஆணழகன்வெளியானான்
தேரையலங்கரித்து தோப்பாகன்கொண்டுவந்தான்
தேரைச்சுற்றிதெண்டனிட்டு சிவ்வென்றுஏறினனே
ஏறினபோதே எடுத்தார்நெடுங்குடையை
பக்கத்தில்வெண்சாமரை பட்டுக்குடைகவிய
இருபக்கம்வெண்சாமரை இரத்தினக்குடைகவிய
முத்துக்குடைகவிய முடிமன்னர்தான்சூழ
மேளதாளமுழங்க வேந்தர்களும்பயணமிட்டார்
வாரான்சயிந்தவனும் மச்சுரதம்தான்குலுங்க
தெற்குத்தெருதாண்டி தேரோடும்வீதிவிட்டு
ஆயிரந்தெருத்தாண்டி அங்காடிதான்தாண்டி
கடையுங்கடைத்தெருவுங் கருமாரவீதிவிட்டு
பட்டணத்தெருதாண்டி பார்மன்னன்வாரானே
செந்தூளெழும்புகுது தெருவெல்லாங்கப்புகுது
கருந்தூளெழும்புகுது கதிரோனைக்கப்புகுது
வாரான்சயிந்தவனும் மச்சுரதங்குலுங்க
அப்போசயிந்தவனும் ஆலோசனைகள்பண்ணி
துரோபதையைக்கொண்டுவரத் துரிதமுடன்போறோமே
போரவிடந்தனிலே புதுமைகளோநாமறியோம்
வழியிற்சகுனங்கள் ஆகுதுமன்னனுக்கு
தருமதேவதையேநீ சாட்சிசொல்லவேண்டுமென்றார்
அப்போசகுனங்கள் ஆகுதுமன்னனுக்கு
பொல்லாச்சகுனங்கள் பொருந்துதுமன்னனுக்கு
வாயசம்பிடமாச்சு வலியனும்வலமாச்சு
சாரைவலமாச்சு கள்ளரெதிர்ப்பட்டார்கள்
சாரைகுருக்காச்சு சயிந்தவன்மேற்பல்லிசொல்லும்
குத்திப்பிடியுமென்று கோட்டானும்ஓலமிடும்

வெட்டுவெட்டுமென்றுசொல்லி வேடரெதிரானார்கள்
ஓரியலரிடவே ஓர்பார்ப்பானெதிரானான்
பச்சைமரத்திலே பதுங்கிருந்தபல்லியது
பட்டமரமேறி பளபளென்றுசொல்லிடுமாம்
எட்டுசொல்லாந்தையது திட்டெனவேமரணமென்று
நெருப்பெடுத்தோர்கிழவி நின்றிழவுதான்கொடுத்தாள்
இந்தச்சகுனமெல்லாம் இராசனும்கண்டானே
கினையாத்துயரமெல்லாம் நினைத்துமனமுருகி
எண்ணுதுமெண்ணி இருந்துவிசாரமிட்டான்
இச்சகுனம்தன்னாலே இறந்துவிடப்போறோமோ
வந்துபயணமினி வழிதிரும்பப்போறோமோ
திரும்பினோமானால் சிரிப்பார்கள்ராஜாக்கள்
எனனைமதியார்கள் ஏளிதஞ்செய்வார்கள்
வந்துதிரும்பிவிட்டால் மதியான்திரியோதிரனும்
அன்றெழுதுங்கர்த்தன் அழித்தெழுதப்போறானோ
ஈசனெழுத்தல்லோ எள்ளளவுங்குறையாது
வரும்வினைகள்வந்தாலே மடியேந்தவேண்டாமோ
உள்ளபடிக்கு ஒருநாளுங்குறையாது
என்றுமனதிலெண்ணி இராஜனும்போய்நடந்தான்
காடுசெடிதாண்டி கரியமலைதான்தாண்டி
ஆறுசுனைதாண்டி அதிகவனந்தாண்டி
வேங்கையடர்ந்தவனம் வெண்களாபூத்தவனம்
கோங்குபெருத்தவனம் கொன்றைகளாப்பூத்தவனம்
புலிகள்கரடிகளும் பெருத்தவனந்தாண்டி
சூரியவனத்தில் சேர்ந்தானேசயிந்தவனும்
அன்றுமுகாமங்கிருந்து அடுத்ததொருமற்றுநாள்
காலையில்பயணமாகி கடுகவழிநடந்தான்
ராமரிஷிவனத்தில் நடந்தார்கள்சேனையெல்லாம்
அன்றுமுகாமங்கிருந்து அடுத்ததொருமற்றுநாள்
அந்தவனத்திலே அந்தண்டஜனம்நிறுத்தி
உத்தண்டமன்னவனும் ஒருத்தனுந்தேரேறி
முருக்கமகாரிஷிவனத்தில் முடுகிநடந்தானே
சயிந்தவனும்பர்னசாலை தேடியேவாரானே
தூரரதம்நிறுத்தி துரோபதையாள்முன்னேவந்தான்
பர்னசாலையிலே பத்தினியாள்வீற்றிருந்தாள்
ஒருத்தியுமாகவேதா னுத்தமியாள்வீற்றிருந்தாள்
பாவிசயிந்தவனும் பர்னசாலைமுன்னேவந்தான்
அப்போதுபாஞ்சாலி ஆரணங்குதுரோபதையும்
கண்டாள்சயிந்தவனைக் கட்டழகிதுரோபதையும்
அண்ணனைக்கண்டு அலறியேஓடிவந்தாள்
தமயனைக்கண்டாளே தானெழுந்துசரணமிட்டாள்

கட்டமணைபோட்டு மணித்தடுக்குந்தான்போட்டாள்
இருமிருமென்றுசொல்லி இளங்கொடியாள்வருந்திடவே
அப்போசயிந்தவனும் ஆணழகன்தானெழுந்து
கட்டமணைமேலே வந்திருந்தான்சயிந்தவனும்
தொழுவடிவழகி துரோபதையாளேதுசெய்தாள்
இந்தவனத்தில் ஏதுக்காய்வந்தீர்கள்
வனசாரிவந்தீரோ மகாதவசாய்வந்தீரோ
அண்ணேவரீவந்த அதிசயத்தைசொல்லுமென்றாள்
மலைமுடியானும் வாய்திறந்தேதுசொல்வான்
ஐவருமீயுமாக ஆரணியம்வந்தீர்கள்
வனவாசம்வந்தீரென்று மண்டலத்திற்பேராச்சு
பார்க்கும்படியாகப் பைங்கிளியேவந்தேனே
உங்களுடசீமையும் உலகத்தைவிட்டுவிட்டு
வனவாசம்வந்ததொரு வகையென்னதங்கையரே
இங்கேபரதேசம் ஏன்வந்தீர்தங்கையரே
ஒன்றுமொளியாமல் உரையுங்காண்தங்கையரே
அப்போதுரோபதையா ளாரணங்குதான்கேட்டு
தொழுவடிவழகி துரோபதையாளேதுசொல்வாள்
அண்ணேநாங்கள்வந்த அதிசயதனைநீகேளும்
பரதேசம்வந்தோமெங்கள் பரிதாபங்கேளுமென்றார்
தருமாபுரத்தையல்லோ தரணியையாண்டிருந்தோம்
ஐவரையுங்கொல்லவென்று அரசன்துரியோதனனும்
பஞ்சவரைக்கொல்லவென்று பாவிதுரியோதனனும்
விருந்தருந்துமென்றுசொல்லி வேந்தரைக்கொல்லவென
பேரன்குமாரனுக்கு பூநாற்கலியாணமென்று
பூநாற்கலியாணம் பொருத்தந்தப்பிப்போகுதென்று
உடனேவரத்தருமருக்கு ஓலையெழுதிவிட்டான்
மெய்யானும் ஓலையென்று வேந்தர்மனதிலெண்ணி
ஐவர்பஞ்சபாண்டவர்கள் அஸ்தினாபுரம்நாடி
வாரவழிதனிலே மன்னவரைக்கொல்லவென்று
வசநாபிதண்ணீர்பந்தல் மன்னவர்க்குப்போடுமென்றான்
தப்பிப்பிழைத்தார்கள் சுவாமியுடபுண்ணியத்தால்
நடக்கும்வழிதனிலே நச்சுமுள்ளைநாட்டிவைத்தான்
மூசிளமுருகுகாச்சி ஒருகோடிநாட்டினான்
கூரம்புகத்திகளுங் குறுக்கேபுதைத்துவைத்தான்
கொடிமுள்ளுகத்திகளுங் குறுக்கேபுதைத்துவைத்தான்
தண்ணீர்குடித்துமே சாவார்களென்றுசொல்லி
பாரவசிதன்னையே பருவதம்போல்நாட்டிவைத்தான்
கொல்லநினைத்தானே குருடன்மகன்சத்ராதி
அதுக்கும்பிழைத்தார்கள் ஐவர்பஞ்சபாண்டவர்கள்
தப்பிப்பிழைத்தார்கள் சுவாமியுடபுண்ணியத்தால்

மாளிகைவாசலிலே வந்தபிறகாக
பொய்க்குழியைவெட்டியல்லோ போதமனிதர்வைத்தார்
பொய்ச்சிங்காதனங்களிட்டு புகழ்வேந்தர்பஞ்சவரைக்
கொல்லநினைத்தானே குருடன்மகன்சத்ராதி
அங்கும்பிழைத்தார்கள் ஐவர்பஞ்சபாண்டவர்கள்
எண்ணெயிட்டுக்கொள்ளுமென வண்ணமிட்டழைத்தானே
மல்லர்களைவிட்டு வதைத்தெறிந்துபோடுமென்றான்
அதுக்கும்பிழைத்தார்கள் ஐவர்பஞ்சபாண்டவர்கள்
தப்பிப்பிழைத்தார்கள் சுவாமியுடபுண்ணியத்தால்
பவளத்திருக்குளத்திற் பாரவசிநாட்டினனே
நீரிற்கழுநாட்டி நீர்மூடன்குளியுமென்றார்
கொல்லநினைத்தானே குருடன்மகன்சத்ராதி
தப்பிப்பிழைத்தார்கள் சுவாமியுடபுண்ணியத்தால்
உண்கிறசோற்றிலேதானு ஒருக்காலேநஞ்சையிட்டான்
குடிக்கிறதண்ணீரில் கொல்லகாளநஞ்சையிட்டான்
சோழிவிளையாடி சொக்கட்டான்சூதாடி
ஆடாதசூதாடி அரவக்கொடிவேந்தன்
சீமைத்துரைத்தனங்கள் தேசமுழுதும்பறித்தான்
நாடுபறித்தான் நகரெல்லாந்தான்பறித்தான்
ஆணிப்பொன்மேரும் அணியணிசிங்காதனமும்
அத்தனையுந்தான்கெலித்து ஆஸ்தானமுங்கெலித்து
ஐவரையுங்கெலித்தான் அடிமைகளுந்தான்கெலித்தான்
ஐவரையுங்காவலாக அறையிலடைத்துவிட்டான்
பாரவிலங்குகொண்டு பருவிலங்குபூட்டினனே
ஏழுலட்சம்பெருவிலங்கு எடுத்துவந்துபூட்டினனே
காற்றுநுழையாத கல்லறைத்தன்கிடங்கில்
தள்ளியேகொண்டுவந்து தடிவீரர்காவல்வைத்தான்
சத்திரவரங்கம் தாதுவரைக்காவல்வைத்தான்
அறையிலிருந்தபெண்ணை அம்பலத்தில்தள்ளிவைத்தான்
மூலையிலிருந்தபெண்ணை முற்றத்தில்தள்ளிவைத்தான்
ஒருவர்மயிர்பிடிக்க ஒன்பதுபேர்துகிலுரிய
இருவர்மயிர்பிடிக்க இருபதுபேர்பின்னிழுக்க
பாவிமயிர்பிடிக்க பத்துபேர்துகிலுரிய
ஆடம்பலத்தே அரசர்சபைநடுவே
பேரம்பலத்தே பெரியோர்சபைநடுவே
அரசர்சபையிலே அலைபத்துகிலுரிந்தான்
வாய்வரிசையில்லாமல் வம்பாட்டம்பண்ணினனே
வாடிபோடியென்றேபேசி வலதுதுடையிலிருமென்றான்
துஷ்டத்தனங்கள்பண்ணி துரியோதிரன்பாவி
ஆகடியம்பேசினனே அம்பலவர்தனசபையில்
பாரவனவாசம் பரதேசம்ஓட்டிவிட்டான்

பனிரெண்டுதன்வருஷம் பாரவனந்திரியுமென்றான்
மறைவாயொருவருஷம் வந்திருமென்றுசொன்னான்
பதிமூன்றுஞ்சென்றபின்பு பட்டணத்தேவந்தாக்கால்
பங்குள்ளராசாம் பாதிநாடுதாரேனென்றான்
வந்துவிட்டோமன்றாவே வனமேகுடித்தனமாய்
உடைத்தழைமேலே குடிவாழ்க்கைகானகத்தில்
பண்ணிவைத்தசிமாடு வனமேகுடித்தனமாய்
வேடரைப்போலவேதான் வில்லியரைப்போலாக
கன்னக்குறவரைப்போல் காட்டிலிருக்கின்றோம்
எங்கள்குறைதீர எக்காலஞ்சென்றிடுமோ
நாங்கள்சுகமாக ராச்சியத்தை ஆள்வோமோ
நீ-அறியாதுபோலாக அன்றேகேட்கவந்தீர்
தெரியாதுபோலாக கேட்கவந்தீரன்றோவே
ஒன்றுமறியீரோ உத்தமரேஅன்றேவெ
இவ்வார்த்தைதான்கேட்டு ஏதுசொல்வான்மன்னவனும்
பகுதிபணம்வாங்கப் போயிருந்தேன்வெகுதூரம்
சேனைத்திரளுடனே சென்றிருந்தேன்வெகுதூரம்
போனபிறகாக புதுமைபிறந்ததுகாண்
சாற்றுவிசேஷமாகக் கேட்டுவந்தேன்தங்கையென்றான்
நான்-அறிந்தேனேயாமாகில் அவகேடுவாராது
அன்றிருந்தேனானேலே அம்பலமுமேற்றவரோ
துகிலுரியப்பார்ப்பேனோ துரௌபதைநாயகியே
என்தன்மனம்பொறுத்து இருப்பேனோதங்கையரே
நான்-வந்தபிறகிந்த வயணமறிந்தேன்காண்
மனதறியாமல் வந்தேனுனைக்காண
சிந்தமனக்கலங்கித் தேடிவந்தேன்தங்கையரே
உன்வார்த்தைகேட்டபின் உள்ளமுருகுதம்மா
நீ-சொன்னபடியாலே என்சிந்தைகலங்குதம்மா
நீ-பத்தினியாளென்றுசொல்லி சற்றுமறிவேனோ
உத்தமியாளென்றுசொல்லி ஊதாரியறிவானோ
காமாட்சியென்கிறதை கழுசிறையணறிவானோ
ஏதுமறியாமல் இகட்சிகள்பண்ணிவிட்டால்
ஒன்றுமறியாமல் உதாசீனங்கள்பண்ணினானே
அவன்-வாழ்வுங்குலைந்துவிடும் மகிழ்ச்சியடங்கிவிடும்
செல்வமடங்கிவிடும் செருக்குங்குலைந்துவிடும்
பொறுத்திருந்தாலேயும் பொல்லாங்குயாதில்லே
அவனுக்கேகோசகாலம் ஆகுதுபொறுத்திரம்மா
அஞ்சாதேதங்கையரே ஆயாசங்கொள்ளாதே
நீ-ஆயாசப்படுவதெல்லா மவனுக்கேகேடுவரும்
பொருத்தவர்பூமியாள்வார் பொங்கினவர்காடாள்வார்

எதுக்குமஞ்சாதே என்பிறப்பே தங்கையரே
பாரப்புலிபோலே பஞ்சவர்களெங்கேயம்மா
வீரப்புலியதுபோல் வீரர்களெங்கேயம்மா
மைத்துனமாரைவர்களும் மகாராஜரெங்கேயம்மா
ஐவரையுங்காணவென்று ஆவலாய்வந்தேனம்மா
அவர்-போனவிடமறியேன் போயிருக்குந்தாவறியேன்
தங்கும்விடமறியேன் சஞ்சரிக்குந்தாவறியேன்
பார்க்கமனதாகிப் பைங்கிளியேவந்தேனம்மா
காணமனதாகிக் கானகத்தேவந்தேனம்மா
இன்னேரமாச்சுதே ராஜர்களைக்காணேனே
தனியாகவுன்னைவிட்டு தருமரெங்கேபோனுரோ
ஒண்டியாகவுன்னைவிட்டு உத்தமர்களெங்கேபோனுர்
இன்றுநான்காணுதற்கு இல்லாமற்போச்சுதம்மா
இன்னமொருவேளை இவர்களைநான்காணுகிறேன்
அவர்-ஆணாய்ப்பிறந்தவர்க ளல்லற்தாலுங்குற்றமில்லை
நீ-பெண்ணாய்ப்பிறந்தவள்தான் பின்தொடாரீதியுண்டோ
ஐவருடனேநீ அல்லற்படுவானேன்
என்-மாளிகைவாசலுக்கு வாரீரோ தங்கையரே
அரண்மனைக்குக்கன்னா ளழைத்துமேபோகவந்தேன்
வெம்பிவிடாய்த்துநீ வெயிலில்திரிவானேன்
வாரீரோ தங்கையரே மாளிகைக்குக்கொண்டுபோறேன்
என்று-வருந்தியழைத்தானே மாபாவிசயிந்தவனும்
அவ்வார்த்தைதான்கேட்டு ஆரணங்குரைத்துசொல்வாள்
ஐவரையும்விட்டுவிட்டு வருவேனோவுண்ணாவே
விட்டுப்பிரியவேதான் வேங்கைமனம்வருமோ
அண்ணாவேநீர்கேளும் ஆணொருவார்த்தை
நான்-வாவேணுமென்று மனதுமக்கிருந்தால்
வனம்போனபஞ்சவர்கள் வருகிறபோதாச்சு
ஐவர்வரும்வேளை ஆச்சுதுஅண்ணாவே
ஐவரைக்கேட்டுநீ அழைத்துப்போமண்ணாவென்றாள்
பஞ்சவரைக்கேளுமண்ணா பாவனைத்துலக்துவாரேன்
இவ்வார்த்தைதான்கேட்டு இடும்பன்சயிந்தவனும்
எண்ணாதுமெண்ணியல்லோ இருந்துவிசாரிட்டான்
ஐவர்வந்தால்மோசமல்லோ ஆகாதுகாரியந்தான்
என்றுசயிந்தவனும் எண்ணினான்தன்மனதில்
காவலர்கள்வந்தாலே காரியங்களாகாது
கையிலிருந்தவொரு கத்திதனைத்தானெடுத்தான்
கடுகவெழுந்தானே கட்டழகன்சயிந்தவனும்
ஐவர்வந்தால்சேதிசொல்லு மஸ்திறுபுரம்போறேன்
இட்டுன்னைபோகவென்றே யின்னேரங்காத்திருந்தேன்



சயிந்தவன் துரோபதையை தேர்மீதில் எடுத்துப் போகுதல்.

ஐவரையுங்காணுமம்மா ஆரணங்குதுரோபதையே
இன்னமொருவேளைவந்து இட்டுக்கொண்டுபோறேனம்மா
ஐவருக்குசொல்லி அழைத்துக்கொண்டுபோறேனம்மா
போகவிடைதாரும் போய்வாறேன் தங்கையரே
என்றுமவன்கேட்க எதுசொல்வாள் துரோபதையும்
அப்படியேபோய்வாரும் அண்ணாவேயென்றுசொன்னாள்
விடைபெற்றுசயிந்தவனும் வேந்தனெழுந்திருந்து
பர்ணசாலைவிட்டிறங்கி பார்வேந்தன்போகலுற்றான்
கடுகிநடந்தானே கட்டழகன்சயிந்தவனும்
அழகாதமேறி அக்கானகந்தாண்டி
அவன்-மச்சாதமேறி போறானே மன்னவனும்
போறான்சயிந்தவனும் பொன்னின்ரதமேறி
அநேகதூரம்போனபின்பு ஆரணங்குதுரௌபதையாள்
கத்திதனைக்கண்டாளே கட்டழகிபாஞ்சாலி
வைத்துமறந்தானே மன்னவனும்ஆயுதத்தை
இங்கேவைத்துதான்மறந்து என்றுமவளெழுந்து
கத்திதனையெடுத்து கடுகிநடந்தாளே
அண்ணாசயிந்தவனே அநேகதூரம்போகாதே
நில்லுங்காலண்ணாவே நெடுந்தூரம்போகாதே
என்று-கூவிநடந்தாளே கொம்பனையாள்துரோபதையும்
அப்போசயிந்தவனும் அழும்புநினைவுகொண்டு
கேளாதுபோலே நடந்தான்கெடுநினைவாய்
அறியாதுபோலே நடந்தானே ஆணழகன்
கூடநடந்தாளே கொம்பனையாள்துரௌபதையும்
சோநடந்தாளே தேன்மொழியாள்துரௌபதையும்
அண்ணாஅண்ணாஎன்று அக்கணமேகூச்சலிட்டாள்
அழும்பன்சயிந்தவனுக் கப்போதான்கேட்டதுபோல்
திரும்பியவன்பார்த்து தேலாநிறுத்தினானே
அவள்-நெடுந்தூரம்வந்தபின்பு நிறுத்தினான் தன்ரதத்தை
அப்போதுரோபதையும் அருங்கிளியாளேதுசொல்வாள்
அண்ணாவேஎன்காணும் அநேகதூரம்வந்துவிட்டாய்
ஆயுதத்தைநீர்மறந்து அநேகதூரம்வந்தீரே
இந்தாருமென்றாளே ஏலக்கருங்குழலாள்
அப்போசயிந்தவனும் ஆணழகனேதுசொல்வான்
எட்டியேதாருமென்றான் இந்தபடிசயிந்தவனும்
அப்போதுதுரோபதையாள் ஆரணங்குஏதுசொல்வாள்
ஒருபடியேறியல்லோ உத்தமியாளிந்தாவென்றான்
அப்போசயிந்தவனும் ஆணழகனேதுசொல்வான்
கட்டில்லைகத்தியென்றான் இன்னங்கொடுப்பதற்கு
மற்றுமொருபடியே மயிலனையாளேறினாளே

அப்போதுகட்டவில்லையென்றானே ஆனைமுகன்
மூன்றாம்படியேறி மொய்குழலாள்நின்றுகொண்டு
ஆடுதயிர்தாவென்றாள் ஆரணங்குதுரோபதையும்
சயிந்தவனுந்தான்பார்த்து சந்தோஷமாயல்லோ
காமவசந்தொருகாரியங்கள் வாய்ப்பட்டதென்றுசொல்லி
மெத்தமனமகிழ்ந்து மெல்லியைக்கொண்டுபோக
அவளேறினபோதேயல்லோ எகிரவிட்டான்றன்ரதத்தை
காற்றாய்ப்பறந்ததுகாண் கட்டழகன்றன்ரதமும்
போகுதேயக்ராமமாய்ப் பொல்லாதகானகத்தில்
கோரவடிவழகி துரோபதையுமேதுசொல்வாள்
அண்ணேசயிந்தவனே அழிநினைவுதேடிவிட்டாய்
ஐவர்களுந்தானறிந்தால் அனர்த்தம்வருமுந்தனுக்கு
பஞ்சவர்களறிந்தாலே பழுதல்லோவுன்குடிக்கு
நிறுத்துமரதத்தையென்றாள் நிறுத்தானேபாதகனும்
அப்போதுரோபதையாள் ஆரணங்குமனங்கலங்கி
சிந்தையவள்கலங்கி திடுக்கிட்டுமெய்மறந்து
மாதுமனஞ்சலித்து மயிலையாளேதுசொல்வாள்
அப்போதுரோபதையாள் ஆரணங்குமனங்கலங்கி
ஐவர்பஞ்சபாண்டவரே அபயமபயமென்றாள்
ஆகாயவாணியம்மா அல்லவரும்பார்த்திருங்கள்
ஐயன்பிடாரியே அந்தரதேவதையே
அந்தரதேவதையே சந்திரசூரியரே
கனிகளேகூளிகளே கானகத்துபட்சிகளே
இந்தவனத்தி லிருக்கும்மிருகங்களே
பாருங்கள்பாருங்கள் பாவியவன்செய்கிறதை
எல்லாரும்பாருங்கள் இதனுடைய துற்குணத்தை
என்னைசிறைபிடிக்க இட்டுக்கொண்டுபோறானே
பஞ்சவர்க்குத்தானுமையும் பார்த்திருந்தபட்சிகளே
ஐவர்க்குத்தானுமையும் ஆகாயவாணியம்மா
வாய்க்குக்கிடைக்குமோ நல்லமுழுத்தேங்காயும்
செரிப்பேனுந்தனுக்கு சோறுபந்துநான்தருவேன்
உனக்காவேனென்றுபாராதே அடிப்பேன்முறத்தாலே
என்றேதுரோபதையு மிளங்கொடியாளேதுசொல்வாள்
ஐயோசிவனேயென்று அழுதுபுலம்புகிறாள்
மாயவனேசுவாமியென்று மாதுபுலம்புகிறாள்
அப்போதுபஞ்சவர்கள் அரன்பூசைதான்முடித்து
அரிபூசைசிவபூசை எல்லாமவர்முடித்து
நடந்தார்கள்பஞ்சவர்கள் ஞாயறுதித்தாற்போல்
வாரார்கள்பஞ்சவர்கள் வடக்கெழுந்தசூரியன்போல்
பர்ணசாலைதன்னருகே பஞ்சவர்கள்வந்தார்கள்

கனிகள்பறித்துக்கொண்டு கடுகிவேவாருமென்றார்
அந்தச்சொல்தான்கேட்டு அனைவருங்கோபமுற்றார்
நகுலசகாதேவ ராசாக்கள்கோபமுற்று
கண்கள்சிவந்துமவர் காந்தாளக்கோபமுற்று
நெற்றிவிழிசிவக்க நீலவிழிபொறிபறக்க
உச்சிமயிர் துடிக்க உத்தரங்களேதுசொல்வார்
அண்ணாவேநீர்கேளும் அடியேனொருவார்த்தை
துரோபதையைக்கொண்டுபோக வந்தகொருதோஷியற்கு
பாவையாளைக்கொண்டுபோக வந்ததொருபாதகற்கு
போசனமும்போடுவாரோ புகழ்பெரியஅண்ணாவே
ஆக்கினைகள்பண்ணி அனுப்புவோமிவனையென்றார்
பொல்லாதபாதகனை போகவிடலாகாது
என்றுமவர்சொல்லி எல்லவருமோர்முகமாய்
ஆனந்தமார்பரெல்லாம் அண்ணருடன்கோபமிட்டார்
தக்கபுகழ்பெரிய தர்மவரேதுசொல்வார்
கோபித்தகோபமெல்லாம் குளிர்ந்தமழைபாச்சு
வெளுத்ததைப்பாலென்பார் வெள்ளத்தைத்தண்ணீரென்பார்
கபடறியார்சூதறியார் கள்ளமொன்றுதானறியார்
பொய்சொல்லாதருமாவர் புண்ணியனுரேதுசொல்வார்
கோபித்துக்கொண்டாக்கா லாகாதுகொற்றவரே
ஆங்காரகோபமது ஆருக்குமாகாது
ஆணவமுண்டானு லழிந்துவிடுங்காயமப்பா
பொறுத்தவர்பூமியாள்வார் பொங்கினவர்காடாள்வார்
மனக்குறையாயே வந்தவர்க்குப்பசியாற்றும்
கனிகள்பறித்துமே கடுகிவேவாருமென்றார்
எனக்கெதிர்பேசவேண்டாம் எழுந்துகடவுமென்றார்
அவ்வார்த்தைதான்கேட்டு அண்ணரடிவணங்கி
அஞ்சிப்பயந்திருந்தார் அழகானதம்பியர்கள்
காட்டிற்றுறந்தோடி கனிகள்பறித்துவந்து
கொண்டுவந்துவைத்தார்கள் கொப்பெனவே அண்ணரண்டை
வாங்கியேதருமாவர் மைத்துனபுசியுமென்றார்
மனதிற்பயமுடனே வாங்கிப்புசித்தானும்
கனிகள்புசித்தபின் கைபூசிக்கொண்டானும்
போய்வாரேனென்றுமே பொட்டெனசரணமிட்டான்
தக்கபுகழ்பெரிய தருமவரேதுசொல்வார்
வெற்றிமதயானை வீமனைத்தானழைத்து
மைத்துனர்தன்னுடனே மன்னர்களேநீங்களும்போய்
வழிக்கூட்டியனுப்பிவைத்து வாருங்கள்தம்பியரே
அப்படியேசொல்லவென்று அழகானதம்பியர்கள்
வெற்றிமதயானை வீமனவர்தானெழுந்து

அண்ணனுரைப்படிக்கு அழைத்துவந்தான்சயிந்தவனை
சென்றிருவருமாய் சிலதூரமானபின்பு
போர்வீமனேதுசெய்தான் போரடவிதனிலே
ஐந்துகுடுமிவைத்து அப்பாலேதலைசிரைத்தான்
மீசைசிரைத்தானே மின்போடிபண்ணினானே
தாடிசிரைத்தானே தலைபோடிபண்ணினானே
தலைபோடிபண்ணினானே தாமமுடியானுக்கு
கரும்புள்ளிசெம்புள்ளி கலந்தழகாய்பொட்டுமிட்டான்
செம்புள்ளிகரும்புள்ளி சேர்ந்தழகாய்ப்பொட்டுமிட்டான்
இப்படியாகவே இவரிருக்கும்வேளையிலே
தக்கபுகழ்பெரிய தருமரவர்தான்பார்த்து
அர்ச்சுனதம்பியரே அண்ணனைக்காணோமே
மைத்துனரைகூட்டிப்போய் வழிவிட்டுவாருமென்றேன்
போய்நெடும்போதாச்சு புகழ்வீரன்வீமனுந்தான்
வீமனைத்தேடிநீ விரைவில்வந்துசேருமென்றார்
கடுங்காளைவீமனைத்தான் கண்டழைத்துவாருமென்றார்
அப்படியேயல்லதென்று அருச்சுனனுந்தானெழுந்தான்
கச்சைவரிந்துகட்டி கருங்கச்சைசுங்குவிட்டு
வில்லெடுத்துகைபிடித்து விஜயனும்போய்நடந்தான்
அண்ணனைத்தேடிவந்தான் அர்ச்சுனராஜதுரை
வீமனைப்பார்த்தானே விஜயனருச்சுனனும்
கண்டானேசயிந்தவனைக் காளைபனமிழந்து
பார்த்தானேசயிந்தவனைப் பலகாலும்பூரித்து
வீமனைப்பார்த்து விஜயனுமேதுசொல்வான்
என்னமரியாதை செய்தீரென்னண்ணாவே
மட்டையடிமொட்டையிட்டால் வாகனங்கள்வேண்டாமோ
இருமிருமண்ணாவென்று ஏகிநடந்தானே
கானகத்தில்நுழைந்து கழுதையொன்றதைப்பிடித்து
மலைக்கழுதைகொண்டுவந்து மன்னவனையேற்றினானே
இப்படியாகவேதானிவரிருக்கும்வேளையிலே
தக்கப்புகழுடைய தருமரவர்பார்த்து
நகுலனைத்தானழைத்து ராஜாக்களைத்தேடியென்றார்
கானகத்திற்போனவர்கள் கடுகவந்துசேரவில்லை
கண்டழைத்துவாருமையா காளையிருவர்களை
தாமமுடியான் நகுலனதுகேட்டு
அருளருளேயென்னையா அழைத்தேதேடிவாரேனென்று
கட்டிவரிந்துகட்டி தாமரைப்பூசங்குவிட்டு
ஆயுதங்கைகைபிடித்து அடவிதனிற்போய்ப்புகுந்து
பார்த்தண்ணனைத்தேடிப் பரிநகுலனோடிவந்தான்
கானகமெல்லாந்தேடி கண்டானே அண்ணர்களை
கண்டான்சயிந்தவனுடன் கண்காட்சியானதெல்லாம்

பார்த்தான்சயிந்தவனை பாவிக்குவற்குமென்று
சந்தோஷப்பட்டானே சயிந்தவனைக்கண்டவுடன்
வீமாமதகரியே வில்வேந்துமன்னர்களே
மூவிரண்டுகுடிமிவிட்டு மொட்டையடித்தீரே
என்றுலுபசாரம் மென்னசெய்வேன்மைத்துனற்கு
சாணியெடுத்துவந்து சரியானவுண்டைபண்ணி
தலைமேலேஉண்டைவைத்து தலைவிளக்குமேற்றிவைத்தான்
இப்படியாகவே இவரிருக்கும்வேளையிலே
அனேகநெடும்பொழுது ஆனபிறகாக
தருமாவெழுந்து தம்பியைத்தானழைத்து
மூவர்களும்போனாரே முடிமன்னராஜாக்கள்
இன்னம்வரக்காணேன் என்னமோகாரணமோயென்
தேடியழைத்துநீ சீக்கிரத்தில்வாருமென்றார்
தாமமுடியானும் சகாதேவன்தான்கேட்டு
அப்படியேதான்போ யழைத்துமேவாரேனென்று
கச்சைவரிந்துகட்டி கருங்கச்சைசுங்குவிட்டு
அம்புவில்லுந்தானெடுத்து ஆணழகன்போகலுற்றான்
அப்போதுரோபதையும் ஆணக்குதானெழுந்து
தர்மருக்கெதிரில்வந்து சாஷ்டாங்கதண்டனிட்டு
நானுங்கூடப்போய்வாரேன் ராஜாக்களைத்தேடவென்றாள்
தருமாதுகேட்டு தளராமலேதுசொல்வார்
அப்படியேபோய்வாரும் ஆரணங்குதுரௌபதையே
சீக்கிரத்தில்வாருமென்று செலவுதந்தார் தர்மலிங்கம்
கூடத்தொடர்ந்தாளே கொம்பனையாள்துரோபதையும்
இருவருமாகவல்லோ இசைந்துவழிநடந்து
அண்ணர்களைத்தேடியல்லோ ஆணழகன்வந்துவிட்டான
கானகத்துள்நுழைந்து கண்டானே அண்ணர்களை
மைத்துனரைக்கண்டு வரிசையெல்லாந்தான்பார்த்து
உள்ளங்குளிர்ந்துசிலிர்த் துடம்பெல்லாம்பூரித்து
சந்தோஷப்பட்டு சர்வாங்கம்பூரித்து
மரியாதைதானென்ன மைத்துனர்க்குச்செய்வேன்காண்
கழுதையின்மேலிருந்தவனைக் கடுகயிறக்கிவிட்டான்
முன்னும்பின்னாக முகங்கெரியவற்றினான்
எருக்கமாலைகொண்டுவந்து இவன்கழுத்திலேபோட்டான்
இந்தவரிசையெல்லாம விந்தைகண்காட்சியென
மன்னவர்கள்தன்னருகே வந்துநின்றாள்பாஞ்சாலி
அண்ணரைக்கண்டாளே ஆனந்தமானாளே
தமயனைக்கண்டாளே சந்தோஷமானாளே
தாமமுடிவீரரேநீர் தலைபோடிபண்ணீரே
வான்விஜயனர்ச்சுனரே வாகனங்கள்தந்தீரே
காளைகுலரேநீர் கரும்புளளிபெரீட்டீரே



சயிந்தவனை பாண்டவர்கள் அவமானஞ்செய்தது.

முன்னூருசகாதேவர் முன்பின்னாய்வைத்திரோ
எருக்கமாலைகொண்டுவந்து இவர்கழுத்திற்போட்டீரோ
என்னமரியாதை அண்ணருக்குநான்செய்வேன்
பாஞ்சாலன்பெற்ற பைங்கிளியுமேதுசொல்வாள்
வானத்தருந்ததியாள் மாசுபடாபத்தினியாள்
ஐவருக்குந்தேவியாகி அழியாதபத்தினியாய்
கற்புடையபத்தினியைக் காற்பதுமெய்யானால்
இக்கழுதைத்தொட்டவர்கள் கடுகநடவாமல்
ஏறினசயிந்தவனை இறக்கவேவொட்டாமல்
அரவக்கொடியோன்பார்க்க அம்பலம்போமளவும்
ஏறினகழுதை யிறங்காமலிருக்கவென்று
கட்டவிழ்க்கவந்தோரு காவலர்களெல்லோரும்
ஓட்டிக்கொண்டுபோகவென்று உத்தமியுஞ்சாபமிட்டாள்
எனவங்கிஷத்தார்தொட்டால் வனக்கழுதைவிட்டிறங்க
காட்டுக்கழுதையிது கடுகெனவேதானிறங்க
மற்றவர்கள்தொட்டாலே வலித்துக்கொண்டோடவென்று
இப்படிச்சொல்லியல்லோ விட்டாள்பெருஞ்சாபம்
சாபங்கொடுத்தாளே தருமர்பெருந்தேவியவள்
இப்படியாய்ச்சொல்லி இருந்தாளே துரௌபதையும்
அடித்துதுரத்தினார் அங்கேசயிந்தவனை
துரியனுக்குச்சொல்லுமென்று துரத்தினார்சயிந்தவனை
வருகுதே அக்கழுதை வனமாய்வனந்தாண்டி
தான்விட்டுவந்தோரு தன்னுடையசேனையண்டை
வந்துகலந்தானே வனக்கழுதைதன்னுடனே
கண்டாரேசேனையர்கள் கண்களிரண்டுங்கொள்ளாமல்
பார்த்தாரேசயிந்தவனை பார்வைரெண்டுங்கொள்ளாமல்
இதுவென்ன அதிசயங்க ளெவர்செய்தகோலமென்று
கட்டையவிழ்க்கவென்று காவலர்களோடிவந்து
தொட்டுஅவிழ்க்கவேதான் ஓட்டிக்கொண்டுபோனார்கள்
ஓட்டிக்கொண்டசேனையுடனே உத்தமனும்போய்நடந்தான்
அக்குரோணிசேனையுடன் ஆனைமுகன்போகலுற்றான்
காடுசெடிதாண்டி கரியமலைதான்தாண்டி
ஆறஞ்சனைதாண்டி பதிகவனந்தான்தாண்டி
அஸ்தினபுரத்தே அடுத்தது அக்கழுதை
கடையுங்கடைத்தெருவிற் கருதலருகையிலே
கழுதையைத்தொட்டவர்கள் கடுகியேகூடவாரார்
பட்டணத்திலெல்லவரும் பரிகாசப்பார்த்தார்கள்
என்னவதிசயங்க ளென்பார்களெல்லோரும்
மாடத்தில்மண்டபத்தில் வந்தேறிப்பார்த்தார்கள்
கோபுரத்திலேறிநின்று குதுங்கநகைப்போரும்
சொல்லிச்சிரிப்போரும் சீச்சீச்சீயென்போரும்

இவனுக்குஇக்கழுதை ஏதென்றுசொல்வோரும்
சாமத்துரோகியிவன் சதிசெய்தானென்போரும்
இப்படியாக இவர்களுஞ்சொல்லையிலே
மற்றுமொருவன்வந்து வாய்திறந்தங்கேதுசொல்வான்
துரியனுடசொற்கேட்டு துரோபதையைக்கொண்டுவர
போனானேகானகத்திற் போர்மன்னராஜாண்டை
துவரில்லாவேளையிலே ஆரணங்கைக்கொண்டுசென்றான்
அப்போது துரோபதையும் அபயமபயமென்றாள்
அபயக்குரல்கேட்டு ஐவர்களுமோடிவந்தார்
வெற்றிமதயானை வீமனவன்பார்த்து
மயிலினையைக்கொண்டுபோக வந்ததொருபாவிதன்னை
விடலாகாதென்றுசொல்லி வீமன்மனதிலெண்ணி
அடையாளம்பண்ணி யனுப்பினான் துரியனண்டை
என்றுமவர்கள்சொல்லி யிருக்கின்றவேளையிலே
அந்தத்தெருதாண்டி அப்பாலேபோனானே
மாடத்தெருதாண்டி மன்னவர்வீதிவிட்டு
துரியோதனிருக்கும் சிம்மாதனத்தருகே
வந்தது அக்கழுதை மகாராஜன்முன்னாலே
அம்பலத்தார்கண்டார்கள் ஆச்சரியப்பட்டார்கள்
துரியோதனன்கண்டு சிந்தைமனங்கலங்கி
உள்ளங்கலங்கியல்லோ ஓடிவந்தான்சயிந்தவனண்டை
இதென்னவென்றுகைகொடுத்தா னிழுத்துக்கொண்டோடுது
ஐயோதெய்வமேயிந்த அநியாயம்நானறியேன்
என்னையிழுத்துக்கொண்டு ஓடுதுஇக்கழுதை
கூவியலறுகிறான் கொப்பெனவேதுரியோதனன்
அபயமிட்டுசுற்றுகிறா னம்பலத்தார் தங்கள்முன்னே
அங்கேயிருந்தவர்கள் அனைவோருந்தான்பார்த்து
கலுக்கென்றுசிரித்தார்கள் கட்டழகரெல்லோரும்
சிரித்ததைத்தான்பார்த்து துரியனுட தம்பியர்கள்
சிரிக்கவுடவெடுத்தோம் சீயெனப்பேசெடுத்தோம்
என்றுமவர்கள்சொல்லி இவனருகிலோடிவந்து
தம்பிமாரெல்லோரும் தமையனுக்குக்கைகொடுத்தார்
அத்தண்டபேர்களையும் அக்கழுதைவலித்தோடும்
அப்போதுஎல்லோரும் அலறுகிறார்கூச்சலிட்டு
ஐயையோதெய்வமென்று அனைவரும்புலம்புகையில்
அங்கிருந்தராஜாக்க ளானதொருமந்திரிகள்
பார்த்துமவர்நடுங்கி பதுங்குவார்துரைகளெல்லாம்
இந்தபடியாகவே இவர்கள்படும்பாடதனை
தூயகுலத்துதித்த துரோணரவரோடிவந்து
காசிவளநாடாளுங் கர்ணனைக்கண்காட்டி
சர்ப்பக்கொடியோனுடனே தம்பிமாரானவரும்

சாயம்புமேனி சயிந்தவானவரும்
மற்றுஞ்சிலமன்னவரும் மகுடமுடிராசர்களும்
இன்னஞ்சிலசேனைகளும் எல்லோருமொன்றாக
காட்டுக்கழுதையுடன் கலந்துமவரோடுகிறார்
நான்கண்டுசும்மாவிருக்க காரியங்களல்லவென்றார்
பார்த்திருப்போமென்றான் பரிதாபந்தானுனதையா
இதற்கொருயோசனையை இயம்புங்காண்மன்னவரே
அப்போதுகர்னருமே ஆணழகனேதுசொல்வார்
துரோபதையைச்சொன்னதொரு தோஷமிதுகாணும்
பத்தினியைப்பேசினதோர் பாவமிதுகாணும்
என்றுசொல்லிகர்னருமே இவர்களருகில்வந்து
அப்போதுகர்னருமே அனைவரையுந்தான்பார்த்து
குலுங்கநகைத்து கொப்பெனவேஓடிவந்து
பாரளந்தமாயன்திருப் பாதமதைமனதிலெண்ணி
பெருமான்துணையென்று பிடித்தானே தன்கையால்
கடுகயிறுத்தானே கர்னமகாராஜன்
கழுதையைத்தட்டி கடுவயிரங்கொண்டான்
அதுகண்டபேர்களுமே அல்லவருங்கைவிட்டார்
அப்போசயிந்தவனும் அங்கேயிறங்கிவிட்டான்
திரியோதனன்முதலாய்ச் சேனையெல்லாம்வந்தார்கள்
அவரவர்களாசனத்தி லனைவோரும்வீற்றிருந்தார்
அம்பலவாசலிலே அழைத்துவந்தார்சயிந்தவனை
தென்னமுடிவேந்தன் திரியோதனராஜன்
மைத்துனரைத்தான்பார்த்து மகாராஜனேதுசொல்வான்
மட்டைபடிமொட்டையிட்டு வாகனத்தின்மேலேற்றி
அனுப்பினவர்களாரும் ஆணழகாசொல்லுமென்றான்
அவன்-பேசப்பலனிழந்து பின்வேந்தனேதுசொல்வான்
போனதுவும்வந்ததுவும் புதுமைநடந்ததுவும்
தேசத்தையாளும் திரியோதனன்கேட்டு
அவ்வார்த்தைதான்கேட்டு அறவேமனஞ்சலித்தான்
வரிசிந்துராஜனுமே மைத்துனற்கேதுசொல்வான்
வெற்றிமதயானை வீமனைக்கொல்லவென்று
பரமனைநோக்கியே பாரதவசுபண்ணி
வீமனைக்கொல்லவென்று வேணவரம்பெற்றுவாரேன்
என்றுநடந்தானே இயலாரசயிந்தவனும்
தெற்குத்தெருதாண்டி தேரோட்டும்வீதிவிட்டு
காடுசெடிதாண்டி கரியமலைதான்தாண்டி
ஆறுஞ்சுனையுமங்கே அநேகமனந்தாண்டி
மாமுனிகள்தபசுபண்ணும் மாயமலைமேலே
தானுந்தபசுபண்ணுன் தாமமுடியானும்

இசிவனையல்லோ அடிபணிந்துதானினைந்து
அருந்தபசுபண்ணினுமே அங்கேசயிந்தவனும்
அப்போபரமசிவன் அவனுக்கெதிரில்வந்து
என்னவரம்வேணும் எந்தனைக்கேளுமென்றார்
அப்போசயிந்தவனும் அநேகவரம்கேட்டான்
கேட்டவரங்களெல்லாம் இருமையாய்த்தான்கொடுத்தார்
ஆதிசிவன்கையினாலே அநேகவரம்பேறுபெற்றான்
வீமனைக்கொல்லவென்று வேணவரங்கள்பெற்றான்.
கதைகொண்டைமாலையுங் கேட்டுமேபேறுபெற்றான்
வரங்களதுபேறுபெற்று வாராரேசயிந்தவனும்
அஸ்தினபுரத்தே ஆனைமுகன்போகவென்று
பஞ்சதபசுபண்ணதொரு மாமலையைவிட்டிறங்கி
நடந்தானேசயிந்தவனும் நாலுதிக்குந்தானதிர
காடுசெடிதாண்டி கரியமலைதான்தாண்டி
ஆறுஞ்சுனைகளுமே அதிவனந்தான்தாண்டி
வேங்கையடர்ந்தவனம் வெண்களாய்ப்பூத்தவனம்
கோங்குபெருத்தவனம் கொன்றைகளாய்ப்பூத்தவனம்
மூங்கிலடர்ந்தவனம் முல்லைமல்லிபூத்தவனம்
எங்கும்புலிகாடி இருக்கும்வனந்தாண்டி
மலைப்பாம்புகுடியிருக்கும் மல்லர்வனந்தாண்டி
இருளர்குடியிருக்கும் இருண்டவனந்தாண்டி
கள்ளர்குடியிருக்கும் கனத்தவனந்தாண்டி
இருண்டவனந்தாண்டி விளங்கோதாப்புந்தான்தாண்டி
வனமாய்வனந்தாண்டி வந்துவிட்டானத்திபுரம்
அத்திபுரத்தே ஆனைமுகன்போய்ச்சேர்ந்தான்
தென்னமுடிவேந்தன் துரியோதனனிருக்கும்
சபையிற்சிம்மாதனத்திற் சயிந்தவனும்வந்தானே
மானுகனைக்கொண்டவனும் மைத்துனனைத்தான்பார்த்து
அரவக்கொடியோனும் அத்தானைத்தான்பார்த்து
கடுகவேதானிறங்கி மெய்கொடுத்துதானதழுவி
ஆடாமல்லர்களே அங்கிருக்குஞ்சேவகரே
சயிந்தவனார்வீற்றிருக்கச் சிம்மாசனம்போடுமென
ஏவல்பணிசெய்திறவர் எல்லவருந்தான்கேட்டு
சொல்லப்பெற்றோமென்றுமவர் சுருக்காயெழுந்திருந்து
கூறப்பெற்றோமென்றுசொல்லி [illegible]ட்டெழுந்திருந்து
சேவகரெடுத்துவந்தார் சிம்மாதனமுமிட்டார்
அப்போதுரியோதனன் அத்தானைத்தான்பார்த்து
வந்துநெடுநேரம் நின்றீரோமைத்துனரே
இட்டசிம்மாதனத்தில் ஏறியமர்வீரென்றான்
அப்போசயிந்தவனும் ஆனைமுகமன்னன்
இட்டசிம்மாதனம் ஏறியவன்வீற்றிருந்தான்
அப்போதுரியோதனன் ஆனைமுகனைத்தான்சொல்வான்

கானகங்கள்போனீரோ கர்த்தாவைக்காணீரும்
கர்த்தாவைக்கண்டீரோ கனத்தவரம்பெற்றீரோ
ஐவரையுங்கொல்லுதற்கு ஆனவரம்பெற்றீரோ
பஞ்சவரைக்கொல்லுதற்கு பலத்தவரம்பெற்றீரோ
எந்தன்மனங்குளிர எனக்கரியச்சொல்லுமென்றான்
அப்போசயிந்தவனும் ஆணழகனேதுசொல்வான்
போனதுவும்வந்ததுவும் புனிதரைக்கண்டதுவும்
ஐவரையுங்கொல்லவென்று ஆனவரம்பெற்றதுவும்
நாவிரண்டுவார்த்தைகளால் நடத்தினான்சயிந்தவனும்
கேட்டுமனமகிழ்ந்தான் கீர்த்திபெற்றீரென்றுசொல்லி
வெற்றிபெற்றீரென்று வேந்தன்மகிழ்ந்திருந்தான்
இப்படியாக இவரிருக்கும்வேளையிலே
மூன்றாவதுவருஷம் முடிந்ததுபஞ்சவர்க்கு

மூன்றாவது முருக்கமகாரிஷிவனம் - முற்றிற்று

---

௪ - வது காளமகாரிஷிவனம்.

நான்காவதுவருஷம், பிறந்ததுபஞ்சவர்க்கு
முருக்கமகாரிஷிவனத்தை முடிமன்னர்தான்தாண்டி
கூடைத்தலைமேலே குடிவாழ்க்கைகானகத்தில்
கோலிவைத்தசீமாடு கூடைதலைமேலே
மன்னிவைத்தசீமாடு வனமேகுடித்தனமாய்
அந்தவனந்தாண்டி அப்பாலேபோகலுற்றார்
காடுஞ்செடிதாண்டி கரியமலைதான்தாண்டி
ஆறுஞ்சுனைதாண்டி அப்பாலேபோகலுற்றார்
காளமகாரிஷிவனத்தில் குடிவந்தார்பஞ்சவர்கள்
அவ்வனத்திற்போய்ச்சேர்ந்தார் ஐவர்பஞ்சபாண்டவர்கள்
பச்சைத்தழையொடித்து பர்ணசாலையுண்டுபண்ணா
ஓரடுக்குபர்ணசாலை உண்டுபண்ணார்பஞ்சவர்கள்
மூன்றடுக்குபர்ணசாலை முடிமன்னருண்டுபண்ணார்
ஐந்தடுக்குபர்ணசாலை ஆணழகருண்டுபண்ணார்
பர்ணசாலைமேலேயல்லோ பஞ்சவர்குடித்தனமாய்
மாதுதுரோபதையும் மன்னவர்பஞ்சபாண்டவரும்
காயுங்கனியுந்தின்று காலங்கழிக்கிறார்கள்
அவ்வனத்திற்பஞ்சவர்கள் அவரிருக்கும்வேளையிலே
மாநாகங்கொண்டதொரு மகாராசனேதுசெய்தான்
அரவக்கொடியோனும் அங்கவனேதுசொல்வான்
சபைகள்நிறைந்திருக்குஞ் சர்ப்பக்கொடியோனும்
ஐவர்பஞ்சபாண்டவர்கள் ஆரணியம்போனாரே
செத்தார்பிழைத்தாரோ சேதிதெரியவில்லை
மாண்டார்பிழைத்தாரோ வார்த்தைதெரியவில்லை

எந்தவனத்தி லிருக்கிறாரென் றறியேன்
காணிபோராண்டாநீ கடுகெனவே தானேகி
ஐவரையுந்தேடி அவரிருக்குந்தாவறிந்து
தேடியேநீபார்த்து திரும்பிவந்துசேருமென்றான்
அவ்வார்த்தைதான்கேட்டு அங்கிருந்ததூதுவர்கள்
சொல்லப்பேற்றோமென்று சுருக்காயெழுந்தார்கள்
கூறப்பெற்றோமென்று கும்பிட்டவரெழுந்து
அஸ்திநாபுரந்தாண்டி ஆரணியந்தேடிவந்தார்
காடுமலைதாண்டி கடுகவேதேடிவாரார்
சினகரன்வனந்தனிலே தேடினார்பஞ்சவரை
அங்கிலுங்காணமல் அப்பாலேதேடிவாரார்
ராமரிஷிவனத்தில் நலமாகத்தேடிவாரார்
அங்கிலுந்தேடினார்கள் ஐவரையுங்காணமல்
முருக்கமகாரிஷிவனத்தே முடிமன்னர்தேடிவாரார்
அங்கெங்குங்காணவில்லை ஐவர்பஞ்சபாண்டவரை
காளமகாரிஷிவனத்தே கடுகியேவந்தார்கள்
காளமகாரிஷிவனத்தே காவலர்கள்பஞ்சவரை
பர்ணசாலைமேலாகப் பஞ்சவரைக்கண்டார்கள்
இருக்கிறாரென்றறிந்து ஏகிவழிநடந்தார்
காடுஞ்செடிதாண்டி கடுகியேவாரார்கள்
ஆறுஞ்சுனைதாண்டி அவசரமாயோடிவந்தார்
மகாராஜன்வீற்றிருக்கும் மண்டபத்தருகில்வந்தார்
திரியோதிரனிருக்கும் சிம்மாதனமுன்னேவந்து
அரசனெதிரில்வந்து அடிவணங்கிதெண்டனிட்டார்
கண்டுதிரியோதிரன் கட்டழகனேதுசொல்வான்
பார்த்துதிரியோதிரன் பார்மன்னனேதுசொல்வான்
போனீரேதூதுவரே புதுமையென்னசொல்லுமென்றான்
ஐவரைதேடியே ஆரணியம்போனோமே
காளமகாரிஷிவனத்திற் கண்டோமேபஞ்சவரை
பர்ணசாலைமேலாகப் பஞ்சவரைக்கண்டோமே
என்றுசொல்லத்தான்கேட்டு எறிதாகங்கொண்டவனும்
கண்கள்சிவந்தானே காந்தாளப்பட்டவனும்
மாமாவைத்தானழைத்து மாசகனேதுசொல்வான்
இன்னமும்பஞ்சவர்க ளிருக்கின்றார்கானகத்தில
மானமற்பஞ்சவர்கள் வனமேதிரிகிறார்கள்
தப்பிப்பிழைத்தாலே தரணியையாள்வாரே
பங்குள்ளபிறகாரம் பாதிநாடுஆள்வாரே
எந்தவிதமானாலும் இறக்கவகைபார்க்கவேணும்
ஐவரையுங்கொல்லுதற்கு ஆலோசனைசொல்லுமென்றான்
மாமாவேயெந்தனுக்கு வார்த்தையுரையுமென்றான்
என்றதுதான்கேட்டு ஏதுசொல்வான்மருமகனுக்கு

சாமத்துரோகியவன் சகுனிகெடுத்துரைப்பான்
சொல்லைக்குப்பல்லி முடிச்சுத்தசகுனியல்லோ
துரியனைத்தான்கெடுக்கச் சொல்லுகிறான்யோசனைகள்
அப்பாபரமசிவனை ஐவரையுங்கொல்லவென்றால்
கொடுக்குங்காளமகாரிஷியை நோக்கித்தவம்பண்ணால்
அருந்தபசுபண்ணினாலே அந்தமுனிவந்திடுவார்
ஐவரைக்கொல்லவென்று அவரைமனக்கேட்டால்
நலமென்றுசொல்லுமோ நாடெல்லாமுன்னுதப்பா
தபசிற்பெரியவர்காண் சபிக்கொப்பானவர்காண்
வாக்கிற்பெரியவர்காண் மகாதேவர்க்கொப்பாவார்
அவராலேயாகுமப்பா ஐவரையுங்கொல்லுதற்கு
உன்னாலேயானமட்டும் உக்கிரனேபாருமென்றான்
என்றுசொல்லத்தான்கேட்டு எழுந்தான்துரியோதனன்
உக்கிரமுடனெழுந்து ஒருவனுமாய்போனானே
காடுசெடி தாண்டி கரியமலைதான் தாண்டி
ஆழருகனையுமல்லோ அரியவனந்தாண்டி
ஆரணியத்தனிலே அரவக்கொடியோனும்
வந்திருந்துமவன் மகாதபசுபண்ணுகிறான்
காளமகாமுனியைக் கருதிமனதிலெண்ணி
அருந்தபசுபண்ணினானே அரவக்கொடியோனும்
வேணாதபசுபண்ணினான் வேந்தரைக்கொல்லவென்று
பாரதபசுபண்ணினான் பஞ்சவரைக்கொல்லவென்று
இப்படியாய்த்தவமிருந்தான் எரிநாகக்கொண்டவனும்
அப்போமகாமுனியும் அறிந்தார்தவனிலையை
சடையுஞ்சடைமுடியுந் தம்பிரான்போலாக
இவருடையசடையழகும் கல்வரைப்போலாக
காலில்மெருவடியும் கையிற்கமண்டலமும்
துரியோதனனருகே சேரவருகையிலே
கண்டுதுரியோதனன் சடுகவெழுந்திருந்து
பார்த்துதுரியோதனனும் பற்றற்றோர்க்கெதிரில்வந்து
முடித்தமுடிவேந்தன் முனிக்கெதிரேயோடிவந்து
சுத்திவலம்வந்து தொழுதிறங்கித்தெண்டனிட்டான்
முக்கால்வலம்வந்து முடிவணங்கித்தெண்டனிட்டான்
நாற்கால்வலம்வந்து நமஸ்கரித்துத்தெண்டனிட்டான்
கைகட்டிவாய்புதைத்துக் கட்டழகக்கோமானும்
வாய்மூடிநின்றாலே மன்னன்துரியோதனனும்
காளமகாமுனியுங் கண்டுமனங்குளிர்ந்தார்
சிந்தைமனங்குளிர்ந்து தேகங்கள்பூரித்து
சந்தோஷமானாரே சாமிபெரியவரும்
மெத்தமகிழ்ந்தவரும் வேந்தனைப்பார்த்துரைப்பார்
ஆர்சனும்ராஜாவே அரசுபெற்றக்கோமானே

சதாசிவர்தர் இக்குணமபண்ணுகிறும்
சவிலிர்த்தகதி ஏதகருமமென்று
மனுக்கிள்ளநத்தன்னை மன்னவனைசொல்லுமென்றார்
வேண்டுமவரமெடுப்பேன் வேதனைசொல்லுமென்றார்
அப்போ நிரிபோதிரன் ஆனழகன்தான்பார்த்து
சரிபக்கொடுபோதும் சகதேவனுமாருமே
ஆலக்கொடுபோதும் அக்கமனமகிழ்ந்து
துண்டவிதிகேற்ப அடிபெற்றுவாரத்தை
சகசாமிகளுமைபா எனதுடையன்னைப்பம்
அன்றிருபாண்ட ராசக்கொடுபோனை
பிசரமையாண்டெதாரு நிரிபோதிரனைபார்
சாதல்மாக்குசபால வசிதனுகர்த்தா
மண்டேனாவீடாமேதன கலசமபசசொல்லுகிறேன்
பாண்டவனைபாரி பாந்சாலதபாதி
மனதுபனைபாரி இருக்கிறார்தபாதி
எந்தனைபகையாளர் இபனாமபஞ்சவர்
பாண்டவராதன் பெற்றெடுத்தபஞ்சவர்கள்
இப்போதுதனக்கவனத் திருக்கிறபஞ்சவர்கள்
இவனாயுங்கொல்ல அதிகமனவேதனாக
இவனாயுங்கொன்றுலே ஆநிவேளராச்சியத்தை
அவர்களைக்கொல்லுதந்து அடிபேனுமாரத
உபமாவேயொருபென்று உபகாரமாமுந்தேன்
ஆகையாலெந்தனுக்கு அவ்வரந்தாருமென்றான்
பஞ்சவரைக்கொல்லுதந்து பத்தவரந்தாருமென்றான்
அநேககாலமையிட்டோர் அப்பதவம்பண்ணிநின்றேன்
சீர்-வந்தபொழுதெந்தன் மனக்குளிர்ந்தேனுண்டாகி
இக்கவரமெனக்கு ஈந்திடவீர்கள்தந்தாலே
கொல்லவரமெனக்குக் கொடுத்தருளவேணுமையா
என்று-பாதம்பணிந்தாளே பாப்புகழ்ச்சொல்போதும்
அந்தமகாமுனிபும் அவ்வமனதுதான் குளிர்ந்து
காமமகாமுனியுக் கடுகமனமகிழ்ந்து
சகதேவனைப்பட்டுசே சிரக்கண்பூர்த்தார்
மெத்தமகிழ்ந்தாரே வேதாந்தமாமுனியும்
மனதுக்கிசைந்தபடி மன்னவனெசெய்கிறேன்
சித்தத்துக்கேற்றபடி செய்வேனே நீ அஞ்சாதே
இவனாயுங்கொன்றாதான் அதமபண்ணிப்போடுகிறேன்
பஞ்சவரைக்கொன்று பாருலகையாளவைப்பேன்
இவர்தமக்காக ஆதிசிவன்வந்தாலும்
பஞ்சவரைக்காக்கப் பாரளந்தார்வந்தாலும்
நான்குமுகம்படைத்த நற்பிரமன்வந்தாலும்
வெற்றிமயிலேறும் வேலர்தான்வந்தாலும்

தேவர்க்கதிபதியாம் தேவேந்திரன்வந்தாலும்
இவர்களைக்காப்போமென்று எமனவன்வந்தாலும்
எந்தவிதத்தாலும் இறக்கவகைஎன்றுகிறேன்
என்றுவரங்கொடுத்தார் எரிநாகங்கொண்டவற்கு
அப்போதிரியோதிரன் ஆனந்தமானானே
சந்தோஷப்பட்டானே சர்ப்பக்கொடியோனும்
மெத்தமகிழ்ந்தானே விஷநாகங்கொண்டவனும்
மனங்கள்மிகப்பூரித்து மாநாகன்போய்கடந்தார்
காளமகாமுனியுங் கடுகிவனத்தில்வந்தார்

காளமகாரிஷி ஐவரைக்கொல்ல நினைத்தது.

அப்போதுமாமுனியும் ஆலோசனைகளபண்ணி
வேதாளந்தான்பிறக்க வேள்விதனைவளர்க்க
அக்கினிகுண்டம்வெட்டி அனலைவளர்த்தினானே
பாதாளக்குழியைவெட்டி பகவானையோட்டினானே
மந்திரத்தாலேயல்லோ வாவென்றாவேதாளத்தை
ஆயன்பெருமானும் அவ்வயணத்தாலறிந்தார
ஏழுலகமானகிற எம்பெருமானேதுசொல்வார்
பாவிகெடுத்தானே பஞ்சவரைக்கொல்லவென்று
பங்கும்பகையாளி ஏற்பட்டான்பஞ்சவர்க்கு
எந்தவிதத்திலேயும் இறக்கவகைபண்ணுகிறான்
கொல்லநினைத்தானே குருடன்மகன்சதாதி
ஐவர்பஞ்சபாண்டவர்க்கு அனர்த்தம்வரலாச்சே
செல்வத்திரவியங்கள சிரழிந்துபோகுதே
தோளிற்பூமாலை தொண்டழிந்துபோகுதே
கையிற்செபமாலை கனங்குலைந்துபோகுதே
உள்ளங்கைநெல்லிப்பழம உருகுலைந்துபோகுதே
நம்பினபஞ்சவர்கள் ராஜாக்கள்மானுகிறார்
நம்பினபேர்களைத்தான் நாமல்லோகாக்கவேணும்
கைமோசம்வந்ததென்று கரியமால்தானினைந்தா

எம்பெருமாள பஞ்சவரைக் காப்பதற்கு
எமபுரமபோனது.

அப்போதுஎம்பெருமாளாயெழுந்திருந்து
வட்டமாங்கருடனேறி வருகிறார்மாயரவர்
காடுஞ்செடிதாண்டி கரியமலைதான்தாண்டி
ஆறுஞ்சுனைதாண்டி அதிகவனந்தான்தாண்டி
கில்லென்றுபூத்தசெருந்தி செடியும்வனந்தாண்டி
வேங்கையடர்ந்தவனம் வெண்களாப்பூத்தவனம்
கோங்குபெருத்தவனம் கொன்றைகளாம்பூத்தவனம்
இளமானைப்போலே யிசைந்துவருங்காவேரி
வடமலைரங்கர் வனங்களெல்லாந்தாண்டி
எமபுரந்தேடியே எம்பெருமானோடிவந்தார்

ஏமனுக்கெதிராக எம்பெருமாள் வந்துநின்றார்
எமதர்மராஜனவன் எம்பெருமாளைக்கண்டு
கரியமாலைப்பார்த்து கடுகவெழுந்திருந்து
மாயன்பெருமாளை வந்தனமஸ்கரித்தார்
எமபடாளோடியே எடுத்துவந்தார்சிம்மாதனம்
இட்டதோராசனத்தில் எம்பெருமாள்வீற்றிருந்தார்
அப்போதாயபெருமாள் அரிராமர்தானெழுந்து
சிம்மாதனமேறி ஸ்ரீராமர்வீற்றிருந்தார்
வேற்கவிருவிருக்க வேந்தரவர்வீற்றிருந்தார்
அப்போதயமனவன் ஆயனைப்பார்த்துரைப்பான்
எங்குவந்தீர்மாயவரே எனக்கறியச்சொல்லுமென்றார்
எதுவகையாக எம்பெருமாளிங்குவந்தீர்
வந்தகருமத்தை வாய்திறந்துசொல்லுமென்றான்
மாயன்பெருமாளும் வார்த்தைகளைதுசொல்வார்
உன்னுடையமைத்தனல்லோ அருமையுள்ளதருமரும்
ஐவர்பஞ்சபாண்டவர்கள் அன்னீதமாய்மாளுகிறார்
இறந்துவிடகாளாச்சு இயலானபஞ்சவர்கள்
மாண்டுவிடகாளாச்சு மகாராஜமன்னவர்கள்
செத்துவிடகாளாச்சு சீரானபஞ்சவர்கள்
பாவிகெடுத்தானே படுபாவிதிரியோதிரன்
நொடிக்குள்காளமகாமுனியை நோக்கித்தவசுபண்ணி
அந்தமகாமுனி வந்துஎதிரில்நின்றார்
கண்டுதிரியோதிரன் கடுகசரணம்பண்ணி
கைகட்டிவாய்புதைத்துக் கட்டழகன்நின்றானே
அப்போதமாமுனியும் அறவேமனமகிழ்ந்து
காளமாமுனியுங் கண்டுமனமகிழ்ந்து
என்னவரம்வேண்டும் எந்தனைக்கேளுமென்றார்
அப்போதிரியோதிரன் ஆணழகனேதுசொல்வான்
ஐவரையுங்கொல்லுதற்கு ஆனவரம்வேணுமென்றான்
பஞ்சவரைக்கொல்லுதற்குப் பலத்தவரம்வேணடுமென்றான்
உம்முடையவகையாலே உத்தமரைக்கொல்லுமென்றான்
அந்தமுனிகேட்டு அப்படியேநல்லதென்று
வாக்குவரங்கொடுத்து வந்தாரேயந்தமுனி
ஆழக்குழிபறித்து அக்கினியைமூட்டிவைத்தார்
வேதாளமுண்டுபண்ண மிக்கவனல்மூட்டிவைத்தார்
அக்கினிக்குழியிலே ஆங்காரவேதாளம்
பிறக்கும்படியாகப் பெருந்தவேள்விபண்ணுகிறார்
அதுபிறந்துதாமானால் ஐவர்பிழையார்கள்
தோளிற்பூமாலை தொட்டழிந்துபோகுதே
கையிற்செபமாலை கணங்குலைந்துபோகுதே
உள்ளங்கைநெல்லிப்பழம் உருகுலைந்துபோகுதே

நம்பினபஞ்சவர்கள் ராசாக்கள்மாளுகிறார்
ஆகையாலும்மை அழைக்கவேயிங்குவந்தேன்
வேதாளமபிறந்தாலே வேந்தரைக்கொன்றுவிடும்
மாண்டுமடிவார்கள் மகாராஜாபஞ்சவர்கள்
செத்துமடிவாரே சிரசபஞ்சவர்கள்
என்றுரைத்தார்மாயன் எமனுடனே
அவ்வார்த்தைகேட்டு ஆயருக்கேதுரைப்பார்
ஐவர்பஞ்சபாண்டவர்கள் அவர்காலமுள்ளமட்டும்
உம்மையேநம்பியல்லோ உயிர்கொண்டுலாவுகிறார்
கார்க்கக்கடனுனக்கு கரியமாலென்றுசொன்னார்
அப்போதுமாயவனார் அறவேமனமகிழ்ந்து
மாயவனார்தான்கேட்டு மனதுபெரிதுகந்து
கூடவருவீரோ கொப்பெனவேபோகவென்றார்
ஆயருரைகேட்டு அப்படியேவாரோமென்றார்

எமபெருமானும் எமதர்மராஜனும் பஞ்சவரைக் காக்கவருதல்.

மாயவரும்யமனுமே வருகிறார்வனந்தனிலே
எமபுரத்தைவிட்டுமல்லோ இருவருமாய்வாறார்கள்
காடுசெடி தாண்டி கரியமலைதான்தாண்டி
ஆறுஞ்சுனை தாண்டி அதிகவனந்தாண்டி
இருண்டவனந்தாண்டி இருவருமாய்வந்தார்கள்
காளமகாமுனிவரிட கானகத்தில்வந்தார்கள்
எமன்கிடாமேலே எம்பெருமான்கெருடன்மேலே
அந்தவனத்திலே வந்தாரிருவர்களும்
வந்துயிறங்கினார் மகாமுனிவர்தன்வனத்தில்

எம்பெருமான் தடாகம் உண்டுபண்ணல்.

ஆயர்பெருமானும் அங்கெனவேயேது செய்தார்
மாயமாய்ப்பொய்கையொன்று மாயவருண்டுபண்ணார்
அகலநீளமாய் ஆறுயோசனைகாதம்
பத்துயோசனைதூரம் பாராளந்தாருண்டுபண்ணார்
தாமரைப்பொய்கைதனை சாமியவருண்டுபண்ணார்
அலர்தாமரைப்பொய்கை அங்கனவேயுண்டுபண்ணார்
அல்லியுடன்தாமரையும ஆம்பலுமுண்டாச்சு
அழகானபொய்கையிலே அதிசயமென்னவென்றால்
அல்லியும்கொடியுமே அதில நெருங்கவுண்டாச்சு
அந்தரத்தாமரை அக்குளத்திலுண்டாச்சு
நாணலுங்கோரையுமே நடுவேயதிலுண்டாச்சு
அக்குளத்துக்கரைமேலே அழகானபூமரங்கள்
மல்லிகைமுல்லியுமே மாதளையுமுண்டாச்சு
நல்லதொருபூமலரும் நற்றும்பையுண்டாச்சு
கொன்றைக்குருக்கத்தி கோங்குமுல்லையுண்டாச்சு
அந்தாமரைமலர்கள் அழகானசண்பகங்கள்

ஆலஞ்செடிமுளைத்து அரசுமேயுண்டாச்சு
வேம்புமரமங்கே வேணதுமுண்டாச்சு
பாக்குதுலைமணம்வீசும் பன்னீருபூக்கும்
வர்ணவர்ண பூமரங்கள் மாவிருக்ஷமுண்டாச்சு
கமுகுகுலைசாயும் கஸ்தூரிமணம்வீசும்
வெறிப்பலாப்பழங்கள் வெடித்துவிழுந்திருக்கும்
மாம்பழமெங்கும் வளைத்திற்பழுத்திருக்கும்
பார்த்தவிடங்களெல்லாம் பழங்கள்பரிமளிக்கும்
கண்டவிடங்களெல்லாம் கனிகள்மணம்வீசும்
இப்படியாயுண்டுபண்ணார் எம்பெருமாள் மாயவரும்
அலாகாலங்களிலே கட்டினகுளம்போல
ஆயன்பெருமா ளதிசயமாயுண்டுபண்ணார்

ஏமனும்பெருமாளும் வேறுவடிவுகொண்டது.

ஏமதர்மராசனை யென்னவடிவெடுத்தார்
ஏமபுரத்தையாளுகிற ஏமன்குயிலானார்
எம்பெருமாள்மாயவனு மென்னவடிமானார்
புள்ளிமான்குட்டியைப்போல் பொன்மான்வடிவெடுத்தார்
அந்தநல்லபொன்மானி னதிசயத்தைசொல்லுகிறேன்
தங்கமுழுக்கியே தரையிலகவிழ்த்தாப்போல்
பொன்னையுருக்கியல்லோ பூமியிலேவிட்டார்போல்
மேகத்திலேயெழும்பும் மின்னலதுபோல
தூரத்திலேயெழும்பும் சோதியதுபோலே
எட்டுநாள்சென்றகுட்டி யெத்தன்குழந்தையைப்போல்
மான்குட்டிபோலாக மாயவனார்வடிவெடுத்தார்
பஞ்சவர்கள் தானிருக்கும் பர்ணசாலைதேடிவாரார்
முன்றடுக்குப்பர்ணசாலை எதிராகவந்துநின்றார்
நடந்துவிளையாடி ராசாத்திமுன்னேவந்து
துள்ளிக்குதித்ததங்கே துரோபதைமுன்னாலே

தருமனை துரோபதை மான்பிடித்துத்
தரச்சொன்னது.

கண்டாளே பாஞ்சாலி கானகத்துமானதனை
மானழகைப்பார்த்தாளே மயிலன்னையாள் துரோபதையும்
கண்டுமனமகிழ்ந்து கட்டழகிதுரோபதையும்
பார்த்துமனங்குளிர்ந்தாள் பஞ்சவர்கள்தேவியவள்
மான்பிடிக்கவேண்டுமென்று மனதில்நினைத்தேதாமே
ஆர்பிடித்துத்தருவார்க ளழகானயிம்மானை
தருமரைக்கேட்போமென்று தானெழுந்தோடிவந்தாள்
தருமருகே சாஷ்டாங்கதெண்டனிட்டாள்
மூக்கால்வலம்வந்து முடிவணங்கிதெண்டனிட்டாள்

வணக்கிநமஸ்கரித்தாள் மாதுதுரோபதையும்
தக்கபுகழ்பெரிய தருமாவரேதுசொல்வார்
வணக்குமுடியாளே மங்கைதுரோபதையே
எதுக்குபெண்ணேநீ என்னைவந்துதெண்டனிட்டாய்
பிள்ளையுந்தெண்டனிட்டாய் பிள்ளைகளைப்பெற்றிடுவாய்
பிள்ளைகளைப்பெற்றிடுவாய் பெருவாழ்வுவாழ்ந்திடுவாய்
தெண்டனிட்டகாரியத்தைத் தெரியவுரையுமென்றார்
என்றவர்கேட்க ஏதுசொல்வாள் துரோபதையும்
ஏதோஒருமான்வந் தெதிரிலேவருகிறதை
தங்கமுறிக்கியே தரையிலகவிழ்ந்ததுபோல்
மேகத்துமின்னலைப்போல் மாறுமதுதோணுகுது
தூரத்துச்சோதியைப்போல் தோணுகுதுயெந்தனுக்கு
உச்சிதமாகவே உருகுதேயெந்தனுக்கு
அதிசயமாய்த்தோணுகுது அந்தமானெந்தனுக்கு
மானைக்குவேணுமையா வனத்தில்விளையாட
விளையாடயெந்தனுக்கு வேணும்பிடித்தாரும்
மான்பிடித்துத்தருவீரென்று மன்னவரேதெண்டனிட்டேன்
எந்தவிதத்தாலும் எனக்காகபிடியுமென்றாள்
பிடியும்பிடியுமென்று பின்னொருக்கால்தெண்டனிட்டாள்
மான்பிடித்துத்தாருமென மற்றொருக்கால்தெண்டனிட்டாள்
அப்போதருமலிங்கம் ஆணழகர்தான்கேட்டு
தக்கபுகழ்பெரிய தருமாவரேதுசொல்வார்
ஆர்வளர்த்தமானோயிது அறியேனிளமயிலே
எவர்வளர்த்தமானோயிது யேதுமறியேனே
இந்தவனத்தி லிருக்கும்பெரியவர்கள்
தவத்திற்பெரியவர்கள் சன்னியாசியானவர்
வரத்திற்பெரியவர்கள் மகாரிஷியானவர்கள்
யோகத்தில்தானிருக்கும் யோக்கியமுள்ளவர்கள்
ஆர்வளர்த்தமானோயிது அறியேனிளமயிலே
எவர்வளர்த்தமானோயிது ஏதுமறியேனே
மனிதர்வளர்த்ததினால் வந்ததிந்தமருகே
அல்லாதேயாமானால் அருகில்வந்துநிற்காது
வளர்த்தமானானதினால் வந்துவிளையாடுகுது
மானைப்பிடித்தாலே வகைமோசம்வந்துவிடும்
பெணபுத்திகேட்டுமோசம் போனவர்கள்மெத்தவுண்டு
பெண்ணாலேகெட்டவர்கள் பூமியிலேமெத்தவுண்டு
ஆணாலேகெட்டவர்கள் ஆருமில்லைவையகத்தில்
ஸ்ரீராமர்பட்டதொரு சேதிபோலாகுமிது
அரிராமர்பட்டதொரு அலைச்சல்போலாகுமிது
ஆகையாற்பெண்மயிலே அம்மானைப்பிடியென்றாய்
அதுகேட்டுதுரோபதையாள் ஆரணங்கேதுசொல்வாள்—

ஸ்ரீராமர்பட்டதொரு அலைச்சற்புனையுமிப்போ
அந்தக்கதையெனக்கு ஆண்டவரேசொல்லுமென்றாள்
பாண்டவர்பட்டதொரு வரலாற்றைச்சொல்லுமென்றாள்
எம்பெருமாள்பட்டதொரு இடுக்கங்கள்சொல்லுமையா

தருமர் துரோபதைக்கு மான்பிடிக்கலாகாதென்று
ஸ்ரீராமர் கதையைச் சொன்னது.

அப்போது தர்மனிடம் ஆனமுதநீதுசொல்வார்
ஆகுல்கேள்பெண்ணே அக்கதையைச்சொல்லுகிறேன்
ராமரும்லட்சுமணரும் சீதையுடனேதான்
கைகேசிசொற்படிக்கு கானகத்தேபோயிருந்தார்
தென்னிலங்கைராவணனும் சீதையழகுகேட்டு
சூர்ப்பனகைசொல்லாலே துன்னிப்பதைபதைத்து
இலங்கையைவிட்டுமவன் எகிடனானே
சீதையைச்சிறையெடுக்க தென்னிலங்கைவிட்டுவந்தான்
கண்டாரேமூவர்களைக் காகுத்தன்ராவணனும்
ஜானகியைக்கொண்டுபோக சமயமில்லையெனறவனும்
உற்றுநினைத்தானே ஒருபேயைத்தேடி
இருந்துநினைத்தானே [illegible]
ஆலோசனைபுரிந்து அந்தப்படியாகி
மாரீசனையழைத்து மானுகச்செய்துவிட்டு
போய்நில்லும்சீதையிடம் பொன்மானேயென்றழைக்க
பொன்மானதுகேட்டு போகமாட்டேனென்றுசொல்ல
மாட்டேனென்றுசொன்னதொரு மாயவிதான்கேட்டு
அவ்வனமிலம்மானை அடித்தானேரம்பாலே
அடிபட்டுஓடிருந்து அந்தவனத்தினிலே
மானதுப்பிலைத்தான் மாரீசப்பொய்மானே
சீதையிருக்குமிடம் தேடிதேடிவந்து
மயிலனையாள்முன்னேவந்து மானும்விளையாட
கண்டானேசீதையாரும் கானகத்துமானதுவை
ஸ்ரீராமர்முன்னேவந்து தேவியருமேதுசொல்வாள்
மானழகைக்கண்டேனையா தான்பிடித்துதாருமென்றாள்
மான்பிடித்துத்தாருமென மாதுடிக்கத்தண்டனிட
ஸ்ரீராமர்தான்கேட்டு சிந்தைதயங்கலங்கி
மான்வந்தமாயமெல்லாம் மாயவனார்தாமறிந்து
மானல்லபெண்ணேயிது மாயமானென்றுசொன்னார்
அல்லவென்றுகேளாமல் அதிசுந்தரமாதுரைத்தாள்
தாமமுற்றுமென்றுசொல்லி [illegible]
ராமருலட்சுமணரை [illegible]
மான்பிடித்துநான்வருவேன் [illegible]
சீதையருகாகத் திடமாயிரும்பாவென்றார்
இளையபெருமாளும் இவ்வார்த்தைதானைகேட்டு

அப்படியேகாத்திடுவேன் அண்ணாவேபோமென்றான்
அவ்வார்த்தைதான்கேட்டு அரிராமர்போகலுற்றார்
அம்புவில்லுங்கைபிடித்து அவ்வனத்தினூடாக
மானைத்துரத்தியே மாயவனார்போனபின்பு
தென்னிலங்கைராவணனும் மிக்கவேவேகமதாய்
பத்துத்தலையொளித்து பத்திரண்டுகைமறைத்து
நல்லவொளிமறைத்து ராவணன்பேர்தான்மறைத்து
ஜங்கமனைப்போலாக சண்டாளன்வாரானே
பண்டாரம்போலேயல்லோ படுபாவிவாரானே
வனமாய்வனந்தாண்டி வந்தானேபர்ணசாலை
இவரிருந்தஜாடை இவனறிந்தானப்போது
மானினைத்தானே மாபாவிசண்டாளன்
இப்படியாகவே இவரிருக்கும்வேளையிலே
மான்பிடிக்கப்போனதொரு மாயவனாரேதுசெய்தார்
அந்தமான்தன்கையிலே அகப்படாத்தன்மையினால்
கையினால்வில்லெடுத்துக் கணைகளைத்தான்தொடுத்து
அம்புதனைத்தொடுத்து அம்மானையெய்தாரே
ராட்சதமான்விழுந்து லட்சுமணாவென்றலற
அந்தமொழிகேட்டு அழகானசீதையரும்
மான்கையிலுங்களண்ணர் மடிந்தாரெனவுரைத்தாள்
இளையபெருமாளும் எழுந்துநடந்தாரே
ராமனைத்தேடியே லட்சுமணர்போனபின்பு
தென்னிலங்கைராவணனும் சீதையருகில்வந்து
பிச்சையென்றுகேட்கையிலே அச்சமில்லாதள்ளிவந்தான்
கூசாமல்ராவணனுங் கொண்டுசென்றான்தென்னிலங்கை
சீதைசிறைபோனபின்பு திருமாலவர்பார்த்து
நல்லதென்றுசொல்லியல்லோ நடந்தாரிருவருமாய்
சவரியைக்கண்டுமல்லோ சந்தோஷமானாரே
அனுமாரைக்கண்டுமே அவர்களுறவாகி
அனுமாருறவாலே அங்கதனும்சுக்ரீவனும்
மெத்தவுறவானார் வேந்தரிருவர்களும்
வாலியைக்கொன்றபின்பு வானரவீரருக்குள்
சுக்ரீவனுக்குப்பட்டஞ்சூட்டிக்கடலதனில்
வாராவதிகட்டியல்லோ வந்தார்கள்தென்னிலங்கை
ராவணன்கும்பகர்ணன் ராட்சதயிந்திரசித்தன்
மூலபலசேனை மடிந்ததுராமர்கையால்
சேனைகளைக்கொன்றல்லோ சீதையைச்சிறைமீட்டு
புட்பரதமேறி புண்ணியர்கள்வந்தாரே
அயோத்தியாபுரிக்கு அரிராமர்வந்துவிட்டார்
சீதாசமேதராக சிம்மாதனமேறி
தம்பிமார்மூவர்களுந் தானுங்கொலுவிருந்தார்

நீதிதவறாமல் நெறிப்படியேஆண்டிருந்தார்
ஐம்பத்தாறுதேசமதை ஆண்டவரேஒருகுடைகீழ்
அந்தக்கதையாகும் ஆரணங்கேகேளும்
சீதையம்மாள்பட்டதொரு சேதியிதுவாகும்
மானைப்பிடிக்கவே மாட்டேனெனவுரைத்தார்

மானைப்பிடித்துத் தாவில்லையென்று துரோபதை
யம்மாள் பிணங்கினது.

தக்கப்புகழுடைய தருமரிவையுரைக்க
அவ்வார்த்தைதான்கேட்டு அன்னநடைதுரோபதையும்
ஏதேதுசொன்னாலும் இரங்காமனதுடையாள்
வரும்விதியறியாளே மாதுகருங்குழலாள்
எத்தனைதந்தாலும் இந்தமான்வேணுமென்றாள்
மானெனக்குவேணுமென்று மாதுபிணங்கிநின்றாள்
அறவேமனஞ்சலித்து அங்கேதயாமிட்டாள்
தக்கபுகழுடைய தருமாவர்தான்பார்த்து
காயாம்புமன்னரவர் தானுமங்கேதுரைப்பார்
வெற்றிமதயானை வீமனைத்தானழைத்து
வீமாந்தகரியே வில்வேந்தேயிப்போது
மான்குட்டிவேணுமென்று மாதுபிணங்கினதால்
குட்டிமானைப்பிடித்து கொப்பெனவேவாருமையா
காட்டுமானைப்பிடித்துக் கடுகெனவேவாருமையா
ஓடிப்பிடித்துநீ ஒருநொடியில்வாருமென்றார்

வீமன் மான்பிடிக்கப்போகிறது.

அண்ணருரைகேட்டு ஆங்காரபீமனவன்
இதுபோதுமென்றுசொல்லி எழுந்தானேமதபீமன்
ஜல்லடத்தான்போட்டு தட்டுவரிந்துகட்டி
தட்டுவரிந்துகட்டி தாமரைப்பூசங்குவிட்டு
ஆயுதங்கைபிடித்து ஆணழகன்போகலுற்றான்
மானைத்தொடர்ந்தானே மதபீமராஜாவும்
துள்ளிப்பதைபதைத்துச் சுருக்காய்வருவாராம
பீமனைக்கண்டுமெல்லமெதுவாய்நடப்பாராம்
அப்போமதபீமன் ஆங்காரங்கொண்டவனும்
மானைப்பிடிக்க மாயவனார்பின்தொடர்ந்தான்
எட்டிப்பிடிக்க எதிரில்வருவானும்
பதுங்கிவருவானும் பாரமதபீமன்
ஐம்பதிங்காதவழி அநேகதூரந்தானடந்தார்
கண்ணுக்குத்தெரியாமல் கடுகவேயேகிவிட்டார்
தேடித்திரிந்தானே சீரானகானகத்தில்
என்னதுமென்னுகிறான் இயலானபீமனுமே
அண்ணர்தருமருக்கும் ஆரணங்குதுரோபதைக்கும்

என்னவென்றுசொல்வேனே இந்தவிதிவசத்தை
இத்தனை தூரம்வந்தோம் இம்மாநிலத்தினிலே
போனவிடமறியேன் போயிருக்குந்தானறியேன்
தங்குமிடமறியேன் சஞ்சரிக்குந்தானறியேன்
மாயமான்போனதொரு வகைபோனதும்நானறியேன்
என்றுமனங்கலங்கி என்னுயிருன்கோடிசிந்தை
நின்றுவிசாரமிட்டு நெடுமூச்செறிந்தானே
விடுவிடுநோமங்கே வெயிலானவேளையிலே
நல்லவுருவமது நாவுவரளுதுதே
தண்ணீருந்தாகவிடாய் தனிமையாய்க்கொள்ளுதுக
நாவுவரட்டுகுது நல்லஜலங்காணாமல்
குடலைப்பிரட்டுகுது குடிக்கஜலங்கிட்டாமல்
என்னசெய்யப்போறோமென்று எங்கிநடந்தானே

எம்பெருமாள் பீமார்ஜுனை விஷத்தண்ணீர்குடிப்பித்து

கொல்லுகிறது.

இதுதான்சமயமென எண்ணித்திருமாலும்
மாயிருந்தவரும் மயிலாய்வடிவெடுத்தார்
மயிலாய்வடிவெடுத்து மரத்தின்மேலேநின்றாரே
எமன்குயிலாகி எம்பெருமாள்மயிலானார்
மயிலுங்குயிலுமே வனந்தனிலேதைவுகையில்
அந்தக்குரல்கேட்டான் அழகானபீமனுமே
முன்னேபெரியவர்கள் சொன்னமொழிப்படியே
குளிர்ந்தயிடந்தனிலே குயிலுமயிலிருக்கும்
என்றுமவன்சொல்லி எகிநடந்தானே
தேடியேவந்தானே சீராகபொய்கையண்டை
தாமரைப்பொய்கை தடாகந்தனைக்கண்டானே
தாகவிடாய்தீர்த்து தமயனண்டைபோவோமென்று
தண்ணீர்தடாகத்திலே இறங்கினான்தார்வேந்தன்
அந்தரமாய்மாயவரும் அங்கொருவரோதிசொல்வார்
ஆடாதம்பியரே அவ்விஜலமுண்கிறவன்
தண்ணீர்குடியாதே தாகவிடாய்தீராதே
இந்தக்குளமென்னுடையது இந்தநீரென்னுடையது
இந்தக்குளத்திலே இறங்கிஜலமுண்ணாதே
இவ்வார்த்தைதான்கேட்டு இவலானபீமனவன்
வெற்றிமதயானை பீமனவனேதுசொல்வான்
அந்தரமாய்ப்பேசுரது ஆரொன்றுந்தெரியவில்லை
அந்தரதேவதையோ ஆகாயதார்க்கைகளோ
மந்திரதேவதையோ வந்தென்னைக்கேட்கிறது
பேயோபிசாசுகளோ பிணந்தின்னும்ராக்ஷசியோ
ஆரென்றுநானறியேன் அரியவுரையுங்கள்



காளமகாரிஷியினால் அனுப்பின வேதாளம் ஜவரைத்தேடிவர
ஜவர் இறந்திருந்ததால் வேதாளம் ரிஷியைக்கொன்றது.

வெற்றிமதயானை வீமனவன்கேட்கலுமே
அந்தச்சமயத்தில் ஆயரவரேதுசொல்வார்
ஆரானுலுந்தனுக்கேன் அப்புறத்தேபோகவென்றான்
அப்போது வீமனவன் அவ்வார்த்தைக்கேதுரைப்பார்
தாகவிடாய்கொண்டு தண்ணீர்குடிக்கவந்தால்
தண்ணீர்குடியாதேயென்றுமேசாற்றுவாரோ
தடாகமிருக்கையிலே தண்ணீர்களைதீராமல்
குடியாமற்போவேனோ கொற்றவரேசொல்லுமென்றான்
தண்ணீர்குடிக்கவென்றால் தாரணியிற்பயிர்களுக்குள்
வாடாதபயிருமெது வருத்தமானபாரமெது
அதிசயமானவார்த்தை அறிந்தாலுரையுமென்றார்
அப்போதுவீமனவன் அவ்வயணமறியாமல்
தெரியாமல்வீமனவன் தீர்த்தம்புசித்துவிட்டான்
தாகக்களையாலே தண்ணீர்குடித்துவிட்டான்
காளையந்தவீமனுக்கு கண்ணைசொருகுதே
தலையைச்சுழற்றுதே தாமமுடியானுக்கு
உடம்புபலக்குதே உத்தண்டவீமனுக்கு
மரத்தடியிற்பள்ளிகொண்டான் மாலைமுடியானும்
மறந்துபடுத்தானே மதகரிவீமனவன்
தன்னைமறந்துமல்லோ தார்வேந்தன்பள்ளிகொண்டான்
மாயன்பெருமாளும் வார்த்தைகளேதுசொல்வார்
காலனையெச்சரித்து கடுகவுயிர்வாங்குமென்றார்
எமனைத்தானழைத்து யிவனுயிரைவாங்குமென்றார்
அப்போதுஎமனவன் அவசரமாய்ஓடிவந்து
சூலத்தால்குத்தியே பாசத்தால்கட்டினனே
பாசத்தால்கட்டியே பதைக்கவுயிர்வாங்கினனே
குளத்தங்கரையோரம் குளிர்ந்தநிழல்தனிலே
பொய்கைக்கரையோரம் போர்மன்னன்மாண்டுவிட்டான்
மாண்டுபடுத்தானே மதவீமன்குளக்கரையில்
செத்துமடிந்தானே சீரானவீமனுமே
இப்படியாகவே இவரிருக்குவேளையிலே

மான்பிடிக்கப்போன வீமனைக் காணேனென்று
தருமராசர் புலம்புகிறது,

தக்கப்புகழுடைய தருமாவர்பார்த்து
சாயாம்புமன்னர் தருமாவரேதுசொல்வார்
மான்பிடிக்கப்போனதொரு மன்னவனைக்காணேனே
இன்னேரமாச்சுதே இன்னம்வரக்காணேனே
மானைபிடிக்கையிலே வளர்த்தவர்கள்கண்டாரோ
ஆர்கண்டெதிர்த்தாரோ அமாதுசெய்கிறாரோ
எவர்கொன்றுபோட்டாரோ ஏதுமறியேனே
மண்ணுக்கிகல்லாக்கி மாமாக்கிவிட்டாரோ

கல்லாக்கிமுள்ளாக்கிக் கானகத்திற்போட்டாரோ
செத்துமடிந்தானோ சிவன்பாதஞ்சேர்ந்தானோ
மாண்டுமடிந்தானோ வைகுந்தஞ்சேர்ந்தானோ
காணவும்போறேனோ கட்டழகன் தம்பியரை
பார்க்கவும்போறேனோ பாரமதகரியை
காணாமல்தம்பியரைக் கலங்குதேதேகமெல்லாம்
பாராமல்தம்பியரை பதைக்குதேதிரேகமெல்லாம்
காளையருச்சுனரே கடுகியேபோய்வாரும்
பார்த்துவா அர்ச்சுனரே பாரமதவீமனை
தேடியழைத்துநீ சீக்கிரத்தில்வாருமென்றார்
காளையந்தவீமனை கண்டழைத்துவாருமென்றார்
என்றுமவர்சொல்லி யிருந்தாரொருவிதமாய்

அர்ச்சுனமகாராசன் தருமர்சொல்லைக்கேட்டு வீமனைத்
தேடிப்போனது.

ஆளுலழகுமன்னன் அர்ச்சுனராசதுரை
தருமருரைகேட்டுத் தானெழுந்தான்வாள்விஜயன்
சல்லடங்களிட்டுமல்லோ தட்டிவரிந்துகட்டி
தட்டிவரிந்துகட்டி தாமரைப்பூச்சுங்குவிட்டு
குந்தியிடுங்கால்களுக்குக் குறிஞ்சிப்பூச்சல்லடமாம்
மண்டியிடுங்கால்களுக்கு மாதளம்பூச்சல்லடமாம்
தூக்கிவைக்குங்கால்களுக்கு துத்தியப்பூச்சல்லடமாம்
நீண்டிடுங்கால்களுக்கு நெருஞ்சிப்பூச்சல்லடமாம்
பில்லைசமுதாடு பிதுங்கெடுத்தஒட்டியாணம்
கச்சைவரிந்துகட்டி கருங்கச்சைசுங்குவிட்டு
பாக்குசொருகிறானே பார்த்தனிடப்புறத்தே
கத்திசொருகிறானே காளைவலப்புறத்தே
சிங்காணிவில்லெடுத்து சிறுநாணிதான்பூட்டி
அண்ணருடபாதம் அடிவணங்கித்தெண்டனிட்டு
போகவிடைதாருமென்றான் போர்விஜையக்கோமானும்
தக்கப்புகழுடைய தருமரவர்பார்த்து
வாழ்த்தியெடுத்தவரு மார்போடேகொண்டணைத்து
காளையருச்சுனரை கட்டழகாநீர்கேளும்
வனத்திலுட்புகுந்து மன்னவனைநீதேடி
கண்டழைத்துவீமனைநீ கடுகவேவாருமென்றார்
போய்வாருமென்றுசொல்லி பொருந்தவிடைகொடுத்தார்
விடைபெற்றெழுந்தாரே விசயபெருமானும்
வாரானேயர்ச்சுனனும் வனமாய்வனந்தாண்டி
கானகத்திலுட்புகுந்து காளையரைத்தேடுகிறான்
எங்கெங்குந்தேடிறான் இனியவிடமாராய்ந்தான்
அந்தவனந்தனிலே அண்ணனைக்காணாமல்
மற்றுமொருவனத்தில் பன்னகனைத்தேடிவாறான்

இன்னமொருவனைத் [illegible] இனிதாயிருக்கிறான்
அன்னமில்லாதே அடிமைத் [illegible]
காட்டிலேயிருக்கும் [illegible]
ஆறுவழுதுமன்னன் அர்ச்சுனராசனுக்கு
தண்ணீர்க்கனைக்கள் தாகம்விடப்பொல்லாதது
காவுகாட்டிருந்து [illegible]
மெத்தக்களைத்தாரே [illegible]
அப்போதருச்சனனும் [illegible] சொல்வான்
இத்தவனத்திலே எங்குந்தேடிட்டவில்லை
தண்ணீர்க்கொப்போலே [illegible]
தண்ணீர்தண்ணீரென்று [illegible] தவிக்கிறான்
இப்படியாக இவரிருக்கும்வேளையிலே

பாண்டவர் [illegible] விஷத்தண்ணீர்குடிப்பித்துக் கொல்லுகிறது.

எம்பெருமான் [illegible] எழுந்திருந்தாரே
மயிலுக்குறிஞ்சி [illegible]
அருச்சனை [illegible] கூவுகிறார்
அந்த [illegible] கேட்டு
கூவுங்குரல்கேட்டான் கோபாலனைத்தானும்
அவ்வேளைதன்னிலே [illegible] சொல்வான்
முன்னேபெரியவர்கள் சொன்னமுறைப்படியே
குளிர்ந்த [illegible] இருக்கும்
என்றவன் [illegible]
அந்த [illegible] வந்தான்
குயிலிருக்குமிடத்திலே [illegible] வந்தானே
மயிலிருக்குமிடத்திலே [illegible]
உற்றுப்பார்த்தானே [illegible]
பார்த்தனிடத்திலே [illegible] தானிருக்கும்
கண்டவிடத்திலே [illegible] பூரணமாக்கும்
[illegible] சோலைகளும்
[illegible] கண்டதுவும்
வெற்றியுடனே [illegible]
கண்டவுடனே [illegible]
பார்த்தனும் [illegible] பார்த்தனருச்சனனும்
உற்றுப்பார்த்தானே [illegible] தானே
[illegible] குடிக்கி
அன்னை [illegible]
[illegible]
தம்பிமார்க்கு [illegible]
அங்கேதருமனை [illegible]
இந்தமதமென் [illegible]

காணும்பிடியாமற் மரத்தடியிற்றூங்குறானே
தண்ணீர்குடித்தானல்லோ தாகமுந்தீர்ந்தபின்பு
அண்ணனைத்தானெழுப்பி யழைத்துப்போவோமென
தாமரைப்பொய்கையிலே இறங்கினான் பார்வேந்தன்
அப்போது மாயவரும் அருச்சுனைத்தான்பார்த்து
ஆயர்பெருமானும் அந்தரத்திலேதுசொல்வார்
ஆடாதேயென்குளத்தில் அள்ளிஜலமுண்கிறவன்
எவனடாவென்குளத்தில் எடுத்துஜலமுண்கிறவன்
இந்தக்குளமென்னுதடா இந்தநதியென்னுதடா
சாலையுஞ்சோலையுந் தாமரைப்பொய்கையும்
இந்தவனமுமென்னுதடா இறங்காதேயென்குளத்தில்
அள்ளிஜலமுண்ணா அதிசயஞ்சொல்லுமென்றார்
தாகத்தணியவென்றால் சந்தேகஞ்சொல்லுமென்றார்
அப்போதருச்சுனனும் அவ்வார்த்தைக்கேதுரைப்பான்
என்னவதிசயமோ எந்தனுக்குச்சொல்லுமென்றான்
எம்பெருமான் மாயவரும் ஏதுசொல்வாருச்சுனற்கு
வடாபயிருமெது வையகத்திற்பாரமெது
இவ்வார்த்தைசொன்னு லிறங்கிஜலமுண்ணுமென்றார்
ஆறெழுமன்னன் அர்ச்சுனராஜனை
அவ்வார்த்தைதான்கேட்டர்ச்சுனனுமேதுசொல்வான்
ஆர்காணும்பேசுறது அந்தரத்திலேயிருந்து
எவர்காணும்பேசுறது எங்கேயோதெரியவில்லை
வேண்டிவிடாய்த்துநான் வேர்வைமிகவொழுக
தண்ணீர்விடாயாக தாகத்துக்குண்ணவந்தால்
வேண்டாமெனமறித்து நீண்டாதெனவுரைத்தீர்
எதிரிட்டுவந்தாலே இருதுண்டாய்ப்போட்டிடுவேன்
கண்டித்துப்போட்டிடுவேன் கண்ணில்தெரியடா நீ
எதிரிலேநிற்கவேணும் என்சண்டைபாக்கவேணும்
சரியாகநின்றல்லோ சண்டைபண்ணிபார்க்கவேணும்
என்றதுபேசியே இறங்கிஜலங்குடித்தான்
தாகவிடாய்தீரத் தண்ணீர்குடித்தானே
தண்ணீர்குடித்தவுடன் தலையைச்சுழற்றுகுது
அப்போதுமயக்கமல்லோ அதிமயக்கமாகுது
அஞ்சாமயக்கமல்லோ கனமயக்கமாகுது
அபினிமயக்கமல்லோ அவனைச்சுழற்றுகுது
தன்னாடிவாரானே தாமமுடியானும்
ஆறெழுமன்னவன் அர்ச்சுனராஜனவன்
என்றதுமென்னுகிறான் இந்திரன்குமாரனுமே
நியாயதுநினைக்கிறான் நீலவர்ணமைத்துனரும்
ஆரோதெரியாது அந்தரத்திற்பேசிறார்கள்
எவரோதெரியாது எந்தனுடன்சொன்னுரோ

தண்ணீர்குடியாதேயென்று சபதங்கள்பேசினாரே
தீர்த்தங்குடியாதேயென்று வார்த்தைபலசொன்னாரே
அவ்வார்த்தைதன்னை நாணமில்லியேதீர்த்தமுண்டேன்
சொன்னசொல்தனை மறந்து சுருக்காகத்தீர்த்தமுண்டேன்
உண்டபொழுதே உடம்பையிரட்டுதையோ
தலையைச்சுழற்றுதையோ தருமருக்காருரைப்பார்
அண்ணாருக்குந்தம்பியர்க்கும் ஆரணங்குதுரோபதைக்கும்
இந்தவிசேஷமதை எவர்கள்போய்ச்சொல்லுவாரோ
செத்தவிசேஷமல்லோ சேதிபோய்ச்சொல்வாரார்
மாண்டவிசேஷமது மறுவார்த்தைசொல்வாரார்
என்றுமவன்சொல்லி ஏங்கிவழிநடந்தான்
தள்ளாடித்தத்தளித்து தானேநடந்துவந்து
அண்ணாருக்காக அருச்சுனன்வந்துநின்றான
வீமருக்காக விஜயனும்வந்துநின்றான்
கண்ணுறக்கம்போலவே கடுகிவந்துபடுத்தானே
எம்பெருமான்மாயவரும் இதுதான்சமயமென்று
காலனையெச்சரித்தார் கரியமால்பொட்டெனவே
அர்ச்சுனன்றன்னுயிரை அதிவிரைவாய்வாங்குமென்றார்
அப்போதுஎமனவர் அதிவேகமாகவந்து
சூலங்கொண்டுகுத்தியே பாசங்கொண்டுகட்டினானே
வதைக்கஉயிர்மாய்த்தான் பார்த்திபருச்சுனனை
இப்படியாக இவன்மாண்டிருக்கையிலே
தக்கபுகழுடைய தருமருடசேதிசொல்வோம்

வீமனும், வீமனைத்தேடப்போன அர்ச்சுனனும் இன்னம் வந்து சேரவில்லையென்று தருமர் புலம்புதல்.

அருச்சுனன்போனபின்பு அழகானதருமராயர்
மனதுகலங்கியே மன்னவருமேதுசொல்வார்
கானகத்திற்போனவர்கள் கடுகவந்துசேரவில்லை
இன்னேரமாச்சுதே யின்னம்வரக்காணோமே
நாமத்தழகா நகுலாநீவாருமென்றார்
தக்கபுகழுடைய தருமரழைக்கவேதான்
நாமமுடியான் நகுலனுமோடிவந்து
அண்ணரெதிரேவந்து அடிவணங்கிதெண்டனிட்டு
கைகட்டிவாய்புதைத்து கட்டழகனேதுசொல்வான்
என்னையழைத்தபணி ஏதுபணிசொல்லுமென்றான்
அழைத்தகாரியத்தைநீ நன்றாகவேசொல்லுமென்றான்
அவ்வார்த்தைதான்கேட்டு ஆணழகன்தர்மலிங்கம்
கண்ணீர்ததும்பிடவே கட்டழகரேதுசொல்வார்
வீமனைத்தேடியே விஜயன்போனானே
மான்பிடிக்கப்போனதொரு மதவீமனைக்காணேனே

தேடிப்போனவெதாரு தேர்விஜயனைக்காணேனே
போனவிடமறியேன் போய்புகுந்தாவறியேன்
தங்குமிடமறியேன் சஞ்சரிக்குந்தாவறியேன்
ஆரோடேசண்டை அமராதுசெய்கிறாரோ
யாரோடேசண்டை எதிர்த்துப்போர்செய்கிறாரோ
மாவேந்தர்த்தர்கள் வக்குவதைசெய்கிறாரோ
கன்னிவலைத்தாரோ கண்டதுண்டமாகிறாரோ
செத்ததுவும்பிழைத்ததுவுமே கேட்டுதெரியவில்லை
காண்டதுவுமிருப்பதுவுமே வார்த்தைதெரியவில்லை
சக்ரதனையிருப்பத்தைத சரியவெட்டிப்போட்டாரோ
குங்குமயிருப்புக்கேதை குஞ்சைவெட்டிப்போட்டாரோ
என்னபெருவதுமே வாழ்மனபெருஞ்சமே
கண்ணவுந்போமோ காவலர்கள் தம்பியரை
பார்க்கவும்போமோ பாவியெனகளறேலெ
இன்னமொருவேளை யினிசாணைப்போமோ
இருவரையுந்தேடியே யிட்டுவருவாயோ
போரேர தம்பியரே புத்திபுள்ளகண்பணியே
அண்ணனுரைகேட்டு அனைமுகனைதுசொல்வான்
அஞ்சிப்புலம்பாதே ஆயாசமாகாதே
ஆரோடேசண்டை அமராதுசெய்கிறாரோ
யாவரோடேசண்டை எதிர்த்துபோராடினும்
சண்டையதுஜெயித்து சடுதியில்கொண்டுவாரேன்
அமராதுகொண்டுஜெயித்து அவர்களைக்கொண்டுவாரேன்
காலேகயிருக்கதானும் இப்போதேயாய்ந்து
தேடியழைத்து ஒருகணயுயில்வாரேனென்றான்
தேடியழைத்து சீக்கிரத்தில்வாரேனென்றான்

நகுலன் தருமராஜர் சொற்படிக்கு வீமனையும் அருச்சுனனையும் தேடிப்போனது.

எக்கியெழுந்தானே கட்டழகன்சீர்நகுலன்
பின்னடிங்கால்களுக்கு கெரிஞ்சிப்பூசல்லடமாம்
முன்னடியிங்கால்களுக்கு மாதளம்பூச்சல்லடமாம்
துக்கவைக்குங்கால்களுக்கு துத்திப்பூச்சல்லடமாம்
சல்லடங்களிட்டுமல்லோ தட்டிவரிந்துகட்டி
தட்டிவரிந்துகட்டி தாமரைப்பூசுங்குவிட்டு
பாங்கெடுத்துசொருகினானே மன்னனிடப்புறத்தே
கத்திசொருகினானே காலைவலப்புறத்தே
ஆயுதத்தைதானெடுத்து அண்ணனுக்குதெண்டனிட்டு
போகவிடைதாருமென போர்மன்னன்கைதொழுதான்
தப்புகழுடைய தருமர்மனமகிழ்ந்து
வாழ்த்தியெடுத்தருமர் மார்போடேகொண்டணைத்து
கைமுடியாலும் நகுலாவென்கண்மணியே
போனவரைத்தேடி பொருண்மையுடன்போர்த்து.

சென்றவனைத்தேடி சீக்கிரமாயாராய்ந்து
காளையிருவரையுங் கண்டழைத்துவாருமென்றார்
வீமனருச்சுனனை விரைவிலழைத்துவாரும்
போய்வாருமென்று பொருத்தவிடைகொடுத்தார்
விடைபெற்றெழுந்தானே மெத்தநகுலனுமே
வாரானேவீரநகுலன் வடக்கெழுந்தசூரியன்போல்
ஆயுதத்தைதனைகைபிடித்து அண்ணர்களைத்தேடவாரான்
தேடியேவாரானே சீரானகானகத்தில்
ஆரணியமெங்குந்தேட அண்ணர்களைக்கூவினான்
அங்கேயுங்காணுமல் அப்பாலேபோகலுற்றான்
மற்றோர்வனந்தனிலே மன்னர்களைத்தேடினான்
அங்கேயுங்காணவில்லை அழகானமன்னர்களை
நாமமுடியான் நகுலன்மனங்கலங்கி
மனதுகலங்கியவன் திகைத்துமெய்மறந்து
அழுதுபுலம்பினானே அண்ணர்களைக்காணுமல்
அப்போது நகுலனுக்கு அதிகதாகமுண்டாச்சு
தண்ணீர்கவனங்கள் தாகவிடாயாகுது
நாவுலரட்டுது நகுலமகாராஜனுக்கு
அண்ணரைத்தேடியே அலைகலுற்றானே
அலைவடக்கதேறுமே அதிகதாகமுண்டாச்சே
என்னசெய்வப்போமென்று ஏங்கிமனத்தளர்ந்து

எம்பெருமான் நகுலனை விஷத்தண்ணீர்
குடிப்பித்துக் கொல்லுகிறது.

என்றுவிசாரமிட்டே யிருக்கின்றவேளையிலே
அப்போதுமாமனரும் அங்கேவந்தேயதுசொல்வார்
நாமமுடியான் நகுலனைக்கொல்லவென்று
எம்பெருமானாயவரும் எமனையெச்சரித்தார்
எமனும்ராமனுடன் இருவருமொன்றாகி
மயிலுங்குயிலுமங்கே வனத்திலேகூவுது
நாமமுடியான் நகுலனவன்தான்பார்த்து
அந்தகுரல்கேட்டு ஆலோசனைபண்ணுகிறான்
முன்னேபெரியவர்கள் சொன்னமுறைப்படியே
குளிர்ந்தவிடந்தனிலே குயிலுமயிலிருக்கும்
என்றுமனங்குளிர்ந்து வனிடத்தனிலே
அண்ணரிருவர்களு மங்கேபடுத்திருந்தார்
கண்டுமகிழ்ந்தானே கட்டழகன்வீரநகுலன்
ஆனந்தமானானே அண்ணர்களைக்கண்டவுடன்
நாமமுடியான் நகுலனுமேதுசொல்வான்
அண்ணர்தருமராயர் ஆயாசப்பட்டிருக்க
ஆனதுரோபதையு மங்கேபுலம்பியிருக்க
ஏனமனதுகொண்டு இங்கேபடுத்தார்கள்
தண்ணீர்குடித்துநாம் தாகவிடாய்தீர்த்தபின்பு
அண்ணர்களையெழுப்பி அழைத்துநாம்போவோமென
குளத்திலிறங்கினானே கொப்பெனவேநகுலனவன்
மாயன்பெருமாள் ஸ்ரீராமர்தான்பார்த்து
அந்தமாய்நின்று அவரவரேதுசொல்வார்

ஆடா தம்பியரே அள்ளிஜலமுண்கிறவன்
சாலையுஞ்சோலையும் தாமரைப்பொய்கைகளும்
இந்தவனமுமென்னுடையது இறங்கிஜலமுண்ணாதே
தண்ணீர்குடியாதே தாமரைப்பொய்கையிலே
ஆஞ்ஞைவிட்டப்புறம்னா கொற்றவாவென்றுசொன்னார்
இவ்வார்த்தைதான்கேட்டு ஏதுசொல்வான்நகுலனவன்
ஆரோதெரியாது அந்தரமாய்ப்பேசுகிறீர்
எவரோதெரியாது எங்கேயோபேசுகிறீர்
வார்த்தைதானேகேட்குது வயணக்தெரியவில்லை
சொன்னசொல்கேட்குது சொரூபக்தெரியவில்லை
அந்தரதேவதையோ சந்திரசூரியரோ
ஆகாயதார்க்கைகளோ ஐயன்பிடாரிகளோ
ஆரோதெரியவில்லை அருகில்வந்துபேசுமென்றான்
அவ்வார்த்தைதான்கேட்டு ஆயர்பெருமானும
எங்கள்குளத்திலேநீ இறங்கிஜலமுண்கவென்றால்
வையகத்தின்அதிசயமும் வருத்தமானபாரங்களும்
வாடாப்பயிரின் வர்ணமுறைதாயானால்
இறங்கிஜலமுண்ணலாம் இல்லையென்றால்போய்நடவும்
சொன்னதேவேகுடியும் சொல்லாமற்போனாலே
தண்ணீர்குடியாதே தடமுடியனே
குளத்திலடிவையாதே கொற்றப்போர்மன்னவனே
என்றதோர்சொற்கேட்டு ஏதுசொல்வான்சீர்நகுலன்
நீர்கேட்டவார்த்தைக்கு நான்கேட்குந்தன்மையென்ன
நீதியல்லவிர்தா மின்றுநான்பேசாது
என்னெதிரிலவந்தாலே இருதுண்டாய்ப்போட்டிடுவேன்
சாதுசிலவார்த்தை சின்னமவன்பேசினனே
அவ்வார்த்தைதான்கேட்டு ஆயர்பெருமானும
மறுவார்த்தைதான்கேட்டு மாயவருமதானிருந்தார்
அப்போநகுலனுமே ஆனந்தமாகவேதான்
குளத்திலிறங்கியே கையேபெணனைநகுலனவன்
தாகந்தெளியவே தண்ணீருந்தான்புசித்தான்
தாகந்தெளிந்தானே தருமர்தம்பியானவனும
தண்ணீர்புசித்தவுடன் தானுமாருய்விழுந்து
தலையைச்சுழட்டுது தாரவேந்தராசனுக்கு
உடம்புபதக்குதே உத்தண்டவீரனுக்கு
என்னதுமென்னுகிறான் இயலானநகுலனுமே
ஆரோதெரியாது அந்தரமாய்ச்சொன்னார்கள்
அவ்வார்த்தைகேளாமல் அள்ளியேதீர்த்தமுண்டேன்
சொன்னசொற்கேளாமல் சுருக்காகத்தீர்த்தமுண்டேன்
கண்ணுக்குத்தெரியவில்லை காரணமுந்தோணவில்லை
நிலமுந்தெரியவில்லை நினைவுமறக்குதே

அறியாதுகாண்புகுந்தேனென்றனளே ஆனாலுமென்
அண்ணருக்குந்தம்பியர்க்கும் மானத்துரோபதைக்கும்
அந்தவனசரங்கண்டு ஆர்தான்போய்ச்சொல்வார்கள்
இந்தவிசேஷமதை எவர்போயுரைப்பார்கள்
தருமரீதையறிந்தால் சற்றும்பொறுக்காரே
அன்றுவந்தம்பியரும் அழுதுபுலம்புவார்கள்
இங்கேபுகுந்தவனே தவசிருக்கையிலே
அங்கேதருணமே அண்ணனண்டையண்டாரே
கண்டாரேனிரசுனன் வாசவிதோரண்டு
செத்தாலுமென் பிராணனானுக்கதில
இப்படியாகவிவரிருக்கும்வேளையிலே

வீமனையும் அர்ச்சுனனையும் அழைக்கப்போன நகுலனையும்
காணோமென்று தருமர் புலம்புகிறது.

அப்போதுதலைவனும் ஆனதொருசொல்வார்
சகாதேவனையழைத்து தருமரேதுசொல்வார்
அப்பாசகாதேவா அறிவைக்கேளுடனே
மான்பிடிக்கப்போனதொரு மதயானையும்
வீமனையுங்காணமென்று விசயனுமாசாவும்
தேடிப்போனானே தேர்விஜயனானவனும்
நல்விஜயனைத்தேட நகுலனும்போய்விட்டான்
மூவருமேபோனாரே முடிவேதராசாக்கள்
இருவரையுங்காணேன் உத்தமராணவர
மான்பிடிக்கப்போனவர்கள் வந்திலரே தேர்வீரர்
தேடிப்போனவர்கள் திரும்பிவந்துசேர்வில்லை
கனிசகாதேவா தானுமுடுப்போவ
தேடிப்போறாயோ செகிதுசொல்லாயோ
செத்தார்பிழைத்தாரோ சேதிதெரியவில்லை
கண்டார்பிழைத்தாரோ மறுவார்த்தைசொல்லாயோ
மானைப்பிடிக்கவேபோனவர்த்தானண்டரோ
மாயவனைத்தவசால் வந்தவனுன்றாரோ
சத்தசித்தவோ காடியாகியானவரோ
சத்திரியர்கள் சபித்துப்போட்டாரோ
கொன்றபழிவாங்கிக் கொன்றுவிட்டாரோ
காணவும்போறேனே கட்டழகதம்பியரை
பார்க்கவும்போறேனே பாவியென்கண்ணாலே
இன்னமொருக்கால் இங்கேவருவாரோ
இனியசகாதேவா இப்படிசொல்லாயோ
கனிசகாதேவா கண்டழைத்துவாராயோ
பாருமன்னர்களைப் பார்த்துவேந்தழைத்து

பாராபோ தம்பியரே வார்த்தைகள் சொல்லுமென்றார்
அப்போசகாதேவன் அண்ணரைத்தெண்டனிட்டு
தானழுதான் சகாதேவனேதுசொல்வார்
அந்தநீரண்ணரே அழைத்தோடி வாரேனென்றான்
சகோதர மூவரையும் கண்டழைத்துவாரேனென்றான்
பார்த்தழைத்துவாரேனென்றான் பாரமுடி மன்னவர்கள்
என்றுயெழுந்தானே இளையசகாதேவன்

சகாதேவன் தர்மர்சொல்லைக்கேட்டு தமையன்மார்
மூவரையுந் தேடிக்கொண்டு போனது.

சல்லடங்களிட்டுமல்லோ தட்டிவரிந்துகட்டி
தட்டிவரிந்துகட்டி தாமரைப்பூச்சங்குவிட்டு
பஞ்சுபிடிக்கால்களுக்கு மாதளம்பூச்சல்லடமாம்
நீண்டுபின்னால்களுக்கு நெருஞ்சிப்பூச்சல்லடமாம்
தூக்கிவைக்குங்கால்களுக்கு தத்தியப்பூச்சல்லடமாம்
நுக்கிபிடிக்கால்களுக்கு குறிஞ்சிப்பூச்சல்லடமாம்
சந்திரகாந்திதட்டிகட்டி தாமரைப்பூச்சங்குவிட்டு
கட்டிசமுதாடு எடுத்தானேபெரியகத்தி
கத்திசெரிபெல்லோ கடுகிவெழுந்தானே
அண்ணரைத்தெண்டனிட்டு ஆணழகனேதுசொல்வான்
போகவிடைதாருமென்றான் போர்விஜயன் தம்பியவன்
தக்கப்புகழுடைய தருமரவர்பார்த்து
வாழ்த்தியெடுத்தருளும் மார்போடேகொண்டணைத்து
அப்பாசகாதேவா அறிவுள்ளகண்மணியே
அண்ணமார்போனதொரு அடவிதனிற்சென்று
சகோதர மூவர்களைக் கண்டழைத்துநீர்வாருமே
அண்ணர்களைக்கண்டு அழைத்தோடிவாருமென்றார்
போய்வாருமென்றுசொல்லி பொருந்தவிடைகொடுத்தார்
விடைபெற்றெழுந்தானே வேந்தன்சகாதேவன்
அண்ணரைத்தேடியே அதிவிரைவாய்ப்போய்நடந்தான்
தமையர்களைத்தேடியே தார்வேந்தன்போகலுற்றான்
ஓட்டிநடந்தான் எழிலைசூரியன்போல்
தேடிவருகிறானே சீரானகானகத்தில்
எங்கெங்குந்தேடியே இனியவிடமாராய்ந்து
சகிவருகையிலே காதுயடைத்திடுது
நாவுவறட்டுது நல்லஜலங்கிட்டாமல்
மெத்தகளையாச்சு வேந்தன்சகாதேவனுக்கு
அப்போசகாதேவன் ஆணழகனேதுசொல்வான்
அண்ணர்களைத்தேடி அனேகதூரம்வந்தோம்
தண்ணீர்களையாலே தாகமெடுக்குதையோ
எங்கெங்கேபார்த்தாலும் இனியசலங்கிட்டவில்லை

அண்ணரையுங்காணோமே ஆரளியந்தனிலேதான்
என்றுமவன்சொல்லி யிருக்கின்றவேளையிலே

எம்பெருமாள் சகாதேவமகாராஜனை விஷத்தண்ணீர் குடிப்பித்துக் கொல்லுகிறது.

அப்போதுஎம்பெருமாள் ஆயரவரேதுசெய்தார்
வந்தசகாதேவனையுட வல்லுயிரைவாங்கவென்று
எமனும்பெருமாளும் எறினார்மரத்தின்மேலே
மயிலும்குயிலும் வனத்திலேகூவுது
இந்தகுரல்கேட்டு இளையசகாதேவன்
முன்னேபெரியவர்கள் சொன்னமுறைப்படியே
குளிர்ந்தவிடங்களிலே குயிலும்மயிலிருக்கும்
என்றுநடந்தானே இளையசகாதேவன்
தாமரைப்பொய்கைகளும் தண்ணீர்தடாகமுடன்
பூவனமுஞ்சோலைகளும புதுமைகளைத்தான்பார்த்து
சந்தோஷப்பட்டு சரீரங்கள்பூரித்து
நான்செய்தபுண்ணியத்தால் நல்லசலங்கிடைத்ததென்று
அங்கேநடந்து அவசரமாய்வாரபோது
மன்னரந்தமூவர்களும் மரத்தடியிற்படுத்திருந்தார்
தமையர்தமைக்கண்டு சந்தோஷமானானே
அப்போதொருவார்த்தை அனைமுகனேதுசொல்வான்
அண்ணர்தருமரங்கே அழுதுபுலம்பியேதான்
தம்பியரைக்காணாமல் தயங்கியவரிருக்க
ஆரணங்குதுரோபதையாளங்கேபுலம்பிநிற்க
என்னநினைவுகொண்டு இங்கேபடுத்தார்கள்
பச்சைமரத்தின்கீழ் படுத்தவிதங்களென்ன
இந்தமரத்தடியில் இவர்படுத்தகாரியமேன்
குளிர்ந்தநிழலென்று கோமான்படுத்தாரோ
மலர்ந்தமரமென்று மன்னர்படுத்தாரோ
தாகத்துக்குண்டபின்பு தமையர்தனையெழுப்பி
அண்ணர்களையெழுப்பி அழைத்துநாம்போவோமென்று
தாமரைப்பொய்கையண்டை தார்வேந்தன்வந்துநின்று
அந்தகுளத்திலே அள்ளிசலமுண்ணப்போனார்
அந்தச்சமயத்தில் ஆயரவர்பார்த்து
அந்தரமாய்நின்றலவோ ஆயரவரேதுசொல்வார்
ஆரடாதம்பிநீ அக்குளத்திலிறங்கினவன்
எவனடாதம்பிநீ என்குளத்திலிறங்கினவன்
தண்ணீர்குடியாதே தாகவிடாய்தீராதே
இந்தநீரென்னுதடா இந்தகுளமென்னுதடா

சாலையுஞ்சோலையும் தாமரைப்பொய்கையும்
இத்தனையுமென்னுடைய இறங்கிசலமுண்ணாதே
இறங்கினாலுந்தனக்கு இடறுகள்வந்திடும்
என்றவுரைகேட்டு ஏதுசொல்வான்சகாதேவன்
அந்தரத்திலின்றுகொண்டு ஆர்காணும்பேசுறவன்
மரத்திலிருந்துகொண்டு சொல்கிறவனார்காணும்
அந்தரதேவதையோ சந்திரசூரியரோ
ஆகாசதுர்க்கைகளோ ஐயன்பிடாரிகளோ
பேய்பிசாசுகளோ பிணந்தின்னும்கழுகுகளோ
ஆரோதெரியாது அதட்டியேகேட்கிறவர்
யாவரோதெரியாது எந்தனைக்கேட்கிறவர்
மற்றுமொருக்கால்தான்வாய்திறந்துபேசுங்கள்
இன்னமொருகால்தான் எதிரில்வந்துசொல்லுங்கள்
என்றதுசொற்கேட்டு எம்பெருமானேதுசொல்வார்
தண்ணீர்குடிக்கவென்றால் தரணியில்புதுமைசொல்லும்
வாடப்பயிருமேது வருத்தமானபாரமேது
அந்தவிசயங்களறிந்தானுரையுமென்றார்
அறிந்துநீர்சொன்னாலே அள்ளியேநீர்த்தமுண்ணும்
சொல்லுவாயாமானால் சுருக்காத்தீர்த்தமுண்ணும்
இல்லாமல்போனாலே இப்பாலேவந்துவிடும்
தாமமுடியான் சகாதேவராசனவன்
என்றவுரைகேட்டு ஏதுசொல்வான்சகாதேவன்
ஆரோதெரியாது அந்தரத்திலிரட்டுகிறீர்
எவரோதெரியாது என்னைமிரட்டுகிறீர்
அருகவந்தாலே அடித்தெறிந்துபோட்டிடுவேன்
சரியாயிருக்கவேணும் சண்டைபண்ணிப்பார்க்கவேணும்
மறைவாயிருந்துகொண்டு வாதாடநீதியுண்டோ
என்றுமவனுரைக்க எம்பெருமான்தான்கேட்டு
ஒன்றுமேசொல்லாமல் உலகளந்தார்வீற்றிருந்தார்
மறுவார்த்தைபேசாமல் மாயவருந்தானிருந்தார்
அப்போசகாதேவன் ஆனந்தமாகவேதான்
குளத்திலிறங்கியே கொப்பெனவேதீர்த்தமுண்டான்
அள்ளியேநீர்த்தமுண்டான் ஆவல்தெளிந்திடவே
தண்ணீர்குடித்தானே தாமமுடியானும்
அள்ளிஜலமுண்டபின்பு ஆனந்தமார்பனுக்கு
தண்ணீர்குடித்தவுடன் தலையைச்சுற்றுகுது
உடம்புபறக்குது உள்ளங்குலையுது
நாவுகுளறுது நாமமுடியானுக்கு
தன்னைமறக்குது தார்வேந்தராஜனுக்கு
ஆரோதெரியாது அந்தரத்திற்சொன்னார்கள்
யாவரோதெரியாது ஏகாந்தமாய்சொன்னார்கள்

தண்ணீர்குடியாதேயென்று சத்தம்பிறந்ததங்கே
அவர்சொல்லைக்கேளாமல் அள்ளிதான்தீர்த்தமுண்டேன்
சொன்னசொற்கேளாமல் சுருக்காகத்தீர்த்தமுண்டேன்
தெரியாமல்நீர்குடித்தேன் சிந்தைகலங்குது
அறியாமல்நீர்குடித்தேன் அங்கம்பிரட்டுது
என்றுநடந்தானே இளையசகாதேவன்
அண்ணன்மார் தன்னருகே ஆணழகர் வந்துநின்று
அப்போசகாதேவன் ஆலோசனைகள்பண்ணி
தம்பிகளைக்காணோமென்று தருமரிங்கேவந்தாக்கால்
வசநாபிதண்ணீருண்டு மாண்டிடுவார்தப்பாது
என்றுமனதிலெண்ணி எழுதுகிறான் மரத்தடியில்
அண்ணாவேமரத்தடியில் அதிசயமானவார்த்தை
இந்தக்குளத்திலே எவர்தாகமுண்டாலே
வசநாபிதண்ணீரிது குடித்தால்மடிந்திடுவார்
அண்ணாவேயிக்குளத்தி லள்ளிநீர்குடியாதீர்
நாங்களிதைக்குடித்து நாலுபேரும்மடிந்துவிட்டோம்
செத்துமடிந்தோம் சிவலோகம்சேர்ந்துவிட்டோம்
மாண்டுமடிந்தோம் வைகுந்தஞ்சேர்ந்துவிட்டோம்
என்றுமவன்சொல்லி எழுதினான் மண்மேலே
தலையைச்சுழற்றுகையில் தானும்படுத்துக்கொண்டான்
அந்தச்சமயமறிந்தாரேயெம்பெருமாள்
மாயன்பெருமாளும் வார்த்தைகளேதுசொல்வார்
காலனையெச்சரித்துக் கடுகவுயிர்வாங்குமென்றார்
எமனையெச்சரித்து இவனுயிரைவாங்குமென்றார்
எம்பெருமாள்சொற்கேட்டு எமனவனோடிவந்து
சூலத்தால்குத்தியே பாசத்தால்கட்டினானே
பாசத்தால்கட்டியே பதைக்கவுயிர்பிடித்தான்
சூலத்தால்குத்தியே துடிக்கவுயிர்வாங்கினானே
மாண்டுமடிந்தானே மன்னன்சகாதேவன்
செத்துமடிந்தானே பிரானகானகத்தில்
இப்படியாகயிருக்கின்றவேளையிலே

ஆரணியத்தில் எம்பெருமாள் சூதினாலே வீமன், அர்ச்சுனன், நகுலன், சகாதேவன் இந்நான்குபேரும மடிந்தபின்பு காளமகாரிஷி யாகத்திலுண்டாகிய வேதாளம் பாண்டவரைக் கொல்லவருவது.

அந்தசமயத்தில் ஆங்காரமாகவேதான்
காளமகாரிஷியுங் கருதிதபசுபண்ணி
அக்கினிக்குழியிலே ஆங்காரவேதாளம்
உண்டாகிவந்ததங்கே உலகந்திடுக்கிடவே
கறுத்தநிறமுடனே கைதனிலேவாளுடனே
பெருத்தமுகமுடனே பெருங்கொப்பைதன்னுடனே

சிவந்தமயிரழகும் சிர்வடிந்தவாயழகும்
கண்களைப்பார்த்தாலே கருங்குன்றுபோலிருக்கும்
கைகளோ காதவழி கால்கள்வெகுதூரம்
அகண்டபுஜங்களது ஐந்நூற்றுக்காதவழி
பல்லினைப்பார்த்தாலே பனைமரம்போலிருக்கும்
மூக்கழகைப்பார்த்தாலே முதலைகளைப்போலிருக்கும்
இப்படியாக இருக்குமந்தவேதாளம
பொல்லாதவேதாளம் பிறந்தது அக்கினியில்
காளமகரிஷியருகே கடுகவந்துதெண்டனிட்டு
என்னையழைத்ததுதானே துவகையாக
ஆரைத்தான்கொல்கிறது அடுத்துப்போர்செய்கிறது
எவரைப்போய்கொல்கிறது எந்தனுக்குசொல்லுமையா
கைகள்பதைக்குது காளமகாமுனியே
வயிறுபசிக்கிறது மாமுனியேசொல்லுமையா
அப்போதுமாமுனியும் அதுசொல்லதான்கேட்டு
காளமகாமுனியும் கடுகவெடுத்துரைப்பார்
அக்கினியில்வந்துதித்த ஆங்காரவேதாளமே
நான்சொல்லநீகேளும் ராஜர்களைவருண்டு
இந்தவனத்திலே இருக்கிறார்பஞ்சவர்கள்
வீரப்புலிப்போலே வேந்தர்களைவருண்டு
பாரப்புலிபோலே பஞ்சவர்களைவருண்டு
ஐவரையுங்கொன்றுதின்று அரைநொடியில்வாருமென்றான்
வேதாளந்தான்கேட்டு வெகுவாய்மனங்குளிர்ந்து
அவ்வளவுபோதுமென்று ஆக்ரமித்துபற்கடித்து
அங்கேயிருக்கவென்றுசொல்லி எழும்பியேகொக்கரித்து
கொக்கரித்துவேதாளங் கும்மாளமாய்வருகுது
அந்தவனங்களெல்லாம ஆராய்ந்துவருகையிலே
செகதாமரைப்பொய்கையண்டை செத்திருக்கக்கண்டது
மாமரச்சோலையின்கீழ் மாண்டிருக்கக்கண்டது
இறந்தவரல்லாமல் இன்னமொருவரில்லை
செத்தவரல்லாமல் மற்றுமொருவரில்லை
எங்கேயடித்தாரோ எவ்விடத்திலசெத்தாரோ
செத்தபிணத்திடத்திற் றேடிப்போமனறோ
மாண்டபிணந்தின்ன மாமுனிபோகச்சொன்னர்
எத்தனைநாளைக்குமுன்னே செத்தபிணமிதுவோ
செத்தபிணந்தையோநான் சென்றுபுசிக்கிறது
கறுயபிணமெடுத்து நானேபுசிக்கிறது.
மாண்டபிணத்தைநான் வயிறாருண்பேனே
என்றுயேசொல்லி எழுந்துவேதாளம
அங்கேதிரும்பி அகோரகோபத்துடனே
மாவேகத்துடனே வருகுதுவேதாளம்

காமாக்ஷியிவ்வுருவேக சுகவக் தவுக்கிரமுடன்
எடுத்தமகாமுனியை இருதுண்டாய்ப்பிளக்கது
வாள்கொடுத்தமல்லோ வயிற்றைக்கிழித்தது
செற்கைப்பிளக்கது நெருப்புக்கலைவெழுப்ப
மாமுனியைக்கொன்றபின்பு மனதாபிக்கலுளிர்க்து
சக்தோஷமாகியல்லோ வேதாளத்தாடக்க
அந்தவனத்தைவிட்டு அப்பாலேபோனது
மனதாபிக்கலுளிர்த்து மற்றொருவனத்திலே
போயதுமறைந்திருக்கும் பொல்லாதவேதாளம்
இப்படியாக இருக்கின்றவேளையிலே

தருமர் தம்பியர் நால்வரையுங் காணோமென்று
துரோபதையுடன் சொல்லிப் புலம்புதல்.

வேதாளம்போனபின்பு வேந்தர்தருமராஜர்
சாயரம்புமன்னவனுர் தருமாவதேதசொரவார்
பாஞ்சாலன்பெண்ணே பைங்கிளியேதுரோபதையே
நெருப்பிற்பிறந்தவளே நிலவுலகத்தலையே
அனலிற்பிறந்தவளே அம்பேசப்பத்தினியே
நால்வரையும்மாலையிட்ட ஆதிபராசக்தியே
சோராவழுவிது துரோபதையேகேளும்
மான்பிடிக்கப்போனதொரு மதவீமனைக்காணோம்
வீமனைத்தேடப்போன விஜயனையுங்காணோம்
இருவரையுந்தேடப்போன நகுலன்வரக்காணோம்
மூவரைத்தேடப்போன சகாதேவனைக்காணோம்
நால்வரையுங்காணோமே நாயகியேயென்னசெய்வேன்
செத்தார்பிழைத்தாரோ சேதிதெரியவில்லை
மாண்டாரோமறைந்தாரோ வார்த்தைதெரியவில்லை
ஆரோடேசண்டை அமர்செய்கிறாரோ
எவரோடேசண்டை எப்படிப்போர்செய்கிறாரோ
மாலைவார்த்தவர்கள் வந்ததைப்பன்றோ
வாத்துப்போகுமோக்கள் எவரைக்கொன்றுபோட்டாரோ
தம்பிதப்பிமெலவர்கள் சபித்தாரோகானகத்தே
பாதிரிபெரியவர்கள் வதைசெய்துபோட்டாரோ
போரவிடமறியேன் போர்செய்யுந்தாவறியேன்
தங்குமிடமறியேன் சஞ்சரிக்குந்தாவறியேன்
தேடிப்போவோமா தேவியேயென்றழைத்தார்
ஆணைக்குத்துரோபதையாள் அப்படியேநல்லதென்றாள்

தருமரும் துரோபதையும் வீமன், அர்ச்சுனன், நகுலன்
சகாதேவன் இவர்கள் நால்வரையும்
தேடிக்கொண்டு போனது.

துரோபதையுந்தருமரும் தன்வீடெழுந்திருந்து
தேடப்புறப்பட்டார்கள் கோரகானகத்திலே

கூவிப்புலம்பியே கொப்பெனவேவாரார்கள்
அழுதுபுலம்பியே அந்தவனந்தேடிவாரார்
இருண்டவனங்களெல்லாம் எங்கெங்குந்தேடினாரே
தம்பியரைக்காணாமல் தயங்கினார்தருமராங்கே
பாராமல்தம்பியரைப் பதைத்துப்புலம்பினார்கள்
தக்கப்புகழுடைய தருமராங்கேதுசொல்வார்
தோராவடிவழகி துரோபதையேபாஞ்சாலி
இந்தவனத்திலே எங்கெங்குந்தேடினேனே
[illegible]களாந்தநால்வரையும் காட்டிலேகாணவில்லை
இந்தவனந்தாண்டி இனியவனம்போவோமென்று
அந்தவனத்தைவிட்டு அப்பாலேபோய்நடந்தார்
தேடியேவாரார்கள் சீராணவனந்தனிலே
தருமருக்குந்துரோபதைக்கும் தாகமெடுக்குது
நாவுவரட்டுகுது நாமமுடியார்க்கு
ஆரணங்குதுரோபதைக்கு அதிகதாகமுண்டாச்சு
தண்ணீர்கவனமுந் தாகவிடாயாச்சுது
தக்கபுகழுடைய தருமரவரேதுசொல்வார்
என்னசெய்வோம்பெண்ணேநாம் எங்குஞ்சலங்கிட்டாது
மன்னவரைக்காணேனே மாதரசேயென்னசெய்வேன்
தம்பிகளைக்காணேமே தாகவிடாய்கொள்கிறதே
என்னசெய்வேனென்றுசொல்லி இளைத்துப்புலம்புகையில்
அந்தச்சமயத்திலே அரிராமரேதுசெய்தார்
மயிலுங்குயிலுமாய் மரத்தின்மேலேறியே
வனத்திற்குயிலுமயிலுமாய்கூவுகுது
அந்தக்குரல்கேட்டார் ஆணழகர்தருமலிங்கம்
கூவுங்குரல்கேட்டு கொப்பெனவேயேதுசொல்வார்
முன்னேபெரியவர்கள் சொன்னமுறைப்படியே
குளிர்ந்தவிடந்தனிலே குயிலுமயிலிருக்கும்
என்றுநடந்தாரே இளந்தோப்புதன்னருகே
தாமரைப்பொய்கையண்டை தம்பிமார்தானிருந்தார்
பள்ளிகொண்டிருக்கிறதை பார்த்தாரேதர்மலிங்கம்
தக்கபுகழுடைய தருமரவரேதுசொல்வார்
தோராவடிவழகி துரோபதையேகண்டாயோ
தம்பிமார்பள்ளிகொண்டதைரியத்தைகண்டாயோ
மானும்பிடியாமல் வந்துசேதிசொல்லாமல்
குளிர்ந்தநிழலருகே கூசாமற்பள்ளிகொண்டார்
தண்ணீர்குடித்துநாம் தாகவிடாய்தீர்ந்தபின்பு
தம்பிமாரைத்தானெழுப்பி தையலரேபோவோமென்றார்
என்றுமவருரைத்து இளந்தோப்பிற்போய்புகுந்து
தாமரைப்பொய்கையிலே இறங்கினார்தருமரவர்
அப்போதுமாயவரும் அரிராமர்தானெழுந்து

அந்தரமாய்நின்றுகொண்டு ஆயரங்கேதுசொல்வார்
ஆரடாதம்பிநீ இக்குளத்திலிறங்கினவன்
எவனடாதம்பிநீ இறங்கிஜலமுண்கிறவன்
இந்தக்குளமென்னுதடா இந்தநதியென்னுதடா
சாலையுஞ்சோலையுக தாமரைப்பொய்கைகளும்
இத்தனையுமென்னுதடா இறங்கிஜலமுண்ணாதே
என்றசத்தங்கேட்டுமே ஏதுசொல்வார்தருமரவர்
ஆரோதெரியாது அந்தரமாய்ப்பேசுறது
எவரோதெரியாது எவ்விடமோபேசுறது
அந்தரதேவதையோ சந்திரசூரியரோ
ஆகாசதூர்க்கைகளோ ஐயன்பிடாரிகளோ
வானுலகதேவர்களோ வந்தென்னைக்கேட்கிறது
பேயோபிசாசுகளோ பிணந்தின்னுமராட்சசியோ
ஆரோதெரியாது அந்தரமாய்ப்பேசுகிறீர்
எவரென்றுநானறியேன் எங்கையோபேசுகிறீர்
வார்த்தைகள்கேட்குது வயணந்தெரியவில்லை
உத்தரவுகேட்குது உருவந்தெரியவில்லை
பேச்சுகள்கேட்குது பேருந்தெரியவில்லை
தாகவிடாயாகத் தண்ணீர்குடிக்கவந்தேன்
நாவுவரட்டுகுது நடுங்குதுதேகமெங்கும்
உள்நாக்குவரட்டுகுது உத்தரவுதாருமையா
உத்தரவுதந்தாலே உண்ணுகிறேன்தீர்த்தமிங்கே
வார்த்தையுரைத்தாலே வாரிசலமுண்ணுகிறேன்

எம்பெருமாள் தர்மர்தம்பி நாலுபேரையும்
அதிசயங்கேட்டதற்கு யாருஞ்சொல்ல
வில்லை தருமர் சொல்லுகிறது.

என்றுரைத்ததர்மலிங்கம் ஏதுசொல்வார்மாயவனார்
இப்பூமிதன்னிலே என்ன அதிசயங்கள்
அதிசயத்தைசொன்னீரானா லள்ளியேதீர்த்தமுண்ணும்
இல்லாமற்போனாலே இப்பாலேவந்துவிடும
சொல்லாமற்போனீரானால் சுருக்காய்நடவுமென்றார்
என்றசொல்தான்கேட்டு ஏதுசொல்வார்தருமலிங்கம
மனிதர்பிறக்கிறதும் மனிதரிறக்கிறதும்
இதுவேஅதிசயங்கள் இனியொன்றுமில்லையென்றார்
அவ்வயணங்கேட்டு அரிராமனென்னசொல்வார்
இதுவேஅதிசயங்காண் இனிமொன்றுமில்லையோதான
இன்னயொருவார்த்தை வுண்மைவுரையுமென்றா
வையகத்துமாந்தருக்கு வருத்தங்களாகுதுகாண
ஏதுவருத்தமென்றார் இனிபிறந்தபேர்க்கு
அப்போதருமரவர் ஆயருரைகேட்டு
சாயாப்புமன்னவனார் தருமரங்கேதுசொல்வார்

பத்துமாதஞ்சுமந்து பாலகனையுண்டாக்கி
முன்னூறுநாள்சுமந்த முருகுகுழலாள் தன்றனக்கே
பெற்றெடுத்ததாயாற்குப் பெரியசுமையொழிய
மற்றொருசுமையுமில்லை வையகத்துமாந்தருக்கு
இவ்வசனங்கேட்டு எதுசொல்வார்மாயவனார்
இன்னொருவார்த்தை யியம்புவேன்சொல்லுமென்றார்
வையகந்தனிலே வாடாப்பயிர்சொல்லும்
என்றைக்கும்வாடாத இனியபயிர்சொல்லுமென்றார்
ஆயரிவையுரைக்க அவ்வார்த்தைதான்கேட்டு
சாயாம்புயன்னவனார் தருமராங்கேதுசொல்வார்
வாடாதிருக்குங்காண் வளருமருகம்புல்
இந்தசொல்தானுரைத்தார் அங்கெனவேமாயவற்கு
இவ்வசனங்கேட்டுமே எம்பெருமாளென்னசொல்வார்
சந்தோஷமாச்சுது தாகந்தெளியுமென்றார்
உத்தரவுதந்தாரே உலகளந்தாரெம்பெருமாள்
தக்கபுகழுடைய தருமராவர்கேட்டு
சந்தோஷப்பட்டு சரீரங்கள்பூரித்து
தாகந்தெளிவதற்கு தண்ணீர்குடித்தார்கள்
அள்ளிப்புசித்தார்கள் ஆவல்தெளிந்திடவே
தருமருந்துரோபதையும் தாகத்துக்குண்டார்கள்
தாகந்தெளிந்தபின்பு தம்பிமாரண்டைவந்தார்

தருமர்வந்து தம்பிமார்களை எழுப்ப நாலுபேரும் இறந்துவிட்டாரென்றறிந்துப் புலம்புகிறது.

நாலுபேராண்டைவந்து நடுவிலேயிருந்துகொண்டு
சகாதேவன்படுத்திருந்த தலைமாட்டிலெழுதியதோர்
வாசகத்தைப்படித்தாரே மன்னர்தருமலிங்கம்
என்னவென்றெழுதி யிருந்ததென்றால்வாசகத்தில்
நால்வருமாகவே நச்சுபொய்கைநீர்த்தமுண்டு
விஷநீரையுண்டல்லவோ வேந்தர்மடிந்துவிட்டோம்
மாண்டுமடிந்துவிட்டோம் நீங்கள்வந்தாலண்ணாவே
தாகத்துக்குண்ணாதீர் தப்பிப்பிழையுமென்று
இவ்வசனமாகவே எழுதியிருக்குதங்கே
பார்த்துப்படித்துப் பயந்தாரேதருமராயர்
செத்துமடிந்தார்கள் சேனைதம்பியர்கள்
மாண்டுமடிந்தார்களென்று மன்னர்புலம்புகிறார்
என்னசொல்லிப்புலம்புகிறார் இருண்டவனந்தனிலே
மலையேபருவதமே மாண்டுமடிந்தீரோ.
செம்மலைபருவதமே செத்துமடிந்தீரோ
நீலமலையே நீலத்தோடேசாய்ந்தீரோ
கல்லான தூணுக்கு கலக்கமில்லையென்றிருந்தேன்
கல்லான தூணைக் கரையானரித்ததுவோ

இரும்பான தூணுக்கு யென்னகுறையென்றிருந்தேன்
இரும்பான தூணுமே இற்றுவிழுந்ததேன்
வச்சிரத் தூணுக்கு வாட்டமில்லையென்றிருந்தேன்
வச்சிரத்தூணல்லவோ மண்ணோடுளுத்ததது
செம்பருந்துவந்தென்னைச் சிறகாலடித்ததுதோ
குஞ்சைப்பறிகொடுத்த கோழிபோலானேனே
ரெக்கைபறிகொடுத்த டேகைபோலானேனே
கையழுந்த ஆனையைப்போல் கலங்கினேன் தம்பியரே
ஓடுகிறமானுக்கு ஒருக்காலொடித்தாப்போல்
உள்ளங்குலைந்து உருகிறேன் தம்பியரே
என்னைத்தவிக்கவிட்டு எங்கேமறந்தீர்கள்
ஐயையோதெய்வமே அலையவிட்டுப்பார்த்தீர்களோ

தருமர் வீமனைப்பார்த்துப் புலம்புகிறது.

தக்கப்புகழுடைய தருமரெழுந்திருந்து
வீமனருகில்வந்து வேந்தர்புலம்புகிறார்
வெற்றிமதயானை வீமாமதகரியே
கட்டிக்கரும்பேயென் கண்மணியேயெங்கொளித்தாய்
நூலார்கடுந்திறளார் நூற்றொருவன்னரையும்
கொல்லுகிறேனென்றுநீ கொடியசபதமிட்டாய்
அவ்வார்த்தைதான்மறந்து அப்பாநீயெங்கொளித்தாய்
வச்சிரமுடியேநீ மண்ணோடேசாய்ந்தாயோ
தங்கமுடியேநீ தரையில்கவிழ்ந்தாயோ
தாயைமறந்தாயோ தமயனைநீமறந்து
எங்கேயொளித்தாயோ எந்தனுடுபோனாயோ
என்னையலையவிட்டு எங்கேநீபோயொளித்தாய்
என்றுபுலம்பி இளைத்துமண்ணில்மூர்ச்சையானார்
களைத்துவிழுந்தாரே கட்டழகர்தருமலிங்கம்

தருமராஜர் களைதெளிந்து எழுந்திருந்து அர்ச்சுனனைப் பார்த்துப் புலம்புகிறது.

அன்றுவொருநாழி சென்றபிறகாக
தோராவடிவழகி துரோபதையாளோடிவந்து
களைத்ததருமருக்கு கடுகமூர்ச்சைதெளியவென்று
காட்டில்தழையொடித்து கடுகவேவோடிவந்து
பச்சைத்தழையொடித்து பைங்கிளியாள்வீசலுற்றாள்
வீசக்களைதெளிந்து வேந்தரெழுந்திருந்து
என்னவென்றுசொல்லி எடுத்துப்புலம்பிகிறார்
ஆணழகுமன்னா அர்ச்சுனாயென்பிறப்பே
என்னைத்தனியேவிட்டு எங்கேநீபோயொளித்தாய்
மீசைமுறுக்கழகா விழியிற்கறுப்பழகா
நாவிலேநட்சத்திரம் நயனவிழிபார்வைகளும்
தோளில்துளசிமாலை தொப்புளிலயிர்தகலசம்

பஞ்சியிலேபாசவிலை பாதத்திற்செந்தாமரைப்பூ
முழங்கிலேபத்மரேகை முழங்காலில்முத்துமாணிக்கம்
இடுப்பால்விருதுபொம்மை வலதுகால்விரதண்டை
தலைவிருதுகுலவிருது சத்ராதிபேர்விருது
சதிர்த்தவன்றன்விருதும் சகோரனிமுகவிருதும்
இத்தனைவிருதுகளை எடுத்துநீபூட்டிக்கொண்டு
கட்டிபெறித்தாலே கலங்குமேசேனையெல்லாம்
சத்ராதிகளைஜெயிக்கும் தனஞ்செயனேயர்ச்சுனனே
சத்ரிகளைஜெயிக்கும் என்பிறபேயர்ச்சுனனே
என்னைப்பிரிந்துநீ இறந்துகிடக்கலாமோ
அறுகைவெழுதினவர் ஆயுளையெழுதாரோ
வாழ்வையெழுதினவர் வயதைஎழுதாரோ
பெருமையோருக்கியம்பான் பிரபலங்கள்காணவென்று
பெற்றாளவிற்றிலேனீ பெருநெருப்பையிட்டாயே
என்னைதவிக்கவிட்டு இறந்துவிடஞாயமுண்டோ
என்றுசொல்லிதருமராசர் ஏங்கிமனந்தளர்ந்து
அழுதுபுலம்பியே அங்ஙனேமூர்ச்சையானார்
களைத்துவிழுந்தாரே கட்டழகர்தருமலிங்கம்

தருமராஜர் மூர்ச்சைதெளிந் தெழுந்திருந்து நகுலனைப்பார்த்து புலம்புதல்.

களைத்ததருமரையே கண்டந்ததுரோபதையாள்
துள்ளியெழுந்திருந்து துரிதமுடனேயோடிவந்து
காட்டுத்தழையொடித்துக் கடுகெனவேயோடிவந்தாள்
தருமராசனாகத் தையலரும்வந்துநின்று
பச்சைத்தழையொடித்து பைங்கிளியாள்வீசுகிறாள்
காட்டுத்தழையொடித்து கடுகெனவேவீசலுற்றாள்
மற்றுமொருநாழி பற்றதிறகாக
விசக்களைதெளிந்து வேந்தனெழுந்திருந்து
மூர்ச்சைதெளிந்து முன்னின்றுபுலம்புகிறார்
அப்பாநகுலனென் னுயிருள்ளகண்மணியே
மல்லேயபருவதமே மாமலையேகுஞ்சரமே
நீர்மடியுங்காரியங்கள் நிச்சயத்தைநானறியேன்
மண்டியிலேநன்றுநான் மனதில்நினைத்ததில்லை
செத்துவிடுவேனென்று சற்றுமறியேனே
எனைநீகைவிட்டு இறந்துவிடஞாயமுண்டோ
நீங்கள்போவதறியாமல் பூரித்துநானிருந்தேன்
சாவதறியாமல் சந்தோஷமாயிருந்தேன்
ஆரைச்சதமென்பேன் அன்னியரைத்தஞ்சமென்பேன்
யாரைச்சதமென்பேன் இனியாரைத்தஞ்சமென்பேன்
பார்த்தமுகத்தையெல்லாம் வேற்றுமுகங்காணுதையா

கண்டமுகங்களெல்லாம் கடுத்தமுகமாகுதப்பா
கூடப்பிறந்தீர்களே கூட்டுப்பாலுண்டீர்களே
ஒக்கப்பிறந்தீர்களே ஒருமுலைப்பாலுண்டீர்களே
காட்டுக்குள் என்னைவிட்டு கைலாசம்போனீர்களே
தாங்கத்தரிக்கவில்லை தரையிற்கால்பாவவில்லை
நிற்கத்தரிக்கவில்லை நிலத்திற்கால்பாவவில்லை
உங்களைநான்பிரிந்து ஒருநாழிதங்குவேனே
கூடமடிவேன்காண் கொற்றவரேஉங்களுடன்
ஒக்கமடிவேன்காண் உங்களுடனாக
அலண்டுபிரண்டெழுந்தார் அடித்துக்கொண்டார்தலைமேல்
மார்கொண்டகண்ணீரை வழித்தெறிந்தார்மண்மேலே
துடித்துப்பதைத்தலறி துள்ளிப்புரண்டழுதார்
களைத்துவிழுந்தாரே கட்டழகர்தர்ப்பலிங்கம
மூர்ச்சையாய்விழுந்தாரே முடிமன்னராசாவும்

தருமராஜர் மூர்ச்சைதெளிந்து சகாதேவனைப்
பார்த்துப் புலம்புதல்.

தோராவடிவழகி துரோபதையுந்தான்பார்த்து
களைத்ததருமருக்கு களைகள்தெளியவென்று
காட்டில்தழையொடித்து கட்டழகிவீசலுற்றாள்
பச்சைத்தழையொடித்து பைங்கிளியாள்வீசலுற்றாள்
வீசக்களைதெளிந்து வேந்தரெழுந்திருந்தார்
மூர்ச்சைதெளிந்தெழுந்து மோதிப்புலம்புகிறார்
சாஸ்திரக்கொடிவேந்தா சகாதேவராஜாவே
முன்னேவருங்காரியத்தை முதலறிந்துசொல்வாயே
இனிநடக்குங்காரியத்தை எனக்குநீயுரைப்பாய்
அப்படிக்கொத்ததொரு அறிவுள்ள கண்மணியே
உன்னைப்பறிகொடுத்து உலகத்தில்வாழ்வேனோ
பன்னிரண்டுவருஷம் பாரவனந்தீர்த்தபின்பு
அஞ்ஞாதவருஷ மதுவுங்கழித்தபின்பு
பாரவனந்தீர்த்து பட்டணமேபோய்ச்சேர்ந்தால்
குந்தியம்மாளோடிவந்து குழந்தைகளெங்கேயென்றால்
மைந்தர்களெங்கேயென்று மாதாவுங்கேட்டாலே
என்னவென்றுசொல்லி எடுத்துரைப்பேன்தாயார்க்கு
கட்டிக்கரும்பேயென் கண்மணியேயென்கொளுந்தாய்
முடிக்கிமுடியானாலும் முத்துமுடியாகுமோதான்
தங்கமுடியானாலும் உங்கள்முடியாகுமோதான்

தருமர் தம்பிமார் நாலுபேரையும் நினைத்துப்புலம்ப அப்போது
துரோபதை தன்புருஷர்களை பார்த்துப் புலம்புதல்.

தோராவடிவழகி துரோபதைசுயம்பாள்
மாலையிட்டமன்னவர்கள் மாண்டுவிட்டீருண்டோ
நாலுதிக்கும்ராஜாக்கள் தரையில்விழலாச்சே

மங்கிலியமூண்டு மணைமூண்டுள்ளிருந்தேன்
உலகத்துப்பெண்கள் ஒருவனுக்குகைகொடுப்பார்
நான் ஐவருக்குங்கைகொடுத்து அம்பலத்துக்காளானேன்
செல்லத்தலையிலே செப்போடெழுதினதாம்
அல்லற்படுத்துயரம் அமைத்தாரோபிரமதேவன்
ஆனைக்கழுத்தி அரைக்கழுத்தியானேனே
சேனைக்கழுத்தி குரைக்கழுத்தியானேனே
துங்கக்கழுத்தி தலைவிரிக்கநாளாச்சே
மல்லிகைசாலையிலே மயிர்விரிக்கநாளாச்சே
குங்குமச்சாலையிலே குழல்விரிக்கநாளாச்சே
ஐயையோதெய்வமே அநியாயஞ்செய்தீரோ
பார்த்துயிருந்துமென்னைப் பாதகிக்கவிட்டீரோ
கண்டிருந்துமென்னை கலங்குலையவைத்தீரோ
சோனசேர்ந்தராஜாக்கள் சோர்ந்துவிடக்காரியமேன்
பார்சார்ந்தராஜாக்கள் மடிந்துவிடக்காரியமேன்
காட்டில்மடிந்தல்லவே கைவிட்டுநின்றீர்களே
அடவியிலேதான்மடிந்து அலையவிட்டுப்பார்த்தீர்களே
அரியவரசாட்சியைவைத்து தெருவில்கைவிட்டீரோ
சகிதரசாட்சியைவைத்து சாகத்துணிந்தீர்களோ
அக்கினியிலேகையைவைத்து சமர்த்தாய்ப்படுத்தீர்களோ
மஞ்சளிழந்தும் மணமிழந்தும்பூவிழந்தும்
தாலிச்சரடிழந்து தரணியில்நிற்பேனோ
மஞ்சள்சரடிழந்து மண்மேலிருப்பேனோ
கூடமடிவேன்காண் கொற்றவரேயுங்களுடன்
ஒக்கமடிவேன்காண் உத்தமரேயுங்களுடன்
கூடமடிவேன்காண் ராஜர்களேயுங்களுடன்
அலண்டுபுரண்டழுது அப்பிக்கொண்டாள்மார்மேலே
வாங்கேபோவாமை இடித்ததுபோலிருந்தேன்
தப்பாமல்லாமல்லோ தலையிலிடித்ததுவே
அன்றுபுலம்பியே இளங்கொடியாள்தானழுதாள்
சோவென்றசத்தம் குமறிப்புலம்புகிறாள்
துக்கப்புகழுடைய தருமராஜரேதுசொல்வார்
காயம்புமன்னவனார் கட்டழகரேதுசொல்வார்
தோராவடிவழகி துரோபதையேகேளும்
வசகாபிதண்ணீருண்டு மாண்டாரோதம்பியர்கள்
காமப்புசித்தோமே கல்விஷத்தண்ணீரை
இறவாமல்நாமும் இருப்பதென்னகாரணங்கள்
மாண்டதொருதம்பியர்கள் மன்னவர்கள் தன்னுடனே
நாமுமடிந்தாக்கால் நல்லதென்றெண்ணுகிறேன்
கூடமடிந்தாலோ குணமென்றுவெண்ணுகிறேன்
ஒக்கமடிந்தாலே ஒருமிக்கதீர்ந்துவிடும்

சதிரையைத் தூக்கலாங் காவேரிநீந்திடலாம்
விதியைத் தூக்கவல்லோ வேறுவகையறியோம்
என்னசெய்வோமென்றுசொல்லி ஏங்கிப்புலம்புகிறார்

தருமர்மனதறிய எம்பெருமான் ஒட்டனாகவும் எமன் ஒட்டச்சியாகவும் வந்து பிணத்தையிழுக்கிறது.

ஏமனும்பெருமானும் இருவருமாகவேதான்
தருமர்மனவறிய சாமிவடிவெடுத்தார்
எம்பெருமான்மேகவர்ண ரொன்னவடிவானார்
இருவருமாகவே இவர்களண்டையோடிவந்தார்
தர்மராசன்பார்த்து சாமிவருமைப்பார்
ஆராராயிங்கே அழுதுபுலம்புவது
இச்சுரத்திலே யெவர்தாகமுண்டானும்
வனாபிதன்னீரில் மாண்டுமடிந்தாலும்
எங்களையல்லாமல் எவருமெடுக்கலாகாது
எடுத்துப்புதைக்கிறது எங்களுக்குத்தாரமையா
நாங்களெடுக்கும்படி ராஜாவின்கட்டளைகாண்
என்றபேயெம்பெருமான் இழுத்துப்போறார்வீமனையும்
மாவிறபனர்ச்சுனனை இழுத்துப்போருள் ஒட்டச்சியும்

எம்பெருமான் எமனும் சவத்தை யெடுத்துக்கொண்டுபோக தருமராஜர் பரிதாபப்பட்டு தன்சவத்தைவாங்குவது.

சவத்தையவரிழுக்க தருமரவர்பார்த்து
கண்டாரோதருமரவர் கடுகவயிரெரிந்து
பார்த்துமனங்கலங்கி பதைத்துப்புலம்பியவர்
ஒட்டர்களருகில்வந்து உத்தமருமேதுசொல்வார்
ஆமையா ஒட்டர்களே ஐயாவேநீர்கேளும
அண்ணனிநான் தம்பிமாண்டைவந்திருக்க
தமையனெனநானும் தனதாகவந்திருகக
பூமிதனைவெட்டி புதைக்கும்வயணமென்ன
எங்கள்பிணத்தைநீங்கள் இழுக்காதிர்விட்டுவிடும்
தரையிலிழுக்காதே தர்மமாய்ப்போகுதையா
பூமியிலிழுக்காதே புண்ணியமாய்ப்போகுதையா
கோடிசரணமயமா கும்பிடுகிறேன்விட்டுவிடும
ஆயிரஞ்சரணம் அடிபணிந்தேன்விட்டுவிடும்
மூவாயிரஞ்சரணம் முடிசாய்த்தேன்விட்டுவிடும்
என்றுவருந்திஞரே இயலானதருமலிங்கம்
ஏமனும்ராமனும இருவருந்தான்பார்த்து
பெருமான்மனமிரங்கிப் பிரியமுடனாக
வீமனைத்தாழவிட்டார் வேந்தர்பெருமானும்
தக்கபுகழுடைய தருமரவரோடிவந்து
வீமனையெடுத்துவந்து மெத்தெனவேதான்வளர்த்தி

வீமருமாக வேந்தரும்வீற்றிருந்தார்
தோகைவடிவழகி துரோபதையாளோடிவந்து
ஒட்டச்சியாத்திலே உத்தமியாள்தான்விழுந்து
தாயோ ஒட்டச்சியுன் தருமமாய்ப்போகுதம்மா
என்னையாளவிட்டமனுஷனடி வலியாதேபூமியிலே
இத்தனையகத்தைபாண்டவரை வலியாதேதாயாரே
பூமியையாண்டவர்கள் புட்டாதேமாதாவே
உங்கப்பொருக்கனில்லை ஆச்சிநீவலியாதே
ஆயிரந்தெண்டமம்மா அடிபணிந்தேனுந்தனுக்கு
மூவாயிரந்தாணம் முடிவணங்கிதெண்டனிட்டேன்
கோடிசரணையம்மா கும்பிட்டேன்விட்டுவிடும்
என்றுவருந்திடவே இளங்கொடியாள்துரோபதையும்
பேயும்பெருயாளு மிருவருந்தான்கேட்டு
மிதிபந்தாளாமல் பார்த்தனைவிட்டார்கள்
தோகைவடிவழகி துரோபதையுமோடிவந்து
இளங்கொடியாளர்சுனரை எடுத்துவளர்த்திடவே
ஒட்டனும்ஒட்டச்சியும் உத்தாரமென்னசொல்வார்
எடுத்துப்புதையுமென்று ஏகிகடந்தார்கள்
தோகைவடிவடிவழகி துரோபதையுமேதுசொல்வாள்
இன்றெல்லாமிங்கிருந்து ஏகிகடந்தார்கள்
நம்மாலேயாவது ராசாவேயொன்றுமில்லை
மாயன்பெருமானை மனதில்நினைத்தாலே
வருந்தியழைத்தாலே வருவார்காணெம்பெருமாள்
மாயன்வந்தபிற்பாடு வயணந்தெரியுமென்றாள்

தருமராஜர் தம்பியர் பிழைப்பதற்காக எம்பெருமானை
நினைத்துப் புலம்புகிறது.

காயாம்புமன்னவரும் தருமரவரென்னசொல்வார்
ஆடியளந்தமாயவரே ஆதிமூலம்வாருமென்று
கல்லையளந்தசாமி எம்பெருமாள்மேகவண்ணா
கல்லான அகலிகையை நல்லபெண்ணாக்கிவைத்தாய்
மூலமென்றகுஞ்சரத்தை காத்தமணிவண்ணா
ஆலிலைமேல்பள்ளிகொண்ட அரிராமாவாருமையா
மச்சவடிவுகொண்டு மறைகளைத்தந்தவரே
கூர்மவடிவுகொண்டு மலையைச்சுமந்தீரே
ராமாவதரித்து ராவணனைசங்கரித்தீர்
அரக்குமாமாளிகையில் ஐவரையுங்காத்தீர்
அம்பலத்தில் துரோபதைக்கு அட்சயந்துகில்கொடுத்தீர்
மண்டலங்கள்தானறிய மாளாததுகில்கொடுத்தீர்
பணையானிவாசமிலே பட்சம்வைத்துக்காத்தீரே
சித்திராளிமுன்றிலே. எங்களைக்காத்தீரே

உன்மகிமையாரறிவார் உம்பர்பிரான்தானறியார்
நீரேதுணையல்லாமல் வேறேதுணையுமில்லை
ஆதாரச்சதமென்பேன் அன்னியனாதஞ்சமென்பேன்
பார்த்தமுகங்களெல்லாம் வேற்றுமுகங்களாகுதே
கண்டமுகங்களெல்லாம் கடுத்தமுகங்களாகுதே
ஏழையழுதகண்ணீர கூரியவாள் தைக்கிலையோ
நானழுதகண்ணீர் ரம்பங்கொண்டறுக்கிலையோ
என்றுபுலம்புகிறார் இயலானதருமராவர்
தருமருடனாக தவிக்கிறாள் துரோபதையும்
கூடபுலம்புகிறாள் கொம்பனையாள் துரோபதையும்
இப்படியாக யிருக்கின்றவேளையிலே

தருமருந் துரோபதையும் வருந்துகிறதை எமனும்பெருமாளும்
கேட்டு சந்தோஷித்து இவர்களிருவரும் வருவது.

எமனும்மாயவரும் இருவருந்தான்கேட்டு
சந்தோஷப்பட்டாரே சாமிபெருமாளும்
எமன்கடாமேலே எம்பெருமாள்கருடன்மேலே
இருவருமாகவே எழுந்தருளிவந்தார்கள்
தருமரிடத்திலே இருவரும்வந்துநின்றார்
தருமருந்துரோபதையும் சாமியைகண்டவுடன்
சரணமடைந்தாரே சாமிபெருமாளை
மூக்கால்வலம்வந்து முடிவணங்கிதெண்டனிட்டார்
நாற்கால்வலம்வந்து நமஸ்கரித்துதெண்டனிட்டார்
இருவரையுந்தெண்டனிட்டு இட்டார்சிம்மாதனத்தில்
சிம்மாதனம்போட்டு ஸ்ரீராமர்வீற்றிருந்தார் .
இருமிருமென்றுசொல்லி இருவரையுந்தெண்டனிட்டார்
எமனும்மாயவரும் இருந்தார்சிங்காதனத்தில்
வண்ணசிங்காதனத்தில் வந்திருந்தாரிருவருமாய்
அடியளந்தமாயவரும் ஆண்டவருமென்னசொல்வார்
என்னவகையாக என்னையழைத்தீர் தருமலிங்கம்
அழுதுபுலம்புவதேன் ஆயாசமாகுவதேன்
என்னபுதுமை எனக்கரியச்சொல்லுமென்றார்
அப்போதுதருமலிங்கம் ஆயருக்கேதுசொல்வார்
காயாம்புமன்னவனார் தருமரெடுத்துரைப்பார்
மான்பிடிக்கவந்தவர்கள் மாயவரேதம்பியர்கள்
தாமரைபொய்கையிலே தண்ணீர்குடித்தார்கள்
விஷநீரைத்தான்குடித்து வேந்தர்மடிந்தார்கள்
செத்துமடிந்தார்கள் சிவலோகம் சேர்ந்தார்கள்
மாண்டுமடிந்தார்கள் வைகுந்தஞ்சேர்ந்தார்கள்
தம்பியரைத்தேடியே தையலரும்நான்வாறேன்
அழுதுபுலம்பிவந்து அண்ணரைக்கண்டோமே
தட்டியெழுப்பினேன் செத்துமடிந்திருந்தார்

பார்த்துயிரொழிந்து பதைத்துப்புலம்பினேன்
கண்டுயிரொழிந்து கார்வண்ணுபுலம்புகையில்
எவரென்றுதெரியாது இராட்சதன்போலொட்டனவன்
ஆரென்றுதெரியாது ஆங்காரமுள்ளஒட்டன்
ஒட்டர்மனைவியவள் ஒட்டச்சிகூடவந்தாள்
இத்தலத்திலே எவரெவர்மாண்டாலும்
எடுத்துப்புதைக்கிறது இங்கேயவர்க்குத்தரவாம்
வீமாருச்சுனரை வெகுதூரங்கொண்டுபோனார்
தம்பிமாரிருவரையுந் தானிழுத்துப்போனார்கள்
கண்டுமனம்பதைத்துக் கதறிப்புலம்பினேம்
பார்த்துமனந்தாளாமல் பற்றியுயிரொழிந்தோம்
பாதத்தின்மேல்விழுந்து பத்துலட்சந்தெண்டனிட்டோம்
விட்டுவிடச்சொல்லி வெகுகோடிதெண்டனிட்டோம்
எங்கள்பரிதாபம் பார்த்துமனமிரங்கி
எடுத்துப்புதையென்றுசொல்லி இந்தவழிதான்கடந்தார்
அவர்கள்போனபிற்பாடு ஆண்டவனேயுனைநினைத்தேன்
தம்பியரைவிட்டு தரிக்கமனங்கூடவில்லை
என்னசெய்வேனென்றுதா னேங்கிப்புலம்புகிறார்
தருமர்புலம்புவதை சாமியவர்பார்த்து
மாயன்பெருமாளும் வார்த்தையங்கேதுசொல்வார்
தருமர்முகம்பார்த்து சாமியுமேதுசொல்வார்
என்னசெய்வோம்தருமரே எழுத்துப்படியிவ்வளவு
அன்றெழுதினகர்த்தனவன் அழித்தெழுதப்போரதில்லை
கதியைத்தொலைக்கலாம் காவேரிநீந்திடலாம்
விதியைத்தொலைப்பதற்கு வேறுவகையறியோம்
பிரமனெழுத்திற்குப் பிசகுகள்வாராதே
மாண்டார்பிழைத்தாலே வையகங்கள்கொள்ளுமோ
செத்தார்பிழைத்தாலே செகமெல்லாங்கொள்ளுமோ
அழுதுபுலம்பியே ஆயாசப்பட்டாலும்
ஆண்டாண்டுதோறும் அழுதுபுரண்டாலும்
மாண்டார்வருவாரென்று மனதில்நினையாதே
செத்தார்வருவாரென்று சித்தத்திலெண்ணாதே
தம்பியரைநீயெடுத்து தகனங்கள்செய்யுமென்றார்
இவ்வயணமாகவே எம்பெருமாள்சொல்லவுமே
தருமர்மனதறிய சாமியுரைக்கவுமே

எம்பெருமாள் செத்தவரை தகனஞ்செய்யவென்று தருமரும்
மனமறியச்சொல்ல அதுக்கேட்டு தருமரும்
துரோபதையும் புலம்பி சுவாமியை
மடிபிச்சை கேட்பது.

எம்பெருமாள்மாயவரும் இப்படித்தானுரைக்க
சாமியுரைக்கேட்டு தருமர்மிகத்தளர்ந்து

இந்தைகலங்கியவர் திடுக்கிட்டுமெய்மறந்து
மெத்தமனதுநொந்து வேந்தர்புலம்புகிறார்
அடித்தமயில்போல அழுதுபுலம்புகிறார்
பச்சைப்புழுவெடுத்து பெருநெருப்பிற்போட்டாப்போல்
துடித்தபுழுப்போல துள்ளிப்புலம்புகிறார்
உன்னையேநம்பி உயிர்கொண்டுலாவுகிறேன்
நம்பியிருந்தவென்னை நட்டாற்றில்விட்டுவிட்டாய்
இப்படிநீகையைவிட்டால் எப்படிநான்பிழைப்பேன்
ஆற்றங்கரையருகில் ஆலமரம்போலானோம்
குளத்தங்கரையருகில் கோடாலிக்காம்பானோம்
நட்டாற்றிலேமுளைத்த நாணலுங்கோரையானோம்
உள்ளங்கைநெல்லிக்கனி உருக்குலைந்துபோகுதே
கையில்செபமாலை கனங்குலைந்துபோனோமே
இனியிந்தபூமியிலே இருக்கவுமாகாது
என்னையுங்கொன்றுவிட்டு எம்பெருமாள்தகனஞ்செய்யும்
நால்வருடனாக நம்மைத்தகனஞ்செய்யும்
என்றுபுலம்பினார் இயலானதாமலிங்கம்
துகில்வளர்த்தபத்தினியாள் துரோபதையேதுசொல்வாள்
தமையனருகில்வந்து தையலருமேதுசொல்வாள்
அண்ணருகேவந்து அழுதுபுலம்புகிறாள்
மங்கிலியப்பிச்சையது மாயவரேதாராயோ
மூந்தாணிபிச்சையது முகுந்தரேதாராயோ
என்றுமடியேந்தினாள் இளங்கொடியாள்தரோபதையும்

தருமருந்துரோபதையும் புலம்புவதை எம்பெருமாள் பார்த்து
மனமிரங்கி இங்கேயிருந்து வேறேயொரு சோகியாகவும்
வந்து நாலுபேரையு மெழுப்புகிறது.

தருமருந்துரோபதையும் தானழுததைப்பார்த்து
கரியமால்மனமகிழ்ந்து கடுசநினைவுகொண்டு
இவர்களுக்குமுன்னாலே இருந்தாரேமாயவரும்
எம்பெருமாள்மாயவரும் என்னவடிவெடுத்தார்
வேறேயுருவாக விஷ்ணுவடிவெடுத்தார்
மலையாளசோகியைப்போல் வாறாரேமாயவரும்
கைதனிலேமருந்துபையுங் காவியுடுப்புகளும
தோளிலேசோளியுடன் தொங்குகிறதாடிகளும்
கையில்செபமாலை கமண்டலந்தன்னுடனே
தொண்ணூறும்பத்தஞ்சென்றதுவண்டகிழவனைப்போல்
நானூறும்பத்துஞ்சென்ற நரைத்தகிழவனைப்போல்
தோலும்நரம்புகளுந் தொங்குதுகிழவனுக்கு
முள்ளுதடுத்தாலே முப்பதிடம்விழுவார்
நாணல்தடுத்தாலே நாற்பதிடம்விழுவார்
அறுகம்புல்தடுத்தால் ஐம்பதிடம்விழுவார்

தள்ளாடித்ததத்தளித்து தடிக்கோலையூன்றிக்கொண்டு
பஞ்சாட்சரமோதி பாதைவழியாக
சிவசிவாவென்றுசொல்லி சீக்கிரமாய்வந்தாரே
அரகராவென்றல்லோ அந்தவழியாகவந்தார்
தருமாருகில்வந்து அருமைஜோகியென்னசொல்வார்
அத்திபுரத்துக்கு சுத்திப்போறேனிதுவழியாய்
ஆரோஇருவர்கள் அழுதுபுலம்பினார்கள்
ஏதுக்கழுதார்கள் என்றலறிஓடிவந்தேன்
அழுதவயணமென்ன ஐயாவேசொல்லுமென்றார்
புலம்பியழுவதென்ன புதுமைகளைச்சொல்லுமென்றார்
அப்போது தருமலிங்கம் ஆணழகரேதுசொல்வார்
அழுதகண்ணும்சிந்தையுமா யப்போதெடுத்துரைப்பார்
மான்பிடிக்கவேவென்று வனத்திலேவந்தார்கள்
வசாபிதண்ணீருண்டு மாண்டாரே தம்பியர்கள்
விஷநீரைத்தான்புசித்து வேந்தர்மடிந்தார்கள்
செத்துமடிந்தார்கள் சிவலோகஞ்சேர்ந்தார்கள்
மாண்டுமடிந்தார்கள் வைகுந்தஞ்சேர்ந்தார்கள்
ஒப்பிட்டவாளை உறையுருவிவிட்டாற்போல்
தப்பிபிழையாமல் சதிசெய்துமாண்டுவிட்டார்
என்றுசொல்லிதருமலிங்கம் ஏங்கிப்புலம்புகிறார்
மாயவடிவெடுத்த மலைஜோகியேதுசொல்வார்
இறந்தவொருநாலுபேரும் என்னவேணுமுந்தனுக்கு
மாண்டவொருமன்னவர்கள் மன்னவருமக்கென்னவேணும்
உண்மையாய்ச்சொல்லுமென்றே உத்தமரைகேட்கலுமே
தக்கபுகழுடைய தருமரெடுத்துரைப்பார்
இறந்தவர்நாலுபேரும் எந்தனுக்குத்தம்பியர்கள்
மயிலணையாள் துரோபதைக்கு மாலையிட்டமன்னவர்கள்
எங்களைத்தனியாய்விட்டு இறந்துமடிந்தார்கள்
என்றுமவருரைத்து ஏங்கிப்புலம்புகிறார்
மாயவடிவெடுத்த மலைஜோகியென்னசொல்வார்
இறந்தவர்நாலுபேரில் எவர்வேணுமுந்தனுக்கு
செத்தவரிலொருவரைநான் சீக்கிரமெழுப்பித்தாரேன்
எவர்வேணுமுந்தனுக்கு இப்போதேசொல்லுமென்றார்
ஆமானால்சொல்லிவிடும் அல்லவென்றால்நான்போறேன்
தக்கபுகழுடைய தருமாவர்கேட்டு
மலைஜோகிசொன்னதற்கு மன்னரெடுத்துரைப்பார்
ஐயாவேகேளும் அடியேனொருவார்த்தை
என்தாயார்குந்தியம்மாள் ஈன்றெடுத்தமூவர்களில்
இருவரிறந்தார்கள் இருக்கிறேனானொருவன்
மறுதாயார்மைந்தர்களில் நகுலனையெழுப்புமென்றார்
தக்கப்புகழுடைய தருமருரைக்கலுமே

மாயமாய்வந்தசெதாரு மாலிஜோகிதான்கேட்டு
தருமர்நினைவரிந்து சந்தோஷப்பட்டாரே
சந்தோஷப்பட்டு சரீரங்கள் பூரித்து
தேகங்குளிர்ந்து திருத்தோளும்பூரித்து
உண்ணுமற்பூரித்து உடம்பெல்லாம் பூரித்து
கரியமால்வுளமகிழ்ந்து காலனையெசசரித்து
நால்வருயிரையுமே நமனுமேகிட்டிடென்றார்

விஷநீர்குடித்து இறந்துபோன நாலுபேரும்
பெருமாளால் எழுந்திருந்தது

எம்பெருமாள் தானுரைக்க யேமனவர்கேட்டு
அப்படியேநல்லதென்று அந்தயமனுநும்
பிடித்தவுயிரைவிட்டு போகவெழுந்திரென்றார்
தூங்கிமுழித்தார்போல் பாங்காயெழுந்தார்கள்
துள்ளியெழுந்தாரே தம்பிகளந்தநாலுபேரும்
மாயன்பெருமாளை வணங்கியேதெண்டனிட்டார்
முக்கால்வலம்வந்து முடிவணங்கிதெண்டனிட்டார்
வந்துபணிந்தவரை கண்டுமனமகிழ்ந்து
வாழ்த்தியெடுத்தவரும் மார்போடேகொண்டணைத்து
சந்தோஷமாகத் தானிருந்தார்பெருமாளும்
நாற்கால்வலம்வந்து நமஸ்கரித்துதெண்டனிட்டார்
தக்கப்புகழுடைய தருமரெடுத்தணைத்து
வாழ்வார்வளர்ந்திடுவீர் வாழ்ந்திருப்பீரென்னுடனே
திறப்பீர்நிலைதரிப்பீர் நீடூழிவாழ்ந்திடுவீர்
கல்பதித்ததூணதுபோல் கலங்காமல்வாழ்ந்திடுவீர்
என்னைப்போலாவீ பெதிர்த்தார்முடியறிவீர்
மைந்தர்களைப்பெற்றெடுத்து மகிழ்ச்சியாய்வாழ்ந்திடுவீர்
போருக்குப்போரிடுவீர் பொழுதோடேவென்றிவீர்
வென்றகளரியிலே வீரபட்டங்கட்டிடுவீர்
ஆல்போல்தழைத்து அறுகுபோல்வேரோடி
மூங்கில்போலெந்நாளும் மூசியாமல்வாழ்ந்திடுவீர்
வாழ்வீர்களென்றுசொல்லி மனங்குளிரவாழ்த்தினார்
இருமிருமென்றுசொன்னார் இனிதாகத்தம்பியரை
அண்ணருரையாலே அனைவோரும்வீற்றிருந்தார்
மாயருரையாலே மகிழ்ச்சியாய்வீற்றிருந்தார்
தம்பிமாரைக்கண்டல்லவோ சந்தோஷப்பட்டாரே
தோராவடிவழகி துரோபதையுந்தான்பார்த்து
புருஷர்களைப்பார்த்து பூரித்தாளுந்தமியும்
கணவரைக்கண்டல்லவோ கட்டழகிமனங்குளிர்ந்து
இப்படியாக இவரிருக்கும்வேளையிலே

துரியோதனன் சூதும் காளமகாரிஷிசெய்த யாகமும் வேதாளம் வந்ததும் தான் இவர்களை காப்பாற்றி னதும் எம்பெருமாள் பஞ்சவர்களுக்குச் சொல்லுகிறது.

மாயன்பெருமாளும் வார்த்தையங்கேதுசொல்வார்
துரியோதனன்செய்த சேதியெல்லாஞ்சொல்லலுற்றார்
காளமகாரிஷியையுங் கூட்டிவருந்தியவன்
சொல்லவனுப்பினான் கொப்பனவேவுங்களைத்தான்
காளமகாரிஷியுங் கூட்டிவனந்தனிலே
அக்கினிக்குழியருகே அனந்ததபசுபண்ணி
வேதாளமுண்டுபண்ணி வேந்தருங்களைக்கொல்ல
நாமிருந்தபடியினாலே நமனையழைத்துவந்தோம்
தாமரைப்பொய்கையொன்று தண்ணீருமுண்டுபண்ணி
மாளுகவந்தல்லவோ வரவழைத்தேனுங்களைத்தான்
அந்தரமாய்த்தான்பேசி அனைவரையுங்கொன்றுவிட்டு
ஒட்டனைப்போலேவந்து உங்களைவலித்திழுத்தேன்
அதிதமாய்ப்போரீரென அனைவரையுங்காக்கவந்தேன்
என்னபலன்கண்டேன் இராஜாவேவுங்களாலே
மாயனுரைகேட்டு வளம்பெரியதருமரவர்
பாதத்திலேவிழுந்து பணிந்துமுறையிட்டார்
உம்மையன்றிவேறேதெய்வம் ஒருவரெனக்கில்லையையா
உம்மைச்சதமென்று உயிர்கொண்டுலாவுகிறேன்
ஆரைச்சதமென்பேன் அன்னியரைத்தஞ்சமென்பேன்
எவரைச்சதமென்பேன் இனியாரைத்தஞ்சமென்பேன்
நீரே துணையல்லாமல்வேறே துணையுமில்லை
அடியாரைக்காக்கிறது ஆண்டவரேயுன்பெருமை
காக்கிறேனென்றுசொல்லி கங்கணங்கட்டினீரே
இரட்சிக்கவேணுமென்றே எம்பெருமாளாய்ப்பிறந்தீர்
இன்னமென்னவினைவருமோ யானறியேனாண்டவரே
ஏதேதுசெய்வானோ இராஜன்துரியோதனன்
அத்தனைக்கும்வந்திருந்து அடியானைக்காக்கவேணும்
என்றல்லோராஜவருமாய் இறங்கியடிபணிந்தார்
மெத்தமனமகிழ்ந்தார் மேகவண்ணரெம்பெருமாள்
சித்தமனமகிழ்ந்தார் தேகமெல்லாந்தான்குளிர்ந்தார்
நல்லதுபஞ்சவரே ராஜர்களேநீர்கேளும்
இந்தவனத்தைவிட்டு இன்னமொருவனத்தில்
மற்றுமொருவனத்தில் போய்வாசம்பண்ணுமென்றார்
என்னவினைவந்தாலும் என்னைநினையுமென்றார்
போய்வாரோமென்று பெருமாள்பயணமிட்டார்
ஏமன்கடாவின்மேல் எம்பெருமான்கருடன்மேல்
வாகனத்தின்மேலேறி வழிநடந்துபோனார்கள்

எமபுரந்தான்தேடி எமனும்போய்விட்டான்
நாலாம்வருஷம் முடிந்ததுபஞ்சவர்க்கு

நான்காவது காமியகாரிஷிவனம்-முற்றிற்று.

௫-வது சயிந்தவமகாரிஷிவனம்.

ஐந்தாம்வருஷம் பிறந்ததுபஞ்சவர்க்கு
கூடைத்தலைமேலே குடிவாழ்க்கைகானகத்தில்
துத்திபுளிகாணை தும்பையுந் தூதுவளை
தின்றுதிரிகிறார் தேசாந்திரிபோலே
சயிந்தவரிஷிவனத்தில் தானடந்தார்பஞ்சவர்கள்
ஓரடுக்குபர்ணசாலை உண்டுபண்ணினாரைவர்களும்
மூன்றடுக்குபர்ணசாலை முடிமன்னருண்டுபண்ணார்
ஐந்தடுக்குபர்ணசாலை அழகருண்டுபண்ணார்
ஆறடுக்குபர்ணசாலை ஐவர்களுண்டுபண்ணார்
ஏழடுக்குபர்ணசாலை எழிலாகவுண்டுபண்ணார்
பர்ணசாலைமேலாகப் பஞ்சவர்கள்குடியிருந்தார்
ஐவர்பஞ்சபாண்டவர்கள் அவ்வனத்திற்றானிருந்தார்
அந்தவனத்திலே அநேகநாள்வாசம்பண்ணார்
அநேகநாள்சென்றபின்பு ஆரணங்குதுரோபதையும்
அந்தவனத்திலே அதிசயம்பார்க்கையிலே
உச்சிதங்கள்பார்த்தே உலாவிவருகையிலே
ஆகாயந்தன்னளவாய் அங்கேயொருமரந்தான்
வளர்ந்துதழைத்து மரத்திற்பழுத்திருக்கும்
ஒண்டிப்பழந்தான் உயர்ந்தகிளைமேலிருக்கும்
சூரியகாந்தியைப்போல் தோணுதுதுரோபதைக்கு
மெத்தவாசைபட்டாளே மெல்லியிளங்கொடியாள்
கண்டாசைபட்டாளே காண்டீபன்தேவியரும்
இந்தக்கனியை எவர்பறித்துத்தான்தருவார்
தருமருடன்சொன்னால் தலைவரிதைக்கேளாரே
மதவீமருக்குரைத்தால் விபிராவுண்டிடுவார்
நகுலசகாதேவர் நம்மால்முடியாதென்பார்
அருச்சுனற்குரைத்தால் அவராலேயாகுமிது
மற்றொருவர்தன்னாலே மாளாதுகனிபறிக்க
அருச்சுனரையென்ன அழைத்துவருவோமென்று
மெல்லநடந்தாளே வேல்பொருதங்கண்ணாளும்
கொஞ்சிநடந்தாளே கொம்பேரிடையாளும்
அர்ச்சுனராஜனண்டை ஆரணங்குவந்துநின்று
அர்ச்சுனனைக்கண்காட்டி யழைத்தாளேயப்புறத்தில்
ஜாடையறிந்தல்லோ தார்வேந்தனோடிவந்து



அருச்சுனன் துரோபதைக்காக எய்தமாங்கனி நிலத்திலிருந்து [illegible]டைப்பால் எம்பெருமான் மனஞ்சோதித்து கனியைமாத்தில் ஒட்டும் [illegible] ஆ.

தருமராசாமன்னவனதுபோதுமேதுசொல்வான்
ஒருமனுஷனுக்கு உத்தாரந்தாருமென்றான்
அந்தவுரைகேட்டு அருச்சனருமேதுசொல்வார்
மனதில்நினைத்ததெல்லாம் மயிலினையேகேளுமென்றார்
இல்லதயிதென்னமெல்லாம் சொராகச்சொல்லுமென்றார்
கேட்டமனுவுனக்கு இனிமொழியேதாரோமென்றார்
உலாத்தபடியுனக்கு தருவேன்காணுத்தரமே
அந்தமொழிகேட்டு ஆனந்துத்துரோபதையும்
கொழுந்தனார்தனையுடன் கோபாலன்தங்கையாளும்
முத்துநகையாளும் முறுவலுடனேதுசொல்வாள்
காணாதகண்டேனையா கண்டாசைப்பட்டேனையா
பாராதபார்த்தேனையா பார்த்தாசைப்பட்டேனையா
தங்கத்தைத்தக்காய்ச்சியே தனியில்கவிழ்த்தாப்போல்
பொன்னையுருக்கியல்லோ பூமியிலேவிட்டதுபோல்
சூரியனைப்போலமுகாய்த் தோணுதுமாங்கனிதான்
சந்திரனைப்போலமுகாய்த் தோணுதுமாங்கனிதான்
அக்கனியையுண்பதற்கு ஆசைமெத்தத்தோணுது
மாங்கனியையுண்பதற்கு மனதுமெத்தத்தோணுது
அந்தக்கனிபறித்து அருச்சனரேதாருமென்றாள்
மாங்கனிதனைப்பறித்து மன்னவரேநீர்தாரும்
என்றுவணங்கினளே இளங்கொடியாள்பாஞ்சாலி
வணங்கியெழுந்திருந்து மன்னனுக்கேதுசொல்வாள்
தனஞ்செயரேகனிபறித்துத் தாராமற்போனுக்கால்
தன்னுயிர்துறப்பேன்காண் தாகவிடாய்த்தீரேன்காண்
ஆமாதமானாலும் அன்னம்புசியேனென்று
சொல்லிவணங்கினளே துரோபதைபாஞ்சாலி
ஆளுமுடிமன்னன் அருச்சுனனேதுசொல்வான்
கனிக்காகநீயிணங்க லாகுமோகட்டழகி
இதற்காகப்பிணக்குவரோ இட்சணமேதாரேனென்றான்
அந்தரமாயிருந்தாலும் அதைத்தான்தாரேனென்றான்
எந்தமரத்திலேயிருக்குதுபெண்மானே
பழக்கனிருக்கிற பாரவனமெங்கேயென்றான்
என்றுமவர்கேட்க இளங்கொடியாளப்போது

அர்ச்சுனன் துரோபதைக்கு மாங்கனிபறித்துக்
கொடுக்க வருகிறது.

வாருமையாவென்றுசொல்லி வணங்கியெழுந்திருந்து
அழைத்துவருகிறாள் அருச்சுனராசாவை
கூட்டிவருகிறாள் கொம்பெனவேயர்ச்சுனரை
கடந்தார்சிலதூரம் கனியிருக்கும்வனத்தே
வந்தாரிருவருமாய் மங்கைதுரோபதையும்
இதுதான்மாவென்று இளங்கொடியாள்காட்டுகிறாள்

ஆறுலழகுமன்னன் அர்ச்சுனராஜனை
மரத்திலிருக்குமந்த மாங்கனியைத்தான்பார்த்து
ஆயிரம்யோசனைதூரம் அந்தரமாயிருக்கிறது
இந்தக்கனிபறிக்க எவரால்முடியுமென்றார்
இத்தனை தூரத்தி லிருக்கின்றமாங்கனியை
எப்படிக்குறாம்பறித்து ஈந்திடலாம்துரோபதைக்கு
என்றுநினைத்து எழில்விஜயனப்போது
வில்வளைத்துநாணிபூட்டி வில்லைகுணத்தொனித்தான்
அம்புறாத்தூணியிலே அலகம்புதானெடுத்து
அர்த்தசந்திரபாணமதை அர்ச்சுனருமுச்சரித்தார்
மந்திரூபமிட்டு வாங்கிவிட்டானக்கனிமேல்
நார்புரணவாங்கியல்லோ தோள்புரளவிட்டானே
வருகுதுஅஸ்திரந்தான் மாங்கனியைத்தள்ளுகுது
மரத்திற்பழுத்ததையல்லோ பாணமறுக்கையிலே
அந்தக்கனிவிழுமாம் அண்டாண்டந்தானதிர
பூமியதிர்ந்துவிழ பூலோகந்தத்தளிக்க
எல்லையதிர்ந்துவிழ எமலோகந்தத்தளிக்க
கெற்பங்கலங்குது கெந்தருவலோகமெல்லாம்
ஒங்கும்பெருங்கால்தான் ஒருமிக்கநீர்வாங்கும்
நட்சத்திரங்களெல்லாம் நாலுதிக்குந்தானதிர
பூமியாதிசேடன் புஜத்தோட்டபுஜமதிர
ஆதிசேடன்தானும் அதிர்ந்துமேனஞ்சுகக்க
ஆகாயம்நின்றதிர அப்போவிழுந்தது
மரத்திலிருந்தகனி மண்மேல்விழுந்தது
அருச்சுனனுந்துரோபதையும் அக்கனியைப்பார்த்தார்
தாமலைபோல பர்வதம்போற்றிரணுகுது
இருவராலாகாது இந்தக்கனியெடுக்க
இந்தக்கனியையாரா லெடுக்கமுடியாது
ஆறுலழகுமன்னன் அர்ச்சுனனுமேதுசொல்வான்
தோராவடிவழகி துரோபதைநாயகமே
வெற்றிமதயானை வீமனையழையுமென்றான்
அப்படியேநல்லதென்றாள் ஆனந்தவாழ்மாரி

துரோபதை வீமனையழைக்க வீமன்வருகிறது.

தோராவடிவழகி துரோபதைநாயகியும்
அன்னமதுபோல ஆரணங்குவந்துமல்லோ
வெற்றிமதயானை வீமாருகில்வந்து
அருச்சுனராசருமம்ம யழைத்தோடிவாருமென்றார்
சீக்கிரம்வாருமென்று தேன்மொழியும்தெண்டனிட்டாள்
வெற்றிமதயானை வீமனுந்தான்கேட்டு
அப்படியேநல்லதென்று ஆனந்தவாழ்மார்பன்
இருந்தவிடத்தைவிட்டு எழுந்துநடந்தானே

இருவருமாகவே ஏகிடவந்து
கனியிருக்கும்வனத்திலே கடுகியேவந்தார்கள்
தருமரறியாமல் அழைத்துவந்தாள்தையலரும்
வெற்றிமதயானை வீமனவனேதுசெய்தான்
அசைக்கியேபார்த்தானே அசையவில்லை அக்கனிதான்
வெற்றிமதயானை வீமனவனேதுசொல்வான்
நகுலசகாதேவ ராசாவையழையுமென்றான்
ஆரணங்குதுரோபதைதான் அப்படியேநல்லதென்று

துரோபதை நகுலசகாதேவர்களை அழைக்க
அவர்கள் வருகிறது.

கொஞ்சியேவந்தாளே கொம்பேரிடையாளும்
நகுலசகாதேவ ராசாக்கள்முன்னேவந்து
அருச்சுனரும்வீமரும் அழைக்கிறார்களெனத்தான்
வாருங்களென்றுசொல்லி வருந்தியேதெண்டனிட்டாள்
நகுலசகாதேவ ராசாக்கள்தான்கேட்டு
அப்படியேநல்லதென்று ஆனந்தமாயெழுந்தார்
மூவர்களுமொன்றாக மூணுவந்தார்கானகத்தே
மாங்கனிதானிருக்கும் வனத்தில்வந்துசேர்ந்தார்கள்
நகுலசகாதேவ ராசாக்கள்வந்தவென்று
எல்லவருமொன்றாகி எடுப்போங்கனியையென்று
ஐந்துபேருங்கூடி அக்கனியைத்தானெடுத்தார்
என்னபலங்கொண்டு இழுத்துவலித்தாலும்
எத்தனித்திடினும் எடுபடலை அக்கனிதான்
சிந்தைகலங்கினார்கள் திடுக்கிட்டுமெய்மறந்தார்
மெத்தபயமாச்சே வேந்தர்கள்நால்வருக்கும்
தோகைவடிவழகி துரோபதையைத்தான்பார்த்து
அழகானதருமருக்கு அறிக்கையிடும்பெண்ணேயென்றார்
தோகைவடிவழகி துரோபதையுந்தான்கேட்டு
ஆகட்டுமென்றுசொல்லி அப்படியேநல்லதென்று

மாங்கனியினால் ஐந்துபேருந்திகில்பட்டுத் துரோபதை
தருமரை அழைக்க தருமர்வருகிறது.

துள்ளியெழுந்தாளே துரோபதைநாயகியும்
ஓடிநடந்தவளே ஒருநொடியில்வந்தாளே
தருமரெதிரில்வந்து சாஷ்டாங்கதெண்டனிட்டு
வாள்விஜயனுக்கனும் மாங்கனியைத்தானறுத்தார்
எடுக்கவெடுபடலை யென்றவர்சொன்னார்காண்
வாருமையாவென்றுசொல்லி வருந்தியேதெண்டனிட்டாள்
தக்கபுகழுடைய தருமருங்கேட்டு
இதென்ன அதிசயங்க ளென்றேயெழுந்திருந்து
தருமருந்துரோபதையும் இருவருமேவந்தார்கள்

மகாராஜ தருமேவந்தார் மகாராஜர் தருமலிங்கம்
உடந்தநப்பார்க்குமே போசனைபண்ணுகிறோர்
தம்பிமார்சகலமாயும் தருமராசனழைத்து
அவஸம்புண்ணாலே தருமர்க்கே தசொல்லார்
அருள்ளும் மாங்கனிபோ அறிவேனே தம்பியரே
மாருள்ளும் மாங்கனிபோ பேருமதிவேனே
பக்தெழுந்தேனாக்கள் கடித்துப்புசிக்கிறதே
ருத்திரிஷிமார்கள் சன்யாசிபுண்ணிறதே
பெருமைகள் தருவர் சாலைவந்தண்கிறதே
வைபோசம்வந்ததென்று கடுகிவே தருமராயர்

மாங்கனியினால் மோசம்வந்ததென்று தருமர் எம்பெருமானை
நினைத்து தோத்திரம் பண்ணுகிறது.

தக்கப்புகழுடைய தருமராவர்பயந்து
நிக்கைதகைக்கியவர் நிக்கிட்டுமெய்மறந்து
உள்ளங்குழைந்துமல்லோ உடம்புவிடவிடத்து
மனவேக்கமனதுருகித்து மனதிலெண்ணுகிறார்
ஆவாரிரொக்கிறோர் அாவற்றவிக்கதயிலே
உவமையிலொக்கிறார் என்னமற்றவிக்கையிலேதயிலே
மாயன்பெருமானை மனதில்நினைத்தாரே
அண்டழுலகளக்க ஆதிமூலமிங்கேவா
வருசமாண்டவாமி எம்பெருமானிங்கேவா
மன்னவனத்துகனக்குச்சொன்ன மாயவனேயிங்கேவா
தாடகைவைதைக்கதிந்த தயாளனேயிங்கேவா
அகலிகைசாபந்தீர்த்த ஆண்டவனேவாருமையா
கல்லையனாக்கலரே எம்பெருமானிங்கேவா
ஏழையருக்குமெதேன் எழுந்தருளிவாருமையா
இப்படியாக இவர்வருந்துங்வேளையிலே

தருமர் இங்கே இப்படி வருந்துவதை எம்பெருமானறிந்து
தான் தருமரண்டை வருகிறது.

பஞ்சவர்கள்வருந்துவதை பரமந்தார் தாமறிந்து
ஐவருக்குமங்கேதான் அனர்த்தம்வருகுதென்று
சயிந்தவரிஷியாலே சாபம்வருகுதென்று
ஆயாவரறிந்து அங்கனவேதானெழுந்து
இவரைப்பரட்சிக்கவென்று அப்பொழுதேவாறாப்
பட்டமாக்கருடனேறி மாயவனார்வாராரே
வனமாம்வனந்தாண்டி வாருரே தருமரண்டை.
காடுசெடி தாண்டி கரியமலை தான் தாண்டி
ஆறுகளை தாண்டி அதிகவனந் தாண்டி
கல்லென்றகாடும் செடியும்வனந்தாண்டி
சயிந்தவரிஷிவனத்தை தான் கண்டார் மாயவரும்

பஞ்சவர்களதானிருக்கும் பாரவனத்தில்வந்தார்
மாயவரைக்காணுகையில் வளம்பெரியதருமராயர்
ஐந்துபேருமாகவே ஆயரைத்தெண்டனிட்டார்
மூக்கால்வலம்வந்து முடிவணங்கிதெண்டனிட்டு
நாற்கால்வலம்வந்து நமஸ்கரித்துதெண்டனிட்டு
தெண்டனிட்டமன்னவர்கள் திரும்பியெழுந்திருந்து
சிங்காதனங்களிட்டார் ஸ்ரீராமர்வீற்றிருக்க
இட்டதோராசனத்தில் எம்பெருமாள்வீற்றிருந்தார்
பஞ்சவரைத்தான்பார்த்து பாரளந்தாரேதுசொல்வார்
எதுவகையாகஎன்னையழைத்தீர்கள்
அழைத்தகொருகாரியத்தை அடவுடனேசொல்லுமெனை
உங்கள்மனதிலிருக்கிற மறுமத்தைச்சொல்லுமெனை

தருமர் மாங்கனியின் வரலாறுசொல்லுதல்.

மாயன்பெருமாளும் வார்த்தைகள்சொல்லுமென்றார்
சாயாம்புமன்னவனார் தருமரவரேதுசொல்வார்
ஆகாததம்பிமா ரசட்ருடன்பிறந்தேன்
பொல்லாததம்பியுட னல்லற்படப்பிறந்தேன்
எந்தன்விதிவசத்தை என்னவென்றுசொல்வேன்காண்
ஆறுண்ணும்மாங்கனியோ அறியேனேமாயவரே
எமறுண்ணும்மாங்கனியோ யேதுமறியேனே
ஆகாததம்பியர்கள் அறுத்துவிட்டாரென்னசெய்வேன்
எம்பெருமாள்தனையழைத்தா லெல்லாந்தெரியுமென்று
வரவழைத்தேன்மாயவரே வயணங்கள்சொல்லுமென்றார்

எம்பெருமாள் மாங்கனியின் வரலாறுகேட்டு பஞ்சவர்களைப் பயங்காட்டி மனஞ்சோதிக்கிறது.

தருமறுரைகேட்டு சாமியவரேதுசொல்வார்
மாயன்பெருமாளும் வார்த்தையங்கேதுசொல்வார்
கைமோசம்வந்ததுவே கட்டழகாயென்னசெய்வோம்
தபசிற்பெரியவர்காண் மாதேவர்க்கொப்பிடலாம்
யோகத்திற்பெரியவர்காண் உற்றசந்நியாசியர்காண்
ஒருநூறுவருடமட்டும் யோகத்திலேயிருப்பார்
அவ்வருடஞ்சென்றபின்பு அறுத்திடுவார்மாங்கனியை
அறுத்துப்பொசித்திடுவார் அந்தமகாமுனியும்
இந்தமகாரிஷியும் இந்தவனத்துக்கு
வருகிறநாளாச்சே மாங்கனியைத்தான்புசிக்க
வந்துமவர்பாத்து மாங்கனியைக்காணவிடில்
கோபித்துகண்சிவந்து கொல்லநினைப்பாரே
கொல்லநினைப்பாரே குடிகேடுவந்திடுமே
கல்லாகமன்னாகக் கடுகிச்சபிப்பாரே
முள்ளாகமன்னாக முன்னேசபிப்பாரே

இன்றல்பிழைத்திருந்தீர் இறந்துவிடநாளாச்சே
சேனாகன்பிழைத்திருந்து செத்துவிடநாளாச்சே
கிரியன்செய்தவஞ்சனைக்கு சிவன் தப்பிப்பிழைத்தீரோ
பாபாவிசெய்ததற்கு மாளாமலிருந்தீரே
இந்தவனத்திலே இறந்துவிடக்காலமோதான்
சயிந்தவரிஷிபாலே சாவுவரநாளாச்சே
இதற்கோவெனையழைத்தீர் என்றாரேமாயவனார்

எம்பெருமாள் கனியின்வரலாறுசொல்லி தன்னாலே ஒன்றும்
ஆகாதென்றுசொல்ல தருமர் புலம்புகிறது.

இப்படியாகவேதான் செப்பதிருமாலும்
இவ்வார்த்தைகேட்டாரே எழிலான தர்மலிங்கம்
முகில்வண்ணார்முன்னாலே முறையிடத்தொடங்கினார்
ஆகா தம்பிமார் அசடருடன்பிறந்தேன்
பொல்லாதுண்டருடன் பிறந்ததொருதன்மையினால்
என்-அங்கங்குலையுதே ஆண்டவரேயென்னசெய்வேன்
என்னையறியாம லிக்கனியைத்தானறுத்தார்
அறிந்தேனேயாமானால் அறுக்கவொட்டேனிக்கனியை
பார்த்தேனேயாமாகில் பறிக்கவொட்டேனிக்கனியை
அடியார்கள்செய்தபிழை ஆண்டவரேமனம்பொறுத்து
தெரியாதார்செய்தகுற்றந் தேவர்மனம்பொறுத்து
உன்-உள்ளங்கைநெல்லிப்பழம் வுருகுலைந்துபோகாமல்
உன்-பெட்டியின்பூஷணங்கள் பெருமைகுலையாமல்
உன்-தோளில்செபமாலை தொண்டழிந்துபோகாமல்
காக்கக்கடனுனக்கு கரியமாலெம்பெருமாள்
ஆரைச்சதமென்பேன் அன்னியரைத்தஞ்சமென்பேன்
எவரைச்சதமென்பேன் இனியாரைத்தஞ்சமென்பேன்
என்றுதருமரங்கே நின்றுபுலம்பக்கேட்டு
மாயன்பெருமானும் மறுவார்த்தையேதுயொல்வார்
என்னைவருத்தாதே என்மேலேசலியாதே
உத்தமரேவுங்களாலே மெத்தபொழுதாச்சே
ஏதச்செலவருளும் என்றார்பெருமானும்
தக்கபுகழுடைய தருமரவரேதுசொல்வார்
பரிதாபம்நாங்கள்படப் பார்த்துமேபோவதற்கு
மனமும்வருகிறதோ மாயவரேயுந்தனுக்கு
என்றவுரைகேட்டு ஏதுசொல்வார்மாயவரும்
புகழ்வேந்தர்வார்த்தைக்குப் பொருந்தவேணுமிக்கனி
ஐவருடவார்த்தையினால் அம்மரத்திலெட்டவேணும்
அல்லாமேதயாமானால் ஆராலுமுடியாது
என்றவுரைகேட்டு ஏதுசொல்வார்தருமாரயர்
அடியேனுலாவித்து ஆண்டவரேசொல்லுமையா

எம்பெருமான் ஐவருடைய எண்ணமும் துரோபதை
எண்ணமும் அறிந்து மாங்கனி மரத்தில்
பொருந்தச் செய்தது.

தருமருரைகேட்டு சாமிமனமகிழ்ந்து
மாயன்பெருமானும் வார்த்தையவரேதுசொல்வார்
ஐவர்மனதறிய ஆண்டவரேதுசொல்வார்
தக்கப்புகழ்பெரிய தருமரேநீர்கேளும்
உன்மனதிலேதானிருக்கு மர்மத்தைச்சொன்னீரானால்
வஞ்சனைகளொன்றுமே மனக்கவடுவையாதே
உண்டானபடியாக வுரைத்தீரேயாமாகில்
அற்றுவிழுந்தகனி அம்மரத்திலொட்டுமென்றார்
மண்மேலிருந்தகனி மரத்தின்மேலேறுமென்றார்
அல்லாதேயாமானால் அக்கனிபொருந்ாது
இல்லாதேயாமானால் இறந்துமடிவீர்கள்
சொல்லாமற்போனாலே சுருக்காய்மடிந்திடுவீர்
பெருமாளவர்சொல்லப் பேர்பெரியதர்மலிங்கம்
மாயருரைகேட்டு மகாராசரேதுசொல்வார்
மனதிலிருக்கிற மர்மத்தையேதுசொல்வார்
தன்மனதிலுள்ளபடி தார்வேந்தரேதுசொல்வார்
பெரியதந்தைபெற்றெடுத்த பிள்ளைதுரியோதிரன்
தம்பிமார்தன்னுடனே தானுஞ்சுகமானால்
ராச்சியம்நலமாகி நாமும்சுகமானால்
நாடெங்கும்வாழ்ந்திருந்தால் கேடொன்றுமில்லையென்று
பெரியோருரைப்படிக்குப் பூமிசுமக்காதோ
என்றுநினைவொழிய இனியொன்றுநானறியேன்
அப்போதுமாங்கனியும் ஆகாசமேயெழும்பி
அறுத்துவிழுந்தகனி அந்தரத்திலெழும்புகுது
இருநூறுயோசனை எழும்பியேநின்றதங்கே

மாயனுக்கு தருமர் மனோபாவஞ்சொல்ல மாங்கனி
இருநூறுயோசனை தூரமெழும்ப பெருமாள்
வீமனைக்கேட்கிறது.

எம்பெருமாள்மாயவரும் ஏதுசொல்வாரப்போது
மதவீமனையழைத்து மாயவருமேதுசொல்வார்
உன்மனதிலுள்ளபடி யுரையுமென்றார்மாயவரும்
வெற்றிமதயானை வீமனவனேதுசொல்வார்
துரியோதிராஜன் சேனைபரிகலங்கள்
குருடன்மகனாரான் குடிகெடுத்தராசர்களை
நூலால்கதிர்க்கிளார் நூற்றொருவர்ராசர்களை
கௌரவர்சேனைகளைக் கண்டதுண்டமாக்கியல்லோ
ஆனைகுதிரைகளை அழகுள்ளசேனைகளை

சாமந்துரோகி சகுனியவனையுமே
கொன்று அதமாக்கி கொம்பனையாள் துரோபதையை
கொற்றார்குழலியரைக் கூந்தல்முடிக்கவைப்பேன்
அவிலையுரித்துதொரு அற்சாதனுதிரமெல்லாம்
வாரிகுடித்தாலே வயிறெரிவுதீருமையா
அள்ளிக்குடித்தாலே அங்கந்தரிக்குமையா
பேர்பெரிய அண்ணருக்குப்பட்டந்தரித்தாலே
அப்போதுஎன்மனது ஆயாசம்தீருமையா
வெற்றிமதயானை வீமனுரைக்கையிலே
என்றபொழுதே எழும்புதுமாங்கனிதான்
சாற்றும்காறாறு யோசனைநின்றிடுமாம்

மாயனுக்கு வீமன் மனோபாவஞ்சொல்ல மாங்கனி
அருச்சுனனைக் கேட்கிறது.

அப்போதுஎம்பெருமாள் அங்ஙனமேயேதுசெய்தார்
அர்ச்சுனரைப்பார்த்து ஆணழகர்கேட்கலுற்றார்
வாள்விசையாஉந்தனிட மனதில்நினைத்ததெல்லாம்
ஒன்றுமொளியாமல் உரையுமென்றாமாயவனார்
என்றுமவருரைக்க எழில்விசயனருச்சுனனும்
மாயனுரைகேட்டு எழில்விஜயனேதுசொல்வான்
கர்னன்சகுனியுமே காங்கேயரானவரை
சொல்லுகிறேனென்றுசொல்லி கொடியசபதமிட்டேன்
சங்கமரைக்கொணுகையில் சமர்பூமிக்ஷேத்திரத்தில்
அமரதர்சமரதர் அளவற்றராஜாக்கள்
அனைவரையுங்கொன்றுமே அண்ணர்க்குப்பட்டங்கட்டி
அண்ணர்க்குப்பட்டங்கட்டி அடிபணிந்துநிற்கவென்று
எண்ணியிருக்கிறேன் இனியொனறுமில்லையென்றார்
அறுநாறுயோசனையில் நின்றது அக்கனிதான்

மாயவனுக்கு அருச்சுனன் மனோபாவஞ்சொல்ல மாங்கனி
அறுநூறுயோசனைதூரம் எழும்ப பெருமாள்
நகுலனைக்கேட்கிறது.

அப்போதுஎம்பெருமாள் அங்கெனவேயேதுசெய்தார்
நகுலனைத்தானழைத்து நாரணருமேதுசொல்வார்
நாமமுடியானை நகுலனையென்றழைத்து
மனதில்நினைத்ததொரு மர்மத்தைசொல்லுமென்றார்
மாயருரைகேட்டு மன்னவனுமப்போது
நாமமுடியான் நகுலனுமேதுசொல்வான்
திரியோதிரன்படைகள் சேனைகளைக்கொன்றறித்து
அனைசேனைபரிவாரம் அடங்கலுங்கொன்றழித்து
மாரளவுரத்தங்கள் வழியவிட்டுமண்மேலே
நிதமாக்கிசேனைகளை அண்ணர்க்குப்பட்டங்கட்டி

என்-கண்ணாலேபார்ப்பதற்கு கருத்தில்நினைத்தேனையா
என்றுமவருரைத்து இருந்தான்நகுலனுமே
அந்தவுரைகேட்டு அழகானமாங்கனியும்
அந்தரத்தில்நின்றகனி அப்புறத்திற்போகுது
எண்ணூறுயோசனையில் நின்றது அக்கனிதான்

பெருமாளுக்கு நகுலன் மனோபாவஞ்சொல்ல மாங்
கனி எண்ணூறுயோசனை தூரமெழும்பப்
பெருமாள சகாதேவனைக்கேட்டது.

எம்பெருமாள்மாயவரு மேதுசெய்தாரப்போது
சகாதேவராசாவை சாமியார்கேட்கலுற்றார்
இளையசகாதேவர் என்னமெல்லாஞ்சொல்லுமென்றா
தாமமுடியான் சகாதேவனேது சொல்வேன்
திரியோதிரன்படையை சேனைபரிகளத்தை
உன்பாதம்சிரசில்வைத்து உக்கிரமாய்சண்டைசெய்து
அண்ணனுக்குப்பட்டங்கட்டி அவனிதனையாளவென்று
எண்ணியிருக்கிறேனே இதுவேநினைவொழிய
மற்றொன்றுமில்லையென்று மாயர்பதம்பணிந்தான்
இவ்வாறுதானுரைத்து இருந்தான்சகாதேவன்
அப்போதும்மாங்கனியும் அனேகதூரமெழும்பி
தொளாயிரம்யோசனை தூரம்நின்றதக்கனிதான்

எம்பெருமாளுக்குச் சகாதேவன் மனோபாவஞ் சொல்ல
மாங்கனி தொளயிரம் யோசனை தூரத்தில் நிற்க
எம்பெருமாள் துரோபதையைக் கேட்கிறது.

ஆதிநாராயணரும் அங்கெனவேயேதுசெய்தார்
மாயன்பெருமாளும் வார்த்தைகளேது சொல்வார்
பாஞ்சாலன்பெற்றபெற்றபெண்ணே பத்தினிதுரோபதையே
நெருப்பில்பிறந்தவளே நீலப்பசுங்கிளியே
ஐவருக்குந்தேவியரே அழியாதபத்தினியே
மனதில்நினைத்ததெல்லாம மங்கையரேசொல்லுமென்றான்
நெஞ்சில்நினைத்ததெல்லாம் நேராகச்சொல்லுமென்றார்
அப்போது துரேபதையாள் ஆரணங்குமேது சொல்வாள்
தூரத்திலம்புவியாள் மாசுபடாபத்தினியாள்
வானத்திலம்புவியாள் மாசுபடாபத்தினியாள்
என்னவென்றுசொல்லலுற்றாள் யேலப்பசுங்கிளியாள்
திரியோதிரன்பாளையமதை செருக்களங்கள்கொன்றழித்து
ஐவர்களிட்டதொரு அருஞ்சபதஞ்சென்றபின்பு
வெற்றிமதயானை வீமருடகையாலே
பாம்புக்கொடிவேந்தன் பட்டபிறகாக
தென்னமுடிவேந்தன் திரியோதிரன்பட்டபின்பு
நாமக்கொடியோனும் நாசமடைந்தாலே
அவன்-மல்லாவிழுந்தவுடன் மார்மேலேநானிருந்து

மார்பைப்பலகையாக்கி மார்பெலும்பைசிப்பாக்கி
மார்பில்வருமுறிஞ்சிமெல்லாம் வாரித்தலைதடவி
நல்லெண்ணையைப்போல நலங்கிட்டுகூந்தலுக்கு
சீப்புஞ்சிக்கக்கோலெடுத்து சிவிமயிராற்றி
அவன்-ஆடலைப்பிடுங்கியல்லோ கொண்டைக்கயிறுகட்டி
காலின்பிச்செடுத்து யிருகித்தலைமயிர்முடிப்பேன்
என்-விரித்ததலைமுடிக்க வேணநாள்சென்றிடுமோ
அவிழ்ந்ததலைமுடிக்க வேணநாள்சென்றிடுமோ
கூந்தல்முடிப்பேனோ குறைகளெல்லாந்தீர்ப்பேனோ
சாமிதயவாலே தலையைமுடிப்பேனோ
என்றுநினைத்திருந்தேன் இனியென்றுநானிருந்தேன்
இந்தவிதஞ்சொல்லி யிருந்தாளேபாஞ்சாலி

துரோபதை மறுபாவஞ்சொன்னது சரியில்லாமையால்
தொளாயிரம்யோசனை தூரம்போன மாங்கனி
பூமியில்விழ பெருமாள் துரோபதையைக்
கேட்கத் துரோபதைசொல்லல்.

துரோபதைசொல்லலுமே தூரயிருந்தகனி
அந்தரத்தில்நின்றகனி அவனியதில்விழுந்தது
ஆகாயம்போனகனி அற்றுவிழுந்தது
கண்டார்க்கரியமாலுங் கடுகனவேயேதுசொல்வார்
மனதில்கபடுவைத்து வஞ்சனைகள்சொன்னதினால்
அந்தரத்தில்நின்றகனி அவனியிலேவிழுந்ததென்றார்
ஏதேதொளித்தாயோ எந்தனுக்குச்சொல்லுமென்றார்
ஒன்றுமொளியாமல் உத்தமியேசொல்லுமென்றார்
அப்போது துரோபதையும் ஆரணங்குஏதுசொல்வாள்

துரோபதை மறுபடியும் பெருமாளுக்கு உண்மையைச்
சொல்ல மாங்கனி மரத்தில் பொருந்தினது.

அப்போதுரோபதையும் ஆரணங்கேதுசொல்வாள்
அண்ணாவேநீர்கேளும் அடியேனொருவார்த்தை
இன்னமொருபாவம் இனியொன்றுநானறியேன்
மற்றுமொருபாவம் வஞ்சனைகளொன்றறியேன்
அண்ணாகரியமாலே அடியேனொருவார்த்தை
பார்த்தனைமாலையிடப் பாஞ்சாலனென்னைப்பெற்றான்
வயிற்றிற்பிறந்ததில்லை வன்கொடுமைசெய்ததில்லை
குடலிற்பிறந்ததில்லை குலக்கொடுமைசெய்ததில்லை
அடிக்கிறகாற்றதனில் அலைகாற்றுரும்புமுண்டு
காலவிஷமுண்டவற்கு கண்டங்கருப்புமுண்டு
நீரிற்சுழலுமுண்டு நிலமதனிற்பூச்சுமுண்டு
தண்ணீர்க்கலையுமுண்டு சந்திரற்குமாசியுண்டு

சந்திரற்குமாசியுண்டு சற்றேகருப்புமுண்டு
குண்டுமணிக்காணாலும் கொஞ்சக்கருப்புமுண்டு
எனக்குமையேகருப்பொழிய மற்றக்கருப்புமில்லை
பொட்டேகருப்பொழிய பின்னைகருப்புமில்லை
அக்கினியிற்பெண்பிறந்தேன் ஐவரைமாலையிட
நெருப்பிலேபெண்பிறந்தேன் அருச்சுனரைமாலையிட
என்-கூடப்பிறந்தது கோதண்டமானவில்லு
பத்தரையில்நான்வளர்ந்தேன் பார்த்தரேவேறுமென்று
வளர்ந்துசமைந்தேனே மாலையிடும்நாளானேன
போதவளர்ந்தேனே பிள்ளைநாளாச்சே
இப்படியாக யிருக்கின்றவேளையிலே
எருலானஅருக்குனற்கு என்னைக்கொடுக்கவென்று
என்தகப்பன்பாஞ்சாலன் எண்ணியிருக்கையிலே
அரக்குமாமாளிகையில் ஐவர்மடிந்தாரென்று
மாண்டார்களென்றுசொல்லி மண்டலத்தில்பேராச்சு
செத்தார்களென்றுசொல்லி ஜெகமெல்லாம்பேராச்சு
அப்போதுஎன்தகப்பன் ஆயாசப்பட்டுருகி
அர்ச்சுனர்க்கென்றபெண்ணை ஆர்க்குநான்கொடுப்பேனென்று
அருச்சுனரைப்போலாக ஆண்பிள்ளையில்லையென்று
வில்லைவளைப்போர்கள் மேதினியிலில்லையென்று
ஏலப்பசுங்கிளியை எப்படிகாப்போமென்று
எண்ணாதுமெண்ணியே இருந்துவிசாரமிட்டார்
இப்படியாக யிருக்கின்றகாலத்திலே
வந்தாரேஅந்தவேளை மகாவியாசபகவானும்
என்தகப்பன்பாஞ்சாலன் எழுந்திருந்துஓடிவந்து
கண்டவுடனேயல்லோ கடுகவெழுந்திருந்து
வந்துவியாசரை வணங்கியேதெண்டனிட்டு
இருமிருமென்றுசொல்லி இட்டார்சிம்மாதனங்கள்
இட்டசிம்மாதனததில் எறியவர்வீற்றிருந்தார்
என்தகப்பனைப்பார்த்து என்னவென்றார்வுன்க்ஷேமம்
அப்போதுஎன்தகப்பன் ஆயாசமாயுரைப்பார்
இந்தவிசேஷமெல்லாம் எடுத்துமவர்க்குரைத்து
அருச்சுனற்கென்றுநான் அனடிற்பிறந்ததுவும்
அரக்குமாமாளிகையி லவரிறந்ததுவும்
இத்தனையுஞ்சொல்லி இருந்தாரேஎன்தகப்பன்
அப்போவியாசரும் அரசனுடவார்த்தையெல்லாம்
செவிகொடுத்துகேட்டுமல்லோ சீக்கிரமாயேதுசொல்வார்
உத்தமியாள்தன்னுடனே ஒன்றாய்ப்பிறந்தவில்லு
கூடப்பிறந்தநொரு கோதண்டமானவில்லு
எடுத்துநிறுத்துமென்று எல்லாருந்தானறிய
பெருவில்வளைத்தவற்குப் பெண்ணைத்தருவேனென்று

ஐம்பத்தாறுதேசத்துள்ள அரசர்கள் தானறிய
அரசர்கள் தானறிய அறைம்பறைபோசை
அப்போதறிந்திடலாம் ஐவருடசேதி
என்றுமவருரைத்து ஏகிநடந்தாரே
அந்தவுரைகேட்டு ஆனந்தமாயெழுந்து
கூடப்பிறந்தொரு கோதண்டமானவில்லை
வந்துவளைத்தவர்க்கு மாலையிட்டுத்தாரேனென்று
வில்லைவளைத்தவர்க்கு மெல்லியளைத்தருவேனென்று
ஐம்பத்தாறுதேசத்து அரசருக்கோலைதந்தார்
பெண்ணைத்தருவேனென்று பிடித்தார்கள் சின்னதொனி
சின்னத்தொனியையல்லோ தேசமெல்லாம்வூதிவைத்தார்
பாஞ்சாலன்சீமையெல்லாம் பந்தலலங்கரித்தார்
பந்துமலங்கரித்து இராஜாக்கள்வந்திருக்க
பாஞ்சாலன்சொன்னதொரு பரிவானவார்த்தையினால்
ஐம்பத்தாறுதேசத்துள்ள ராஜரெல்லாம்வந்தார்கள
நாலுபுரத்திலுள்ள ராஜரெல்லாம்வந்தார்கள்
மூக்குமுடிதரித்த முடிமன்னரானவரும்
பச்சைமுடிதரித்த பட்டணத்துராசர்களும்
வச்சிரமுடிதரித்த மண்டலத்துராஜர்களும்
காசிநாடாண்டதொரு கர்ணமகாவீரியரும்
நாலுதிக்கிலுண்டான ராஜரெல்லாம்வந்தார்கள்
அப்பெரியபந்தலிலே அருச்சுனருந்நருமாய்
அன்றொருபார்ப்பானாய் அந்நீங்கள்வந்தீர்களோ
பாஞ்சாலன் தானறியான் பாஞ்சாலராயனுரை
ஆருமறியாமல் அவமோத்தமார்க்கமெல்லாம்
உங்கள்வடிவுதன்னை ஒருவரறியாமல்
அந்தச்சமயத்தில் அடைவுடனேயென் தகப்பன்
வந்திருந்தராஜர்களை வளையுமென்றார்வில்லதனை
எப்பெரியராசர்களும் இவ்வில்வளைத்தறியார்
காண்டீபன்தனையெடுப்பா கலங்கியேவைத்திடுவார்
ஆராலுமுடியாது அப்பெரியவில்வளைக்க
காசிநாடாண்ட கருணனெழுந்திருந்து
வில்லைவளைத்துமவர் வில்நாரிபூட்டுகையில்
என்னதுமென்னினேன் இவனேபுருஷனென்று
வடிவுசிலையுடையான் மாலையிடவேணுமென்று
எண்ணினேனென்மனதில் இனியொன்றுநானறியேன்
வில்வளைக்காமல்கர்னன் வில்தெறித்துபோய்விழுந்தான்
அன்றுமொருபார்ப்பானாய் அருச்சுனர்வில்வளைத்தார்
நீபார்த்துமீனெய்தாய் நித்திலங்குபூமுடியார்
பார்ப்பான்கழுத்திலே பணிமாலைபோடுமென்றார்
குஷ்டரோகியானவர்க்கு குடித்தனஞ்செய்வேனோ

என்றல்லோமாலைதன்னை எடுத்தேசுற்றிவிட்டேன்
கர்னன்கழுத்திலே கைமாலைவிழுகாமல்
பார்ப்பான்கழுத்திலே பணிமாலைவிழுந்தது
அப்பாவஞ்செய்ததல்லாய் ஆபரேவேறொன்றில்லை
அருச்சுனற்குமாலையிட்டு ஐவருக்குந்தேவியானேன்
பார்த்தருக்குமாலையிட்டு பஞ்சவர்க்குந்தேவியானேன்
மற்றொருபாவங்கள் மாயவரேசெய்தறியேன்

எம்பெருமானுக்கு துரோபதை தன்கலியாணச் சங்கதி சரியாய்ச்சொல்ல மாங்கனி மரத்திற் பொருந்தினது.

தோராவடிவழகி துரோபதையாள்சொல்லுரைகையில்
என்றபொழுதிலே எழும்புதுமாங்கனிதான்
பொட்டெனவேதானெழும்பி பொருந்துதுமாங்கனிதான்
தருமர்மனங்குளிர்ந்து சந்தோஷமானாரே
பஞ்சவர்கள்ஐந்துபேரும் பார்த்துமனமகிழ்ந்தார்

எம்பெருமாள் பஞ்சவற்குப் புத்திசொல்லி தான் அவர்கையிற் செலவுபெற்றுத் துவாரகைக்குப்போகுதல்.

ஐவர்மகிழ்ந்தபின்பு அரிராமரேதுசொல்வார்
பஞ்சவரைத்தானழைத்துப் பாரளந்தாரேதுசொல்வார்
இந்தவனந்தனிலே இருந்துசிலகாலம்
மற்றொருவனந்தனிலே வனவாசஞ்செய்திடுங்கள்
என்னவினைவந்தாலும் என்னைநினையுமென்றார்
பத்திரமாக யிருங்களென்றார்பஞ்சவரை
போகச்சிலவுதாருமென்றெழுந்தார்புண்ணியரும்
பஞ்சவர்களைவரும் பாஞ்சாலிதுரோபதையும்
ஐவருந்துரோபதையும் ஆண்டவரைத்தெண்டனிட்டு
போய்வாருமென்றுசொன்னார் புகழ்வேந்தரைவர்களும்
விடைபெற்றெழுந்தாரே வேந்தர்பெருமானும்
வட்டமாங்கருடனேறி மாயவரும்போசலுற்றார்
காடுசெடிதாண்டி கரியமலைதான்தாண்டி
ஆறுஞ்சுனைதாண்டி அதிகவனந்தாண்டி
சில்லென்றகாடும் செடியும்வனந்தாண்டி
துவாரகாபுரியைநாடி துரிதமுடன்வந்துவிட்டார்
துவாரகாபுரிதனக்கு சுவாமியும்போனபின்பு
ஐவர்பஞ்சபாண்டவரும் ஆரணங்குதுரோபதையும்
மன்னர்பஞ்சபாண்டவரும் மயிலனையாள்துரோபதையும்
அந்தவனத்திலே அநேகநாள்வாசம்பண்ணார்
இப்படியாக இருக்கிறார்பஞ்சவர்கள்

ஐந்தாவது சயிந்தவமகாரிஷிவனம்-முற்றிற்று.

௯-வது காமதேனுபர்வதம்

ஆறும்வருஷம் பிறந்ததுஐவருக்கு
அந்தவனந்தைவிட்டு அப்பாலேபோறுர்கள்
கூடைத்தலேமேலே குடிவாழ்க்கைகாணகத்தில்
மேகாசிவைத்துசிமாடு கூடைதலேமேலேவைத்தார்
பன்னிவைத்துசிமாடு வனவாசம்போறுர்கள்
அந்தவனத்தைவிட்டார்கள் அப்பாலேபோறுர்கள்
காமதேனுபர்வதத்தைத் தேடியேதானடந்தார்
காமதேனுவனந்தனிலே கடுகவந்துசேர்ந்தார்கள்
ஐந்துபேர்க்குபர்ணசாலே அழகாகவுண்டுபண்ணுர்
ஏழுபேர்க்குபர்ணசாலே எழிலாகவுண்டுபண்ணுர்
அந்தவனத்திலே ஐவர்குடியிருந்தார்
அநேககெடிகாளாய் அவ்வனத்திலேயிருந்தார்
இப்படியாக யிவரிருக்கும்வேளையிலே

துரியோதிரன் ஆலோசனை.

தென்னமுடிவேந்தன் துரியோதிரன்தானும்
வணங்காமுடிவேந்தன் மாபாவியென்னசெய்தான்
சபைகளிறைந்திருக்க சர்ப்பக்கொடியோனுரைப்பான்
காளமகாரிஷியாரை கருதிதவம்பண்ணி
ஐவரையுங்கொல்லுமென்று அனுப்பவனத்திலே
கொல்லுகிறனென்றுசொல்லி கொப்பெனவேபோனுரே
ஐவர்செத்ததுவும்பிழைத்ததுவும் சேதிதெரியவில்லை
ஆடாதூதுவரே ஆயிரம்பேர்வாருமென்றான்
அப்படியேதூதுவர்கள் அனைவோரும்வந்தார்கள்
துரியோதிரனைவந்து தெண்டனிட்டேயதுசொல்வார்
எங்களையழைத்தபணியேதுபணிசொல்லுமென்றார்
அப்போதுரியோதிரன் அவர்களுக்கேதுசொல்வான்
ஐவர்பஞ்சபாண்டவர்கள் ஆரணியம்போனுரே
எந்தவனத்திலே இருக்கிறுரென்றறியேன்
இவரும்மைக்காணுமல் ஆராய்ந்துபார்த்துவாங்கள்
என்றுமேசொன்ருனே எரிநாகங்கொண்டவனும்

துரியோதிரன் தூதுவர்கள் பஞ்சவரைக் காணவருகிறது.

மாநாகன்சொன்னதெல்லாம் மல்லர்கள்தான்கேட்டு
வாறுர்கள்தூதுவர்கள் மகாராசன்சொற்படிக்கு
அத்திபுரந்தாண்டி அவசரமாய்வாரார்கள்
குருக்ஷேத்திரபூமிவிட்டு குருபூமிதேசம்விட்டு
காடுஞ்செடிதாண்டி கடுகவேவாறுர்கள்
கல்லென்றுபூத்ததொரு செடியும்வனந்தாண்டி
ஆரியவனந்தனிலே தூதர்தேடிப்பார்த்தார்கள்
அங்கேயுங்காணுமல் அப்பாலேதேடிவாரார்

ராமரிஷிவனத்தில் நடந்தெங்குந்தேடிவாரார்
அங்கேயுங்காணுதே அப்புறந்தேடிவாரார்
முருக்கமகாரிஷிவனத்தில் முடுகியேதேடினார்கள்
அங்கேயுந்தேடியே அப்பாலேபோகலுற்றார்
காளமகாரிஷிவனத்தில் கடுகியேதேடிவந்தார்
அங்கேயுங்காணுமல் அப்பாலேபோகலுற்றார்
காமதேனுபர்வதத்தில் கண்டார்கள்பஞ்சவரை
ஐவரையுங்கண்டவுடனே அங்கேபயந்தெளிந்தார்
பஞ்சவர்களைவரையும் பார்த்துத்திரும்பினார்கள்
காவலர்களைவரையுங் கண்டுதிரும்பினார்கள்

துரியோதிரனனுப்பிய தூதுவர்கள் காமதேனு
வனத்தில் பஞ்சவரைக்கண்டு துரியோ
திரனுக்குச்சொல்லுதல்.

கண்டல்லோ தூதுவர்கள் கடுகிவழிநடந்தார்
ஆறுசுனை தாண்டி அதிகவனந்தாண்டி
காடுவனங்களுமே கரியமலைதான் தாண்டி
ஆனந்தமாகவே அத்திபுரத்தில்வந்தார்
துரியோதிராஜன்இருக்குஞ் சிங்காதனத்தருகே
மகாராசன்முன்னுக வந்துபணிந்தார்கள்
வந்துபணிந்துமல்லோ மன்னருக்கேதுரைப்பார்
துரியோதிராஜனுக்கு சேதிகளைச்சொல்லலுற்றார்
ஐவரைத்தேடியே ஆரணியம்போனோமே
பாண்டார்களென்றபேர வனத்திலேகண்டோமே
காமதேனுபர்வதத்திற் கண்டுவந்தோம்பஞ்சவரை
அந்தவனத்தில் ஐவரிருக்கிறார்கள்
பார்த்துபயந்துவந்தோம் பஞ்சவர்களைவரையும்
கண்டுபயந்துவந்தோம் காவலர்களைவரையும்
எனறுமொழிந்தார்கள் எகிவந்த தூதுவர்கள்
தூதுவர்கள்சொன்னதெல்லாம் துரியோதிரன்கேட்டு
துள்ளிமனங்கொதித்து சொல்வானொருவார்த்தை

துரியோதிரன் பஞ்சவர்கள்மேல் சண்டைக்குப்போகச்
சகுனியுடன் ஆலோசனை பண்ணுகிறது.

என்றவுரைகேட்டு எரிகாகங்கொண்டவனும்
சபைகள்நிறைந்திருக்கச் சர்ப்பக்கொடியோனுரைப்பான்
ஐவர்வனவாசம்போய் ஐந்தாறுவருஷமுண்டு
வில்வித்தை ஆண்மைகளை மெத்தமறந்திருப்பார்
ஆனைகளுஞ்சேனையும் அண்டவொண்ணுப்படையுமில்லை
அக்ரோணிசேனைகூட்டி ஐவர்மேல்படையெடுத்தால்
ஐவரைக்கொன்றிடலாம் அதம்பண்ணிப்போட்டிடலாம்

இதுவேசமயங்காண் இராசரைக்கொல்லுதற்கு
ஆம்மான்சகுனியே ஆலோசனைசொல்லுமென்றான்

சகுனி திரியோதிரனைப் பஞ்சவர்களுடன் சண்டைக்குப்
போகச் சொல்லுகிறது.

அப்போசகுனியும் அங்கேயெடுத்துரைப்பான்
கொல்லக்குபல்லியவன் குடிக்குசகுனியல்லோ
இதுசமயமிதுசமயம் இவன்குடியைக்கெடுக்கவென்று
மருமகனுக்காக வார்த்தைகளேதுசொல்வான்
மெய்வார்த்தைசொன்னீர்காண் விஷநாகங்கொண்டவரே
இவர்பிழைத்துஇனி ஆரணியம்விட்டுவந்தால்
தப்பிப்பிழைத்துவந்தால் தர்மர்பஞ்சபாண்டவர்கள்
பங்குள்ளபிரகாரம் பாதிநாடுகேட்பாரே
இப்போபடையெடுத்து இராசரைக்கொன்றிடலாம்
நல்லசமயங்காண் நமக்குக்கிடைத்ததுவே
தென்னமுடிவேந்தன் திரியோதிரப்பெருமான்
மாமனுரைக்கேட்டு மகாராசனேதுரைப்பான்

திரியோதிரன் சண்டைக்குப்போகச் சேனைகளைத்
திட்டப்படுத்துதல்.

ஆர்காணுமராசர்களே அருகிருக்கும்மந்திரிகளே
ஐந்துகுருக்களுடன் ஆயிரஞ்சேவகரும்
பலபலராணுவமும் பத்துலட்சஞ்சேவகரும்
காலாளசேனைகளும் நடப்பார்கள்சாதியரும்
அத்தண்டசேனைகளும் அடங்கலும்பயணமென்றார்

திரியோதிரன் பஞ்சவர்களுடன் சண்டை
பண்ண வருகிறது.

அப்போதிரியோதிரன் அவனுடையசேனைகளும்
பயணம்பயணமென்று பயணபேரியடியுமென்றார்
இன்றுவெளிகூடாரம் இயதுடனேபோடுமென்றார்
நாட்டுமென்றான்சண்டாளை நகாரையடியுமென்றார்
அங்கேகொட்டான்சண்டாளை அடியுமென்றார்பேரிகையை
அடிபடுதாரயபேரி அண்டங்கிடுகிடென்ன
சண்டைசண்டையென்றுசொல்லி சண்டைநகாடிபடுதே
ரெணங்கள்ரெணங்களென்று ரெணபேரியடிபடுது
ஆனையின்பேரிகையும் அசுவத்தின்மேல்டங்காவும்
ஒட்டையின்மேல்நகபத்து ஒருகோடிமுரசுகளும்
தாளமொடுமத்தளமுந் தவில்முரசுவீராணம்
பதினெட்டுவாத்தியமும் பலதிசையுந்தான்முழங்க
அண்டாண்டந்தானிர அடிபடுதமேளங்கை
முக்காததூரமட்டும் முரசுமுழங்கிவர
நாற்காததூரமட்டும் நாகசின்னமூதிவர

ஐங்காதத்தூரமட்டும் அடிபடுதுபேரிகையும்
ஆனையின்மேல்நகபத்து குதிரையின்மேல்டங்காவும்
கானலுக்கெடுத்தார்கள் கருப்புநல்லகூடாரம்
வெய்யலுக்கெடுத்தார்கள் வெள்ளைநல்லகூடாரம்
மழைகளுக்கெடுத்தார்கள் வர்ணவெள்ளைகூடாரம்
பனிகளுக்கெடுத்தார்கள் பட்டுநல்லகூடாரம்
காற்றுக்கெடுத்தார்கள் சறுப்புநல்லகூடாரம்
குதிரையொருகோடி கொக்கரித்துவருகுதங்கே
யானையுஞ்சேனைகளும் அண்டவொணாஞூராறுவமும்
அமரதரும்சமரதரும் அதிரதானவரும்
கலிங்கர்தெலுங்கர்களும் கன்னடியரானவரும்
ஈழத்துவங்கனரும் இனநாட்டுச்சோனகரும்
வேதியரும்மாதியரும வில்லேவக்குராசர்களும்
தொழுவர்மலையாளர் சோனகரும்ஜொட்டியரும்
பட்டாவுஞ்சூரியமும் பாரியவில்சமுதாடும்
நேரிசமாம்பெரியகத்தி நிகரானபாங்குகளும்
அதிருமிருப்புலக்கை ஆயுதவரிசையுடன்
ஈட்டிகத்திவேலாயுதம் எடுத்தார்கள்சூலாயுதம்
அத்தண்டராஜுவமும் அல்லவரும்பயணமென்றார்
துரோணரும்அசுவத்தாமர் சொல்லரியவீரர்களும்
கிருபன்கிருபாச்சாரி கீர்த்திபெற்றகர்ணனுமே
சாமத்துரோகி சகுனியவன்கூட
மாமாசகுனியும் மைத்துனன்தேத்தாசன்
தங்கைமணவாளன் தறுதலைப்பட்டிமகன்
அக்காள்மணவாளன் அறுதலியாள்பெற்றபிள்ளை
காந்தாரிபிள்ளைகளும் கவுரவர்சேனைகளும்
குருடன்பெற்றபிள்ளைகளும் கோடியரசர்களும்
ஐவரைக்கொல்லவென்று அநேகம்பேர்பயணமானார்
செந்தூளெழும்புகுது தெய்வலோகங்கப்புகுது
கருந்தூளெழும்புகுது கதிரோனைக்கப்புகுது
கொடிகள்பறக்குது குவலயமெட்டுகுது
முடிகளதிருகுது மூன்றுலோகந்ததளிக்க
அச்சுகிறுக்கென்ன ஆனைநெடுந்தேரசைய
வண்டில்கிரிச்சிகளும் மதயானைகோஷ்டமுடன்
குதிரைகளைத்துவிழ கோடிமன்னர்சத்தமிட
சந்தையிரைச்சலது சமுத்திரக்கோஷ்டமுடன்
செல்லும்ஜனங்கள்தொகை சொல்லமுடியாது
வாரஜெனங்களென்றால் மட்டுமிதங்களில்லை
பஞ்சவரைக்கொல்லவென்று பாதகனுமவாரானே
ஐவரைக்கொல்லவென்று அரும்பாவியாரானே
அஸ்தினாபுரந்தாண்டி அப்புறம்வருகையிலே

துரியோதிரன் பஞ்சவர்கள்மேல் சண்டைக்கு வருகிறபோது
துரோணரைச் சாஸ்திரம் பார்க்கச்சொன்னது.

தென்னமுடிவேந்தன் திரியோதிரப்பாவி
துரோணரைப்பார்த்துச் சொல்லுவானே திரியோதிரன்
பஞ்சவரைக்கொல்லவென்று பாரவனப்போறோமே
வாருந்துரோணரே வழிநிமித்தம்பாருமென்றான்
இவரைக்கொல்லவென்று ஆரணியம்போறோமே
சகுனத்தைப்பாருமென்றான் தாமமுடியானும்

துரியன்சொற்படி துரோணர் சகுனம்பார்க்கிறது.

என்னசகுனங்கள் இனிநிமித்தந்தோணுது
தென்னமுடிவேந்தன் திரியோதிரன்சொற்படி
அர்ஜுனனைப்படித்த ஆச்சாரியானவரும்
தாமமுடியானும் சகுனங்கள்பார்க்கையிலே
என்னசகுனங்கள் எதிராகக்காணுது
பொல்லாச்சகுனம் பொருந்துதுமன்னனுக்கு
வாயசமிடமாச்சு வலியன்வலமாச்சு
நாரையிடமாச்சு நரிகள்குறுக்காச்சு
பாம்புகுறுக்காச்சு பார்ப்பானெதிரானான்
சாரைகுறுக்காச்சு சந்திரன்மேல்பல்லிசொல்லும்
வேடரெதிர்வருவார் வில்லியரெதிரானார்
வெட்டிப்பிடியுமென்று வேடரெதிர்வாறார்கள்
குத்திப்பிடியுமென்று கோட்டானுமோலமிடும்
பட்டம்பகலிலே பகலாந்தைகிறுகுது
நெருப்பெடுத்துக்கூன்கிழவி நின்றழுவதான்கொடுத்தாள்

துரோணாச்சாரியார் திரியோதிரனுக்குச் சகுனங்கள்
நல்லதல்லவென்றுசொல்ல துரியன் அவர்
சொல்லைத் தடுத்துவருகிறது.

துரியோதிரனுக்குத் துரோணரவருரைப்பார்
அப்பா திரியோதிரா அரசர்சிகாமணியே
என்றனுடவார்த்தைதனை யிராசாவேநீர்கேளும்
ஆகாச்சகுனங்கள் ஆகுதயிப்பொழுது
பொல்லாச்சகுனங்கள் பொருந்துதேயென்னசெய்வோம்
இன்றொருநாள்போக்கி இனியொருநாள்வரலாம்
சண்டைக்குப்போகவேண்டாம் வாருமென்றழைக்கையிலே
தென்னமுடிவேந்தன் திரியோதிரராசன்
அவ்வார்த்தைதான்கேட்டு அரசமன்னனேதுசொல்வான்
சகுனத்தால்பழுதுமுண்டோ சதிரானராசர்களே
பொல்லாச்சகுனமென்று போகாமல்நிற்பார்களோ
நூறுமல்லாமல் அடப்பக்காரபையனில்லே
பஞ்சவருமல்லாமல் பகையோரொருவரில்லே
இந்தசகுனத்தில் ஏதொருகுற்றமில்லே

நடவும்நடவமென்று நடைபேரியடியுமென்றான்
வருகுதுபாளையங்கள் மண்ணுவிண்ணுங்கொள்ளாமல்
செந்தூளெழும்புகுது சூரியனைக்கப்புகுது
கருந்தூளெழும்புகுது கதிரோனைக்கப்புகுது
காடுசெடிதாண்டி கரிசமலைதான்தாண்டி
ஆரஞ்சுனைதாண்டி அதிகவனந்தாண்டி
ஒருநாரைக்கிருநாரை உயர்ந்தகொம்பிலேயிருக்கும்
கருநாரைக்கிரைதேடுங் கதலிவனந்தாண்டி
செந்நாய்புலிகரடி சிரும்வனந்தாண்டி
எல்லையதுதூரம் முல்லைவனந்தாண்டி
சூரியன்வனந்தனிலே துரைகளெல்லாஞ்சேர்ந்தார்கள்
அங்கேநட்டான்சண்டாவை அடியுமென்றான்பேரிகையை
அன்றுமுகாமங்கிருந்து அடுத்ததொருமற்றுநாள்
மற்றுநாட்காலையிலே வாரார்கள் துரைகளெல்லாம்
ராமரிஷிவனத்தில் நடந்தார்கள்எல்லவரும்
சண்டாவைநாட்டுமென்றான் சல்லரியடியுமென்றான்
அடித்தார்கள்பேரிகையை அடிவானத்திடிபோலே
அன்றுமுகாமங்கிருந்து அடுத்ததொருமற்றுநாள்
மற்றுநாட்காலையிலே வருகுதுபாளையங்கள்
காளமகாரிஷிவனத்தில் கடுகவந்துசேர்ந்தார்கள்
ரணபேரியடியுமென்றான் நல்லசின்னமூதிவர
அரசன்தன்சொற்படியே அடித்தார்கள்பேரிகையை
ஊதினார்சின்னத்தொனி உலகமெழுந்தானதிர
அன்றுமுகாமங்கிருந்து அடுத்ததொருமற்றுநாள்
மற்றுநாட்காலையிலே மன்னர்பயணமிட்டார்
காமதேனுபர்வதத்திற் கடுகவருகையிலே
ஐவரைக்கொல்லவென்று அரும்பாவிவருகையிலே
பஞ்சவரைக்கொல்லவென்று படுபாவிவருகையிலே

திரியோதிரன் ஐவரையுங் கொல்லவருகிறதை

எம்பெருமாளறிந்து வந்தவர்க்கெல்லாம்

தாகமுண்டாக்கினது.

ஐவருக்கும்வந்தவிதி ஆயருந்தாமறிந்து
கைமோசம்வந்துதோ காவலர்கள்பஞ்சவர்க்கு
மோசங்கள்வந்து முடிந்ததுபஞ்சவர்க்கு
பாவிகெடுத்தானே பஞ்சவரைக்கொல்லவென்று
தோஷிகெடுத்தானே தொண்டர்களைக்கொல்லவென்று
எந்நாளும்பகையாளி எற்பட்டான்பஞ்சவற்கு
எந்தவிதத்திலேயும் இறக்கவகைபண்ணுகிறான்
அசதியாய்நாமிருந்தால் ஐவரிறந்திடுவார்
மறதியுடனிருந்தால் மாண்டிடுவார்பஞ்சவர்கள்
செல்வத்திரவியங்கள் சிரழிந்துபோகுதே

உள்ளங்கைசெல்விப்பழம் உருகுலைந்துபோகுதே
தோளிற்செபமாலை தொண்டழிந்துபோகுதே
கையிற்ஜெபமாலை கணக்குலைந்துபோகுதே
என்னவுபாயமது செய்தாரோவெம்பெருமாள்
வருநிறாஜருக்கும் மாதாகங்கொண்டவற்கும்
தண்ணீர்கவணங்கள் தாகவிடாயுண்டுபண்ணூர்
அந்தண்டாஜருக்கும் அடிநாக்குலருகுது
ராவுவாட்டுரு நடுநாக்குலருகுது
அவ்வனத்தில்தீர்த்தங்கள் அள்ளியுண்ணகிடையாது
ஆயர்பெருமாளும் அரிராமரோதுசெய்தார்
தேவேந்திரனுடைய சாபியெனுங்காமதேனு
அப்பசுக்கள்தீர்த்தமுண்ணும் அக்குளமொன்றொழிய
தீர்த்தங்களில்லாமற் செய்துவிட்டாரப்போது
அந்தண்டஜனங்களுக்கும் அனைவிடாயாயாச்சுது
தண்ணீர்களையாகி தவிக்குதுபாளையங்கள்
காதையடைத்துக் களைத்தார்கள்துரைகளெல்லாம்
அதுவரைத்தானழைத்துத் துரியோதிரனுரைப்பான்
இந்தவனத்திலே எங்கும்நதியில்லையோ
எங்குங்குளமில்லையோ யிறங்கியேதீர்த்தமுண்ண
தேடியேபாருமென்று செய்தியனுப்பினான்
அப்படியேயல்லவென்று அந்தவனங்களெல்லாம்
தேடப்புறப்பட்டார்கள் துரியோதிரன்தூதுவர்கள்
அந்தவனங்களெல்லாம் ஆராய்ந்துபார்த்தார்கள்
காமதேனுதன்வனத்தில் கண்டார்கள்தீர்த்தமுண்ண
ஓட்டம்நடையுமாய் ஓடிவந்தார்தூதுவர்கள்
துரியோதிரனுக்குச் சேதிபுறைத்தார்கள்
அகலமுள்ளதாயிருக்கும் அலங்காரப்பொய்கைகண்டோம்
வாருங்களென்றுசொல்லி வருந்தியேதெண்டனிட்டார்

துரியோதிரன் காமதேனு குளத்தில் தண்ணீர்குடிக்க
சேனையுந் தானும் வருகிறது.

தென்னமுடிவேந்தன் துரியோதிரன்கேட்டு
நல்லதுவாரேறுமென்று நடந்தார்கள்சேனையெல்லாம்
வருகிறவேளையிலே வானுலகயிடையரெல்லாம்

தெய்வலோகத்து இடையர் காமதேனு பசுக்களுக்கு
அந்தகுளத்தில் தண்ணீர்காட்ட வருகிறது

அந்தச்சமயத்திலே அந்தரத்துயிடையரெல்லாம்
வானுலகயிடையரெல்லாம் மாடுகளைத்தான்திருப்பி
காட்டிலேமேய்க்கின்ற காமதேனு அத்தனையும்
மேய்த்துதூரத்தியே யோட்டியேகுளத்தில்விட்டார்
குளத்திலேநீர்குடித்துக் குளமெல்லாஞ்சோக்கி

தண்ணீர்கலக்கியே தரையில்மண்மேல்கிளம்பும்
குளங்கள்கலக்கியல்லோ குளத்தின்மேல்மண்கிளம்பும்

பசுக்கள் குளங்கலக்கினதை தூதர்சொல்லத் திரியோதிரன்
கேட்டுக்கோபித்து இடையர்களைக்கொன்று பசுக்களை
மடக்கச் சொல்லுகிறது.

அந்தச்சமயத்திலே அரவக்கொடியோன்தூதர்
தூதுவர்கள்தான்பார்த்து சொல்லுவார்ராசருக்கு
ஐயையோராசாவே ஆரோதெரியாது
ஆயிரம்இடையர்கள் ஆவுகளைக்கொண்டுவந்து
விட்டுமேஅக்குளத்தை மிதக்கச்சோரக்கிவிட்டார்
தண்ணீர்குடிக்கவேதான் வுதவாதுயென்றார்கள்
என்றவுரைகேட்டு ஏதுசொல்வான்ராசனுமே
ஆயிரம்யிடையரையும் அங்கேபொலிபோட்டுவிட்டு
அத்தண்டபசுவையெல்லாம் அத்திபுரமோட்டுமென்றான்
இராசனுரைகேட்டு நடந்தாரேதூதுவர்கள்
மாடுகளத்தனையும் மடக்கித்திருப்பினார்கள்
எதிர்த்தயிடையர்தனை யாவரையுங்கொன்றுவிட்டார்
சண்டைபண்ணவந்தவரைச் சதைத்தங்கேபோட்டார்கள்

காமதேனு பசுக்களை மேய்க்கவந்த இடையர்களைத்
திரியோதிரன் தூதுவர்கள் கொன்றவர்கள்
போக மற்ற இடையர்கள்போய் தே
வேந்திரனுடன் சொல்லுகிறது

தப்பிப்பிழைத்தவர்கள் தான்விழுந்தோடலுற்றார்
அமராபதிதேடி அவ்விடையரோடலுற்றார்
தேவேந்திரன்முன்னே தெண்டனிட்டார்யிடையர்கள்
வந்துபணிந்தவர்கள் வார்த்தைகளேதுசொல்வார்
காமதேனுபர்வதத்தில் காலிகளைமேய்த்திருந்தோம்
காட்டிலேமேய்த்தோட்டி கடுகிகுளத்தில்விட்டோம்
ஆரோதெரியாது ஆங்காரமுள்ளமன்னன்
சேனைபரிவாரந் திரளுடன்கூட்டிவந்தான்
மாடுகளைமடக்கிக்கொண்டான் வல்லுயிரைவாங்கிவிட்டான்
அல்லவரையுங்கொன்று னடியேங்கள்தப்பிவந்தோம்
என்றவுரைகேட்டு ஏதுசொல்வாரிந்திரரும்
உருட்டினான்கண்ணை உருவினான்பெரும்புலிபோல்
கண்கள்சிவக்குதே காந்தாளமாகுதே
மீசைதுடிக்குதே மின்கோபமசகுதே
அவ்வலரிக்கண்கள்ரெண்டும் செவ்வலரிபூத்திடுதே

நீலவிழிக்கண்கள்ரெண்டும் நெருப்புத்தணலாய்விடுது
என்றுயில்லாக்கோபம் பிறந்ததுயிந்திரற்கு

தேவேந்திரன் தன்மகனைச் சண்டைக்குப்போகச் சொல்ல சித்ராங்கதன் மாதலியை தேர் கொண்டுவரச்சொன்னது.

என்மகனேசித்திராங்கா இயலானாத்தினமே
மாட்டைமடக்கின மன்னவராசாவை
பிடித்துப்பிடியோடே பின்கட்டாய்கட்டிவாராய்
ஆனைசேனைபரிவாரம் அடங்கலுங்கொன்றழித்து
பிடித்துப்பிடியோடே கொண்டுவாராய்பொட்டெனவே
கைப்பிடியாய்க்கொண்டு கண்ணெதிரேவந்துநில்லு
இல்லாதேயாமனால் எதிர்த்துவந்துநில்லாதே
உத்தாரம்பண்ணுரே உம்பர்பிரானிந்திரனும்
தேவேந்திரன்மகனும் சித்ராங்கதராஜன்
அவ்வார்த்தைதலான்கேட்டு அதிகமாய்ச்சிந்தித்து
மாதலியைத்தானழைத்து மச்சாதிமங்கேகியென்றான்
தேரையலங்கரித்துச் சீக்கிரம்கொண்டுவா
என்றவுரைகேட்டு எழுந்தானேமாதலியும்
ஆறுவண்டியுறுதசட்டம் அதற்கேற்றகுத்துக்காலும்
குத்துக்கால்சொப்பணிட்டு கொடுங்கைத்திரைவளைத்து
கொடுங்கைத்திரைவளைத்துக் கும்பக்கலசம்வைத்து
கும்பக்கலசத்தின்மேற் குடைகளைக்கட்டினான்
அங்கெனவேதேர்சிலை அலங்காரம்பண்ணினானே
தேரையலங்கரித்துத் தேர்ப்பாகன்சொப்பனிட்டான்
வாசியைக்குளிப்பாட்டி வாயிற்கடிவாளமிட்டான்
நாலுகால்வண்டபமும் நடுக்கழுத்திற்கொலுசகளும்
முன்னுசெட்டிகளும் பின்னுலேகுச்சுகளும்
பக்கத்தில்அங்குபடிப்பதியவைத்தாருசனங்கள்
முதலிலேசினிகளும் முன்னேகடிவாளம்
சந்திரபிறைசூரியபிறைதரித்தான்குதிரைக்கு
தேரையலங்கரித்துத் தேர்ப்பாகன்தெண்டனிட்டான்

தீரியன்மேல் சித்ரசேனன் சண்டைக்குப்போகிறது

கடுகவெழுந்தானே கட்டழகன்சித்ரசேனன்
நீண்டிடுங்கால்களுக்கு நெரிஞ்சிப்பூச்சல்லடமாம்
குத்தியிடுங்கால்களுக்கு குரிஞ்சிப்பூச்சல்லடமாம்
மண்டியிடுங்கால்களுக்கு மாதளம்பூச்சல்லடமாம்
தூக்கிவைக்குங்கால்களுக்கு துத்திப்பூச்சல்லடமாம்
பில்லைசமுதாடு விருதுவெடுத்தஒட்டியாணம்
கட்டியரைதனிலே கருங்குச்சுசங்குவிட்டு
சந்திரகாந்திதட்டிகட்டி தாமரைப்பூச்சங்குவிட்டு
முத்திருமாலை முகத்தழகாய்கட்டினான

சிங்காணிவில்லெடுத்து சிறுநாரிபூட்டினான்
அம்புறாத்தூணியை அணிந்துகொண்டான் தன்முதுகில்
தேரைச்சுற்றிதெண்டனிட்டு சிவ்வெனவேயேறினான்
ஏறினபோதே யியலானசாரதிதான்
தூரகதம்வார்கைபிடித்துத் துரிதமுடன்சவாரிசெய்ய
வருகுதுமச்சாதம் வானுலகந்தானதிர
தேர்தனிலேசங்குநாதம் சித்திரசேனன்பண்ணினானே
சங்குநாதம்பண்ணினானே தான்திரும்பசுரபியெல்லாம்

திரியோதிரன் சேனைகளைக காமதேனு அதம்பண்ணினது

அந்தச்சமயத்தில் அறிந்ததுகாமதேனு
சங்குதொனிகேட்டு தான்வருதுகாமதேனு
குதித்துகுமாளமிட்டு உறுகுதுகாமதேனு
வந்துவிழுந்தது வளம்பெரியபாளையத்தில்
குத்துதுகொம்பாலே குளம்பால்மிதிக்கிறது

திரியோதிரனும் அவனுடையசேனைகளும் சித்திரசேனனுடன் சண்டைபண்ணுகிறது.

அத்தண்டசேனைகளும் அதம்பண்ணும்காமதேனு
மாண்டஜெனங்களென்றால் மட்டுமிதங்களில்லை
செத்தசனங்களென்றால் செப்பமுடியாது
அந்தசமயத்தில் வந்துவிட்டான்சித்திரசேனன்
வில்வளைத்துநாரிபூட்டி விட்டான்சரபாணம்
கைகண்டபாணமெல்லாம் கடுகெனவேவிட்டுவிட்டான்
கூச்சலெழும்புகுது கொப்பெனவேபாளையத்தில்
கண்டானே திரியோதிரன் கட்டழகனேதுசொல்வான்
எவனோதெரியாது இங்குவாரான்சண்டைபண்ண
இத்தண்டதுரைகளெல்லோருமுஸ்தீப்பாய்
ஆயுதங்கள்தானெடுத்து அமாதுசெய்யுமென்றான்
எண்ணான்குஆயுதத்தை எடுத்துஅறையிற்கட்டி
சண்டைசண்டையென்றுசொல்லி சண்டைநகாடித்தான்
ரணங்கள்ரணங்களென்று ரணபேரிதானடித்தார்
மூட்டினார்சண்டை எழும்புதுசமரப்போ
வில்வளைத்துநாரிபூட்டி விட்டாரிவர்கணையை
ஒருவர்க்கொருவர் ஒழிவில்லாப்பாணம்விட்டார்
அம்புவரும்வேகமதை ஆர்க்கமுடியாது
பாணம்வரும்விதங்கள் பார்க்கமுடியாது
ஓருகோடிபாணங்கள் ஒருமித்துவிட்டுவிட்டார்
தூரியன்விடும்பாணம் சொல்லிமுடியாது
கர்னன்விடும்பாணம் கணக்குமிதங்களில்லை
துரோணர்விடும்பாணம் சொல்லிமுடியாது
கோபமாய்கிருபாச்சாரி கோடனபாணம்விட்டார்



திரியோதின் சித்ரசேனனுடன் சண்டைசெய்து தேர்சக்கரத்தில் கட்டுப்பட்டது.

விஷ்டுமாச்சாரியாரும் வேணபாணங்கள்விட்டார்
அசுவத்தாமாவும் அநேககெடும்பாணம்விட்டார்
சகுனிசயிந்தவனும் சரமேற்சரம்பொழிந்தார்
அவரவர்கள்விடும்பாணம் அபரிமிதமில்லை
ஒருவர்க்கொருவர் ஒருகோடிபாணம்விட்டார்
வாயுவாஸ்திரங்களும் வருணாஸ்திரங்கள்
சந்தரா திரமும் இந்திராஸ்திரமும்
சங்கஞ்சங்கம்போலே சரங்கள்பொழிந்தார்கள்
கண்டானேசித்திரசேனன் கண்கொள்ளாக்கோபமுடன்
வில்வளைத்துநாரிபூட்டி விட்டான்கெடும்பாணம்
தன்மேல்விடும்பாணம் தாங்காமலேவிலங்க
பின்னையுங்கோடிசரம் பிரளயமாய்விட்டுவிட்டான்
அத்தனைபோர்விட்ட சர யத்தனையுங்கொள்ளைகொண்டான்
ஒட்டையின்மேலிருந்து துளை ஒலிபிட்டுகிழேவிழ
தென்னங்குலைபோலே திருகினான்வேணதலை
கருப்பங்கருணை மைப்போல் கண்டித்தான்வேணதலை
ஆலையிற்கரும்புபோலே அறுத்திட்டான்வேணதலை
பேய்க்காலெரும்புபோல் பிசைந்திட்டான்பாளயத்தை
பனைநுங்குபோலாக பழித்தவிழிபிதுங்க
கண்டச்சலையரிந்து கழுகுக்கிரைபோடுகிறான்
ஈரல்சரியுது 'இறைச்சிவெளியாகுது
குடல்கள்சரியுது குறிப்பாகஅப்போது
ஜெப்பையிலாவெலும்பு நெறநெறவென்றுதான்முறியும்
பட்டஜெனங்களென்றால் மட்டுமிதங்களில்லை
செத்தஜெனங்களென்றால் செப்பமுடியாது
சித்ரசேனன்பண்டையிலே ஜனங்களும்மாளுகுது
அபயமபயமென்று அலைபுதுபார்லையங்கள்
தண்ணீர்தண்ணீரென்றுசொல்லி தவிக்குதுபாளையங்கள்
ரத்தாறுஓடுகுது ரணமுண்டங்கொக்கரிக்க
இத்தனிதம்பாளையங் ளொடாகூடமாச்சுது
துரியோதிராசன் தேரிழந்துநின்றுவிட்டான்

சித்திரசேனன் துரியோதிரனைக்கட்டி இழுத்துக்கொண்டு

போகிறபோது துரியோதிரன் முறையிடுவது

அங்கத்துளையாக்கி அடித்தானேசித்திரசேனன்
அந்தவீதியிலே அவனைப்பிடித்துக்கட்டி
பிடித்தபிடியோடே பின்கட்டாய்கட்டினான்
தேர்க்குத்துகாலோடே துரியனைப்பிடித்துகட்டி
ஊதினான்சங்குநாதம் உம்பர்பிரானவன்மகனும்

துரியன்கொடுமையே இதையெடுத்தாரசொல்லால்
ஒருவருடனொருவர் சொல்லாமலோடலுற்றார்
துரியனைக்கட்டிக்கொண்டு தெய்வலோகம்போறானும்
அந்தசமயத்தில் அரவக்கொடியோனும்
என்றுநானென்றழுகிறான் எண்ணிப்புலம்புகிறான்
ஆரோதெரியாது ஆகாயம்கொண்டுபோறான்
எவனோதெரியாது எமலோகம்கொண்டுபோறான்
ஐவர்பஞ்சபாண்டவரை அனர்த்தம்பண்ணவந்தேனே
என்னையொருவனிழுத்துப் போறானென்னசெய்வேன்
கூடிவந்தராஜக்கள் கோடானகோடியுண்டு
பட்டில்லாராஜாக்கள் வந்தார்கள்வீரியர்கள்
அந்தண்டராஜாக்கள் அல்லவருங்கைவிட்டார்
கட்டியிழுத்துக் கைலாசம்கொண்டுபோறான்
ஆர்வந்துகாப்பார்கள் ஆபத்துவேளையிலே
எவர்வந்துகாப்பார்கள் என்சிவன்பிழைக்கவிப்போ
தருமனைத்தானினைத்தால் தயவுவைத்துகாத்திடுவார்
இந்தவனத்திலே யிருக்கிறாரென்றார்கள்
கூவிப்புலம்பினல் சூல்கேட்டுதருமருக்கு
தம்பியரைத்தானனுப்பி தயவுவைத்துக்காத்திடுவார்
ஐவருமிப்போது அன்புவைத்துக்காத்தாலே
ஐவரைக்கொல்லுதைக்கு ஆலோசனைதேடிடுவோம்
தப்பிப்பிழைத்தோமானல் தருமனைக்கொன்றிடுவோம்
என்றவன்யோசனையாய் என்னசொல்லிப்புலம்புகிறான்
கூவிப்புலம்புகிறான் கொற்றவன்துரியோதிரன்
அண்ணேவேயண்ணேவே அழகானதர்மசிங்கம்
ஐவர்பஞ்சபாண்டவரே அண்ணேவேநீர்கேளும்
ஐவரைப்பார்க்கவே அதிகப்பிரியமுமாய்
பார்க்கும்படியாக வந்தேன்காண்பஞ்சவரே
காணும்படியாக வந்தேன்காண்பஞ்சவரே
அவரோதெரியாது அழைத்துபோறான்ஆதாயமாய்
ஆரோதெரியாது அழைத்துபோறான்ஆகாயமாய்
கூடப்பிறக்கலையோ கூட்டுபாலுண்கலேறா
தாயாரும்வேறானல் தகப்பன்வமிசமொன்றல்லவோ
மனதுஇரங்கலையோ மகாராஜதர்மசிங்கம்
தம்பிதமயன்மேல் தயவில்லையோவுங்களுக்கு
அநீதமாய்கொண்டுபோறான் ஆரோதெரியாது
என்ஆவியைக்காத்தாலே அநேககோடிபுண்ணியங்காண்
காயாம்புமேனியனே தயவில்லையோவென்மேலே
என்றுபுலம்பியே இடிபோலேகூச்சலிட்டான்
கூவுந்தூல்கேட்டும் கொப்பெனவேதருமருக்கு
உற்றுற்றுக்கேட்டாரும் உரகதன்வார்த்தையெல்லாம்

துரியோதிரன் முறையிடுவதை தருமர்கேட்டு
அருச்சுனனைப்போய் துரியோதிரனை
அழைத்துவரச் சொன்னது.

தருமர் மனங்கொள்ளாமல் தம்பியரைத்தானழைத்து
ஆறுலழுதுமாறு அர்ச்சுனனேநீ கேளும்
பெரியதகப்பன்பெற்ற போரான அண்ணன் தம்பி
துரியோதிரனம்மைத் தேடிப்பார்க்கவந்தான்
ஆரோ ஒருவர் ஆகாயங்கொண்டுபோறான்
எவனென்றுதெரியாது இழுத்துப்போறான் அந்தரமாய்
பார்த்துயிருக்கோமானால் பாதகமெத்தவரும்
மெத்தவருந்துகிறான் வில்வேந்தனிப்போது
நம்மையழைக்கிறான் ரக்ஷிப்பீரென்றுசொல்லி
ஆபத்துவேளையிலே ஆதரித்தால்புண்ணியங்காண்
கடுகவிடுத்துக் கைகூட்டிவாராய்
என்றவுரைகேட்டு ஏதுசொல்வான் வாள்விஜயன்
வனோடிருந்து நம்மை உடன்தானழைத்து
கொல்வினைத்தானே குருடன்மகன் சத்ராதி
எத்தனைவஞ்சனைகள் இடறுகள்செய்தான்காண்
நாடுபறித்தானே ராச்சியத்தைக்கொள்ளைகொண்டான்
இவனையும்விலங்கிவிட்டு அரையிலடைத்தானே
ஆண்மனைப்பெண்ணையும் அம்பலமேற்றினைத்தான்
அண்ணன்பெருந்தேவி பரடைபுரியவைத்தான்
பாரவனவாசம் பரதேசமோட்டினான்
இந்தவனவாசம் இனித்திரியுமென்றானே
சாமத்துரோகனுக்கு தயவுதனைப்பாரோ
பொல்லாதபாவிக்குப் புண்ணியந்தேடுவாரோ
தென்னமுடிவேந்தன் துரியோதிராஜன்
எத்தனைநாளிருந்தாலும் இடரல்லோதேடுகிறான்
கொல்லவினைகிறான் கொடும்பாவி துரியோதிரன்
இன்றோடொழுந்து எமலோகஞ்சேரட்டும்
செத்தாற்பழுதில்லை சீரான அண்ணாவே
என்றவுரைகேட்டு ஏதுசொல்வார் தருமராயர்
அவரவர்செய்தவினை அவரே அனுபவிப்பார்
நன்மையைச்செய்தவர்கள் ராச்சியத்தையாண்டிடுவார்
பொல்லாங்குசெய்தவர்கள் போவார்பெருநரகில்
நன்மையைச்செய்தவர்க்கு நட்சத்திரங்களாகும்
தீமையைச்செய்தவர்க்கு தெரியாதிருளாகும்
வஞ்சனைகள் பண்ணாமல் மனத்துணையிருப்பார்
இக்கணமேயேகி யிட்டுவா துரிசுறுமென்றார்
என்வார்த்தைதள்ளாதே என்னுடைய தம்பியரே

அர்ச்சுனன் துரியனை அழைக்கப்போவது.

என்றவுரைகேட்டு எழுந்தானருச்சுனனும்
நீண்டுநின்கால்களுக்கு நெரிஞ்சிப்பூச்சல்லடமாம்
மண்டியிடுங்கால்களுக்கு மாதளப்பூசல்லடமாம்
குந்தியிடுங்கால்களுக்கு குறிஞ்சிப்பூசல்லடமாம்
ஆக்கினைக்குங்கால்களுக்கு துத்திப்பூச்சல்லடமாம்
சல்லடங்களிட்டுமல்லோ தட்டிவரிந்துகட்டி
தட்டிவரிந்துகட்டி தாமரைப்பூசங்குவிட்டு
கட்டிசமுதாடு எடுத்தான்பெரியகத்தி
கத்திசொருகியல்லோ கடுகவெழுந்தானே
சிங்காணிவில்லெடுத்து தேர்விஜயன்பயணமானான்
வாரானேயருச்சுனனும் வழிபட்டான் அங்கெனவே
நடந்தானேயருச்சுனனும் நாழிகைக்குக்காதவழி

அருச்சுனனும் சித்திரசேனனும் சண்டைசெய்தல்.

அப்போதருச்சுனனும் அதிகவேகமாகவல்லோ
அக்கினிபாணத்தை அதிவிரைவாய்தானெடுத்து
வரிவில்லினைத்தொடுத்து மார்புரளவாங்கினான்
அக்கினிபாணமது அதிரவேபோய்த்தடுக்கும்
கண்டானேசித்திரசேனன் கண்கொள்ளாக்கோபமுடன்
சீறியெழும்பியே சீக்கிரமாய்வந்தெதிர்த்தான்
சண்டைசண்டையென்று சமர்போர்முழங்குது
ஒருவர்க்கொருவர் யுத்தங்களாகுது
ஒருவர்விடுஞ்சரங்கள் ஒருவர்விலக்குவாரும்
இருவர்சமமாக யிசைந்துமேசண்டைபண்ணார்
ஆகாயமுள்ளதெல்லாம் அம்பாலேபந்தலிட்டார்
சூரியனைத்தான்மறைக்கும் சூரர்விடும்பாணமெல்லாம்
நான்குநாழிகைமட்டும் நல்லசண்டைபண்ணார்கள்
அருச்சுனன்சண்டைகளை அண்டர்பிரான்மகனறிந்து

அருச்சுனனும் சித்திரசேனனும் சமாதானமாகி துரியோதிரனை தருமரண்டை அழைத்துப் போகிறது.

என்னினும்வல்லபிரான் என்றுமனதிலெண்ணி
இவன்யாரோதெரியாது ஆண்மையுள்ளசேவகன்தான்
வம்சமறியாமல் மறந்தல்லோசண்டைசெய்தோம்
என்றல்லோசித்திரசேனன் ஏதுசொல்வானருச்சுனனை
ஆரடாதம்பிநீ அமர்சண்டைசெய்யவந்தாய்
எவனடாதம்பிநீ எதிர்த்துசண்டைசெய்யவந்தாய்
ஊரேதுபேரேது உன்தகப்பன்வாரேது
எவருடையபுத்திரன்நீ எனக்கறியச்சொல்லுமென்றார்
இவ்வார்த்தைகேட்டு ஏதுசொல்வானருச்சுனனும்

யுத்தகளந்தனிலே உறவின்முறைகேட்பாரோ
படுகளத்திலெவரப்பா நீ கேட்பாரோ பாருலகில்
நீ ஆண்பிள்ளையானால் அமரதுசெய்யுமென்றார்
உன்தகப்பன்பேரும் ஊர்பேருஞ்சொன்னாலே
நானுரைப்பேன்பிற்பாடு கனிவிலவன்றன்வாள்விஜயன்
தேவேந்திரன்மகனும் சித்திரசேனன்தான்கேட்டு
உத்திரவுதான்கேட்டு உற்சாகங்கொண்டவனும்
தேவர்க்கதிபதிதான் தேவேந்திரனென்தகப்பன்
என்றவுரைகேட்டு எதுசொல்வானருச்சுனனும்
அண்ணனென்றறியாமல் அமரதுசெய்தேனே
தமையனென்றறியாமல் சண்டைசெய்தேனே
வில்லைத்தரையில்வைத்து விஜயனுமேயவர்தாள்
சாஷ்டாங்கமாகவே சரணமென்றுதெண்டனிட்டான்
மூக்கால்வலம்வந்து மூவொருகால்தெண்டனிட்டான்
அண்ணாசரணமென்று அடிபணிந்தானருச்சுனனும்
தேவேந்திரன்மகனும் சித்திரசேனனேதுசொல்வான்
ஆர்வீட்டுப்பிள்ளைநீ அறியவுரையுமென்றார்
என்னையறியாயோ என்னுடையவண்ணாவே
என்தாயார்குந்தியம்மாள் என்தகப்பன்தேவேந்திரன்
என்தகப்பன்தேவேந்திரன் என்பேர்அருச்சுனன்காண்
என்றவுரைகேட்டு எதுசொல்வான்சித்திரசேனன்
என்தந்தைக்குநீபிறந்த தன்மையினால்தம்பியரே
நான்விட்டபாணத்தால் தம்பியேநீபிழைத்தீர்
அல்லாதேயசமானால் அமரில்மடிந்திடுவீர்
தப்பிப்பிழைத்தீரே சாமியுடபுண்ணியத்தால்
என்றிவர்களோர்மனதா யிருவருறவாடி
ஒருவர்க்கொருவர் உறவாடிக்கொண்டார்கள்
எழில்விஜயனப்போது எதுசொல்வானண்ணனுக்கு
தென்னமுடிவேந்தன் துரியோதிராஜன்
என்னசெய்தானென்றுநீர் இப்போதிரண்ணாவே
அவன்செய்தகுற்றமெல்லாம் அண்ணாநீர்சொல்லுமென
இவ்வார்த்தைதான்கேட்டு என்னசொல்வான்சித்திரசேனன்
காட்டிலேநீமெய்த்தவொரு காமதேனு அத்தனையும்
பாற்பசுக்கள்தன்னையிந்தப் பாவிமடக்கிக்கொண்டான்
ஆயிரமிடையரையும் அதீதமாய்க்கொண்டுவிட்டான்
அவ்வார்த்தைதான்கேட்டு அனுப்பினாரென்தகப்பன்
கைப்பிடியாய்க்கொண்டுவர கட்டளையுமிட்டார்காண்
அவர்சொன்னபடியினாலே அமரதுசெய்தேன்காண்
இவனுடையசேனைகளை எல்லாந்தான்கொன்றழித்து
விரைவாகக்கைப்பிடியாய் விண்ணுலகங்கொண்டுபோறேன்
என்றவுரைகேட்டு எதுசொல்வானருச்சுனனும்

ஆறுதல்சொன்னாலே அடியேனொருவார்த்தை
கரம்புமெளியநும் தருமராஜனெங்கண்ணோர்
என்னைவிடுவித்து இட்டுவாவென்றுசொன்னார்
என்னையனுப்பினார் இயலான தருமலிங்கம்
அழைத்துவரச்சொன்னாரே அண்ணருமிப்பொழுதே
உன்முகத்திலேநான்விழிக்கேன் என்றுமே தருமலிங்கம்
கட்டியனுப்பினார் குறிப்பாகஎந்தனையும்
எனமேல்தயவுவைத்து இவனையனுப்புமென்றான்
தேவேந்திரன்மகனார் சித்திரசேனனேதுசொல்வான்
பாடுபட்டுக்கிடேப வலதுபிடாக்கொண்டுவந்தவனை
கைப்பிடியாய்க்கொண்டுவா கட்டியனுப்பினார்
ஆகையால்கொண்டுபோறேன் ஆருச்சுனாஎன்னசெய்வேன்
ஆறுதல்சொன்னாலே அடியேனொருவார்த்தை
அருச்சுனன்வந்து அழைத்துப்போறனென்றுசொல்லும்
நீவிரென்றுசொன்னாலே அதிசயமகிழ்வார்
அல்லாதேதயாமானால் அழைத்துமேபோனாலே
என்வார்த்தைதள்ளிநீர் இட்டுக்கொண்டுபோனாலே
அன்றேவசக்கோக்கு அமராபுரம்வருவேன்
தேவேந்திரபுரத்தைச் சிதறவேகொள்ளைகொள்வேன்
ஆடுமாடுகளை அழகானஊருகளை
கடைப்பங்கடைகளிதெருவும் கருமாரவீதிகளும்
அங்காடிவீதிகளும் அரண்மனைத்தெருவுகளும்
அத்தனையுங்கொள்ளையிட்டு அதம்பண்ணிப்போட்டிடுவேன்
என்வார்த்தைதான்கேட்டு இவனைவிடுவிடென்றான்
சித்திரசேனன்கேட்டுச் சிந்தைமகிழ்ந்தவரும்
சந்தோஷப்பட்டவரும் சர்ப்பக்கொடியோனை
கட்டவிழ்த்துவிட்டுவிட்டுக் காவினான்றன்சித்திரசேனன்

சித்திரசேனன் தேவேந்திரனைக் காண்கிறது.

போய்வாறேனென்றல்லோ புறப்பட்டான்தேரேறி
அமராபதிதேடி அடைவுடனேதானடந்தான்
தேவேந்திரனுக்கு சித்திரசேனன்தெண்டனிட்டான்
அருச்சுனன்தன்னுடைய அதிசயச்சேதிகளும்
அரவக்கொடிவேந்தன் அகப்பட்டசேதிகளும்
இவ்விருவர்சேதிகளும் இயலாகத்தன்சேதி
தகப்பனுடனுரைக்கச் சந்தோஷமாகினார்
அந்தச்சமயத்தில் அரவக்கொடியோனை
துரியோதிரனைத் தேர்விஜயன்கூட்டிவாறான்
அண்ணாருக்காக அழைத்துவந்துவிட்டாரும்
அண்ணார்தருமருக்கு அப்பணிந்தான்துரியோதிரன்
சரணஞ்சரணமென்று சாஷ்டாங்கதெண்டனிட்டான்
எமன்மகன்தருமராயன் எடுத்தணைத்தார்காரியனையும்

எங்கிருந்துவந்தீரப்பா எனக்கறியச்சொல்லுமென்றார்
அத்துவானகானகத்தில் ஆரணியம்வந்ததென்ன
அந்தரமாகவே ஆர்காணும்கொண்டுசென்றார்

துரியோதிரன் தருமருக்கு தன்வரலாறு கூறுதல்,

துரியோதிராஜன் சொல்லத்தொடங்கினன்
ஆசையாம்பாசமதாலண்ணாவேபார்க்கவந்தேன்
இந்தனைநாள்காடுறைந்தீர் இட்டுப்போகவேணுமென்று
என்றுதுமெண்ணியே இக்காடுதேடிவந்தேன்
என்னை ஆரோதெரியாது அந்தரமாய்க்கட்டிப்போனார்
அயயமபயமென்று அழுதுபுலம்புகையில்
அருச்சுனன்தானுமங்கே அமர்செய்துவிட்டுவந்தான்
எத்தனைநாள்காடுறைவீர் இபலானராஜாவே
பாரவனவாசம் பரதேசந்திரிவானேன்
வேடரைப்போலாக வில்லிபரைப்போலாக
பரதேசந்திரிவானேன் பட்டணத்தில்வாங்களென்றான்
அஸ்தினாபுரத்தை ஆண்டிடுவீர்வாங்களென்றான்
இவ்வார்த்தைதான்கேட்டு எதுசொல்வார்தருமராயர்
ஆறுவருஷமாச்சு ஆரணியம்வந்துநாங்கள்
இன்னஞ்சிலகாலம் இப்படியேநான்திரிந்து
பனிரண்டுவருஷம் பாரவனந்திரிந்து
வந்தபிறகாக மனதுவைத்தென்மேலே
சொன்னபடிசீமை துரைத்தனந்தாருமென்றார்

வீமன் கனிபறித்துவர துரியோதிரன் புசித்து தருமரிடத்தில்

செலவுபெற்று அஸ்தினாபுரம் செல்லுதல்.

வெற்றிமதயானை வீமாமதகரியே
அண்ணர்களாயாகி அதிகபசியானார்
காடெல்லாந்தான்திரிந்து கனிபறித்துவாருமென்றார்
வெற்றிமதயானை வீமனெழுந்திருந்து
அறுநெல்லிசிறுநெல்லி அழகானதமர்த்தையுடன்
காட்டுவிளாம்பழமும் கருநெல்லிப்பழங்களுடன்
வேரிற்பழுக்கிருக்கும் வெடித்தபலாப்பழமும்
மலைத்தேனைத்தேனும் மாங்கனியுந்தெங்கனியும்
மட்டில்லாப்பழம்பறித்து மதவீமன்கொண்டுவந்தான்
கொக்கிலேதான்பறித்து திறல்வீமன்கொண்டுவந்தான்
பறித்தகனியெல்லாம் பசியாறவுண்ணுமென்று
கைக்குச்சலங்கொடுத்து கட்டழகருண்ணுமென்று
ஆசனந்தான்போட்டு அமுதுபுசியுமென்று
விஷநாகங்கொண்டவனும் வேந்தனுந்தான்புசித்தான்
என்னுதுமெண்ணுகிறான் எரிநாகங்கொண்டவனும்
இப்படிக்கொத்த இயலானபஞ்சவர்கள்

எப்படிக்குச்சாவார்கள் இக்கனியைத்தின்றவர்கள்
அஸ்தினாபுரத்திற்போய் ஆலோசனை பண்ணவேண்டும்
எப்படியும்பஞ்சவரை இக்காட்டிற்கொல்லவேணும்
என்றுமனதிலெண்ணி இருந்துகனிபுசித்தான்
பசியாறவுண்டானே பாதகன்திரியோதிரன்
கைபூசிக்கொண்டானே கட்டழகன்திரியோதிரன்
சாயாம்புமன்னவனோர் தருமர்பெருமாளும்
பின்னுஞ்சிலகனியை பெருமூட்டையாகக்கட்டி
அப்போதிரியோதனு அழகானவிக்கனியை
ஆரண்மனைக்குக்கொண்டுபோய் அனைவருந்தான்புசிக்க
எடுத்துப்போமென்றுசொல்லி ஈந்தாரேஇக்கனியை
வாங்கியேயக்கனியை மன்னவனுந்தோளிலிட்டான்
நேயாவேபோய்வாறேனென் றடிபணிந்துதெண்டனிட்டான்
சாயாம்புமன்னவனோர் தர்பலிங்கமேதுசொல்வார்
காண்டீபாஅர்ச்சுனரே கடுகியெழுந்திருந்து
அண்ணன்திரியன்முன் னக்கனியின்மூட்டைகொண்டு
காடுகடக்களவும் கைமூட்டைநீதாங்கி
அண்ணனைவழிகூட்டி அனுப்பிவாதம்பியென்றான்
தருமருரைகேட்டு தார்விசயன்தானெழுந்து
கனிமூட்டைதோளில்வைத்து கடுகியேபின்னடந்தான்
திரியோதிரன்பின்னே நடந்தானேதேர்விசயன்
காடுஞ்செடியுங் கடியவனந்திரமும்
ஆறுஞ்சுனையும் அவ்வனமுந்தான்கடந்து
காடுகடந்தபின்பு கைமூட்டைவாங்கிக்கொண்டு
தென்னமுடிவேந்தன் திரியோதிரனேதுசொல்வான்
தூரநில்லு அர்ச்சுனரே தொல்லுலகில்வாராதே
கடக்கநில்லுமர்ச்சுனரே காசினியில்வாராதே
காடெறித்தகாலால் நாடுமிதியாதே
அரைக்கணப்போதையிலே அறுத்தெறிவேனுன்தலையை
தருமர்பொருமையினால் தனித்துவிட்டேன்கோபத்தை
என்றுதுரியனசொல்லி இசைந்துவழிநடந்தான்
அண்ணாருக்காக அர்ச்சுனன்வந்தழுதான்
அப்போதிரியோதிரன் அதிகவிரைவாக
காடுசெடியுங் கரியமலைதான்கடந்து
அஸ்தினபுரத்துக்கு ஆணழகன்போயடுத்தான்
சிங்காதனமீதிற் சென்றானேதிரியோதிரன்
ஆசாரிஜவரையும் அனந்தமகாராசரையும்
மாமன்சகுனியும் மைத்துனன்சயிந்தனையும்
அத்தண்டபேரையும் அழைத்தான்திரியோதிரன்
கொண்டுவந்தகாய்கனியைக் கொப்பெனவேமுன்னேவைத்தான்
இக்கனியையுண்ணுமவ ரெப்படிகாண்மாண்டிடுவார்

தேவேந்திரன்மகனோர் சித்திரசேனனென்னைப்பிடித்தார்
தேரிலெனைக்கட்டி தெய்வலோகங்கொண்டுசென்றார்
அபயமபயமென்று அழுதுபுலம்புகையில்
அர்ச்சுனன்வந்து அமாதுசெய்தான்காண்
என்னைவிடுவித்து இட்டுவந்தானண்ணாண்டை
ஐவரையுங்கண்டேனே அனேகமானவார்த்தைகளை
உச்சிதமாகவேதா னெறநமையாய்வார்த்தைசொன்னேன்
இந்தக்கனிதான்புசிக்கும் எழிலானபஞ்சவர்கள்
எப்படிக்குமாண்டிடுவார் இபலானபஞ்சவர்கள்
என்றிவர்கள்தான்பேசி இருந்தார்சிலநாட்கள்
இப்படியாக யிருக்கின்றவேளையிலே
ஆறும்வருஷம் முடிந்ததுஐவருக்கு

ஆறுவது காமதேனுபர்வதம் முற்றிற்று.

௭-வது, கெந்தர்வபர்வதம்.

ஏழாம்வருஷம் பிறந்ததுபஞ்சவர்க்கு
அந்தவனத்தைவிட்டு அப்பாலேபோனார்கள்
கூடைதலைமேலே குடிவாழ்க்கைகானகத்தில்
கோலிவைத்தசீமாடு கூடைதலைமேலேவைத்தார்
மன்னிவைத்தசீமாடு வனவாசம்போனார்கள்
காமதேனுபர்வதத்தைக் கடந்துவழிகூட்டி.
அந்தவனத்தைவிட்டு அப்பாலேபோனார்கள்
கெந்தர்வபர்வதத்தில் வந்தாரேபஞ்சவர்கள்
ஐந்தடுக்குபர்னசாலை அழகாகவுண்டுபண்ணார்
ஏழடுக்குபர்னசாலை எழிலாகவுண்டுபண்ணார்
அந்தவனத்திலே ஐவர்குடியிருந்தார்
இப்படியாகவே யிவரிருக்கும்வேளையிலே
அங்கேபெருமாளும் அலைகங்கைஸ்நானம்பண்ணி
ஈரமுலர்த்தி இழைசேர்ந்தபட்டுடுத்தி
சாம்பவமூர்த்திபூசைகளும் சகலமுந்தான்முடித்து
ஆசனமிட்டுமல்லோ அரிராமர்பூசைபண்ணார்
கைதனிலேதீர்த்தமள்ளிச் சதிரோனைப்பூசித்து
எதிர்க்குங்கதிரோனை எம்பெருமான்தோத்தரித்து
கண்ணிரண்டுமூடியே கையிரண்டுமேந்திக்கொண்டு
சிவஞானமாகவே ஸ்ரீகிருஷ்ணன்தானிருந்தார்

எம்பெருமாள் செபம்பண்ணும்வேளையில் கெந்தருவன்
தம்பலம்உமிழ பெருமாள் கோபிக்கிறது.

ஆகாயவீதியிலே அழகானகெந்தருவன்
மாயனென்னுங்கெந்தருவன் வாரானேதேரேறி
தேரேறிவருகையிலே தின்றுஉமிழ்ந்தானே
வால்மிளகுஏலரிசி வாசமுள்ளஜாதிபத்திரி

வெத்திலையும்பாக்குகளு மென்றுவுமிழ்ந்தானே
மாயனார்கைதனிலே வந்துவிழுந்தது
அப்பியதம்பலமும் அழாய்மவுமிசையில்விழ
கண்திறந்துபார்த்தாரே கைதனிலேதம்பலத்தை
சுற்றியுங்கேபார்த்தாரே தோன்றவில்லையேவொருவர்
ஆகாயவீதியிலே அவனாரோதெரியாது
கைதனிலேதம்பலத்தைக் காரியுமிழ்ந்தானே
செபதபஞ்செய்கையிலே செய்தவனெருவனென்ன
கண்கள்சிவந்தாராம் காந்தாளமானாராம்
அவ்வலரிக்கண்கள்ரெண்டும் செவ்வலரியாச்சுது
நீலவிழிகண்கள்ரெண்டும் நெருப்புத்தணலாச்சு
கோவைப்பழம்போலக் கூர்விழிகண்சிவக்கும்
பவழப்பழம்போலப் பத்தியேகண்சிவக்கும்
சக்கரத்தைத்தானெடுத்து சாமிபெருமாளும்
சொல்லலினைவுகொண்டார் கோபாலரெம்பெருமாள்
மந்திரதூபமிட்டு வலதுகையில்தானெடுத்தார்
தம்பலம்வுமிழ்ந்தவன்றன் றலையைநீவாங்கிவா
அரைக்ஷணப்போதையிலே அறுத்துவாயவன்றலையை
அரனார்வந்தெதிர்த்தாலும் அமரர்வந்தெதிர்த்தாலும் •
பிரமதேவன்வந்தாலும் பிரியங்கள்சொன்னாலும்
தேவபிரான்வந்தாலும் தெண்டனிட்டுக்கொண்டாலும்
கர்த்தரேவந்து கையமர்த்திக்கொண்டாலும்
முப்பத்துமுக்கோடி முனிவர்தடுத்தாலும்
ஆரார்தடுத்தாலும் ஆரவாரம்பண்ணாலும்
அரைநாழிக்குள்ளாக அறுத்துமவன தலையை
இக்கணமேசென்றுநீ இருதுண்டாய்போட்டிடுவாய்

மாயன் கெந்தருவன்மேல் கோபித்து சக்கரத்தை
அனுப்புகிறது.

சக்கரத்தைதூபமிட்டு சாமியவர்விட்டுவிட்டார்
வருகுதுசக்கரந்தான் வானுலகந்தான்தேடி
இபலபாய்வழிதனிலே எதிர்ப்பட்டார்நாரதரும்
நாரதமாமுனிதான் நமஸ்கரித்தார்சக்கரத்தை
இத்தனைகோபத்துடன் எங்குநீர்போறீர்காண்
அரிராமர்சக்கரந்தான் அம்முனிக்குயேதுசொல்லும்

நாரதர் சக்கரத்தை நீர்போகிறகாரியம் என்ன
வென்று வினவ சக்கிரம் சொல்லுதல்.

ஸ்ரீராமரெம்பெருமாள் செபதபஞ்செய்கையிலே
வாசங்கள்தான்தின்று வலதுகையில்துப்பினான்
ஆகையால்சாமியவர் அப்போதுகோபமானார்
என்னையனுப்பினார் இவன்தலையையறுக்கவந்தேன்

கெந்தருவன் றன்தலையை முந்த அறக்கவந்தேன்
அவ்வார்த்தையைக்கேட்டு அந்தமுனிபோய்நடந்தார்
கெந்தருவன் தன்னருகே வந்தாரேநாரதரும்
ஆரடாகெந்தருவா ஆயரமர்பேரிலே
தம்பலமுமிழ்ந்ததினால் சாமிபவர்கோபமுடன்
சக்கரம் அனுப்பிஉந்தன் தலையைத்தரிக்கவென்று
வருகுதுசக்கரந்தான் மானவிதியாச்சே
ஆதிசிவனருகே அபயமிட்டுப்போனுக்கால்
பரமசிவன்பார்த்துப் பட்சம்வைத்தாராமானால்
ஆதிசிவன்தன்னாலே ஆரும்வினைக்காக்க
அல்லாதேயாமானால் அறுத்துவிடும்உன்தலையை
தப்பிப்பிழையுமென்று தவமுனிசொல்லுகையில்
அவ்வார்த்தைதான்கேட்டு அஞ்சிப்பயந்தவனும்

கெந்தருவன் சக்கரத்துக்கஞ்சி மும்மூர்த்திக ளண்டைபோய்

முறையிட்டுத்தீராமையால் அருச்சுனனண்டை போகிறது.

வாயுவேகமாகவே வழிபிடித்தான்கெந்தருவன்
சக்கரம்வந்திடவே தான்புலம்பிஓடுகிறான்
ஆதிசிவனருகில் அபயமிட்டுஓடுகிறான்
அரவாபரணனே ஐயாஉனக்கபயம்
சங்கராநான்சரணம் சதாசிவாஉனக்கபயம்
வெள்ளைரிஷபமேறும் வித்தகாநான்சரணம்
மாபூஷணந்தரித்த மகாதேவாஉனக்கபயம்
முக்கண்படைத்தவரே முதல்வரேஉனக்கபயம்
திரிபுரமெரித்தவெங்கள் தேவாஉனக்கபயம்
காமனைக்கண்ணாலெரித்த கடவுளேநான்சரணம்
எமனையுதைத்தவரே ஈசாவுனக்கபயம்
கங்கையணிந்தோனே உடுக்கைதரித்தோனே
திங்களைத்தன்சிரசில் தரித்தசிவனாரே
அபயமபயமையா அந்திவண்ணாஉனக்கபயம்
அபயக்குரல்கேட்டு ஆதிசிவனேதுசொல்வார்
ஆரடாகெந்தருவா அபயமிட்டவாரேது
ஆருக்குபகையாகி அழுதுபுலம்பிவந்தாய்
வந்தவயணங்கள் வார்த்தையுரையுமென்றார்
ஆண்டவனேஎன்சாமி அடியேனொருவிண்ணப்பம்
ஆகாயவீதியிலே அழகுரதமேறிவந்தேன்
காயாரக்காய்த்ததொரு கமுகினதுபாக்கை
வாயாரத்தின்றுநான் மண்மேலேதுப்பினேன்
தாமரைப்பொய்கையிலே சாமிபெருமாளும்
தினகரனைத்தான்பார்த்து செபதபஞ்செய்தாராம்
நானுமிழ்ந்ததம்பலம் ராமர்கையிற்றான்விழவே

கோபாலசுவாமியவர் கோபம்பெரிதாகி
சக்கரத்தையனுப்பினார் தலையைத்தரிக்கவென்று
என்னைக்கொல்லவருகுது இயலானசக்கரந்தான
ஆகையாலாண்டவனே ஆதரிப்பீரென்றுவந்தேன்
என்னைநீர்காத்தருளும் ஈசாவுனைப்பணிந்தேன்
கர்க்கடனுனக்கு கார்வண்ணன்மைத்துனரே
இவ்வார்த்தைதான்கேட்டு ஈஸ்வரருமேதுசொல்வார்
நான்வேறுவிஷ்ணுவேறோ நானிலத்திற்கெந்தருவா
ஆயருக்குபகையாகி அருகேவரலாமோ
உன்னைநான்காத்தாக்கால் உலகளந்தானென்னசொல்வார்
கார்வண்ணரெந்தனுக்கு கடுகிப்பகையாவார்
காக்கமுடியாது கடக்கவேபோய்விடுங்காண்
பிரமதேவன்றன்னருகே போனீரேயாமானால்
அவராலேயாகுங்கா ணாதரிக்கவல்லபிரான்
என்றுவுரைத்தாராம் எண்டோளப்போது
அழுதுபுலம்பியே அப்புரம்போய்புகுந்தான்
சத்யலோகந்தான்புகுந்து பிரம்மாருகில்வந்தான்
அபயமபயமையா ஆதரிக்குங்கர்த்தாவே
என்னையேயாதரியும் என்றல்லோதெண்டனிட்டான்
ஆயுனைப்பார்த்தெழுதும் அரிபிரமரேதுசொல்வார்
ருக்குப்பயமாகி அழுதுபுலம்பிவந்தாய்
வந்தகருமங்கள் வாய்திறந்துசொல்லுமென்றார்
ஆண்டவனேஐயாவே அயனாரேகேளும்
ஆகாயவீதியிலே அழகுரதமேறிவந்தேன்
அடைக்காயும்வெற்றிலையும் ஐயானான்மென்றுநின்று
வாசங்கள்நின்றுநான் மண்மேலேதுப்பினேன்
மாயவனார்கைத்தலத்தில் வந்துவிழுந்ததாம்
மாயன்வெகுகோபமாகி வாவிட்டார்சக்கரத்தை
என்னையேகொல்லவென்று இயலாயனுப்பினார்
ஆகையாலாண்டவனே ஆதரிப்பீரென்றுவந்தேன்
எந்தனையாதரியும் என்றல்லோஅடிபணிந்தான்
இவ்வார்த்தைதான்கேட்டு ஏதுசொல்வான்நான்முகனும்
நான்வேறுவிஷ்ணுவேறோ நானிலத்திற்கெந்தருவா
மாயருக்குப்பகையாகி வந்தாயேபாதகனே
உன்னைநானாதரித்தால் உலகளந்தாரெந்தனுக்கு
பொல்லாப்புநேர்ந்துவிடும் பெரும்பாவியெந்தனுக்கு
உன்னையேஆதரிக்க உதவாதுயெந்தனுக்கு
எமபுரமேகிநீ எமனுடனுரைத்தால்
எந்தவிதமாகிலும் எமனுன்னைகாத்திடுவான்
கடுகிநடவுமென்று கைவிட்டார்பிரமதேவர்
அழுதுபுலம்பியே திகிரைவாய்தான்வாரான்

எமனருகில்வந்து இளைத்துப்புலம்புகிறான்
காலனுங்கண்டு கடுகவேயேதுசொல்வான்
ஆருக்குப்பகையாகி அழுதுபுலம்பவந்தாய்
வந்தகருமத்தை வாய்திறந்துசொல்லுமென்றான்
அப்போதுகெந்தருவன் அவருக்கெடுத்துரைப்பான்
அந்தரமார்க்கத்திலே அழகுரதமேறிவந்தேன்
வாசங்கள்தின்றுநான் மண்மேலேதுப்பினேன்
வந்துவிழுந்ததுவாம் மாயருடைகைத்தலத்தில்
ஆகையால்கோபித்து அனுப்பினார்சக்கரத்தை
என்னைகழுத்தறுக்க எகிறிவருகுதென்றான்
என்னையுமாதரியு மென்றானேகெந்தருவன்
காலனுங்கேட்டுமவன் கடுகியெடுத்துரைப்பான்
மாயருக்குப்பகையானு மன்னவரேபார்க்கலாமோ
மாயருடைவூழியத்தை மன்னவரேசெய்திடுவேன்
உன்னையேகாத்தாலே உலகளந்தார்கோபமுற்றால்
எதிர்த்துப்புறப்பட்டால் எதிர்நிற்கப்போறேனோ
காக்கமுடியாது கட்டழகாகெந்தருவா
அமராபதியாளும் அழகானதேவர்பிரான்
தேவேந்திரனருகில் சென்றுநீகேழ்ப்பாயானால்
காக்கவும்வல்லபிரான் கடுகிநீபோருமென்றார்
அவ்வார்த்தைகேட்டுமவன் அழுதுபுலம்பிவாரான்
தெய்வலோகத்திலே தேவேந்திரனருகில்
அபயமிட்டுஅடிபணிந்தான் ஆனதொருகெந்தருவன்
ஆரடாதம்பிநீ அறியவுரையுமென்றான்
ஆண்டவனேஐயாவே அடியேனொருவார்த்தை
ஆகாயவீதியிலே அழகுரதமேறிவந்தேன்
வெற்றிலையும்பாக்கு வால்மிளகுசாதிபத்திரி
ஜாதிக்காய்ஏலரிசி சன்னலவுங்கமுடன்
வாசங்கள்தின்றுநான் மண்மேலேதுப்பினேன்
வந்துவிழுந்துதாம் மாயவனார்கைத்தலத்தில்
ஆகையால்எம்பெருமாள் அடியேன்மேல்கோபமாகி
சக்கரத்தையனுப்பியென்தன் தலையையறுயுமென
வருகுதுசக்கரந்தான் வல்லுயிரைவாங்கவென்று
கொல்லவருகுது கொப்பெனவேசக்கரந்தான்
ஆதரித்தென்னைரட்சி அநேககோடிமோட்சமுண்டு
என்றவுரைகேட்டு எதுசொல்வாரிந்திரரும்
மாயருக்குபகையாகி வந்தவனை ஆதரித்தால்
எதிர்த்தாரேயாமானால் எதிர்நிற்கப்போறேனோ
மாயனுக்குச்சரியானோர் வையகத்திலொருமில்லை
உன்னையேயாதரிக்க உலகத்திலொருமில்லை
தருமரு—தம்பியவன் வச்சிரபனருச்சுனன்தான்

அர்ச்சுனனுன்னை ஆதரிக்கவேமுடியும்
அபயக்குரல்கேட்டு ஆதரிப்பான்வாள்விஜயன்
ஆதிசிவனான ஆருரும்வந்தாலும்
எழுதும்பிரமாவும் எம்பெருமாள்வந்தாலும்
முப்பத்துமுக்கோடி முனிவர்கள்வந்தாலும்
ஆர்வந்தெதிர்த்தாலும் ஆரபாரம்பண்ணினாலும்
அர்ச்சுனராஜனவன் அனைவோரைவென்றிடுவான்
வாள்விஜயனருச்சுனனும் வல்லமையுள்ளவன்காண்
அர்ச்சுனனைநீதேடி அபயமிட்டுபோனீரானல்
ஆதரிப்பான்வாள்விசயன் அதிவிரவில்போய்ச்சேரும்
என்றவுரைகேட்டு எழுந்தானேகெந்தருவன்
அழுதுபுலம்பியே அருச்சுனனைத்தேடிவாறான்
தெய்வலோகந்தாண்டி தேர்விஜயனைத்தேடியே
அழுதகண்ணுஞ்சிந்தையுமாய் அலறியேயோடிவாரான்
அபயமபயமென்று அருச்சுனன்முன்னேவந்தான்

அருச்சுனன் கெந்தருவனுக்கு அபயங்கொடுத்தது

அபயக்குரல்கேட்டு அங்கெனவேயேதுரைப்பான்
ஆரடாகெந்தருவா அழுதுபுலம்புவானேன்
ஆரெதிர்த்துவந்தாலும் அமாதுசெய்திடுவேன்
அந்தரதேவதைகள் ஐயன்பிடாரிகளும்
ஆகாயவாணிகளென் றுத்துமந்தாவறிய
காக்கிறேனஞ்சாதே என்றல்லோகைகொடுத்தான்
அர்ச்சுனன்கைகொடுத்து அஞ்சாதேயென்றுசொல்ல
சற்றேபயந்தெளிந்தான் தார்வேந்தன்கெந்தருவன்
அர்ச்சுனராஜனவன் அப்போதுயேதுசொல்வான்
ஆருக்குப்பயங்களாகி அழுதுபுலம்பிவந்தாய்
எவரெதிர்த்தாருன்னோடே இங்கழுதுநீவந்தாய்
வந்தகருமமென்ன வாய்திறந்துசொல்லுமென்றான்
அஞ்சிப்பயந்தவனும் அர்ச்சுனனோடுரைப்பான்
ஆகாயவீதியிலே அழகுரதமேறிவந்தேன்
வாசங்கள்தின்றுநான் மண்மேலேதுப்பினேன்
நானுமிழ்ந்ததம்பலமும் ராமர்கையில்விழுந்துதாம்
ஆகையால்மாயவரும் அப்போவெகுகோபமுடன்
என்னையேகொல்லவென்று எடுத்துவிட்டார்சக்கரத்தை
சக்கரம்வருகுதுகாண் தலையைதரிக்கவென்று
ஆதிசிவனருகில் அபயமிட்டுபோனேன்னையா
தன்னாலேயாகாது என்றல்லோதள்ளிவிட்டார்
அயன்பிரமதேவனிடம் அபயமிட்டுபோய்ச்சேர்ந்தான்
என்னாலேயாகாது என்றல்லோதள்ளிவிட்டார்
எமதர்மராசனண்டை எதிர்கொண்டபயமிட்டேன்

தன்னாலேயாகாது என்றல்லோதள்ளிவிட்டார்
தேவேந்திரனருகில் சென்றுநானபயமிட்டேன்
காத்திடுவாரென்றுநான் கடுகிஅபயமிட்டேன்
என்னாலேயாகாது என்றல்லோதள்ளிவிட்டார்
அழகில்மிகுந்தவரே அர்ச்சுனரேஉம்மைநாடி
தேடியேஅபயமிட்டு தெய்வலோகம்விட்டுவந்தேதே
ஆதரித்தீராமானால் அனைவர்க்குங்கீர்த்தியுண்டு
இவ்வார்த்தைதான்கேட்டு எழில்விசயனர்ச்சுனனும்
எண்ணாதுமெண்ணுகிறான் எண்ணிமனங்குவன்றுகிறான்
மாயருக்குப்பகையாகி வந்தவனைக்காத்தாலே
ஆயருக்குமெந்தனுக்கும் அடுத்தார்பகையாலே
என்னசெய்யப்போறேமென்று ஏங்கிவிசாரமிட்டு
ஐவர்சகாயரல்லோ ஆயர்பெருமாளும்
நம்பினேனென்றவரை ரட்சிக்கவேணுமல்லால்
காக்கிறேமென்றுசொல்லி கைவிடலாகாது
ஆயர்பெருமாளுக்கு அவபாகவார்த்தைசொல்லி
எந்தவிதத்திலேயும் இவனுயிரைக்காக்கவேணும்
அல்லவென்றுகோபமிட்டால் அமாதுமச்சப்பிடுவோம்
என்றுநினைத்தவனும் என்னசொல்வான்வ.ள்விசயன்
திங்களும்சூரியனும் தெற்குவடக்கானாலும்
அழகானதாமரையும அடியோடேபூத்தாலும்
நறுக்கிப்பிழிந்துஎன்னை நாகத்திற்போட்டாலும்
நாவாலேசொன்னசொல் நான்தவறப்போறதில்லை
எந்தவிதத்திலேயும் இடாகற்றிகாத்திடுவேன்
என்றல்லோவாதரித்தான் இயலானவாள்விசயன்

அருச்சுனனை கெந்தருவனுக்குபயந்தீர்க்க பெருமாளுக்கு கோபம்வந்து சக்காத்தை யனுப்புகிறது.

வருகிறசக்காந்தான் மண்ணுவிண்ணுங்கொள்ளாமற்
கண்கள்பொறிபறக்க கடுகிவருகிறதே
அருச்சுனராசரண்டை அருகேவந்துதெண்டனிட
என்னருகேகாரியமேன் எங்குவந்தீர்சக்கரமே
வந்தகருமமதை வாய்திறந்துசொல்லுமென்றான்
சாமியனுப்பிவைத்த சக்காமேதுசொல்லும்
மாயனுக்குப்பகையான மாபாவிகெந்தருவன்
அருச்சுனரேஎன்னிடத்தில் வந்தானரும்பாவி
அவனைக்கழுத்தறுக்க அனுப்பினார்மாயவனார்
ஆகையாலனுப்புங்காண் அருச்சுனரேயவன்தலையை
அறுத்தெரிந்துயான்போறேன் அவனையனுப்புமென
தனஞ்செயனுமப்போது சக்காத்துக்கேதுசொல்வான்



பெருமாள் சக்கரத்துக்குப் கெங்கருவன் பயந்து அருச்சுனனி டத்தில் அபயமடைதல் பெருமாள் திரியோதிரனுடன்கலந்து அர்ச் சுனனிடம் போர்செய்தல்

பாளந்தாரானவர்க்குப் பகையாளனென்றறியேன்
அபயமபயமென்று னாதரித்தேனவனை
காக்கிறோமென்றுசொல்லி கையைவிடலாகாது
ஆகையால்சக்கரமே ஆயருக்குசேதிசொல்லும்
கோடிசரணம்நான் கும்பிட்டேனென்றுசொல்
ஆயிரந்தெண்டனிட்டு அடிபணிந்தேனென்றுசொல்லும்
சக்கரத்தாழ்வாரும் தார்விஜயற்கேதுசொல்லும்
ஆனால்போய்வாரேனென்று அப்போதிரும்பிவந்து
மாயனைகண்டு வணங்கிநமஸ்கரித்து
ஆதிசிவனருகில் அபயமிட்டுவோடுகையில்
ஆதரிக்கமாட்டேனென்று அவரும்விலக்கிவிட்டார்
அருச்சுனனார்தன்னருகில் போனானபயமிட்டு
வணங்கிநமஸ்கரித்து மாயவர்வார்த்தைசொன்னேன்
உனக்குப்பகையான உண்மையெல்லாம்நானுரைத்தேன்
எத்தனைசொன்னாலும் இரங்காமலருச்சுனனும்
ஆண்டவரேயுன்னருகே அனுப்பினானென்சொல்லுமென
இவ்வார்த்தைகேட்கலுமே எம்பெருமாள்கோபமாகி
ஆங்காரக்கோபமுடன் அரிராமரென்னசொல்வார்
ஐவரைக்காப்பதற்கு ஆண்டவனாய்நானிருந்து
இத்தனைநாள்காத்தேன் இபலானபஞ்சவரை
எனக்குப்பகையாளி தனக்குப்பகையல்லோ
ஆதரிக்கஞாயமுண்டோ அறியானோயென்சமர்த்தை
மறுகாலொருதரம்நீ வாள்விஜயனருகிற்சென்று
நானுரைத்தவார்த்தையெல்லா நல்விஜயனருகிற்சென்று
மாயவர்க்குவேண்டாத மாபாவியானவனை
விட்டுவிட்டாலல்லாது வேணபகையாகுமென்று
குருகுலவம்மிசத்தார் கூட்டோடொழியுமென்று
கொல்லநினைப்பார்காண் குடிகேடுவருகுதென்று
சொல்லியேவாருமென்று சொன்னாரேமாயவனார்
அப்போதுசக்கரத் தாழ்வாருந்தானடைந்தார்
காடுஞ்செடியுங் கரியமலைதான்கடந்து
அருச்சுனராசனண்டை அருகேவந்துதெண்டனிட்டு
மாயவனார்சொன்னதொரு வார்த்தையொன்றுந்தப்பாமல்
காண்டீபனருச்சுனற்கு கரியமால்சேதிசொல்லும்
உண்டானவார்த்தையெல்லாம் ஒளியாமலேயுரைத்தான்
காண்டீபனருச்சுனனும் கடுகவேயேதுசொல்வான்
ஆதரிவான்கெந்தருவன் ஏழையானுன்னடியேன்
வாள்விஜயனர்ச்சுனன்மேல் வன்பகையுந்தனக்கேன்
ஏதுகுற்றமானாலும் எனக்காய்மனம்பொறுத்து
ஆயிரந்தெண்டன் அடிபணிந்தேனென்றுசொல்லும்
காக்கிறேனென்றுசொல்லி கைவிடஞாயமுண்டோ

நறுக்கிப்பிழந்துனைத்தே சக்கரத்திற்போட்டாலும்
வைகவிட்டான்விசையனென்று கண்ணருக்குநீயுரையும்
ஊழியுள்ளகாலமட்டும் பூசைமறவானருச்சுனனும்
வணங்கினேனென்றுரையும் மாயருக்குநீர்தாமும்
அநேககோடிநமஸ்காரம் அருச்சுனன்செய்தானென்று
தாமோதரன்றனக்கு சக்கரமேபோய்ச்சொல்லும்
சக்கரமேபோய்ச்சொல்லுஞ் சரணஞ்சரணமென்று
சொல்லித்தொழுதானே சுவாமிபெருமானை
சக்கரத்தாழ்வாருக்குந் தனஞ்செயன்விடைகொடுக்க
சக்கரத்தாழ்வார் தானுமங்கேபோய்நடந்தார்
காடுஞ்செடியுங் கரியமலைதான்கடந்து
ஆறுஞ்சுனைதாண்டி அதிகவனந்தாண்டி
மாயாருகில்வந்து வணங்கியே தண்டனிட்டு
வாள்விசையன்சொன்னதொரு வார்த்தைகள்தானுரைக்க
ஆயரவர்கேட்டு, ஆங்காரக்கோபமதாய்
இவர்பஞ்சபாண்டவர்க்கு அனர்த்தம்பிறந்ததென்ன

சக்கரம் அருச்சுனன் மனமறிந்து பெருமாளுக்குச்
சொல்ல பெருமாள்கோபித்துச் சாத்தகியை
யனுப்புகிறது

கொல்லநினைப்பாரோ குடிகேடுவந்திடுமே
வேண்டாங்காண்வாள்விசையா வீண்பகைதேடாயென்
அருச்சுனற்குச்சொல்லிநீ அதிவிரைவிலோடியந்த
கெந்தருவன்தன்தலையை அந்தட்சணமறுத்து
ஒருக்ஷணப்போது உத்திரவுகொண்டுவாரும்
என்றவுரைகேட்டு எழுந்துநடந்தாரும்
காடுஞ்செடியுங் கரியமலைதான்கடந்து
அருச்சுனன்தானிருக்கும் ஆரணியம்போய்ச்சேர்ந்தான்
அருச்சுனனைக்கண்டு அடிபணிந்துதெண்டனிட்டான்
மாயனுரைத்ததொரு வார்த்தையொன்றுந்தப்பாமல்
ஒன்றுமொளியாமல் வுரைத்தானேசாத்தகிதான்
அபிராமர்சேதியெல்லாம் அருச்சுனன்தான்கேட்டு
எத்தனைவார்த்தைகளா னிரக்கமாய்ச்சொன்னாலும்
இரங்காமல்மாயவரும் எதிர்க்கவும்ஞாயமுண்டோ
ஆயன்பெருமாளும் அறியாரோஎன்சமர்த்தை
பெண்டுகள்பேச்சுகளோ பேசுகிறாரெம்பெருமாள்
கைவலுமையுண்டானால் கடுகிவாச்சொல்லும்
மூலையிலேதானிருந்து மொருகிறதுஞாயமுண்டோ
மைதானவெளியிலே வரச்சொல்லுஞ்சண்டைபண்ண
தாக்கிறேனென்றவனை ஒக்கவிடப்போகிறேனே
மாயவருடனாக மயேஸ்வரனேர்வந்தாலும்
பெருமாளுடனாகப் பிர்மதேவர்வந்தாலும்

எவரெதிர்த்துப்போனாலும் இனிப்பேனென்றுபாராதே
போவென்றுசொன்னானே போர்விஜயன்கோபமதாய்
சாத்தகியாழ்வாரும் தானடந்தார்பொட்டெனவே
ஆயரருகில்வந்து அடிபணிந்துதெண்டனிட்டான்
அருச்சுனன்சமர்த்தைச்சொல்ல அடிபணிந்துதெண்டனிட்டார்
சண்டைக்குமுல்லீபாய் தான்வரச்சொன்னதுவும்
அவ்வார்த்தைசொல்லுகையில் ஆயருங்கோபமுற்று
அவ்வலரிக்கண்கள்ரெண்டும் செவ்வலரியாகுதுபார்

அருச்சுனன்மேல் பெருமாள் கோபமாகி சண்டைக்குப்
போக திரியோதினனை வரவழைக்கிறது.

கோபம்பெரிதாச்சு கோபாலநாதருக்கு
சாத்தகியைத்தானழைத்து சாமியவரேதுசொல்வார்
திரியோதிரனுக்குச் சேதியுரையுமென்றார்
மாயவற்குப்பகையானார் மன்னர்பஞ்சபாண்டவர்கள்
ஐவரைக்கொல்லவென்று ஆயர்பயணமிட்டார்
என்னுடையசேனைகளும் யுத்தமானராசர்களும்
சேனைத்துணையாகச் செப்பிவரச்சொன்னார்
வாருங்களென்று வரவழைக்கிறியனைத்தான்
இப்போசமயம் இதோபயணம்வாருங்களென்று
நாகக்கொடிவேந்தன் ராசாவையழையுமென்று
சாத்தகியாழ்வாரும் சரணமிட்டுபோய்நடந்தார்
அஸ்தினாபுரத்தைக்கு அடைவுடன்போய்ச்சேர்ந்து
திரியோதிரனுக்குச் சேதிகள்சொல்லலுற்றார்
ஐவரைக்கொல்லுகைக்கு ஆயர்மனதாகி
அழைத்துவரச்சொன்னார் அரவக்கொடியோனே
வருவீரேனவென்றுசொல்லி வாய்மொழிகேட்கலுற்றார்
சாத்தகிசொல்லுமே சர்ப்பக்கொடியோனும்
திரியோதிரன்கேட்டு சிந்தைமனங்குளிர்ந்து
ஐவரைக்கொல்லுகைக்கு அதிகமனதாகி
நல்லசமயம் நமக்குக்கிடைத்ததென்று

திரியோதினன் பெருமாளிடம் வருகிறது

அங்கேகட்டான்சண்டாளை அடியுமென்றான்பேரிகையை
இன்றுவெளிக்கூடாரம் இப்போதுபோடுமென்றான்
கானலுக்குளெடுத்தார்கள் கருப்புநல்லகூடாரம்
வெயிலுக்குளெடுத்தார்கள் வெள்ளைநல்லகூடாரம்
யானையின்மேலடங்காவும் குதிரையின்மேல்டோலாவும்
ஒட்டையின்மேல்நகபத்தி ஓசைவிடுபடவே
யானையின்மேல்சேனையுடன் அரசமன்னர்பயணமிட்டார்
திரியோதிரன்தம்பிமார்கள் தொண்ணூற்றுஒன்பதுபேர்
கருணன்சகுனியும் காந்தாரிபிள்ளைகளும்
துரோணர்சுவத்தாமன் சொற்பெரியகாங்கையனும்

கிருபன்கிருபாசாரி கீர்த்தியுள்ளமன்னர்களும்
பிள்ளையவன்லக்குணனும் பேர்மிகுந்தமந்திரியும்
மற்றுஞ்சிலராசர்களும் மந்திரிபயணமானார்
அமரதருஞ்சமரதரும் அதிரதரானவரும்
கலிங்கர்தெலுங்கர்களும் கன்னடியரானவரும்
சழத்துவங்கணரும் இளநாட்டுச்சோனகரும்
எண்ணொன்று ஆயுதங்கள் எடுத்தரையிற்கட்டினார்கள்
நாலுபக்கத்திலுள்ள ராசாக்கள்சேனையுடன்
கார்மேகம்போலே கறுத்தானைகூட்டம்வரும்
மேகத்துமின்னலைப்போல் வெள்ளானைக்கூட்டம்வரும்
வானத்துமின்னலைப்போல் மணித்தேரசைந்துவர
செவ்வானம்போலே சிவந்தபுரவிகளும்
அச்சிறுகிறென்ன யானைநெடுந்தேரசைய
வண்டில்கிறுகிறென்ன மதயானைகோஷ்டமிட
குதிரைகளைக்குயங்கே கொக்கரிக்கும்பாளையங்கள்
செந்துவெழும்புகுது தினகரனைக்கப்புகுது
கருந்துவெழும்புகுது கதிரோனைக்கப்புகுது
சண்டைசண்டையென்றுசொல்லி சண்டைநகரடிபடுது
ரணங்கள்ரணங்களென்று ரணபேரிதான்முழங்க
தேர்களசைந்துவரச் சிகரக்கொடிபறக்க
மாயவனார்பட்டணமே வாரார்களெல்லோரும்
அங்கேநட்டான்சண்டாளவை அங்கிரங்கப்பாளையங்கள்
திரியோதிராசன் ஸ்ரீகிருஷ்ணனருகில்வந்து
மாயவனைக்கண்டு வணங்கியேதெண்டனிட்டான்
ஏழுலகமாண்டசாமி எம்பெருமாளேதுசொல்வார்
மாநாகந்கொண்ட மகாராசாநீர்கேளும்
காலையில்தானெழுந்து கனிவாய்முகங்கழுவி
தினகரனைத்தோத்தரித்து செய்தேன்ஜெபதபங்கள்
ஆகாயவீதியிலே அரும்பாவிகெந்தருவன்
வாசங்கள்தின்றுமெந்தன் வலதுகையில்தானுமிழ்ந்தான்
அவனைக்கழுத்தறுக்க அனுப்பினேன்சக்கரத்தை
அபயமபயமென்று அழுதுபுலம்புகையில்
அருச்சுனராஜனவன் ஆதரித்துக்கொண்டானும்
ஆகையாலருச்சுனனை அதமாக்கவேணுமென்று
உந்தனுக்குச்சொல்லி உரகதனைவாருமென்றேன்
என்வார்த்தைதள்ளாமல் என்மேல்தயவாகிவந்தீர்

ஐவரைக்கொல்ல திரியோதிரனும் அவன்சேனைகளும்எம்பெருமாளும் அவர்சேனைகளும் சண்டைக்குவருகிறது.

ஐவரைக்கொல்லுகைக்கு அனைவோரும்போவோமென்றார்
படைப்பயணமென்று பயணபேரியடியுமென்றார்
அமரதரும்சமரதரும் அதிரதரானவரும்

கலிங்கர்தெலுங்கர்களும் கன்னடியரானவரும்
ஈழத்துவங்கணரும் இளநாட்டுச்சோனகரும்
அத்தண்டராணுவமும் அல்லவரும்பயணமிட்டார்
துரோணராசுவத்தாமர் சொல்லரியவீரர்களும்
கிருபன்கிருபாசாரி கீர்த்திபெற்றகருணனுமே
எண்ணான்குஆயுதங்கள் எடுத்தரையிற்கட்டினார்கள்
ஏறினார்தேர்மேலே எடுத்தார்நெடுங்குடையை
தோணியும்மாவணியும் சேனைத்திரளுடனே
வாரஜெனங்களெல்லா மட்டுமிதங்களில்லை
காடுஞ்செடிதாண்டி கரியமலைதான்தாண்டி
வனமாய்வனங்கடந்து வருகுதுபாளையங்கள்
தினகரன்வனந்தனிலே சேர்ந்தார் துரைகளெல்லாம்
அன்றுமுகாமங்கிருந்து அப்பால்நடக்கலுற்றார்
முருக்கமகாரிஷிவனத்தில் முடிமன்னர்வந்தார்கள்
அன்றுமுகாமங்கிருந்து அப்பால்நடக்கலுற்றார்
காளமகாரிஷிவனத்தில் கடுகிவந்தாரன்னேரம்
அன்றுமுகாமங்கிருந்து அப்பால்நடக்கலுற்றார்
காமதேனுபர்வதத்தில் கடுகிவந்தார்துரைகளெல்லாம்
அன்றுமுகாமங்கிருந்து அப்பால்நடக்கலுற்றார்
கெந்தர்வபர்வதமே கிட்டியேவாறார்கள்
ஒற்றொருவனை ஓடியேசொல்லுமென்றார்
திரியோதிரன்படையும் ஸ்ரீகிருஷ்ணன்சேனைகளும்
வருகிறாரென்றுசொல்லி வாள்விஜயனுக்குரையும்
என்றுசொல்லியருச்சுனற்கு அனுப்பினார்தூதுவனை

அருச்சுனற்கு எம்பெருமாள் சண்டைக்குவருகிறே னென்று தூதனிடம் சொல்லி யனுப்புதல்.

ஓடினான்தூதுவனும் ஒருநொடியிற்போய்ச்சேர்ந்தார்
அருச்சுனராசருக்கு அடிபணிந்துதெண்டனிட்டு
மாயனும்வுரகதனும் வருகிறார்சண்டைபண்ண
எச்சரிக்கையாகவே இருமென்றாரெம்பெருமாள்
இவ்வார்த்தைதான்கேட்டு எழுந்தானருச்சுனனும்
தருமருகில்வந்து சாஷ்டாங்கதெண்டனிட்டு
அண்ணன்தருமருக்கு அடிபணிந்துதெண்டனிட்டார்
ஆகாயவீதியிலே அழகானகெந்தருவன்
மச்சுரதமேறி வருகிறவேளையிலே
வாசங்கள்தின்து மண்மேலேதுப்பினனும்
அவனுமிழ்ந்ததம்பலங்கள் அரிராமர்கையில்விழ
மாயர்பெருமாளும் மகாகோபந்தானாகி
சக்கரத்தைவிட்டார்காண் தலையைத்தரிக்கவென்று
அபயமபயமென்று அலறிப்புலம்பிவந்தான்
அபயக்குரல்கேட்டு ஆதரித்தேதனைவனை

ஆகரித்தேனென்றுசொல்லி அமர்செய்யவாறாராம்
ஒருவரைக்கொல்லவென்று அரிராமர்வாறாராம்
மாயருடன்சண்டைபண்ண வாரீரோஅண்ணாவே
இவ்வார்த்தைதான்கேட்டு எதுரைப்பார்தருமருமே
போருக்குமாயருடன் போகாதேதம்பியென
வெற்றிமதயானை வீமனவனேதுசொல்வான்
அஞ்சாமல்தம்பியரே அதமாக்கிப்போட்டிடுவேன்
திரியோதிரன்படையும் ஸ்ரீராமர்சேனைகளும்
எல்லவரையுங்கொன்று எமலோகஞ்சேர்த்திடுவேன்

வீமனும் அர்ச்சுனனும் சண்டைக்குப் புறப்படுகிறது.

என்றுமதவீமன் எழுந்தானேகோபமுடன்
தருமரையுந்துரோபதையும் தம்பிமாரிருவரையும்
உச்சிமலைநடுவே உள்ளேகுகையிருக்கும்
அந்தகுகையிலே அனைவரும்போயிருங்கள்
வந்தவிரோதியெல்லாம் மண்ணுக்கிரையிடுவோம்
எம்பெருமாள்சேனைகளை எமலோகஞ்சேர்த்திடுவோம்
எச்சரிக்கையாகவே இருமென்றானப்போது
அப்படியேதருமரவர் அதிவிரைவாய்த்தானெழுந்து
உச்சிமலைநடுவே ஒருகுகையிற்போயிருந்தார்
வீமனருச்சுனரும் விரைவாகத்தானெழுந்து
நீண்டிடுங்கால்களுக்கு நெறிஞ்சிப்பூச்சல்லடமாம்
குந்திபிடுங்கால்களுக்கு குறிஞ்சிப்பூச்சல்லடமாம்
மண்டியிடுங்கால்களுக்கு மாதளம்பூச்சல்லடமாம்
தூக்கிவைக்குங்கால்களுக்கு தூத்தியப்பூச்சல்லடமாம்
சல்லடங்களிட்டுமல்லோ தட்டிவரிந்துகட்டி
தட்டிவரிந்துகட்டி தாமரைப்பூசுங்குவிட்டு
அம்புவில்லுந்தானெடுத்து ஆயுதபட்டார்கள்
வடக்குமுனையிலே மதவீமன்வந்துநின்றான்
தெற்குமுனையிலே தேர்விஜயன்வந்துநின்றான்
வருகுதுபாளையங்கள் மண்ணுவிண்ணுங்கொள்ளாமல்
ஆனைகுதிரைரதம் அளவில்லாச்சேனைகளும்
வருகிறஜனங்கள்தனை மாயவனார்தானழைத்து
திரியோதிரனை சேரவரவழைத்து
உன்னுடையசேனைகளை உகமையுள்ளராஜர்களை
சமரதுசெய்யவந்த சமத்துள்ளமன்னர்களை
ஆனைகுதிரைகளும் அரசமன்னருள்ளவரும்
மாவணியுந்தோணியும் மற்றுமுள்ளராணுவமும்
உன்னுடையபாளையத்தைஒன்றாகவேகூட்டி
வடக்குமுகத்திலே மதவீமன்தன்மேலே
சண்டைபோய்செய்யுமென்று தான்சொன்னார்திரியனுக்கு

தெற்குமுகத்திலே தேர்விஜயன் தன்னருகே
என்னுடையசேனைக ளெல்லோரும்போயெதிர்த்து
அர்ச்சுனன் தன்னுடனே அமரதுசெய்திடுவேன்
என்று அனுப்பிவைத்தார் இயலானமாயவரும்
தவலைச்சங்கூதினர் சண்டைக்குவாரேனென்று
ஊதினர்சின்னம உலகளந்தார்பாளையத்தில்
சண்டைசண்டையென்றுசொல்லி சண்டைநகரடிபடுது
ரணங்கள் ரணங்களென்று ரணபேரியடிபடுது
செந்தூளெழும்புகுது தினகரனைக்கப்புகுது
கருந்தூளெழும்புகுது கதிரோனைக்கப்புகுது
வந்துயெதிர்த்தார்கள் வாள்விஜயன் தன்னுடனே
அந்தசமயத்தில் அரவக்கொடியோனும்
தன்னுடையசேனையுடன் தான்வடக்குதிசையதனில்
வந்துயெதிர்த்தானே மதவீமன் தன்னுடனே
எண்ணெணுச்சேனையுடன் எச்சரித்துதான்வளைத்தார்
சிங்கநாதந்தானூதி சேனைகளுங்கொக்கரித்தார்
கண்டான்மதவீமன் கண்கொள்ளாச்சேனைகளை
எல்லவரைக்கொல்லவென்று எழுந்தானேமதகரியான்
கோபம்வருகுது கொற்றவனார்வீமனுக்கு
அவ்வலரிக்கண்கள்ரெண்டும் செவ்வலரிபூத்திடுது
கண்ணையுருட்டிக் கதும்பினன்சேனைகளை
எட்டினன்கல்மலையை எகிறவிட்டான்பாளயத்தில்
மலைகளைத்தான்பிடுங்கி மதவீமன்வீசுகிறன்
குன்றுகள்பேர்த்தெடுத்துக் கொப்பெனவேசாடுகிறன்
ஆனைகுதிரைகளும் அலரிக்கலங்கிடுமாம்
அச்சுகளும்தான்விழுந்து அனேகரதம்விழுமாம்
வண்டிமுறிந்துசில மச்சுத்தேர்தானொடியும்
ஜெனங்கள்மடியுது செம்புரவிஓடுகுது
கண்டங்கண்டமாகுது கடுஞ்சேனையத்தனையும்
அம்மாடியென்றுசொல்லி அலையுதுபாளையங்கள்
செத்தஜனங்களென்றால் மட்டுமிதங்களில்லை
ரத்தாறுஓடுகுது ரணங்கள்மிகக்கொப்பளிக்க
ஐயோசிவனேயென்று அலையுதுபாளையங்கள்
பார்த்துமுடியாது பாவியுடஜனங்கள்
சொல்லமுடியாது துரியோதிரன்பாளையங்கள்
அந்தவிதமாக எழில்வீமன்கொல்லுகிறன்
இப்படியாக இவன்சண்டைபண்ணுகையில்
ஆணலழகுமன்னன் அருச்சுனன் தன்னுடனே
வந்துஎதிர்த்தாரே மாயர்பெருமாளும்
வில்வளைத்துநாரிபூட்டி வில்லைகுணத்தொனித்தான்
மார்புரளத்தானெடுத்து தோள்புரளவாங்கிவிட்டார்

பாணம்வரும்விதங்கள் பார்க்கமுடியாது
சொர்ணமழைபோலே சொரிகிறார்பாணமது
சங்கரன்மாரிபோலே சரமேல்சரம்பொழிந்தான்
அர்ச்சுனன்பின்னிடையான் அகோரசரம்பொழிந்தார்
ஆகாயந்தன்னைவாய் அம்பாலேபந்தலிட்டு
சூரியனைத்தான்மறைத்தான் சூராதிசூரனவன்
வில்பிடித்தகைத்தலத்தில் மெத்தசிவப்பேறும்
வளைத்தவில்நிமிராமல் மாயச்சரம்பொழிந்தார்
வாயுவினஸ்திரமும் வருணாஸ்திரமும்விட்டார்
பின்னையுமஸ்திரங்கள் பிரளயமாய்த்தான்விடுத்தார்
நாலுநாழிகைமட்டும் நல்லசண்டைபண்ணூர்கள்
ஒருவர்க்கொருவர் உகந்துபின்வாங்காமல்
சண்டையமர்க்களத்தில் தாங்கிப்பொருதலுற்றார்
விலக்குவாரில்லை யிருந்தசமாதனை
மாயன்பெருமாட்கு வருகுதுமெத்தகோபம்
என்றுமில்லாக்கோபம் எழும்புதுமாயவற்கு
விட்டதொருபாணமெல்லா மட்டறுத்தான்வாள்விஜயன்
அருச்சுனனைக்கொல்ல அரிராமர்கோபமதாய்
சக்கரத்தைதானெடுத்தார் சாமிபெருமாளும்
கொல்லநினைவுகொண்டார் கோபாலர்அர்ச்சுனரை
மந்திரஜெபமிட்டு மாயவனேதுசொல்வார்
அருச்சுனன்றன்சிரசை அரைநொடியில்வாங்குமென்றார்
சுழற்றியெடுத்தாரே சுவாமியுஞ்சக்கரத்தை
கண்டாரேவாள்விஜயன் காந்தாளமாயெழும்பி
தானுமெடுத்தானே தன்னுடையசக்கரத்தை
சக்கரத்தைமந்திரித்து சாமியைக்கொல்லவென்று
எடுத்தானேசக்கரத்தை இமையோர்கள்தானறிய
சக்கரத்தைமந்திரித்து தான்விடவகையறியான்
வாவென்றழைக்க வகையறியானருச்சுனனும்

பெருமாள் சக்கரமெடுக்கத் தனஞ்சயன் பதில்சக்கர

மெடுக்க இருவரும் சமாதானமாகிறது.

கண்டார்பெருமாளும் கனமோசம்வந்ததென்று
நாமல்லோகற்பித்தோம் நல்விஜயனருச்சுனற்கு
சக்கரத்தைவிட்டாக்கால் தானழைக்கவகையறியான்
சக்கரம்வந்ததானால் தலையையறுத்துவிடுமே
மோசம்வருகுதென்று முகில்வண்ணரேதுசெய்தார்
தன்னுடையசக்கரத்தை சாமியார்தேரில்வைத்தார்
தேரைவிட்டிறங்கினார் ஸ்ரீராமர்பொட்டெனவே
கண்டானேயருச்சுனனும் கடுகயிறங்கினான்
தேரைவிட்டுத்தானிறங்கி ஸ்ரீராமர்க்கெதிரானான்
ஒருவர்க்கொருவர் வுறவாடிக்கொண்டார்கள்

எம்பெருமானும் அருச்சுனனும் சமாதானமானதை திரியோதிரன் கண்டு பொறுமைப்பட்டுச் சொல்லாமல் ஓடுகிறது.

கண்டான்திரியோதிரன் கரியமால்மோசமதை
தனஞ்செயனுமாயனுமே தழுவிவிளையாடுவதை
எண்ணுதுமெண்ணினன் எரிநாகங்கொண்டவனும்
மாயனகெடுத்தானே வஞ்சனைகள்செய்தானே
பொல்லாநினைவுகொண்டு பெருமாளழைத்துவந்தார்
நம்மையேகொல்லவென்று நாரணாழைத்துவந்தார்
அறியாமல்வந்துவிட்டோம் அமரதுசெய்வோமென்று
மாயவனைநம்பி வருவதுநீதியல்ல
ஐவர்சகாயரென அவனிபதிற்கேட்டிருந்தும்
அறிந்துமிருந்துநாம் அநீதமாய்மாளவல்லோ
யுத்தம்பண்ணவந்தவர்கள் உறவாடிப்போனாரே
கொல்லுகிறேனென்றுவந்து கூடிவுறவாடினாரே
இனியிருக்கஞாயமில்லை என்றுவழிபிடித்தான்
ஆனையுஞ்சேனையும் அண்டவொண்ணுபாளையமும்
தப்பியிருந்த தளம்பெரியசேனைகளை
கூட்டிநடந்தானே கொத்துப்போர்வீரியனும்
காடுஞ்செடிகடந்து கரியமலைதான்கடந்து
ஆறுஞ்சுனைகடந்து அநேகமலைதான்கடந்து
அத்திநகர்பட்டணத்தை அடுத்தான்துரியனுமே
அந்தச்சமயத்தில் ஆயருமர்ச்சுனரும்
ஒருவர்க்கொருவர் உறவாடிப்போய்நடந்தார்
உச்சிமலையேறி வாராரிருவருமாய்
தருமருந்துரோபதையும் தம்பிமாரிருவருமாய்
கடுகியெழுந்திருந்து கார்வண்ணரைத்தொழுதார்
சாஷ்டாங்கமாகவே சரணமிட்டார்மாயவரை
முக்கால்வலம்வந்து முடிவணங்கிதெண்டனிட்டார்
பெருமாள்மனமிரங்கி பிரியமுடன்தான்வாழ்த்தி
அல்லவரைக்கையமர்த்தி அரிராமர்வீற்றிருந்தார்
தருமருடனக சுவாமியவரேதுசொல்வார்
காலைக்கடன்முடித்துக் கையேந்திஜபதபங்கள்
செய்துகொண்டிருக்கையிலே தேரேறியந்தரமாய்
ஆரோஒருகெந்தருவன் அதிகக்கெருவமதாய்
போகிறவனென்கையிற் றுப்பினன்தம்பலத்தை
பளிச்சென்றுசக்கரத்தைத் துணித்துவாவென்றனுப்ப
கிரீடியிடம்அபயமெனக் கந்தருவனோடிவர
எனக்குப்பகையான இயலானபாதகனை
ஆதரிக்கஞாயமுண்டோ அமர்செய்யக்காரியமேன்
என்னோடேயமர்பொருத இராஜாவேஞாயமுண்டோ
தக்கபுகழ்பெரிய தருமரவரேதுசொல்வார்

அறியாதார்செய்தபிழை ஆண்டவனேமனம்பொறுத்து
தெரியாதார்செய்தபிழை தேவர்மனம்பொறுத்து
இரவும்பகலுமே எப்போதுமுந்தனைத்தான்
உம்மைத்தொழுதல்லோ உலகாளவந்திருந்தோம்
ஆரைச்சதமென்பேன் அன்னியரைத்தஞ்சமென்பேன்
எவரைச்சதமென்பேன் இனியாரைத்தஞ்சமென்பேன்
உம்மையேதெய்வமென்று உயிர்கொண்டுலாவுகிறோம்
என்றுவணங்கினார் இயலானதருமரவர்
உள்ளங்குளிர்ந்துமே உலகளந்தாரேதுசொல்வார்
அருச்சுனரைத்தான்பார்த்து அரிராமரேதுசொல்வார்
சென்றதுவுஞ்சபதம் தேவேந்திரன்மகனே
அபயமிட்டபேர்களைத்தா னாதரிக்கவல்லபிரான்
செப்பியதுதான்தவருன் தேவேந்திரன்மகனுர்
மார்க்கண்டனுக்காக மயேஸ்வரனுர்சொல்லிவிட்டார்
நிலையறியார்பரமசிவன் நிலையறிந்தான்நாமறியோம்
உன்னிலும்வல்லபிரான் வுலகத்திலாருமில்லை
சந்தோஷமாச்சுது தர்மர்பஞ்சபாண்டவரே
இந்தவனம்விட்டு இனிபவனபோயிருங்கள்
ஏதுவினைவந்தாலும் என்னைநினைத்திடுங்கள்
போய்வாரேனென்று பெருமாளெழுந்திருந்தார்

எம்பெருமாள் விடைபெற்று தன்னிருப்பிடம் செல்லுகிறது.

ஐவரைவாழ்த்தியே அரிராமர்போய்நடந்தார்
காடுஞ்செடியும் கரியமலைதான்தாண்டி
மாயவனுர்போனபின்பு வாள்விஜயனேதுசொல்வான்
வாராய்நீகெந்தருவா வார்த்தையொன்றுநீர்கேளும்
உன்-ஆபத்துதீர்ந்தது ஆண்மையுள்ளகெந்தருவா
உந்தனரண்மனைக்கே உளமகிழ்ந்துபோய்ச்சேரும்
என்றுவிடைகொடுத்து எழில்விஜயனர்ச்சுனனும்
அப்போதுகெந்தருவன் அருச்சுனற்குதெண்டனிட்டார்
நான்செய்தபாவத்தை இராஜாவேதீர்த்துவிட்டீர்

கந்தருவன் அருச்சுனன்கையில் விடைபெற்றுக்கொண்டு தன்னிருப்பிடம்போய்ச்சேருகிறது.

ஆபத்தைத்தான்தீர்த்து ஆதரித்தீர்வாள்விஜயா
உனக்கேதுநான்தருவேன் உயிர்க்கேற்றராஜாவே
பாராசாரிவெண்புரவி பஞ்சவர்ணநற்புரவி
சாகாப்புரவிநான் தாரேன்காண்வாள்விஜயா
உந்தன்ரதத்திற்கு உற்றபுரவியென்றுன்
ஆறேலழகுமன்னன் அருச்சுனனேதுசொல்வான்
வனவாசந்தீர்ந்துநாங்கள் வந்தபிறகாக
அப்போதுவேணுமென்று லப்புரவிதானனுப்பும்
எந்தன்மேல்தயவுநீ என்றுமறவாதே

சாகாப்புரவிநான் தாரேன்காண்வாள்விஜயா
போய்வாருமென்றுசொல்லி புண்ணியருங்கூறினர்
மாயனென்னுங்கெந்தருவன் வணங்கியேதெண்டனிட்டு
போதச்சரணமென்று போய்நடந்தான்கந்தருவன்
ஏழாம்வருஷம் முடிந்தது பஞ்சவற்கு
இந்தக்கதைதன்னிலே இடறுகளுண்டானல்
ஜகத்தினிலுள்ளவர்கள் சரியாகவிக்கதையை
இகழ்ச்சியாயுள்ளதெல்லாம் புகழ்ச்சியாய்த்தான்திருத்தி
அகத்தினிற்றான்பொருத்தி அன்பாகத்தான்படித்தால்
சுகத்துடன்தான்வாழ்ந்து சுவர்க்கபதிசேர்வார்கள்
இந்தப்படியாக யெப்போதும்வாழ்ந்திடுவார்
வாழ்த்திவிடைகொடுத்தார் மாயவனரப்போது
வாழிவாழியென்றுசொல்லி வரமளித்தாரீஸ்வரனர்

ஏழாவது கெந்தர்வபர்வதம் முற்றிற்று.

அ-வது, குருபாரிஷிவனம்.

எட்டாம்வருஷம் பிறந்தது பஞ்சவர்க்கு
கூடைதலைமேலே குடிவாழ்க்கைகானகத்தில்
கோலிவைத்தசீமாடு கூடைத்தலைமேலேவைத்தார்
மன்னிவைக்தசீமாடு வனவாசம்போறூர்கள்
குருபாரிஷிவனத்தில் குடித்தனமாய்ப்போறூர்கள்
அந்தவனத்திலே ஐவர்குடித்தனமாய்
ஐந்தடுக்குபர்ணசாலை அழகாகவுண்டுபண்ணூர்
ஏழடுக்குபர்ணசாலை எழிலாகவுண்டுபண்ணூர்
பர்னசாலைமேலாகப் பஞ்சவர்கள்வீற்றிருந்தார்
அந்தவனத்திலே அநேகநாட்சென்றபின்பு

துரோபதை வனசாரிவந்து பாரிசாதபுட்பம்கேட்கிறது.

தோராவடிவழகி துரோபதைநாயகியும்
ஒற்றையொருநாளில் ஒண்டியாய்துரோபதையாள்
அந்தவனத்தி னதிசயத்தைப்பார்த்துவர
வரத்திற்பெரியவராம் மகாரிஷியானவராம்
யோகத்திற்பெரியவராம் உத்தமகுருபாரிஷியும்
சாமியிலும்பெரியவராம் தவத்தில்பெரியவராம்
அவர்பூசைபண்ணுந்தீர்த்தம் பொய்கைபோலோடுகுது
ஓடுஞ்சலத்திலே ஒதுங்கிவரும்பூமலரும்
பாரிசாதபூமலரும் பரிமளமாய்வீசுகுது
ஆற்றிலடித்துக்கொண்டு அலைந்துவருகுது
கண்டாளே துரோபதையாள் கடிகிமனதுகொண்டாள்
மெத்தாசைபட்டாளே வேல்பொருதுங்கண்ணுளும்
எண்ணதுமென்னுகிறு ளெண்ணிதுரோபதையும்
ஆரோடேசொன்னலே ஆகுமிந்தகாரியங்கள்
எவரோடேசொன்னலே எடுத்தளிப்பாரிம்மலரை

திரௌபதை வீமனைப் பாரிஜாதபுஷ்பங் கேட்கிறது.

வெற்றிமதயானை வீமருடன்சொன்னோமானால்
பறித்துத்தருவார்காண் பரிமளத்தைநாமறிய
என்றுநடந்தாளே இளங்கொடிதுரோபதையும்
பர்ணசாலைமேலாகப் பாஞ்சாலிஓடிவந்து
வெற்றிமதயானை வீமனைத்தான்பார்த்து
ஏலப்பசுங்கிளியாள் இளங்கொடியாளேதுசொல்வாள்
ஆண்டவனேஐயாவே அடியேனொருவிண்ணப்பம்
காணாதுகண்டேன்காண் கண்டாசைபட்டுவந்தேன்
பாராதுபார்த்துவந்தேன் பார்த்தாசைபட்டேனையா
என்மனதுக்கேற்றபடி எனக்குவிடைதாரும்
வெற்றிமதயானை வீமாவரேதுசொல்வார்
பாஞ்சாலன்பெற்றபெண்ணே பச்சைப்பசுங்கிளியே
ஏதுவினைத்துவந்தாய் எனக்கறியச்சொல்லுமென்றார்
தோராவடிவழகி துரோபதையாளேதுசொல்வாள்
அகிலாண்டகாவேரி ஆற்றின்றுதான்வருது
பரிமளத்தோடிருக்குது பார்த்துவந்தேன்பாரிஜாதம்

வீமன் பாரிசாதபுஷ்பம் கொண்டுவரப்போகிறது

வெற்றிமதயானை வீமனெழுந்திருந்து
இங்கேஇரும்பெண்ணே என்றேயெழுந்திருந்து
நீண்டிடுங்கால்களுக்கு நெறிஞ்சிப்பூச்சல்லடமாம்
மண்டியிடுங்கால்களுக்கு மாதளம்பூச்சல்லடமாம்
குந்தியிடுங்கால்களுக்கு குறிஞ்சிப்பூச்சல்லடமாம்
தூக்கிவைக்குங்கால்களுக்கு துத்தியப்பூச்சல்லடமாம்
தட்டிவைத்துகட்டி தாமரைப்பூசங்குவிட்டு
தெண்டாயுதமெடுத்து சிலைவீமன்வாரானே
ஆற்றங்கரையோரம் அங்குவீமன்வாரானே
பூமரத்தைதேடியே போறானேவீமனவன்
யோசனைக்குயோசனை உயரமுள்ளபூமரம்
இதுவென்னசிறுமரம் இட்சணமேகொண்டுவாரேன்
எழுசுற்றும்வேலிகளாம் இருபக்கமாமலையாம்
மாமலைதன்னிலே வல்லனுமார்காவலதாம்
பூவனத்திற்போகவென்று போகையில்வீமனவன்
வாசற்படியிலே வல்லனுமார்படுத்திருந்தார்
கண்டாரனுமாரும் கரிவீமனைப்பார்த்து

வீமனுக்கும் அனுமாருக்குஞ் சண்டையாகிப் பின்பு
சமாதானமாதல்.

ஆடாராட்சதனே அஞ்சாமற்போகவந்தாய்
இந்தவனத்திலே ஏதுக்குபோறாயென்றான்
போகவிடேனென்றானே போரனுமான்போது

வெற்றிமதயானை வீமனுந்தான்கேட்டு
கோபம்வருகுது கோபாலவீமனுக்கு
சானுண்டுயிக்குரங்கு தடைப்படுத்திதென்றுசொல்லி
கையிரண்டும்நீட்டியே கட்டழகன்வீமனவன்
கோடையிடிபோலே குத்தினான்கடுமுதுகில்
அந்தஅடிசத்தம் அந்தவனங்கிடுகிடென்ன
அந்தவனத்திருந்த அநேகமிருகமெல்லாம்
மறுக்காலொருவனத்தே மருண்டோடுதேமிருகம்
அனுமாருடரோமங்கள் அயர்ந்துகொடுத்ததுகாண்
கோபம்வருகுது கோபாலனானவர்க்கு
என்னையடித்தவனை இட்சணமேகொன்றுவேன்
என்றுசொல்லிதானெழுந்து நின்றானேநல்லனுமான்
அடித்தானேவீமனை அடிவானத்திடிபோலே
கோடையிடிபோலே குத்தினான்மார்கலங்க
அந்தஅடிபட்டவுடன் அநேககளைத்தானும்
மண்மேல்விழுந்தானும் பல்லாந்தபாவனையாய்
விழிகள்பிதுங்கியே விழுந்தானேமூர்ச்சையாய்
மாண்டவன்போலே மண்மேல்விழுந்தானே
அநேகம்நெடுநேரம் ஆனபிறகாக
மூர்ச்சைதெளிந்து மூடிமன்னன்தானெழுந்தான்
கண்டானேநல்லனுமான் கடுகியவனேதுரைப்பான்
என்னுடையசன்னையிலே எவருமிழைத்ததில்லை
இவன் ஆரோதெரியாது ஆங்காரமுள்ளவன்காண்
அடித்தவடியோடே அவனியில்விழுந்தவன்காண்
தவறியெழுந்தவன்காண் தப்பிப்பிழைத்தானே
என்றுமனதிலெண்ணி இயலனுமானேதுரைப்பான்
ஆரடாராட்சதரோ ஆங்காரமுள்ளவனே
ஆரென்றுநீதெரிந்தாய் அயோதிராமதூதனல்லோ
லங்கையழித்தவன்தான் ராவணனைகொன்றவன்காண்
அஞ்சனாதேவிபெற்ற அனுமந்தன்நானல்லவோ
என்னோடெதிர்த்து இனிபிழைக்கப்போறீரோ
என்றவுரைகேட்டு இயலானவீமனவன்
உற்றதுகேட்டு மெத்தபயந்தவனும்
அண்ணனென்றறியாமல் அபராதஞ்செய்தோமோ
என்றுபச்சைத்தனையுருவி பாதத்திற்றான்போட்டு
முக்கால்வலம்வந்து முடிவணங்கிதெண்டனிட்டான்
ஐங்கால்வலம்வந்து அடிவணங்கிதெண்டனிட்டான்
சரணஞ்சரணமென்று சாஷ்டாங்கதெண்டனிட்டான்
கண்டாந்தநல்லனுமார் கடுகியேயுரைப்பார்
ஆரடாதம்பிநீ அறியவுரையுமென்றான்
உன்னைரோதுபேரேது உன்னுடையபேரென்ன



வீமன் பாரிசாதமலர் கொண்டுவரச்செல்லல்.

ஆருடையபுத்திரன்காண் அரியவுரையும் ... ர்
வெற்றிமதயானை வீமனவனேதுசொல்வான்
என்தகப்பன்வாயுராஜர் மாஎன் தாயல்ந்தியம்மாள்
மந்தாரக்குந்தியம்மாள் தபெற்றெடுத்தராஜன்
குந்தியம்மாள்பெற்றெடுத்த குலமணிகளைவருண்டு
தருமராஜர் ம்பி தாக்குடையவீமனென்பேர்
இவ்வார்த்தைதான்கேட்டு எதுசொல் வான்கல்லனுமான்
உத்தமனோராமிருவர் ஒந்கப் பிறந்த ... ரு
என்னுடையசண்டைக்கு எவருமபிர முத்ததில்லை
தம்பியென்றதாலை ... னால் தப்பிப்பிழைத்தீரே
மாளாமல்நீபிழைத் ... ய் மதவீமனுனைகயினால்
என் அருவாக்கி ... ருவர் உறவா ... த்தான்பேசி
ஏகவகையாக இங்குவந்தாய்தம்பியரே
வந்தகருமத்தை வாய்திறந்துசொல்லுமென்றார்
வெற்றிமதயானை வீமரவரே ... சொல்வார்
இந்தவனமதனில் வந்தோம் வனவாசம்
பாஞ்சாலன்பெற்றமகள் பஞ்சவர்ணகிளியாள்
பாரிஜாதபூமலரைப் பார்த்தாசைபட்டாளாம்
காணாதபூமலரைக் கண்டாசைப்பட்டாளாம்
பாரிஜாதபூமலரைப் பறிக்கவென்றுயிங்கு வந்தேன்
வேண்டிவந்தபூமலரை வேல்வேந்தேதாருமென்றார்
அவ்வார்த்தைதான்கேட்டு அனுமந்தனேதுசொல்வான்
குருபாரிஷிவனத்தில் கோடியுண்டுகாவலர்கள்
ஏழுலட்சங்கிங்கிலிபர் இவ்வனத்திற்காவலுண்டு
இத்தனைகாவலிலே எப்படிக்குபோய்வருவாய்
அந்தரிஷியறிந்தால் ஆக்கினைசெய்திடுவார்
கொல்லசினைப்பாரே குடிகேடுவந்திடுமே
ஆருமறியார்கள் அவருடையபுஷ்பவனம்
என்ன செய்வேன்தம்பியரே எப்படிப்போ... வருவாய்
உன்னை வால்முனையில்கட்டி வனத்திலேவிட்டிடுவேன்
வாருமறியாமல் அமலரைநீர்பறித்து
ஆலையசங்கிவிட்டால்எடுத்துகான்வந்திடுவேன்

வீமன் அனுமான் வாலின் வ... யாகச்சென்று ராட்சதரையெல்லாம் கொ... ல்லுதல்.

என்றுவாலிலேகட்டினான் மதகரிபான்வீமனைத்தான்
வாலைக்கிளப்பி வனத்திலேபோகவிட்டான்
இந்தவனப்புதுமை எல்லாமறியவே—
வாலைபவித்தானே மதகரியானப்போது
அசக்கிவிட்டானென்றுசொல்லி அனுமாரும்வாககினார்
வீமனைகாணாமல் மெத்தபயந்தளர்ந்தார்
ஆயாசப்பட்டு அனுமந்தன் தானிருந்தான்

வெற்றிமதயானை வீமனவனேதுசெய்தான்
அந்தவனத்திலே அதிசயம்பார்க்கவென்று
வீமன் பூமரங்களை அதம்பண்ண காவலர்கள் கண்டு சண்டைசெய்து
இறந்தவர்போக மற்றவர் குருபாரிஷியாருக்குச் சொல்லல்.
சுற்றிவருகிறான் சுந்தரமாயவ்வனத்தே
மல்லிகைமுல்லை மலரோடுசெண்பகமும்
பாரிஜாதபுஷ்பமங்கே பரிமளம்வீசுது
வீசுகின்றபுஷ்பமரம் வேருடனேதான்பிடுங்கி
படுத்துபுரண்டானே பரிமளத்தைதானறிந்து
அடுத்தவனமெல்லாம் அதம்பண்ணுனப்போது
அந்தவனத்திலே அனேகம்பேர்ராட்சதரும்
எல்லவருந்தான்வந்து எட்டினார்வீமாண்டை
வந்துவளைத்தார்கள் மதகரியான்வீமாண்டை
எட்டினார்சண்டை எழும்புதுசமரப்போ
ஒருவர்க்கொருவர் யுத்தங்களாகுது
வெற்றிமதயானை]வீமன்வெகுண்டெழுந்து
அடிப்பான்கெதையாலே அநேகம்பேர்கீழேவிழ
அனந்தம்பேர்ராட்சதரை அதமாக்கிகொன்றானே
இந்தவிதமாக எண்கோடிராட்சதர்கள்
கொன்றுவதைத்தானே கோடானகோடிகளை
கொன்றவர்தான்போக நின்றமீதாருராட்சதர்கள்
குருபாரிஷியருகே கொப்பெனவேவோடிவந்தார்
அபய பயமென்று அடிபணிந்துதெண்டனிட்டார்
ஏதுக்கபயமிட்டீர் என்னகருமமென்றார்
ஆரோஒருராட்சதன் ஆங்காரமுள்ளவன்காண்
சிங்காரப்பூவனத்தைச் சீரழித்தான்பாவியவன்
மரங்களைத்தான்பிடுங்கி வனமெல்லாமதமாக்கி
ஏழுலட்சம்ராட்சதரை இருதுண்டாய்ப்போட்டுவிட்டான்
இவ்வார்த்தைகேட்டு எரிக்குங்கதிரவன்போல்
காயுங்கதிரவன்போல் கண்சிவந்தார்குருபாரிஷியும்
கோபம்வருகுது கொடுங்காலருத்திரன்போல்
என்னுடையபூவனத்தில எவரும்வருவதில்லை
தேவர்முனிவர் தீண்டொணுபூவனத்தை
ஆடாதுஅவரோ ஆயிரம்பேர்போங்களென்றார்
கைப்பிடியாய்த்தான்பிடித்து கடுகெனவேகொண்டுவாங்கள்
என்றசத்தங்கேட்டு எழுந்தார்களாயிரம்பேர்
வாய்வேகமாகவே வனத்திலேபோயிரங்கி
ஆடாராட்சதரே ஆங்காரகோபமுடன்
வனத்தையதமாக்கி வந்தவனைக்கொன்றவன்
எங்களுடஐயருமம்ம இட்டுவரச்சொன்னாரே
குலத்திற்பெரியவர்காண் குருபரமகாரிஷியும்

உன்னை அழைத்துவரச்சொன்னூர்காண் ஐயருமிப்போது
கடுகெனவேவாருமென்று கையைப்பிடித்திழுத்தார்
கையோடேகைபிடித்தான் கடியவேகையைவிட்டான்
ஆயிரந்தூதுவரை அரைக்ஷணத்தில்தட்டிவிட்டான்
அத்தனைபேரையும் அவனொருவன்கொன்றுவிட்டான்
நானொருவன்தப்பிவந்தேன் நல்வார்த்தைசேதிசொல்ல
என்றவன்கூறலுமே எழில்குருபரமுனிகேட்டு
கோவைப்பழம்போலே கூர்விழிகள்தான்சிவக்க
சவுரிப்பழம்போலே தன்னிரண்டுகண்சிவக்க
நெருப்புப்போல்கண்சிவக்க நெறநெறென்றுபல்கடித்து
சுவாசமனலெழும்பச் சாபமொன்றுந்தோன்றுமல்
தானாகவந்து சபிக்கமனந்தானுகி
ஏறினூர்கனகதண்டி எழில்குருபரமுனியும்
பாரவனத்திருக்கும் மாளிகைதன்னருகே

புஷ்பவனத்தை யழித்தவனை சபிப்பதற்காக குருபர
முனிவருகிறதை எம்பெருமாள் அறிந்து அனை
வரையும் சமாதானப் படுத்துதல்.

வருகிறவேளையிலே மாயனதுவறிந்தார்
காவலர்கள் பஞ்சவர்க்கு கைமோசம்வந்துதே
மோசங்கள்வந்து முடிநதுதேபஞ்சவர்க்கு
பொல்லாதகாலம் பிறந்ததுபஞ்சவர்க்கு
ஆகாதகாலம் ஐவருக்குவந்ததையோ
உள்ளங்கைநெல்லிக்கனி உருகுலைந்துபோகுதையோ
பெட்டியிலேஆபரணம் பெருமைகுலையுதையோ
எழில்குருபரரிஷியுடனே எதிர்ப்பாரொருவரில்லை
மாமாக்கிகல்லாக்கி வனத்திலேகொன்றிடுவார்
ஐவரைக்கொன்றிடுவார் அனர்த்தம்வாராநாளைச்சே
காத்ததுகாத்தோமே கடைப்போகக்காப்போமென்று
வட்டமாங்கருடனேறி வாராரேமாயவனூர்
ஐவரிருக்கும் ஆரணியம்வந்துவிட்டார்
காயாம்புமன்னன் தருமருங்கண்டாராம்
கடுகியெழுந்திருந்து கார்வண்ணரைத்தொழுது
சரணமடைந்தார்கள் தர்மமுடிராஜாக்கள்
சிங்காதனங்களிட்டார் ஸ்ரீராமர்வீற்றிருக்க
இட்டசிங்காதனத்தில் ஏறியிருந்தாரும்
காயாம்புமன்னர் தருமாவரேதுரைப்பார்
இன்னேரவேளையிலே எம்பெருமாளெங்குவந்தீர்
அடியாரைத்தேடியே ஆண்டவரேவந்ததென்ன
வந்தகருமமதை வாய்திறந்துசொல்லுமென்றூர்
அடியளந்தமாயவனூர் ஆதிமூலமேதுசொல்வார்

காலையிருக்கையிலே நல்லதம்பியெங்கேயென்றார்
வெற்றிமதயானை வீமாஜனெங்கேயென்றார்
திருமாரியேயென்றார் தம்பியரைக்காணேனென்றார்
தோராவடிவழகி துரோபதையாளே துசெல்வாள்
பாரிசாதமலரை பார்த்தாசைபட்டேனையா
பிரியமாய்வேண்டுமென்று பிணங்கினேன்வீமாண்டை
பூபறித்துவாரேனென்று போய்விட்டார்வீமாஜன்
மாயன்பெருமானும் வார்த்தையங்கேதுசொல்வார்
கைமோசம்வந்ததுகாண் கபடமில்லாதருமாயர்
ஐவர்பஞ்சபாண்டவரே அனர்த்தம்வரநாளாச்சே
குருபாரிஷிவனத்திற் கொப்பெனவேபோய்புகுந்தான்
மரத்தைபிடுங்கியவன் நாசமதாக்கிவிட்டான்
எழுலட்சம்மரட்சதரை இருதுண்டாய்போட்டுவிட்டான்
அந்தவனத்தை அதமாக்கினபடியால்
கொல்லவருகிறார் கொப்பெனவேமாமுனியும்
தவத்திற்பெரியவர்காண் சகலகலைவல்லவர்காண்
வரத்திற்பெரியவர்காண் வல்லகுருபாமுனியும்
அதிகசாபம்தானிடுவார் ஐவரைக்கொன்றிடுவார்
என்னசெய்யப்போறேனென்று எம்பெருமாள்கூறுகையில்
அஞ்சியயர்துமல்லோ ஆண்டவற்கேதுசொல்வார்
இத்தனைநாள்காத்தீரே இன்றுகைவிட்டீரோ
அரக்குமாமனிகையில் ஐவரைக்காத்தீரே
அம்பலவாசலிலே அபிமானங்காத்தீரே
ஆபத்துதீர்க்கவந்த ஆண்டவரும்நீரல்லவோ
உம்மைவிடவேயெமக்கு உற்றதுணை தானுமுண்டோ
காக்கக்கடனுமக்கு என்றுமவர்கைதொழுதார்
மாயன்பெருமானுக்கு வார்த்தையங்கேதுசொல்வார்
குருபாரிஷியுடனே பேசிக்கொண்டுதானிருப்பேன்
அப்போதுநானும்பேரும் அந்தவழிவந்திடுங்கள்
நமரேயும்மைகாண் தாழ்ந்துவணங்குகிறேன்
உன்னைவணங்கினால் உபசாரவார்த்தைசொல்லும்
ஆரென்றுகேட்பாரே அந்தகுருபாமுனியும்
உம்மிலும்வல்லபிரான் உண்மையுள்ளமாமுனியும்
என்றுவுரைத்ததுமே எழுந்துவணங்கிடுவார்
வணங்கிமங்களிப்பா வாழ்த்தியெடுத்தணைப்பீர்
வெற்றிமதயானை வீமனிவந்தாலும்
அடிபணிந்துதெண்டனிட்டு அவரைவணங்கிநிற்பேன்
அந்தரிஷியாரும் ஆரென்றுதான்கேட்பார்
உன்னிலும்வல்லபிரான் வுண்மையுள்ளமாமுனியும்
என்றுசொல்லிநானிருப்பே னிவ்விதமாய்செய்யாவிட்டால்

அந்தக்குருபாமுனியும் அனர்த்தம்பண்ணிப்போட்டிடுவார்
ஆகையால்நான்போறேன் ஐயரேபின்னாரும்
என்றுரைமூந்தாராம் இயலானமாயவரும்
வாரார்பெருமாளும் வனந்தாடுதான்கடந்து
குருபமுனியெதிரே கொப்பெனவேவருகையிலே
மாயனரக்காணுகையில் வணங்கினூர்குருபாமுனி
ஒருவர்க்கொருளர் உறவாடிப்பேசினூர்கள்
மாயன்பெருமாளே வனத்திலேயெங்குவந்தீர்
இந்தவனத்திலே யேதுவகையாகவந்தீர்
வந்தவகையதனை வாய்திறந்துசொலலுமென
மாயன்பெருமாளும் வார்த்தையங்கேதுசொல்வார்
வனசாரியாகவே வந்தேன்குருபாமுனியே
வந்தவிடத்திலிந்த வனத்திலும்மைக்கண்டேன்காண்
இன்னேரவேளையிலே எங்குவந்தீர்சொல்லுமென
ஆரோதெரியாது ஆங்காரமுள்ளவன்காண்
வனத்திலேபோய்புகுந்து மரங்களைத்தான்பிடுங்கி
எழுலட்சம்னதுவனை வல்லவனைக்கொன்றனே
பொல்லாதபாவியைக் கொல்லவென்றுபோறேன்காண்
அவ்வார்த்தைதான்கேட்டு அரிராமரேதுசொல்வார்
உம்முடையவனத்திலே ஒருவர்வரப்போறதில்லை
தெய்வலோகத்தாரும் தீண்டாதபூவனத்தே
அமரர்மத்தர்முனிவராலும் ஆகாதவ்வனமழிக்க
ஐயரேஉன்றன்வனத்தை அதமாக்கும்பாலகனை
இட்சணமேசொல்லுகிறேன் இட்டுவரச்சொல்லுமென்றூர்
இருவருமாகவே ஏகமாய்க்கொல்லவென்று
ஆடானதுவனே அழைத்துவாராட்சதனை
என்றுஅவர்போகையில் இயலானதருமரவர்
நகுலனைத்தானனுப்பி நல்விமற்கேதுரைப்பார்
அண்ணரும்தம்பியரும் ஆதிநாராயணரும்
குருபரிஷியருகே கூடிபேசியேயிருப்பார்
கொல்லவென்றுதூதுவர்க ளழைத்தும்மைத்தான்வருவார்
வந்தவுடனும்மை வணங்கிநமஸ்கரிப்பார்
அப்போதுநீரண்ணு ஆசீர்வதிப்பீரென
சொல்லிவரச்சொன்னூர்காண் துரிதமுடனேயென்று
தருமரிவையுரைக்கத் தார்வேந்தர்நகுலனுமே
வாயுவேகமாகவே வந்துவிட்டார்வீமனிடை
அண்ணுவேமஹவீமா அண்ணருங்கிருஷ்ணரும்
இப்படிஉனக்குச்சொல்லச் சொன்னூர்களென்னையென்று
வீமனுக்குச்சொல்லிவந்து விட்டான்நகுலனுமே
தம்பிமார்புடைசூழ தருமர்வருகையிலே

அங்கேவரப்பார்த்து அரிராமர்தானெழுந்து
அடிபணிந்துதெண்டனிட்டு அவரைவணங்கிநிற்க
பார்த்தார்குருபாரிஷி பயந்தவருமேதுசொல்வார்
எந்தவூரெந்தநாடு இவர்பேச்சைசொல்லுமென்றார்
ஜெபத்திலுந்தபத்திலும் செய்திடுமோர்நிஷ்டையிலும்
அதிசயமுடையவர்காண் அழகான தருமரிஷி
ஆதிகயிலாசம் அரனாரிடந்தனிலே
உன்னுடையபேர்விளங்க ஒருமணியடிபடுது
முனிவரிடபேராலே மூன்றுமணியடிபடுது
அன்னதானங்களிலே அதிகமுடையவர்காண்
யோகத்திற்பெரியவர்காண் உன்னிலும்வல்லபிரான்
எடுத்துப்பார்த்தாலே எரிந்துவிடும்லோகமெல்லாம்
பொய்வசனஞ்சொல்லாதார் புகழான தருமரிஷி
தருமரிஷியாரை தழுவியணைத்துக்கொண்டு
சிங்காதனத்தில் சிறகவீற்றிருந்தார்
தக்கப்புகழுடைய தருமரிஷியேதுசொல்வார்
சாமிபெருமாளே சன்னியாசியானவரே
இருவருமாகவே இங்குவந்தவாறேது
என்றுதான்சொல்லுகையில் ஏதுசொல்வார்குருபாரிஷி
தருமரிஷியாரே சாமியேநீர்கேளும்
என்னுடையதோட்டத்தில் எவரொருவர்வந்ததில்லை
அந்தரலோகத்து அமரர்கள்வந்ததில்லை
ஆரோருராட்சதன் ஆங்காரமுள்ளவன்காண்
வந்துபுகுந்து வனத்தைப்பாழாக்கினான்
எழுலக்ஷம்ராட்சதரை இருதுண்டாயபோட்டுவிட்டான்
ஆகையாலிங்குவந்தேன் அவனை அதமாக்கவென்று
இவ்வார்த்தைகேட்டு ஏதுசொல்வார்தருமரிஷி
உம்முடையதோட்டத்தை அழிப்பாரொருவரில்லை
இங்கேயமையுங்கள் இக்ஷணமேசபித்திடுவேன்
என்றவர்சொல்லுகையி லிட்டுவந்தார்வீமனை
இக்கணமேதானெழுந்து ஸ்ரீராமர்மாயவரும்
சாஷ்டாங்கமாகவே சரணமிட்டார்வீமருக்கு
முக்கால்வலம்வந்து முடிவணங்கிதெண்டனிட்டார்
கண்டார்குருபாரிஷி கடுகியேயேதுரைப்பார்
அவர்யாரென்றுதெண்டனிட்டீர் ஆயர்பெருமாளே
ஆறுலுங்கேளுமையா அரியரிஷியாரே
ஆதிகைலாசம் அரனாரிடந்தனிலே
உம்முடையபேராலே ஒருமணியடிபடுது
தருமரிஷிபேராலே மூன்றுமணியடிபடுது
இந்தரிஷிபேராலே ஐந்துமணியடிபடுது

யோகத்திற்பெரியவர்தான் உத்தமரிஷியாரும்
ஆதிசிவனிலும் அதிகமுடையவர்தான்
இனமூன்றுவேளையில் சிவனைத்தொழுவாரும்
அவரிருக்குமிடங்களிலே அன்னக்களஞ்சியங்கள்
ஆரோயெவரோ அறியாமல்சொல்லவந்தேன்
இன்றுமவரைக்கண்டால் எல்லவரைக்கொன்றிடுவார்
என்றுசொன்னபோதே எழுந்தார்தருமரிஷி
தருமரிஷியெழுந்திருந்து சாஷ்டாங்கதெண்டனிட
குருபாமுனியும் சொப்பெனவேதெண்டனிட்டார்
அடியார்கள்செய்ததெல்லாம் அப்பாமனம்பொறுத்து
தெரியாமற்செய்ததெல்லாம் பெரியர்மனம்பொறுத்து
வனத்தையழித்தகதாரு மகிமையைச்சொல்லுமென்றார்
ஆசனம்போட்டார்கள் அமர்ந்துகொலுவிருந்தார்
அப்போ குராமரிஷி அவரவர்க்குப்பேசுசொல்வார்
குருபாரிஷிபெருமை குவலயத்திற்சொனோர்கள்
அந்தபோர்சொல்லுகையில் அதிசயப்பட்டிருந்தேன்
பார்க்கப்பிரியமாக பார்தலத்திலிருந்தேன்
அந்தவனத்திலே அனேகங்கோடிராட்சதர்கள்
எந்தனைக்கொல்ல எழுந்தார்கள் அதுவர்கள்
ஆசொன்றுகேளாமல் அல்லவருங்கொல்லவந்தார்
ஆக்ருஷம்வந்ததினால் அல்லவரைக்கொன்றுவிட்டேன்
இதுவேகருபமென்றான இப்பலசையரிஷி
குருபாமுனிவரும் சொப்பெனவேதெண்டனிட்டு
அடியார்கள்செய்ததெல்லாம் அபராதம்பொறுத்து
பாக்கியஞ்செய்திருந் பாதங்கிடைத்ததுகாண்
கருதிதவஞ்செய்தாலும் காணவரிதாகும்
பார்த்தபடியாலே பாவந்தொலைத்துவிட்டேன்
வாராததேவர்கள் வந்தபடியாலே
என்னுடையஆச்சிரமம் எல்லோரும்வாங்களையா
பாலடிசலுண்டு பழவர்க்கம்தான்புசித்து
போஜனஞ்செய்துநீங்கள் போவீர்கள்வாங்களென்று
குருபாரிஷியாரும் சொப்பெனவேதெண்டனிட்டு
பட்டுரத்னபாய்போட்டு பாய்மேலேவீற்றிருந்தார்
மாயவருந்தருமரிஷி மற்றும்பெரியவரிஷி
தம்பிமார்நால்வருடன் தாமுங்கொலுவிருந்தார்
குருபாரிஷியுமங்கே சொப்பெனவேதானெழுந்து
தூதுவரைத்தானழைத்து சொல்லுவாரோர்வார்த்தை
ஆயிரங்கலமரிசி அடிசிலாமையுமென்றார்
காயுங்கனியுங் கடுகச்சமையுமென்றார்
கல்லைபொரிக்கறியும் ராஜாக்கள்போஜனமும்
அடிசில்சமைத்தோமென் றடிவணங்கிதெண்டனிட்டார்

குருபாமுனிகேட்டு கொப்பெனவேதானெழுந்து
கடுகசரணமென்று கைக்குச்சலங்கொடுத்தார்
பலாயிலைதைத்துப் படைத்தார்களன்னமதை
சமைத்திட்டசாதங்கறி தானேபுசித்தார்கள்
உபசாரம்பண்ணியவர் உண்ணுங்கள்சாமியென்றார்
அத்தண்டபேரும் அமுதுபுசித்தார்கள்
சந்தனம்புஷ்பம் தாம்பூலம்வாங்கிக்கொண்டார்
அத்தண்டபேரும் ஆலிங்கனஞ்செய்துகொண்டார்

பஞ்சவர்களைக்குருபேரும் பெருமாளு மவரவரிடஞ் செல்லுகிறது.

போவாரேமென்று போய்நடந்தார்கள்
பர்ணசாலைதன்னருகே பஞ்சவர்கள்சேர்ந்தார்கள்
ஏழுலகையாண்டவரும் எம்பெருமானுஞ்சொல்வார்
வெற்றிமதயானை வீமன்செய்தகாரியத்தை
நாமிருந்தபடியாலே நாடியுமைக்காக்கவந்தோம்
அல்லாதேயாமானால் அனைவரும்மாண்டிடுவார்
எங்கேயிருந்தாலும் இடம்போலேசெய்திடுவோம்
ஆனதகாரியங்கள் அழும்புகள்செய்யவேண்டாம்
இந்தவனத்தைவிட்டு ஏகுங்களுத்தவனம்
அந்தவனத்தில் ஐவரும்போயிருங்கள்
போய்வாரேனென்று போகலுற்றானெம்பெருமான்
எட்டாம்வருஷம் முடிந்ததுபஞ்சவர்க்கு

எட்டாவது குருபாரிஷிவனம் முற்றிற்று.

௯-வது ரோமரிஷிவனம்.

அந்தவனத்தைவிட்டு அப்புறம்போனார்கள்
கடைத்தலைமேலே குடிவாழ்க்கைகானகத்தில்
கோலினைத்தசீமாடு கடைத்தலைமேலேவைத்தார்
மன்னினைத்தசீமாடு வனமேகுடியிருப்பு
ரோமரிஷிவனத்தில் துரிதமுடன்வந்தார்கள்
ஐந்துக்குப்பர்ணசாலை அழகாகவுண்டுபண்ணார்
ஏழுக்குப்பர்ணசாலை எழிலாகவுண்டுபண்ணார்
அந்தவனத்திலே ஐவர்குடியிருந்தார்
இப்படியாக இவரிருக்கும்வேளையிலே
செஞ்சில்ரோமமாமுனியை நினைத்தார்தருமராஜர்

ஐவரிடத்துக்கு ரோமரிஷியார் வந்து தனதுதுன்பத்தை அவரிடத்தில்சொல்ல அவர் அதற்குவழிமானஞ் சொல்லுகிறது.

ஆசனம்போட்டு அடிபணிந்தார்தருமராஜர்
எந்தவூரெந்தநாடு எங்கிருந்துநீங்கள்வந்தீர்

ஊரோதுபேரோது உத்தமனேசொல்லுமென்றார்
வந்தவயணமதை வகையாகச்சொல்லுமென்றார்
அப்போதருமலிங்கம் ஆண்டவருக்கேதுரைப்பார்
குருகுலவம்மிசத்தில் குந்திமைந்தரைந்துபேர்கள்
தருமன்நான்வீமனவன் தம்பிதனஞ்சயனும்
நகுலசகாதேவ ராஜாக்களைவரையா
தருமாபுரமென்னுந் தாரணியையாண்டிருந்தோம்
பங்கும்பகையாளி பாதிநாள்தாயாதி
சென்மப்பகையாளி சேனநாள்தாயாதி
பெரியதந்தைபிள்ளை பேரானதுரியோதிரன்
ஐவரைக்கொல்லவென்று ஆலோசனைதேடி
விருந்துண்ணவாருமென்று விருந்தோலைதானனுப்ப
மெய்யானஓலையென்று விரைவாகப்போனோமையா
வாரவழிதனிலே வைத்தானே தண்ணீர்பந்தல்
வசநாபிதண்ணீர்பந்தல் வைத்தானேபாவியவன்
கொல்லநினைத்தானே கொப்பெனவேயெங்களைத்தான்
பின்னுமொருயோசனையும் செய்தான்பெரும்பாவி
வருகிறவழியிலே வசிகளைநாட்டினான்
உருக்கூசிசெப்பூசி ஒருக்கோடிநாட்டினான்
எழுகூசியனேகமோடு இரும்பூசிதான்புதைத்தான்
கோடிமுள்ளுகத்திகளும் குறுக்கேபுதைத்துவைத்தான்
மாண்டுமடிவாரென்று ஊசிகளைநாட்டினான்
தப்பிப்பிழைத்தோமே சாமியுடபுண்ணியத்தால்
பின்னையொருயோசனை செய்தான்பெரும்பாவி
பொய்க்குழியைவெட்டியே போட்டுவைத்தான்சிம்மாதனம்
ஆழக்குழியிலே ஆட்களையுள்நிறுத்தி
ஆயுதந்தன்னுடனே ஆள்நிறுத்திவைத்தானே
கொல்லநினைத்தானே குருடன்மகன்சத்ராதி
தப்பிப்பிழைத்தோமே சாமியுடபுண்ணியத்தால்
பின்னுமொருயோசனை செய்தான்பெரும்பாவி
எண்ணைபிட்டுக்கொள்ளுமென்று எங்களுக்குச்சொல்லியவன்
வழுலட்சமல்லர்களை எங்களிடம்தானனுப்பி
எண்ணையிடச்சே என்னுயிரைவாங்குமென்றான்
அதற்கும்பிழைத்தோமே யாண்டவனார்புண்ணியத்தால்
பின்னையொருயோசனை செய்தான்பெரும்பாவி
அரப்புகிண்ணங்கைகொடுத்து அபிஷேகமாடுமென்றான்
கீரில்வசிகாட்டி வைத்தானேநிர்மூடன்
பாரவசிகளை பர்வதம்போல்காட்டினான்
தப்பிப்பிழைத்தோமே சாமியுடபுண்ணியத்தால்
பின்னுமொருயோசனை செய்தான்பெரும்பாவி
உண்ணுகின்றசாதத்திலே ஒருக்கால்மருந்தையிட்டான்

குடிக்கிறதண்ணீரில் கொலைக்காரன்நஞ்சையிட்டான்
தப்பிப்பிழைத்தோமே சாமியுடபுண்ணியத்தால்
பின்னுமொருயோசனை செய்தான்பெரும்பாவி
சோழியினையாடி சொக்கட்டான்சூதாடி
நாடுபறித்து ராச்சியத்தைகொள்ளைகொண்டான்
சீமைதுரைத்தனமும் தேசத்தைகொள்ளைகொண்டான்
ஐவரையுங்கெலித்து ஆஸ்தானமுங்கெலித்து
காற்றுநுழையாத கல்லறைக்கிடங்கில்வைத்தான்
ஐவருடதேவியரை அம்பலத்தில்கொண்டுவந்து
தமையனுடபெண்சாதி தாயென்றுயெண்ணாமல்
மூலையிலிருந்தபெண்ணை முற்றத்திலிழுத்துவைத்தான்
அம்பலமேற்றியவன் அவமானத்தாழ்வுபண்ணான்
வாடியென்றும்போடியென்று வம்புசிலபேசினான்
அரசர்சபைநடுவே அம்பலத்துதுரைகள்முன்னே
சொல்லாதுஞ்சொல்லியே துகிலுமுரிந்தானே
பாரவனவாசம் பரதேசம்போனபின்பு
பன்னிரண்டுவருஷம் பாரவனந்திரிந்து
அக்கியாதவாசமல்லோ ஆரணியமொருவருஷம்
வேஷம்விட்டுவேஷமாறி வீற்றிருங்களென்றுசொன்னான்
பதின்மூன்றுவருஷம்சென்று பட்டணத்தில்வந்தாக்கால்
பங்குள்ளபிரகாரம் பாதிநாடுதாரேனென்றான்
ஆகையாலாண்டவரே ஆரணியம்வந்துவிட்டோம்
வருஷமொன்பதும்பிறக்க வந்தோம்வனந்தனிலே
உங்கள்வனத்திலே ஒருவருஷம்வனவாசம்
உம்மைவருத்தினேன் வுண்மையுள்ளரிஷியாரே
இந்தவனத்திலே இருக்கச்சிலவருஷம்
என்றல்லோதருமவர் இரங்கியேதெண்டனிட்டார்
தவத்திற்பெரியவர்காண் சந்நியாசியானவரும்
உற்றுற்றுக்கேட்டாரே உரோமரிஷியாரும்
ஆயாசப்பட்டுமவர் அறவேமனதுசலித்து
இத்தனைவஞ்சனைகள் இடறுசெய்தபாவியவன்
கொல்லநினைத்தானே கொடும்பாவிதிரியோதிரன்
நாடுகொடுப்பதில்லை ராச்சியந்தருவதில்லை
சீமைகொடுப்பதில்லை சிங்காதனந்தருவதில்லை
ஐவர்தனிலேயொருவன் அரன்பதியேபோவீரானால்
ஆதிசிவன்கையால் அஸ்திரம்பேருபெற்றால்
மாற்றானைக்கொன்றிடலாம் வையகத்தையாண்டிடலாம்
அல்லாதேயாமானால் அரசுக்குக்கிட்டாது
என்றவர்சொல்லுகையில் ஏதுசொல்வார்தருமராயர்
ஐவரிலேயொருவர் அப்பதியையடையவென்றால்
ஆயர்சொல்லல்லாது ஆகாதொருக்காலும்

மாயன்சொல்லல்லாது மற்றொன்றுமாகாது
அவ்வார்த்தைகேட்டு அரியரிஷியேதுசெல்வார்
மாயன்பெருமானை வரவழையுமிங்கேயென்றார்

தருமர் எம்பெருமானை நினைத்து தோத்திரம் பண்ணுகிறது.

சாயாம்புமன்னவனார் தருமராவரேதுசொல்வார்
அடியளந்தமாயவரே ஆண்டவரேவாருமென்றார்
ஏழுலகைபாண்டவரே எம்பெருமாள்வாருமென்றார்
மச்சவடிவுகொண்டு மறுகடலிற்பள்ளிகொண்டாய்
ஆலிலைமேற்பள்ளிகொண்ட ஆண்டவரேவாருமென்றார்
தருமர்வருந்தனைகையில் சாமிபவரநிற்க

தருமர் தோத்திரம்பண்ணினதைப் பெருமாளறிந்து தருமரிடம் வருதல்.

ஏழுலகைபாண்டவரும் எம்பெருமாள்வாறாராம்
வட்டமாக்குடைநிழல் மாயவருமவந்துவிட்டார்
ஆபலைக்காணுலகையில் லைவருந்தாமெழுந்து
முக்கால்வலம்வந்து முடிவணங்கிதெண்டனிட்டார்
தேடிதும்பைமலரெடுத்து சிங்காதனமபோட்டார்கள்
சிங்காதனம்போட்டார்கள் ஸ்ரீராமர்வீற்றிருந்தார்
என்னையழைத்தது ஏதுகருமமென்றார்
மனதிலிருக்கிற மர்மமுறையுமென்றார்
சாயாம்புமன்னவனார் தருமராவரேதுசொல்வார்
மற்றொன்றுமில்லையையா மாயவரேநீர்கேளும்
இந்த வனத்திலே யிருக்கிறமோமரிஷி
மாமுனியைத்தெரிசித்து வணங்கிப்பணிந்தோம்
ஆமென்றதைக்கேட்டார் அரிகாரணமாமுனியும்
வந்தகருமங்களை வார்த்தையெல்லாம்நானுரைத்தேன்
துரியோதிரன்செய்த சதியெல்லாம்நானுரைத்தேன்
அத்தனையுங்கேட்டு ஆயாசப்பட்டவர்தான்
துரியோதிரன்றன்னைச் செயிக்கவேணுமென்றார்
ஐவரிலேயொருவனையும் அரன்பதிபோங்களென்றார்
ஆதிசிவனிடத்து அஸ்திரம்பெற்றுவந்தால்
மாற்றானைவென்றிடலாம் வையகத்தையாண்டிடலாம்
போங்களென்றுரைத்தார் புனிதமகாமுனியும்
ஆகையாலும்மை அழையுமென்றார்தரிஷி
மயங்குகின்றவேளையிலே வந்திரோமாயவரே
இனிநடக்குங்காரியங்கள் எம்பெருமாள்சொல்லுமென
ஆயன்பெருமானும் அவருமங்கேதுசொல்வார்
வாரும்பெரியவரே வனம்வாழ்ந்தபோதவரே
ஐவருடைவார்த்தை அதிகாரமெத்தனுக்கேன்



ஸ்ரீகிருஷ்ணபகவான் மோகினிவுருவெடுத்து
அருச்சுனனை தடுத்தல்.

பஞ்சவர்கள் தங்களுக்குப் பாட்டனிருக்கிறூர்காண்
அவரையுமிங்கே அழைத்தாற்றெரியுமென்றூர்
வேதவியாசரை வேண்டியழையுமென்றூர்

ஐவரும் வியாசபகவானை நினைத்துவணங்க
வியாசர் வருதல்.

ஐவர்பஞ்சபாண்டவர்கள் அங்கெனவேதான்வணங்கி
வேண்டிநமஸ்கரித்து வியாசரைக்கைதொழுது
வாருமென்றுதானிளைக்க வந்தார்வியாசரிஷி
சடையுஞ்சடையழகும் தம்பிரான்போல்வாரார்
ஐவரிருக்குமந்த அடவியில்வந்தாரே
ஏழுலகையாண்டவனூர் எதிர்வந்தார்வியாசருக்கு
ஐவரெழுந்திருந்து அடிபணிந்தாரிருவருக்கும்
ஆயருங்வியாசருமே ஆலிங்கனம்பண்ணிக்கொண்டார்
ஆசனத்துமேலாக அனைவோரும்வீற்றிருந்தார்
வேதவியாசருமே வேந்தரைப்பார்த்துரைப்பார்
என்னகருமமாக என்னையழைத்தீர்கள்
மனதிலிருக்கின்ற மர்மத்தைசொல்லுமென்றூர்
மாயன்பெருமாளும் வார்த்தையங்கேதுசொல்வார்
பரமன்பதம்நோக்கி பாரதஞ்செய்யவென்று
பாசுபதம்பேருபெற்று பாரதத்தைவெல்லவென்று
ஆரைநாம்போகச்சொல்வோம் ஆண்பாதம்காணுதற்கு
தருமரைபோகவிட்டால் சாமிபதந்தானறியார்
வெற்றிமதயானை வீமனுலாகாது
நகுலசகாதேவ ராஜாலாகாது
அருச்சுனரைப்போகவிட்டால் ஆருனைக்காணவல்லான்
பரமசிவனருகில் பாசுபதம்பேறுபெற்று
வேணவரம்வாங்க விஜயனவர்வல்லவர்காண்
என்றுமவர்யோசனையால் எழில்விஜயனைப்பார்த்து
பார்த்திபாவருச்சுனரே பரமன்பதிநோக்கி
ஆதிசிவன்பதிக்கி அருச்சுனபோறீரோ
கைலாசபதியிலே கர்த்தரைவரீகண்டு
அதிகவரம்பேருபெற்று அருச்சுனரேவாருமென
காண்டிபாருச்சுனருங் காசயவரேதுசொல்வார்
அடியேனையனுப்பிவைத்தால் அவசியம்போய்வாரேன்
அப்போபெருமாளும் அருளாளரேதுசொல்வார்
கைலாசம்போனாலே கட்டழகாசொல்வேன்காண்
ஏகும்வழிதனிலே இருப்பார்கள்வேணபெண்கள்
மின்னல்ரம்பையூர்வசியும் மேனகைதிலோர்த்தமையும்
அழகில்மிகுந்தபெண்கள் அனேகம்பேர்தானிருப்பார்
கண்டால்விடுவதில்லை கடுகியேமோகங்கொள்வார்
பார்த்தாசைப்பட்டாலே பார்த்திபாவிடுவதில்லை

ஐன்றுமன் றுடையவரைக் காணவரிதாகும்
அல்லாதே யாமானால் அருச்சுனனுக் குறுக்கு
போரவழியிலே பெண்கள் நடந்தாலும்
தங்கைதமக்கையென்று தள்ளிவிட்டுப் போவானும்
பார்த்தாசைபட்டாக்கால் பரமசிவன் பாதம்
எத்தனைகாலம் இருந்துதவம்பண்ணினாலும்
பாரத்தவஞ்செய்தாலும் பரமசிவன்காட்சிதாரார்
பயபக்தியாயிருந்தால் பரமசிவன்வந்தருள்வார்
அத்திபகலும் அதிராத்திரிவேளையிலும்
நினைவுமறவாதே சிவனைநிலைநிறுத்தி
மோனத்துடனேநிலை பூட்டிதவஞ்செய்தாலே
சிவனார்மனமகிழ்ந்து சேனைவந்தருள்வார்
முப்பத்துமுக்கோடி முனிவரெல்லாங்கூட்டத்துட
நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகள்கூடபுரிய
பார்வதிசமேதராய் பரமசிவன்வந்திடுவார்
கோருவரங்களெல்லாங் கொடுப்பார்பரமசிவன்
அப்படிக்குப்போகவென்று வாதுசொன்னாள்விஜயா
மாயருரைகேட்டு வாள்விஜயனேதுசொல்வான்
ஆதிசிவனைநான் அனைநாளும்மறந்திருந்தேன்
நேசமாய்ப்பெண்களென்மே லாசைமிகக்கொண்டாலும்
வாரவழிமறித்து வார்த்தைகள்பேசினாலும்
தாயென்பேன் தங்கையென்பேன் சாமியுநீயென்பேன்
கர்த்தாவைக்கண்டிடவே கடுகிவரமவாவிரேன்
போகவிலையுறுதும் போய்வாரேன்சுவாமியென்றான்
அதுவுமேயல்லாம லண்டவனைத்தந்தருக்கு
போகும்வழிதனிலே புதுமையுண்டாகுதாலும்
சிவனார்பதியிலே செய்புர்தவசிருக்க
மழுவேந்துஞ்சிவனாரும் வஞ்சனைகள்செய்தாலும்
எதுவினைவந்தாலும் எந்தனுக்குத்தானவாரும்
மகாதேவனைக்கண்டு வாங்கிவாறேன்வரங்களென்றான்
அப்போதுமாயவரும் அவ்வார்த்தைக்கேதுசொல்வார்
போகும்வழிதனிலே பொற்கொடியாளொலகனி
ஆதிசிவனைநோக்கி அருந்தவஞ்செய்தவள்தான்
அம்பலமான்போலே அழகில்மிகுந்தவள்தான்
அருச்சுனனேவுனையணைய அதிகவாம்பெற்றவள்தான்
உன்னைகல்யாணம்பண்ண உகந்திருக்கிறாள்காண்
அவள்வந்துவழிமறிப்பாள் வாள்விஜயமன்னவனே
மாதவளைக்கண்டுநீ வார்த்தையொன்றுஞ்சொல்லாதே
தாயென்றுந்தங்கையென்றும் தாழ்வாகச்சொல்லாதே
வரும்போதுபெண்ணேயுனை மாலையிட்டுக்கொள்வேனென.
சாயரம்புமேனியனே கண்டக்கும்புறா

தக்கதுசொல்லிப்போம் சாமியுடபூபதிக்கு
அதிகவரம்பெறுபெற்று அருச்சுனரேவரும்போது
ஏலகன்னிமாதரசை இளங்கொடியைமாலையிட்டு
வரும்போதுமாலையிட்டு வந்துவிடும்அர்ச்சுனரே
மற்றொருவிணைவந்தால் வந்துநான்காத்திடுவேன்
போய்வாருமென்றுசொல்லி பெருமாள்சிலவுதந்தார்

அர்ச்சுனன் சிவனைக் காணப்போவதற்குச் சோடித்தல்.

சூலபாணிரூபம்போற் சோடித்தானருச்சுனனும்
எங்கெந்தமுஸ்தீபு இளவிஜயன் தான்தரித்தான்
ஐந்துசடைகொஞ்ச அழகுசடைமார்புரள
குத்துசடையங்கே குலுங்கஅருச்சுனனுக்கு
உள்ளமெல்லாம்லிங்கம் உடம்பெல்லாம்வெண்ணீறு
ஆவியெல்லாம்லிங்கம் அங்கமெல்லாம்வெண்ணீறு
காவிகாம்பரமும் கட்டினான் அரைதனிலே
அன்றுரித்தமான்தோலும் அழகானபுலித்தோலும்
கன்றுபுலித்தோலும் கைலாசமான்தோலும்
காதிலேகுண்டலமும் கையிற்கங்கணமும்
ஏகவேஷ்டிதானணிந்தான் இயலானஅர்ச்சுனனும்
பிரமமுடித்தாழ்வடங்கள் பெரியருத்ராட்சமணி
பஞ்சமணிதாழ்வடமாம் பலவிதமாலைகளாம்
நாகமணிக்கங்கணமாம் லாடமிகச்சங்கிலியாம்
வேலாயுதம்சூலாயுதம் வெண்புலித்தோலாசனமாம்
அரைமைச்சுற்றிகிண்கிணியாம் அழகுமயில்தாவடமாம்
குருயோகபுத்தகமாம் சுரையோடுகமண்டலமாம்
கஞ்சாக்குடுக்கைகளாம் கௌதமர்சோளிகளாம்
சண்குசெயகண்டிகை தானணிந்தானருச்சுனனும்
கணிக்கால்சிலம்புகளாம் காலில்மிதியடியாம்
அஷ்டாபரணமெல்லாம் அருச்சுனன்தான்தரித்தான்
வியாசரும்மாயவரும் மிக்கவரமொன்றுதந்தார்
ஒருவன்சிவனேயென்ன உலகம்சிவனேயென்னும்
ஐவர்களுந்தனுக்கு யனுக்கிரகந்தந்தாமென்றார்
போய்வாருமர்ச்சுனரே பொன்னுலகந்தான்தேடி

அருச்சுனன் ஈஸ்வரரைக் காணப்போகிறது.

அந்தச்சமயத்தில் அருச்சுனன்தானெழுந்து
எல்லாரையும்பணிந்து எழுந்தானே அர்ச்சுனனும்
போய்வரேனென்றுசொல்லி போனானருச்சுனனும்
அருச்சுனன்போனபின்பு ஆங்குவியாசருமே
எல்லாரையும்வாழ்த்தி யிருவருமேபோய்விட்டார்
மாயன்பெருமாளும் வாழ்கருடன்மேலேறி
ஐவரைவாழ்த்தியே அரிராமர்போய்விட்டார்
வில்வேந்தன்ருச்சுனனும் விரைவாய்வனந்தாண்டி

காடுசெடிதாண்டி கடுகியேவாரானே
அரணியங்காணவென்று அதிதுரிதமாகவாரான்
செவியாவென்றுசொல்லி சீக்கிரமாய்வாரானே

எம்பெருமான் பெண்வேஷமாய் வருகிறது.

அருச்சுனன்நினைவறிய அரிராமரேதுசொல்வார்
மோககன்னிபெண்போல முடிமன்னர்வடிவுகொண்டார்
சின்னஞ்சிறியபெண்ணாய் ஸ்ரீராமர்வடிவுகொண்டார்
மின்னலொளிபோல மேகவண்ணர்வடிவுகொண்டார்
அல்லார்தலைமயிரும் ஐந்துமுழம்ஆறுமுழம்
ஆணைக்குகூந்தலது அறுபத்துநான்குமுழம்
காசாம்பழத்திலும் கறுத்தகருப்பழகும்
ஈச்சம்பழத்திலும் இருண்டகருப்பழகும்
வாரிக்குழல்முடித்து வான்சவுரியுட்சொருகி
கொண்டைக்கிருப்பிவிட்டு கொலுமுகத்துத்தொங்கவிட்டு
கும்மல்சிமிக்கைகளும் காதிலேயிட்டாளாம்
கழுத்திலணிந்தாளாம் கனகமணிதாவடத்தை
கல்லெதொருபொன்காறை நடுக்கழுத்திலேதரித்தாள்
ஒற்றைச்சரடுகளாம் ஒருபுரமாம்பொன்சரிகை
இரட்டைச்சரடுகளாம் இராஜாங்கப்பெண்தாலி
முத்துச்சரப்பளியாம் மோகனமாலைகளாம்
அரைக்கிசைந்தஒட்டியாணம் ஆடைமேற்றரித்தாளாம்
காலுக்குத்தண்டைகளாம் கனத்தகொலுசுகளாம்
காலாழிபீலாழிகளும் கில்லணையும்பில்லணையும்
அழகுமணிகளெல்லாம் அலங்காரம்பண்ணினார்
கதம்பமும்சந்தனமும் கஸ்தூரிமணங்கள்வர
அன்னம்போல்நடந்து ஆண்டவனார்வாறாரே
அர்ச்சுனன்போனதொரு அடவியிலேவந்துவிட்டார்
அர்ச்சுனனைத்தான்பார்த்து ஆண்டவனாரேதுசொல்வார்
ஐயாபெரியவரே அறிவுள்ளசங்கமரே
தீரப்படித்தவரே தெளிவுள்ளசங்கமரே
புதிதாய்தபசுபண்ணி புத்திமெத்தகற்றவரே
எங்கிருந்துபோரீர்காண் இயலானசங்கமரே
கோடிச்சரணமையா கும்பிட்டேன்சுவாமியென்றார்
உன்னழகும்பாவனையும் உலகத்தில்கண்டறியேன்
உம்மைக்கண்டபோதே வருகுதேதேகமெல்லாம்
காமவிகாரத்திற் கனிதாங்கிப்போறேனையா
மோகவிகாரத்திற் மூர்ச்சைபட்டுப்போறேனையா
காமக்கனலைத்தான் கனிதீர்க்கலாகாதோ
மோகவிகாரத்தை மூர்ச்சையாய்த்தீருமையா
மன்மதனைப்பகனை மார்புருகிப்போகுதையா
சித்தசன்தொட்டலணை சிறுமார்புருகுதையா

அரைநாழியென்னுடனே அணைந்திருந்துபோகொணுதோ
ஒருநாழியென்னுடனே உறவாகிருந்துபோகொணுதோ
மார்பைப்பார்தோளைப்பார் வன்னமுலைகனத்தைப்பார்
என்னழகும்பாவனையும் ஏறெடுத்துப்பாருமையா
என்னைப்போல்பெண்களுமெங்கேகிடைப்பார்கள்
தேடக்கிடையாது தேசத்திற்கிட்டாது
காணக்கிடையாது கலிபுரத்திற்கிட்டாது
மார்போடேமார்பணைத்து மகாவிடாய்தீருமையா
தோளோடேதோளணைத்து சுகத்தைக்கொள்ளவாருமையா
பஞ்சணைமெத்தையிலே கொஞ்சிவிளையாடுமையா
குங்குமமெத்தையிலே கூடிவிளையாடுமையா
வாருமையாசங்கமரே என்றுவழியமறித்தாள்

அருச்சுனன் மோககன்னிகையைப்பார்த்துச் சொல்லுகிறது.

ஏறெடுத்துப்பார்த்தானே எழிலானயர்ச்சுனனும்
என்னுகுமென்றிருன் இயல்விஜயனப்போது
மாயவனுர்சொன்னதொரு வார்த்தையெல்லாமெய்யாச்சு
என்றல்லோவாள்விஜயன் எதுவப்பாகன்னியர்க்கு
ஆங்கைலாசம் ஆனபதிபோறேனம்மா
கர்த்தாவைக்காணவென்று கைலாசம்போறேனம்மா
வம்புகளைச்சொல்லாதே வழிகளைமறக்காதே
பெற்றவளர்த்ததொரு பேர்பெரியதாயலவோ
கூடப்பிறந்தவள்நீ கூட்டுப்பாலுண்டவள்காண்
தங்கைதமக்கைநீ தாயாருநீயலவோ
தூரநில்லும்ஆச்சியாரே தோஷங்கள்பண்ணுதே
இடையநில்லுமாச்சியாரே எல்லாருங்கேவாராதே
என்றுரைத்தானே ஏறெடுத்துப்பாராமல்
மற்றுமந்தக்கன்னியரும் வார்த்தைகேளுசொல்வாள்
சேரவென்றுவந்தேனே செல்லுமென்றுசொல்லலாமோ
பெண்சாதியென்றுவந்தால் பெற்றதாயென்னலாமோ
ஆத்தாளென்றெண்ணலாமோ அடுத்தமுறைவந்தாலே
தாயென்றுற்றுன்போமோ தனிமுறைவந்தாக்கால்
ஆண்டிக்குமுறையில்லை அரிவாளுக்குறையுமில்லை
எருதுக்குபேச்சுமில்லை இடையனுக்குமுறையுமில்லை
அரைநாழிபோகத்திலே அமர்ந்திருந்தால்போதுமையா
மார்போடேமார்பணைந்து மருவிமுத்தந்தாருமையா
இன்னப்பழமிருக்க சேனதூரப்போவானேன்
கானலிலும்வெய்யிலிலும் காட்டுவழிபோவானேன்
கட்டிலுண்டுமெத்தையுண்டு கால்பிடிக்கதாதியுண்டு
சோழிசதுரங்கம் சொக்கட்டானுண்டையா
தின்னநல்லபாக்குமுண்டு செலவழிக்கபொருக்குமுண்டு
வாருமையாசங்கமரே மனைக்குநாம்போயிருப்போம்

தானுகவந்தபெண்ணைத் தள்ளிவிட்டுப்போகலாமோ
போனாலும்பலனுமில்லை பித்தனைக்காண்பதரிது
விளையாடிப்போனாலே வித்தகரைக்கண்டிடலாம்
கனமுரண்டைக்காட்டியே தான்மடுத்தாள்மோககன்னி
இவளுடையவார்த்தைகளை இளவிஜயன்தான்கேட்டு
கோபம்வருகுது கொல்லமனந்துணிந்தான்
வில்லெடுத்துகைபிடித்து வில்நாரிபூட்டிவிட்டு
அம்புறாத்தூணியிலே அலரம்பைத்தானெடுத்து
கொல்லநினைத்தானே கோதைமறைந்தாளே

அருச்சுனன் பாணமெடுக்க பெண்மறைந்து பெருமாள் வருதல்.

கோபாலகிருஷ்ணரவர் கொப்பெனமாயவனார்
கண்டானேவாள்விஜயன் கர்த்தனுடமாயையென்று
இளவிஜயனர்ச்சுனனு மினியவனம்போகையிலே
மாயன்பெருமாளும் வாராரேயந்தவழி
கண்டானேயருச்சுனனுங் கடுகியவன்தெண்டனிட்டான்
மாயன்பெருமாளும் வார்த்தையங்கேதுசொல்வார்
இன்னேரமெங்கிருந்தீர் இயலாணவாள்விஜயா
காளையர்தயருச்சுனனுங் கடுகியேயதுசொல்வான்
மாயவரேசொன்னதுநீர் வனத்திலேமெய்யாச்சு
ஆரோவொருதெய்வகன்னி அநேகநேரமெனைமறித்தாள்
வந்துவழிமறித்து வார்த்தைகளாடினளே
சொல்லாதுஞ்சொல்லியே சோதகங்கள்பண்ணினளே
என்றுசொல்லியருச்சுனனும் ஏறெடுத்துப்பார்த்தானே
கன்னியிளமையுமே கழுத்திலேகருமணியும்
கண்டானேவாள்விஜயன் கடுகநகைத்தானே
அனைத்துங்குலைத்தீரோ ஆயன்பெருமாளே
மையைக்குலைக்க மறந்தீரோமாயவரே
மணியையவிழ்க்க மறந்தீரோமாயவரே
பொட்டைக்கலைக்க மறந்தீரோபுண்ணியரே
ஆபரணந்தான்கழட்ட மறந்தீரோஅச்சுதரே
என்னகோலம்வந்தாலும் ஏற்குமையாவுந்தனுக்கு
அப்போதுமாயவரும் அருளாளரேதுசொல்வார்
ஆயன்பெருமாளும் அங்கணவேயேதுசொல்வார்
மைத்துனாவுந்தனிட மனவலுமையென்னசொல்வேன்
அருச்சுனாவுந்தனிட ஆண்மைகளையென்னசொல்வேன்
வாள்விஜயாவுந்தனிட மனமரியவந்தேன்காண்
கர்த்தாவைக்காணவல்லாய் கடிகிவரம்வாங்கவல்லாய்
பரமனைக்காணவல்லாய் பாசுபதம்வாங்கவல்லாய்
ஈசனைக்காணவல்லாய் இனியவரம்வாங்கவல்லாய்

போய்வாருமென்றுசொல்லி பெருமாளனுப்பினார்
அனுலழகுமன்னன் அருச்சுனராசதுரை
விடைபெற்றுக்கொண்டானே வேந்தனருச்சுனனும்
அருச்சுனன்போனபின்பு அரிராமசேதுசெய்தார்
வட்டயாங்கருடனேறி வந்துவிட்டாரெம்பெருமாள்
காடுசெடிதாண்டி கரியமலைதான்தாண்டி
ஓங்கிவளர்ந்ததொரு மூங்கில்வனந்தாண்டி
சில்லென்றுபூத்ததொரு செடியும்வனந்தாண்டி
துவாரகாபுரிதனக்கு சுவாமியும்போய்ச்சேர்ந்தார்

ஒன்பதாவது ரோமரிஷிவனம்-முற்றிற்று.

௧0-வது பேரண்டவனம்.

பத்தாம்வருஷம் பிறந்ததுபஞ்சவர்க்கு
கூடைதலைமேலே குடிவாழ்க்கைகானகத்தில்
கோளிவைத்தசிமாடு கூடைதலைமேலேவைத்தார்
மன்னிவைத்தசிமாடு வனவாசம்போனார்கள்
அந்தவனத்தைவிட்டு அப்பாலேபோகலுற்றார்
காடுசெடிதாண்டி கரியமலைதான்தாண்டி
ஆறுசுனைதாண்டி அதிகவனந்தாண்டி
பேரண்டவனத்திலேதான் பிரியமாய்பஞ்சவர்கள்
வந்தார்குடித்தனமாய் வனத்திலேவாசம்பண்ண
ஐந்தடுக்குப்பர்ணசாலை அழகாகவுண்டுபண்ணார்
ஏழடுக்குப்பர்ணசாலை எழிலாகவுண்டுபண்ணார்
அந்தவனத்திலே ஐவர்குடியிருந்தார்
இப்படியாக இவரிருக்கும்வேளையிலே
பூதநாதனைத்தேடி போனானேவாள்விஜயன்
அரகாரவென்றுசொல்லி அடித்தானேசெயகண்டிகை
ஓம்சிவாவென்றுசொல்லி ஒலித்தானேசங்குதனை
ஒருவன்அரனேயென்ன உலகம்அரனேயென்னும்
ஒருவன்சிவனேயென்ன உலகம்சிவனேயென்னும்
இருண்டவனத்திலே இருக்கின்றபேரண்டன்
அநேகதூரம்போயிருந்தானாகாரந்தேடிவர

பேரண்டச்சி அர்ச்சுனன்மேல் மோகித்தல்

பேரண்டராட்சதன்றன் பெண்சாதியானவளும்
தன்னந்தனியவளாய்த் தானிருந்தாள்மண்டபத்தில்
அரகரவென்றசத்தம் ஆரணங்குதான்கேட்டு
கொத்தளம்போல்மூக்கழகும் மத்தளம்போல்புட்டங்களும்
வனமூஞ்சிகுரங்குதலை ஒன்றுமுதுகழகும்
செம்பட்டமயிரழகாம் சிங்காரப்பல்லழகாம்
பனைமரம்போற்பல்லழகாம் பருவதம்போற்கண்ணழகாம்
கழுத்தைசுத்திகண்டமாலை இடுப்பைசுத்திஅரைக்கயிறு



அருச்சுனன்மீது காதல்கொண்ட அரக்கியின் கணவனைக்கொன்
றதெய்வப்பெண்கள் வேண்டுகோளாமல் மீண்டும் அவனைஎழுப்பல்.

துடையைச்சுத்திரட்டுப்புண் தோளைச்சுத்திபெருஞ்சிறங்கு
நின்றாளேயாமாகில் நிலத்தில்விழுமிரண்டுஸ்தனம்
இன்னமுஞ்சொல்லுகிறேன் இரண்டுஸ்தனத்தழகை
கப்பலின்மேல்வாரதொரு கொப்பரைத்தேங்காய்போல்
தோணிமேல்வாரதொரு சொரக்காய்போல்தானிருக்கும்
பல்லிலேபடர்ந்திருக்கும் பாசிபடர்தாமரைப்போல்
சீழுஞ்சொலநீரும் தேகமெல்லாம்நாற்றம்வரும்
காயமதிற்படிந்தழுக்கு கற்றாழைநாற்றம்வரும்
அருகேவந்துநின்றாலே அசங்கியமாய்த்தோன்றும்
மாவுரியைத்தானுடுத்தி வாராளேபோண்டச்சி
ஆண்டிபெரியவர்கள் அருகில்வந்தாள்ராட்சசியும்
பண்டாரம்பெரியவனைப் பார்த்தாசைப்பட்டாளாம்
வாயைத்திறந்துமவள் வார்த்தைகளேதுசொல்வாள்
நில்லுமையாசங்கமரே நெடுந்தூரம்போகாதே
உன்னாசைபட்டதல்லால் உலகில்வேறாசையில்லை
மார்பைப்பார்தோளைப்பார் மருவியிணையாடலாம்வா
அரைநாழிஎன்னுடனே அமர்ந்திருந்துபோகவேணும்
வருவீர்வருவீரென்று வழிபார்த்துக்காத்திருந்தேன்
மன்மதபாணமது மார்புருவிப்போகுதையா
மோகவிகாரமதை மூர்ச்சைவைத்திருதையா
என்னைப்போல்பெண்ணுனக்கு எங்கேகிடைப்பார்கள்
தேடிப்புறப்பட்டாலுந் தேசத்திற்கிட்டாது
மார்போடேமார்பணைந்து மருவிவிடாய்தீருமையா
தோளோடேதோளணைந்து சுகங்கள்தெளியும்போ
பஞ்சணைமெத்தையிலே கொஞ்சியிருப்போமென்றாள்
ஏறெடுத்துப்பாராமே ஏனென்றுங்கேளாமே
அராகரா அரனேயென்று ஆண்டியுந்தானடந்தான்
காமவிகாரத்துடன் கடுகிவந்தாராட்சசியும்
போண்டாராட்சசியும் பின்னேதுவார்த்தைசொல்வாள்
கண்டாசைபட்டுவந்தேன் கண்ணெடுத்துப்பார்க்கவில்லை
என்னென்றுகேட்கவில்லை ஏறமுகம்பார்க்கவில்லை
என்னைப்பாராமல்போரீரோ பாதகனாகையாலே

போண்டச்சி அர்ச்சுனனிடம் சபதங்கூறல்.

என்புருஷன்வந்தபின்பு இட்டுன்னைவாவழைத்து
என்னெண்ணப்பிரகாரம் இருந்துமருவிடுவேன்
என்றுசபதமிட்டு இயலாளராட்சசியும்
காமவிகாரக் களையுடனேதானடந்தாள்
மோகவிகாரமூர்ச்சையுடன் தான்போறாளே
வளையலைத்தானுடைத்து மார்பெல்லாந்தான்கிழித்தாள்
முகத்திலறைந்துகொண்டு மோதிப்புலம்புகிறாள்

பொண்டச்சி அழுகுரல்கேட்டு பொண்டன் வருதல்.

அழுகுரலைத்தான் அறிந்தானே பொண்டனும்
ஏதுக்கழுகிறாள் என்னுடைய தேவியரும்
வர்த்தமானமாக வாய்விட்டழுதாளோ
என்று-ஐம்பதுபாளை அவன்தாம்பின் தாவிவந்து
வேகத் துடிதுடித்தானே தேவியருகிலே
சினமாய்ப் புரிகிறான் பொண்டாட்டியும்
ஏதுக்கழுகிறாள் இளங்கொடியாளென்றே தேவி
இத்தனைகாலமில்லாம லின்றழுபுலம்புவதேன்
உற்றுவருமோயென்று ஆங்காரமுள்ளவனும்
சிணப்பொய்யருகிலேவந்து நின்றுமேபொண்டன்
ஏதுக்கழுகிறாய் என்னுடைய தேவியரே

பொண்டச்சி தன்புருஷனுடன் தன்வரலாறுகூறிச் சந்தைக்குப் போகச்சொல்ல பொண்டன் சந்தைக்குப் போகிறது.

பொண்டாட்டியாள் பிரியமுடனேதுசொல்வாள்
மாலையிட்டநாள்முதலாய் மனதுகுறைவந்ததில்லை
நான்-பெண்பிறந்தபாவமது போதுமையாஎந்தனுக்கு
என்-பாவிதலையிலே பத்தெழுத்தையெழுதிவிட்டான்
செல்வத்தலையிலே செப்பேடெழுதினது
அல்லப்படவோ அழைத்துவிட்டார்பிரமதேவன்
துணைபோதுபெண்பிறப்பு ஆகாதுபெண்ணெசெப்பேன்
நான்-புத்திரிலாவேசியவளோ பொண்டாட்டதனே
வாரவழிதனிலே வைத்திரசமாராம்
என்னைத்தனிவேவிட்டு இனிப்போகநாயமுண்டோ
உன்தேவியருக்கும் வாருக்குப்பெண்டாளேயே
என்தாய்பெண்ணாளவோ சொருபமுடையவள்தான்
அழகில்மிகுந்தவளோ ஆரோஒருவனவன்
பதினியாவிளக்கென்றனை பாராமலிங்கொருவன்
உத்தமியாளென்றுசொல்லி வணாயமலிங்கொருவர்
ஆண்டப்பெரியவர்கள் அரண்மனைசெல்வந்தார்கள்
வந்தபெரியவரை வணங்கிபேதெண்டனிட்டேன்
நன்-சஞ்சாரக்குடிக்கைக்குத் தண்ணீர்கொண்டுவாருமென்றார்
தண்ணீருந்தான்கொடுத்தேன் சரணங்கள்தான்செய்தேன்
செருப்பெடுத்துவாவென்றார் செருப்பைக்கொடுத்தேனே
அள்ளியேபூதிதந்தா ரணிந்துகொண்டேன்நெற்றியிலே
வாடிநீபோடியென்றான் வலதுதொடையேறுமென்றான்
கையைப்பிடித்திழுத்துக் கடிகிமருவுமென்றான்
பொல்லாதனங்கள்செய்து போய்நடந்தான்சங்கமனும்
அவனை-கைப்பிடிப்பாகவே கடுகிபோய்கொண்டுவாரும்

அல்லாதேயாமாகுல் அநீதமாய்மாண்டிடுவேன்
பேரண்டச்சிஅழுக பேரண்டன்தானெழுந்தான்
எழுந்தானேராட்சதனும் என்றுமில்லாக்கோபமுடன்
ஆலமரம்பிடுங்கி தோளிலேவைத்தவனும்
கோபித்துக்கண்சிவந்து கொப்பெனவேஓடிவந்தான்
நில்லும்நில்லும்சங்கமரே நெடுந்தூரம்போகாதே
ஆரடாபண்டாரம் அறிவுகெட்டசங்கமரே
என்னுடையபெண்சாதியை எந்தனிருகண்மணியை
அழகில்மிகுந்தபெண்ணை ஆகடியஞ்செய்ததென்ன
வழியிலேவீடுகட்டி வனத்தில்குடியிருந்தால்
பிச்சையெடுக்கிறவன் பெண்டோபிடிக்கிறது

பேரண்டனுக்கும் அர்ச்சுனனுக்கும் சண்டை.

அரைநாழிகொள்ளையிலே அவசியங்கொன்றிடுவேன்
இட்சணபோதையிலே எமபுரஞ்சேர்த்திடுவேன்
என்றேவுரும்பினன் இயலானராட்சதனும்
ஆணலழகுமன்னன் அருச்சுனனேதுசொல்வான்
வாடாநீராட்சதனே வார்த்தையொன்றுநீகேளாய்
ஆதிசிமன்பாதம் அரன்பாதங்காணவென்று
பாரத்தபசுபண்ண பரமர்பதிபோகையிலே
வாரவழிதனிலே வழிமறித்தாளுன்தேவி
கண்டாசைப்பட்டேனென்று கடுகிமையல்தீருமென்றாள்
பொல்லாதாள்சேர்ந்தணைந்து போங்களென்றாளுன்தேவி
நான்-வாயைத்திறக்கவில்லை வண்ணமுகம்பார்க்கவில்லை
என்னென்றுகேட்கவில்லை ஏறெடுத்துபார்க்கவில்லை
வீணவார்த்தையிது மேல்போட்டுவாராதே
அநியாயசண்டையிது அமராதுசெய்யாதே
என்னோடெதிர்த்தாலே இருதுண்டாய்போட்டிடுவேன்
பெண்சாதிவார்த்தையினல் பிராணனொழிக்காதே
மாளுவதுதருமமல்ல மன்னநடவுமென்றார்
எத்தனைசொன்னாலும் இரங்காமல்ராட்சதனும்
எதிர்த்தானமர்போர்க்கு இருண்டவனம்நடுங்க
கண்டானருச்சுனனும் கண்கள்சிவப்பேற
கோபம்பெரிதாகி கொல்லமனந்துணிந்தான்
வில்வளைத்துநாரிபூட்டி வில்லைகுணத்தொனித்து
காதுமட்டாய்தானிழுத்துக் கைக்கணையைவாங்கினன்
பேரண்டராட்சதன்தன் பிராணனைப்போக்கவென்று
அலகம்பைதானெடுத்து அஸ்திரத்தைபூட்டினன்
மந்திரவுபதேசஞ்செய்து மார்புரளவாங்கினன்
மேலிட்டுராட்சதன்மேல் விழுந்ததுஅஸ்திரந்தான்
பேரண்டன்தலையைப் பிடரிவிட்டுத்தானறுத்தே

அருச்சுனன் பாணத்தால் பேரண்டன் தலைவிழ பேரண்டச்சி புலம்பல்.

அறுந்ததலைமேலேழவிழ ஆகாசமாயெழும்ப
மற்றொருகணைதொடுத்தான் வாள்விஜயனருச்சுனனும்
அறுந்ததலையுமல்லோ அவன்தேவிவாசலிலே
கொண்டுபோய்போடுமென்றான் கொப்பெனவேவாள்விசயன்
தள்ளிப்போய்விட்டதுவே சண்டாளன்தன்தலையை
அவன்மாண்டபிற்பாடு அருச்சுனனும்தானடந்தான்
அந்தச்சமயத்தில் அடைவானபேரண்டச்சி
தலையையவள்பார்த்து தன்புருஷன்தலையெனவே
கண்ணீரைசோரவிட்டு கதறிபுலம்புகிறாள்
விழுந்தாளெழுந்தாள் மண்மேலேபுரண்டழுதாள்
மாரடித்துதோளடித்து மண்தூற்றியேயழுதாள்
கோவென்றசத்தமுடன் குமரிப்புலம்புகிறாள்
மலையேபருவதமே மண்மேலேசாய்ந்தீரோ
மேகமலையே நீ விண்ணுலகம்சேர்ந்தீரோ
நீமடியுங்காரியங்கள் நிண்ணயத்தைநானறியேன்
வச்சிரத்தூணே நீர் மண்ணோடொழுந்தீரோ
கல்லானதூணைக் கரையானரித்ததுவோ
இரும்பானதூணே நீ இற்றுவிழுந்தாயோ
எங்கேயோவானம் இடிக்குதென்றுநானிருந்தேன்
தப்பாமல்வானம் தலையிலிடித்ததையோ
தெருவிலேகையைவிட்டுத் தினகரனைசாட்சியென்றாள்
சந்தியிலேகையைவிட்டுச் சந்திரனேசாட்சியென்றாள்
ஆரைச்சதமென்பேன் அன்னியரைத்தஞ்சமென்பேன்
எவரைச்சதமென்பேன் இனியாரைத்தஞ்சமென்பேன்
பார்த்தமுசங்கெல்லாம் வேற்றுமுசமாகுதையோ
மலையேபருவதமே வாழ்மலையேகுஞ்சரமே
செம்மலையேபருவதமே செத்துமடிந்தீரோ
செத்துமடிந்தீரோ சிவலோகஞ்சேர்ந்தீரோ
மாண்டுமடிந்தீரோ வைகுந்தஞ்சேர்ந்தீரோ
நீமடியுங்காரியத்தில் நிண்ணயங்கள்நானறியேன்
சந்தனவிருபுஜத்தை சரியவெட்டிப்போட்டாரோ
குங்குமவிருபுஜத்தை குளிரவெட்டிப்போட்டாரோ
கொண்டைப்பழிகொடுத்த கோழியைப்போலானேனே
செட்டைபறிகொடுத்த செம்பருந்துபோலானேனே
உன்னைப்பறிகொடுத்து ஊதாரியாவேனோ
அடிவானத்திடிபோலே அழுதுபுலம்புகிறாள்
பேரண்டராட்சசியாள் புரண்டுபுரண்டழுதாள்

பேரண்டச்சி அழுகிறதைக்கேட்டு தெய்வகன்னிகள் வருகிறது.

அந்தச்சமயத்தில் அழகானதெய்வகன்னி
ஏழுபேர்சத்தகன்னி இளங்கொடிமாதர்களும்

தீர்த்தங்களாடியென்று தெய்வகன்னிகள்வாறார்கள்
அழுதகுரல்கேட்டு ஆயாசப்பட்டார்கள்
ஒருவர்க்கொருவர் ஒற்றுமையாய்ப்பேசுகிறார்
ஆரோதெரியாது அழுதுபுலம்புகிறாள்
இத்தனைநாள்வரையில் இவ்வோசைகேட்டதில்லை
அழுதகுரல்கேட்டு அப்புறம்போகொண்ணாது
அழுகிறவிடத்திலே யாவரும்போவோமென்றார்
புலம்புமிடத்திலே பொட்டெனவேவந்தார்கள்
ஆரடிமங்கையரே அழுதுபுலம்புவதேன்
பேரண்டராட்சசியும் பிரண்டழுதுசொல்லலுற்றாள்
ஆரைக்கழுத்தி அரைக்கழுத்தியானேனே
கோரைக்கழுத்தி குரைக்கழுத்தியானேனே
மஞ்சளிழந்தேன் மணமிழந்தேன்பூவிழந்தேன்
தாலிச்சரடிழந்து தலைவிரிக்கநாளாச்சே
ஏதென்றுநானுரைப்பேன் என்னுடையஅக்கமாரே
ஆரோஒருபண்டாரம் அரன்பதிக்கியோரான்காண்
வாடியென்றும்போடியென்றும் வம்பாகபேசினனே
சொல்லாதுஞ்சொல்லியே சேர்ந்துஅணையவந்தான்
புருஷனுடனுரைத்தேன் போய்க்கேட்டார்சங்கமனை
என்-கணவனைக்கொன்றுவிட்டு கடுகியேபோறார்காண்
மங்கிலியப்பிச்சை வரங்கொடுத்துபோங்களம்மா
என்றவுரைகேட்டு இயலானகன்னியர்கள்
ஆயாசப்பட்டுமல்லோ அதிகமனஞ்சலித்து

தெய்வகன்னியர் அர்ச்சுனனைக்கண்டு இரக்கஞ்சொல்லல்.

சங்கமரைத்தேடியே நடந்தார்கள்தையலர்கள்
ஐயாபெரியவரே அறிவைப்படைத்தவரே
திரப்படித்தவரே தெளிவறிந்தசங்கமரே
புதிதாய்தபசுபண்ணி புத்திமெத்தகற்றவரே
நில்லும்நில்லும்சங்கமரே நெடுந்தூரம்போகாதே
போரவழிதனிலே பொல்லாங்குசெய்யலாமோ
சீவவதைபண்ணி சிவன்பதியேபோகலாமோ
ஆதிசிவன்வாழும் அரன்பதிக்குப்போனாலும்
நோரும்வரத்தைக் கொடுப்பாரோபரமசிவன்
ஏனையாசங்கமரே இப்படிக்குசெய்யலாமோ
ஆகாதகாரியங்கள் அழிவுதேடிப்போகலாமோ
என்றுமறிந்தார்கள் இளங்கொடிமார்கன்னியர்கள்
ஆணழகுமன்னன் அருச்சுனனுமேதுசொல்வான்
சிவனார்பதிக்குநான் தெரிசிக்கப்போறேனென்ன
அவள்வந்துவழிமறித்து வார்த்தைகள்பேசினாளே
சொல்லாதுஞ்சொல்லியே சேர்ந்துஅணையுமென்றாள்
அவள்புருஷனவந்தென்னை அநீதமாய்கொல்லவந்தான்
எத்தனைசொன்னாலும் இறங்காமற்கொல்லவந்தான்

நீபுதத்தினிலே அறுத்தேனவன் தலையை
என்மேலேகுற்றமுண்டா யேனோதடுக்கிறீர்
இருவர்விசேஷமெல்லாம் எதிராகக்கேட்டிடுவோம்
காருண்யாவென் றுசொல்லி வரவழைத்தார்சங்கமரை
பெண்டாட்சியாள் பிரண்டுமழுபிடத்தே
அருச்சுனராசாவை அழைத்துவந்துவிட்டார்கள்
தெய்வலோகக்கன்னியர்கள் தேன்மொழிமாரேதுசொல்வார்
இருவருடவார்த்தைகளை யெல்லாமிவர்கேட்டு
ஐயாபெரியவரே அறிவைப்படைத்தவரே
புதிதாய்தபசுபண்ணி புத்திமெத்தசற்றவரே
பெண்ணின்பிழையைப் பொருத்தருளும்புண்ணியரே
அடியார்கள்செய்தபிழை ஆண்டவர்நீர்பொருத்து
மந்திவியப்பிச்சைதந்து மகாதேவர்பதிபோனால்
ஆதிசிவனுர் அதிகவரமருள்வார்
எங்களைப்பற்றியே இவ்வளவெழுப்பிவிடும்
என்றுவணங்கியே இறங்கியேதெண்டனிட்டான்
அருச்சுனராசாவும் அதிகமனமகிழ்ந்து

தெய்வகன்னியர் அருச்சுனனைக்கேட்க அருச்சுனன் மகிழ்ந்து தேவேந்திரனுக்கு ஓலையெழுதியனுப்புதல்.

சேமக்கருத்தோலை சிக்கெனவேதான்வாரி
வாரியேவாலேயிலே வக்கணைகள்வைத்தெழுதி
என்னவென்றுஓலை எழுதுகிறுனர்ச்சுனனும்
அமராபதியாளும் அங்கபிராமனென் தகப்பா
தெய்வலோகமாளும் தேவேந்திரனென் தகப்பா
மந்தாரக்குந்திபெற்ற வாள்விஜயனர்ச்சுனனும்
ஆதிசிவன்பாதம் அடியேனுங்காணவென்று
வாரவழிதனிலே வகைதத்தெரிந்தேன்பேரண்டனை
அமரதுசெய்தேன்காண் அறுத்தேனவன்றலையை
பேரண்டன்தன்னுயிரை பிரமலோகத்திருந்தாலும்
இங்கேயிருந்து எமலோகப்போனுலும்
அவனதுதன்னுயிரை அனுப்பிவையுமென் தகப்பா
எந்தனைப்பற்றியே இட்சணமனுப்பிவையும்
அல்லாதேயாமானல் அமராபுரம்வருவேன்
தேவேந்திரன்பதியை சிதறவேகொள்ளைகொள்வேன்
ஆடுகொள்ளைமாடுகொள்ளை அழகானவீடுகொள்ளை
ஐயாவுன்பட்டணத்தை அனைத்துமேகொள்ளைகொள்வேன்
என்றுஎழுதினுன் இயலானவோலையிலே
ஓலைச்சுருள்மடித்து உகந்துசெந்திரிக்கையிட்டு
வில்வளைத்துநாரிபூட்டி வில்லைக்கணைத்தொனித்தார்
அந்தச்சுருளோலைதனை அந்தவாயில்தான்கொடுத்து
ஐந்துமணியசக்தி அங்கேநீபாயுமென்று
மந்திரதுபயிட்டு வாங்கிவிட்டானஸ்திரத்தை

மார்புரளத்தானெடுத்து தோள்புரளவாங்கினான்
வருகுது அஸ்திரந்தான் வானுலகந்தான்தேடி
தேவேந்திரனுடைய தேசமணிக்கம்பத்தில்
வாள்விஜயனஸ்திரத்தால் மணியசைந்தாடிற்று
மணிக்கூண்டருகேவந்து வாங்கினானஸ்திரத்தை

அருச்சுனன் ஓலையைத்தேவேந்திரன்பார்த்து எமனிடம் சென்று கெண்டபேரண்டன் உயிரைவாங்கி அனுப்புதல்.

செந்திரிக்கைஓலைச்சுருள் தேவேந்திரன்விரித்து
எழுதியவாசகத்தை இந்திரனுந்தான்படித்தான்
அதிலிருக்குமிலட்சணத்தை யாவுமறிந்துக்கொண்டான்
திக்கெனவேதானெழுந்து தேவேந்திரன்வருவான்
எமபுரந்தேடியே எமனருகிற்போய்ச்சேர்ந்தான்
கண்டானேஎமனும் கடுகயெழுந்திருந்து
எதிர்கொண்டழைத்து இட்டுவந்தான்மாளிகையில்
ஏதுகருமமாய் இங்குவந்தீர்ராசாவே
அத்திமரம்பூத்ததுபோல் அதிசயமாய்த்தோணுதுகாண்
என்றபொழுதேயவ ரேதுசொல்வாரிந்திரரும்
எல்லாருயிர்வாங்கும் எமதர்மாநீர்கேளும்
பொல்லாதபாவியவன் புகலும்பேரண்டனுயிர்
இங்குவந்ததுண்டானால் எந்தனுக்காய்தயவுபண்ணும்
என்றுஉபசாரணை இரக்கமாய்த்தானுரைத்தார்
செக்கிலேபோட்டு திருப்புகிறார்நேரம்
எண்ணைபுர்பிண்ணாக்கா யேற்படுத்தும்போதையிலே
பேரண்டன்தன்னுயிரை பொட்டெனவேதான்கொடுத்தார்
மாபாதகனுயிரை மைச்சிமிளிலேயடக்கி
அம்புவாய்தனிலடக்கி அனுப்பினாரிந்திரரும்
வாய்வேகமாகவே வந்ததுஅர்ச்சுனர்முன்

அருச்சுனன் பேரண்டனுக்கு உயிரளித்தல்.

மைச்சிமிளைத்தான்திறந்து வல்லுயிரைமாற்றினான்
வெண்ணீறுதான்போட்டு வேறுபட்டதலையெடுத்து
அறுத்ததலைமுண்டத்தை அணைத்துத்தண்ணீர்தெளித்தான்
தட்டியெழுப்பினான் தன்னுடையபொற்பிறம்பால்
தூங்கியெழுந்தவன்போல் திடுக்கிட்டெழுந்திருந்தான்
ஆடாபண்டாரம் அறிவுகெட்டசங்கமனே
என்றுயெழுந்தானே இயலானபேரண்டனும்
எழுபேர்கன்னியர்கள் இளங்கொடிமாரேதுசொல்வார்
ஆங்காரராட்சதனே ஐயரைச்சரணம்பண்ணு
அபசாரமுன்மேலே அனந்தங்குற்றம்வந்திருக்க
உந்தனுயிர்தான்கொடுத்த உம்பர்பிரானெக்குமடா
சாஷ்டாங்கமாக சரணம்பண்ணுமையருக்கு
என்றுசொன்னபோதையிலே இரங்கியேதெண்டனிட்டான்
சரணஞ்சரணமென்று சரணமிட்டான்பேரண்டனும்

இறந்துவிட்டசிவனை எழுப்பிவிட்டவராண்டவனே
உமக்கேதுதாப்போறேன் இயலானசங்கமரே
ஆபத்துவேளையிலே அழைத்தால்வருகின்றேன்
உந்தனுக்குதவியாக ஒத்தாசைபண்ணுகிறேன்
என்றுஉபசரித்தான் இபலானராட்சதனும்
அனைவரையுங்கையமர்த்தி அர்ச்சுனனும்போய்நடந்தான்
அரகரா அரனேயென்று அரன்மேலேதியானமானன்
சிவசிவாசிவனேயென்று சிவன்மேலேதியானமானன்
ஒருவன்அரனேயென்ன உலகம்அரனேயென்னும்
அடித்தானேசெயகண்டிகை தொனித்தானேசங்குதனை
ஏலக்கன்னிதன்வசத்தில் எழில்விஜயன்போகலுற்றான்

ஏலக்கன்னி அருச்சுனனைப்பார்த்து அழைத்தல்.

அரகராவென்றசத்தம் அறிந்தாளேஏலக்கன்னி
ஆரடிதாதிகளே அலங்காரத்தோழிகளே
வாரவரார்காணும் மயிலணையேபாருமென்றாள்
திக்கெனவேதானெழுந்து தெருவீதிவந்தார்கள்
வருகிறசங்கமனை மாதர்கள்தானறிந்து
ஓட்டம்நடையுமாக ஓடிவந்தார்தாதியர்கள்
என்தாயேஏலக்கன்னி எவரோதெரியாது
ஆதிசிவன்போலே அழகுபடைத்தவர்காண்
ஒருக்காலும்வந்ததில்லை உச்சிதமாய்வாரார்காண்
என்றசத்தந்தான்கேட்டு எழுந்தாளேஏலக்கன்னி
தன்னுடையசையலே தார்குழலாள்தானடந்தாள்
அருச்சுனரைக்கண்டு அதிகமயலானாள்
கண்டாசைப்பட்டாளே கட்டழகியேலக்கன்னி
பார்த்தாசைப்பட்டாளே பசுங்கிளியாளேலக்கன்னி
வடிவழகுமெய்ப்பனையும் வாள்விஜயன்சீரழகும்
உற்றுற்றுப்பார்த்துமவள் உள்ளமுருகுகிறாள்
காமவிகாரத்தாலே கட்டழகியேதுசொல்வாள்
ஐயாபெரியவரே அறிவைப்படைத்தவரே
நிரப்படித்தவரே தெளிவறிந்தசங்கமரே
புதிதாய்த்தபசுபண்ணி புத்திமெத்தக்கற்றவரே
வருவீர்வருவீரென்று வழிபார்த்துநானிருந்தேன்
எப்போவருவீரென்று இந்தவனங்காத்திருந்தேன்
உன்னாசைபட்டிருந்தேன் உலகில்வேறாசையில்லை
காமவிகாரத்தாலே கலைபட்டுபோனேனையா
மன்மதனெய்தகணை மார்புருகிப்போகுதையா
சித்தசன்தொட்டகணை சிறுமார்புருகுதையா
அதிகவிகாரங்கொண்டேன் ஐயாபெரியவரே
மீசையைப்பார்தேகஙாப்பார் வண்ணமுகம்நீர்பாரும்
என்னிலுமழகுடையாள் எங்குங்கிடையாது

தேடக்கிடையாது தேசத்திற்கிட்டாது
காணக்கிடையாது கருதினாற்கிட்டாது
மார்போடேமார்பணைந்து மோகவிடாய்தீருமையா
தோளோடேதோளணைத்து சுகத்தைமெள்ளத்தெளியுமையா
கட்டிலுண்டுமெத்தையுண்டு கால்பிடிக்கத்தாதியுண்டு
பொன்னும்பொருளுமுண்டு பொக்கிஷங்கள்மெத்தவுண்டு
தின்னநல்லபாக்குமுண்டு செலவழிக்கரொக்கமுண்டு
ஆடவென்றால்ஊஞ்சலுண்டு அமர்ந்திருக்கமேடையுண்டு
பத்தியுலாவுதற்குப் பர்ணசாலைமெத்தவுண்டு
மருவிவிளையாடி மன்மதரேவீற்றிருப்போம்
வாருமையாவென்றுசொல்லி வருந்தியேதெண்டனிட்டாள்
ஏரெடுத்துப்பாரானும் இளவிஜயனருச்சுனனும்
ஏலக்கன்னிமாது அவள் இளங்கொடியாளேதுசொல்வாள்
என்காணும்அர்ச்சுனரே எந்தன்முகம்பார்க்கொணாதோ
முத்தானவாய்திறந்து உத்தாரஞ்சொல்லொணாதோ
வாயைத்திறந்தாலே வச்சிரமுதிர்ந்திடுமோ
வச்சிரமுதிர்ந்தாலே வாரியெடுக்கேனே
தாளைத்திறந்தாலே தங்கமுதிர்ந்திடுமோ
தங்கமுதிர்ந்தாலே தடவியெடுக்கேனே
என்னுடன்பேசினால் ஏதுகுறைவுமுண்டு
கல்லுங்கரையுமே கட்டைதுளிர்த்திடுமே
இரும்புங்கரையுமே இரங்கலேயோயுன்மனது
மார்பைப்பார்தோளைப்பார் வண்ணமுகத்தைபார்
மார்போடேமார்பணைந்தால் மகாவிடாய்தீர்ந்திருப்பேன்
முகத்தோடேமுகமணைந்தால் மூர்ச்சைதெளிந்திருப்பேன்
தோளோடேதோளணைந்து சுகங்களைத்தீருமையா
வாருமென்றுசொல்லி மறித்தாலேஏலக்கன்னி
வாயைத்திரவானும் வண்ணமுகம்பாரானும்
என்னென்றுகேளானும் ஏறெடுப்பாரானும்
சிவனைமறவாமல் சிவன்மேலேதியானமானான்
அரனைமறவாமல் அரன்மேலேதியானமானான்
ஏலக்கன்னிமாது இளங்கொடியாள்கோபமானாள்
எழுகோடுகிழித்து இங்கேயேநில்லுமென்றாள்
உன்-குருவின்மேலாணைகாணுங் கோடுவிட்டுப்போகாதே
ஐவர்மேலாணைகண்டாய் அடிவிட்டுப்போகாதே
தம்பிதமயன்மார் தாய்மேலேஆணையிட்டாள்
ஆணையிட்டேலக்கன்னி அரண்மனைக்குப்போய்ச்சேர்ந்தாள்
மாளிகைவாசலுக்குள் மண்டபத்தில்வீற்றிருந்தாள்
அவள்-வருவதற்குள்ளாக வாள்விஜயனேதுசெய்தான்
எண்ணாதுமெண்ணியே ஏதேதுதாரிணைப்பான்
ஆசாரநின்றதாலோ அளவற்றசிந்தையிலே

எவரைநினைத்தாலே எண்ணமற்றசிந்தையிலே
ஆரைச்சதமென்பேன் அன்னியரைத்தஞ்சமென்பேன்
எவரைச்சதமென்பேன் இனியாரைத்தஞ்சமென்பேன்
பார்த்தமுகமெல்லாம் வேற்றுமுகமாகுதையா
எவரைநினைத்தாலே இந்தவேளைகாத்திடுவார்
ஆபத்தைக்காப்பதற்கு யாராலேயாகுமென்றார்

கோட்டில்நிற்கும் அர்ச்சுனன் காளியைத்துதித்தல்.

ஆத்தவனக்கன்னியரை அருச்சுனன்தானினைந்து
சூலிகபாலியம்மா சுந்தரிதுர்க்கையரே
சண்டாளிபிடாரியம்மா சங்கரியேநவல்லி
மண்ணுப்பிடாரியம்மா மலையாளதுர்க்கையரே
ஆபத்துவேளையிலே ஆதரிக்கவேணுமம்மா

அருச்சுனன் காளியைநினைக்க காளிவந்து
வாலாறு வினவல்,

என்றுநினைத்தாலே இயலானகாளியரை
வாள்விஜயன்தான்வருந்த மாகாளிதான்வருவாள்
டேகையொருகையில் டமாரமொருகையில்
வாளுமொருகையில் வளைதடியொருகையில்
அம்புவில்லுங்கைபிடித்து ஆயுதமாகவந்தாள்
ஆடாதம்பிநீ அடவியிலேயெனைநினைத்தாய்
ஆரேதுபேரேது உன்னுடையவண்மையென்ன
என்றவள்கேட்கையிலே யிரங்கிச்சரணமிட்டான்
ஆரென்றுகேட்டாயே பாரதவஞ்செய்யநான்
பாண்டுமகாராஜன்பெற்ற பஞ்சவர்களைவருண்டு
குந்திதேவிபெற்ற குலமணிகளைவருண்டு
ஐவர்பஞ்சபாண்டவரில் அருச்சுனராஜனென்பேர்
மாயவனுர்மைத்துனன் வாள்விஜயனென்பேரு
ஆதிகைலாசம் ஆண்பதியேபோறேனம்மா
பரமனைநோக்கியே பாரதவஞ்செய்யநான்
போரவழிதனிலே பொற்கொடியாளேலகன்னி
கலியாணம்பண்ணுமென்று கடிகியெனைமறித்தாள்
கோடுகிழித்துயென்னை குறுக்கேதடுத்தாளே
ஆணையிட்டுயெனைமறித்து அரண்மனைக்குப்போய்விட்டாள்
மறுபடியும்வருவேனென்று மாளிகைக்குப்போய்விட்டாள்
ஆகையாலென்தாயே அபயமிட்டுனையழைத்தேன்
என்றதுகேட்டு ஏதுசொல்வாள்ஈஸ்வரியும்

காளியம்மாள் அருச்சுனனை ஆணையைவிடுவித்தனுப்புதல்

அஞ்சாதேயென்மகனே ஆணையிட்டேன்தோஷமில்லை
மூக்காளுந்தோஷமில்லை முத்திரையைநீசுழற்றி
நீதரித்தமுத்திரையை நிலந்தனிலேயழுத்திவிடும்
உந்தனிடமுத்திரையை உனக்கேதப்புசெய்வேன்

காளி அருச்சுனன்போல் நிற்பதை ஏலகன்னிகண்டு
தான் அலங்காரம்பண்ணிக்கொள்ளுதல்.

வாள்விஜயன்போனபின்பு மாகாளியென்னசெய்தாள்
அருச்சுனனைப்போலாக அங்கேவடிவுகொண்டாள்
காளிகாசாம்பாளும் கட்டிப்பனைதனிலே
ஐந்துசடை கொஞ்ச அழகுசடைமார்புள
வாள்விஜயன்போல மறைப்பிலேநின்றாளாம்
இப்படிக்குக்காளி இருக்கின்றவேளையிலே
ஏலகன்னிமாது இளங்கொடியாளேதுசெய்தாள்
மஞ்சள்குளித்தாள் மையிட்டுப்பொட்டுமிட்டாள்
வாரிமுடித்தாளாம் வன்னவரியுட்சொருகி
கொண்டைக்கழகாக கொண்டைமயிர்முடித்தாள்
சந்திரபிறைசூரியபிறை தலையிலணிந்தாளாம்
ஆண்மயிலும்பெண்மயிலும் அழகாகத்தான்முடித்தாள்
முத்தாலேசுட்டியும் முன்னேதொங்கவிட்டார்
காதுக்குப்பொன்னோலை வைத்துவனையவிட்டாள்
செண்பகப்பூநாசியிலே சேர்த்தணிந்தாள்மூக்குத்தி
தோள்வங்கிகைவங்கி தொடுத்தாள்விக்கைதனை
கண்டசரமாம் காலயுக்கமோதிரமும்
கொத்துசரப்பளியாம் கொக்குமுக்குத்தாழ்வடமாம்
முத்துசரப்பளியாம் மோகனமாலைகளாம்
சன்னல்பின்னல்தாவடமாம் தாயித்துப்பேரொளியாம்
கடகஞ்சரிபவளங் கைநிறையப்பொன்வளையல்
தண்டைகொலுசுடனே சலங்கைபாடகமும்
காலாழிபீலி கல்லிணையாம்புல்லிணையாம்
அரைக்கிசைந்தஒட்டியாணம் அலங்காரம்பண்ணினளாம்
பொன்னிழைத்தபட்டாடை பூவாடைதான்தரித்தாள்
சாந்துசவ்வாதுடனே சந்தனமும்பூசினள்
மருவுமருக்கொழுந்தும் மல்லிகைப்பூமுடித்தாள்
வாசனைபரிமளிக்க வாறாளேலகன்னி
ஆடிநாதிகளை அலங்காரத்தோழிகளை
எடுத்துவாகனதண்டி இட்டாறேபோகவேணும்
தாதிமாரோடிவந்து தண்டிகைகொண்டுவந்தார்
ஏறினாள்தண்டிகைமேல் எடுத்தார்நெடுந்துடையை
சங்கமர்தானிருக்கும் சாவடிகடந்தாளாம்
பல்லக்கைவிட்டிறங்கி பாதஞ்சலமென்றாள்
ஆணையிட்டேன்தோழிகளே ஆண்டவனைவாருமென்றாள்
ஏறினாள்பல்லக்கில் இடைமானசேனையும்
ஏலக்கன்னிதானும் ஏறினாள்பல்லக்கில்
மாளிகைவாசலிலே வந்துயிறங்கினளாம்

பட்டுரத்னப்பாய்போட்டு பண்டாரஞ்சீற்றிரன்றார்
ஆசனத்தின்மேலே அமர்ந்தாரேவலகன்னி

ஏவலகன்னி அருச்சுனருக்கு விருந்திடச் சமையல்பண்ணல்.

இளங்கொடிமாதரை ஏவலகன்னிதானே முக்கு
அடிசில்சமையுமென்றாள் ஆனந்தமாய்ப்பாகமும்
சர்க்கரைப்பாலோசனங்கள் சமையுங்கள் சாதங்களை
பஞ்சணைமெத்தையும் பள்ளியறைசோடியுங்கள்
இவ்வார்த்தைசொல்ல எழுந்தார்கள் தோழியர்கள்
சித்திரமுறைவெண்கலது சித்திலிர்க்காரியர்கள்
இத்திரமுறைவெண்கலது என்றுமெழுந்தார்கள்
அறிப்புமெழுவார் அடிசலைக்காய்த்திடுவார்
வெண்கலப்பானையிலே வெண்ணீருங்காய்ப்பார்
பால்சம்பாவரிசி பதிலாய்த்தானாக்கிட்டு
வெதிப்பற்றிரிக்கி கொப்பெனவேயமைத்தார்
வாழைக்காய்கொய்வார் வழுதலைக்காய்பரிவார்
சுழுப்பலாக்காயை இளமுள்ளுபோக்கிடுவார்
கொத்தவரைக்காயதனைக் கூட்டியரிந்திடுவார்
செம்பொனவரைக்காய் சேரவரிந்திடுவார்
பாவற்காய்தானரிவார் பீர்க்கங்காய்தானரிவார்
இளங்கொக்காய் இளந்தமர்த்தைதானரிவார்
தேங்காய்திருகிடுவார் மாங்காயறுத்திடுவார்
பாப்புப்புடலங்காய் பாதிப்பீர்க்கங்காய்
பிஞ்சுமுருங்கைக்காய் போலவேதொத்தமை
கண்டங்காய்வண்டைக்காய் கத்தமுள்ளிமுள்ளங்கி
வள்ளிகிழங்குகளும் வாழைத்தண்டுநிகையுடன்
சிறுகிழங்குசிறுவள்ளி சேப்பானமேதண்டு
சுரைக்காய்களுக்கருணை காருகருணையும்
அரைக்கீரைசிறுகீரை அகத்தியமுதக்கீரையுடன்
முன்னைமுசுட்டை முக்குறட்டைக்கீரையுடன்
காரைபிரண்டையும் கடுக்கீரையுள்ளதும்
இலந்தினியளங்கீரை போனகொத்தமல்லி
அடைபுநெருஞ்சிபச்சை காசமணிபருப்பும்
அவரைத்துவரைமொச்சை அந்தக்குதிரைப்பருப்பும்
கொள்ளுடனேயெள்ளுகளும் கொத்தமையுள்கலந்து
பத்துவகைக்கம்பமுடம் பாக்கானகூட்டுமது
பத்துவகைபச்சடியும் பாங்கானகீரையுடன்
ஆயிரத்தெட்டுவகை அரிக்கரியும்பொரிக்கரியும்
நூற்றெட்டுவகைக்குழம்பும் அடைப்புடன்ரசமைத்து
காரமுட்டப்பும் வெந்தயஅடிசையும்
புத்துருக்குநெய்த்தனிப் போதவேதான்வார்த்து

வடகப்பொடிபோட்டு மணிச்சீரகம்போட்டு
சீரகமும்வெந்தயமும் சீராகத்தான்போட்டு
கரிவேப்பிலையும் கறிக்குதிட்டமாய்ப்போட்டு
சையுஞ்சையுமென்று தனித்தனியேதான்மணக்க
மணங்கள்கமகமென் மாதற்குப்புகையேற
தாளித்திறக்கினர் தார்குழலார்கையாலே
செம்பொன்பிரியணைமேல் சேரஅடுக்கினர்
ஊரியகாய்சேர்ந்த உகமைகளைச்சொல்லுகிறேன்கேள்
இஞ்சியெலுமிச்சை இயலானதமர்த்தையும்
நாரத்தைகிச்சிலியும் நல்லகடுக்காயுடனே
மூங்கில்குருத்துகளும் மூற்றுவள்ளிக்கிழங்கு
அத்திக்காய்மாவுலிங்கம் அழகானதுதுவேளை
வில்வக்காய்சுக்கங்காய் விளம்பிஞ்சுபஞ்சடியாம்
சுண்டக்காய்களாக்காயும் சுருக்கானமுள்கருணை
மாங்காய்முதலான மற்றுமுள்ளஊருகாயும்
வத்தல்வகைசேர்ந்த வகைமானங்கேளுங்கள்
ஆதண்டங்காயும் அறநானசுக்கங்காயும்
பாவற்காய்கோவற்காய் பச்சைவிளாங்காயும்
சுக்கங்காய்துதுவேளை சுருக்கானபாவற்காயும்
அறுசுவைவர்க்கமுடன் அறுபதுஊறுகாயும்
பழவகைகள்தான்சேர்ந்த பலவகையைத்தான்கேளும்
மாமபழம்வாழைப்பழம் மலைபின்பலாப்பழமும்
செவ்வாழைகறிவாழை இரண்டகொட்டைவாழையும்
மாதளைகிச்சிலியும் மாவொட்டுமாய்ப்பழமும்
அன்னாசிஅருநெல்லி அழகுகொய்யாப்பழமும்
தமர்த்தம்பழங்களும் தலைவிரித்தமாதுளையும்
மற்றுமுண்டானபழ வகையெல்லாம்சேர்த்தார்கள்

ஏலகன்னிக்கு தாதிகள் பள்ளியறை சோடித்தல்

அதிலேயொருதாதி ஆரணங்குதானெழுந்து
பள்ளியறைதான்திறந்து பைங்கிளியாள்சுத்திபண்ணி
சாந்தால்தரைமெழுகி சந்தனத்தால்கோலமிட்டு
குங்குமத்தாலே குளிரச்சுவர்பூசி
கண்மூன்றுடைய கனவயிரக்கட்டிலிட்டு
மெத்தைமடித்திட்டு மேலேயணைதோலி
காம்பரிந்தமல்லிகையும் கட்டிலின்மேலேசொரிந்து
கண்ணாடிசல்லிகட்டி கவரிமான்சங்குவிட்டு
மாவிலைத்தோரணமும் மல்லிகைமாலைகட்டி
எங்குமலங்கரித்து எந்திமைமாரோடிவந்து
ஏலக்கன்னிமுன்னாலே இளங்கொடிமார்தெண்டனிட
அடிசில்சமைத்ததென்று ஆரணங்குதெண்டனிட
கெண்டிகையில்தீர்த்தம்து கொண்டுவந்துமுன்னேவைக்க

எலக்கன்னிசங்கமரும் எழுந்தாரிருவருமாய்
கைபூசிக்கொண்டு கவிகியேவந்தமர்ந்தாள்
வாழையிலைபோட்டு வரிசையுடன்நீர்தெளித்து
இட்டாரேபோஜனங்கள் இருவருக்கழகாக
பச்சென்றபழவகையும் பச்சடியும்பாலித்தார்
பொறித்தகறிவகையும் பொன்போல்சிறுபருப்பும்
காராவின்நெய்வார்த்து கடிதிபொசியுமென்றார்
இபிட்டிருந்தப்பளவில் செகமாதாகாளியம்மா
வைத்ததொருசாதமெல்லாம் மாயையாயுண்டுவிட்டாள்
மற்றுமொருக்காலே வட்டித்தார்போசனங்கள்
ஆயிரம்பேருக்கு சமைத்தஅடிசிலெல்லாம்
ஐயரொருவருக்கு அன்புடனேவட்டியென்றாள்
ஒருவிநாழிகையில் காளியம்மைவுண்டுவிட்டாள்
இன்னஞ்சோறில்லையோ என்பசியாறுகைக்கு
வயிறுபசியாற்றாமல் மாலையிட்டுக்கொள்ளேனே
மேலினியிலெப்படிக்கு விவாகமதுசெய்வேன்காண்
இவ்வார்த்தைதான்கேட்டு எலக்கன்னியேதுசொல்வாள்
ஏரியோவுன்வயிறு இயலானசங்கமரே
மடுவோகுளமோவுன் வயிறுஞ்சங்கமரே
பெண்டுபிள்ளையில்லாமல் பிழைத்தீரூர்திரிந்து
இன்றையதினத்திலே போசனமிட்டார்கள்
நாளையதினத்திலே நன்றாய்பொசித்திடுவீர்
வாருமென்றுசொல்லியே வருந்தியேநீர்கொடுத்தாள்
வாய்பூசிகைபூசி மாளிகைக்குப்போய்நடந்தார்
பள்ளியறைவீட்டிலே பஞ்சணையில்வந்தார்கள்
சங்கமருமனமகிழ்ந்து தம்புருதான்தொனித்தான்
இன்னாவாத்தியங்கள் கோஷ்டமுடன்தானடித்தான்
காதாரகேட்டுமே காளியம்மைதான்மகிழ்ந்து

எலக்கன்னி காமவிகாரத்தால் அருச்சுனனென்று அணையப்போக
காளி நான் அருச்சுனன் அல்லவென்று சொல்லல்

காமம்பொறுக்காமல் கடுகியேயெலக்கன்னி
மார்பில்விழுந்து மருவியணையவந்தாள்
காளியென்றுதானறிந்து கைவிட்டாளெலக்கன்னி
என்னைக்கெடுத்தீரே என்பாவங்கொண்டீரே
ஆணையிட்டுவந்தேனே அடிவைக்கஞாயமுண்டோ
என்னைக்கல்யாணஞ்செய்து கடுகநடவுமென்றாள்
ஆனாலழகுமன்னன் அருச்சுனனேதுசொல்வான்
ஆதிகைலாசம் அரன்பதிக்குப்போறேனென்
சிவனார்தன்கையாலே சேனவரம்பெற்று
வரும்போதுயெலக்கன்னி மாலையிட்டுக்கொள்ளுகிறேன்

என்னைமரிக்காதே யேலக்கன்னிநாயகமே
போகச்சிலவுதாராய் போய்வாறேன்பெண்மயிலே
என்றதுகேட்டுமே எதுசொல்வாள்வாள்விஜயன்
ஆணையிட்டுத்தந்தானே ஆரணங்கைவிவாகஞ்செய்ய
மாதர்செலவுதர வாள்விஜயன்போய்கடந்தான்
அந்தவனங்கடந்து அப்புறம்போகலுற்றான்

பத்தாவது போரண்டவனம் முற்றிற்று.

கக - வது சபாமிருகவனம்.

அந்தவனந்தனைவிட்டு ஐவர்பஞ்சபாண்டவர்கள்
கூடைதலைமேலே குடிவாழ்க்கைகானகத்தில்
கோவினைத்தசிமோடு கூடைதலைமேலேவைத்தார்
மண்ணினைத்தசிமோடு வனமேகுடிபுகுந்து
காடுகடந்து கரியமலைதான்தாண்டி
சபாமிருகந்தானிருக்கும் தனிவனத்திற்போனார்கள்
ஐந்தடுக்குபர்ணசாலை அழகாகவுண்டுபண்ணார்
ஏழடுக்குபர்ணசாலை எழிலாகவுண்டுபண்ணார்
அங்கேகுடித்தன்மாய் ஐவர்வந்துதானிருந்தார்
இப்படியாகச் சிலகாலிருக்கையிலே
சபாமிருகவனந்தனிலே தனஞ்செயனுமப்போது
வெள்ளானைவனந்தனிலே வில்விஜயன்வாறானும்
உலகமதிர்ந்திடவே உத்தமனும்வாறானும்
ஒருவன் அரனெயென்றால் உலகமரனெயென்னும்
ஒருவன்சிவனேயென்றால் உலகம்சிவனேயென்னும்
அரகராவென்றுசொல்லி அடித்தானேசயகண்டிகை
சிவசிவாவென்றுசொல்லி தொனித்தானேசங்குதனை
சங்குதொனிகேட்டு சபாமிருகமதாவெழுந்து
வாலினைப்பிருமளமிட்டு வருகுதுவெள்ளானை
தன்னிழலேயபார்த்து தானோடுதந்தானே
கொம்பினால்மலையைபதுருத்திகிளப்பிவிடும்
அருச்சுனனைக்கொல்லவென்று ஆனைவருகையிலே

அருச்சுனன் யானையைக் கொல்லுகிறது.

கண்டானேவாள்விஜயன் கண்கொள்ளாக்கோபமுடன்
வில்வளைத்துநாணிபூட்டி வில்லைக்குணத்தொனித்தான்
அர்த்தசந்திரபாணமெடுத் தஸ்திரத்தையுச்சரித்தான்
மதயானையைக்கொல்லவென்று மார்புரளவாங்கிவிட்டான்



சிவபெருமானுடைய நந்தவனங்காத்திருந்த பிராமணனைப்பார்வதி
யின் நந்தவனக் காவற்பெண்ணை இச்சித்திருந்தான் சாபம்
விமோசனமானது.

அருச்சனன்விட்டதொரு அர்த்தசந்திரபாணமது
மதயானை தன்னையே வருத்தமிருபிளவாய்
வீழ்த்திவிழுந்ததே விஷ்ணுசயன் தன்கையால்

அருச்சனன் கையினால்விழுந்தயானை ஒருபிராமணனுடையது.

ஆனையடிக்கிடவே அதிலொருபிராமணன்றான்
பஞ்சாங்கப்பிராமணனும் பார்ப்பான்வெளியானான்
கண்டானேயருச்சனனும் கடுகிப்பிராமணனை
வாரும்பிராமணரே மதயானைமுழுக்கிதே
ஆனாற்கேள்சக்கரமே அவ்வார்த்தைசொல்லுகிறேன்
தெய்வலோகத்திலே தெனுடையபூங்காவனம்
இவர்பூங்காவனத்தில் அதிகாரமென்னுதான்
இவர்வனத்தார்கள் அம்மையவனம்போகொணுமே
ஒத்தவதெய்வமுந்தானில் உச்சிதத்தைப்பார்ப்போமென்று
அம்மைவனங்களிலே அதிகாலைபோகையிலே
ஆயிரம்பெண்களிலே அதிலேயொருத்தி
கண்ணுக்கினியபெண்ணை கண்டாசைப்பட்டேனே
பார்த்தாசைப்பட்டேனே பைங்கிளியாளைப்பிடித்தேன்
என்னைத்திமிரிவிட்டு எம்பரியாள்பக்கஞ்சென்றாள்
எம்பரியாள் தன்னுடனே இச்சேதியுரைத்தாள் தான்
அப்பொழுதுகேட்டு ஆதிசிவன்பக்கஞ்சென்றாள்
உமையவளதுகேட்டு உம்பர்பிரான்பக்கல்வந்து
இயானுதன்வனத்தில் அதிகாரஞ்செய்திறவன்
எத்தன்வனக்கன்னியாளை இவன்பிடிக்கலாமுண்டோ
என்றுமிகச்சொல்லுகையில் எல்லாருஞ்சொல்கேட்டு
என்னையானையாக்க சப்தர்பெருஞ்சாபம்
என்னுடையசாபமது எப்போதுதீருமென்றேன்
ஆதிகைலாசம் அருச்சனன்வருகிறான்
அருச்சனனைநீகொல்லவே ஆங்காரமாய்ப்போகையிலே
அருச்சனன்கோபமுற்று அம்பாலேகொன்றிடுவான்
என்றதுபோலநீயும் என்சாபம்போகவிட்டவர்
வாருமென்றிருவருமாய் வனத்திலேபோனார்கள்
போகப்பிராமணனும் புதுமையொன்றுசொல்லலுற்றான்

அருச்சனனுக்கு பிராமணன் குபவன் வரலாறுகூறல்.

ஆனாற்கேள்சக்கரமே அவ்வார்த்தைசொல்லுகிறேன்
செப்புசிம்ரீழிதவறான் சிருசிலகண்டாவர்
கோடிகடவாதார் குபவன்குபத்திபரும்
இப்படியாக இவர்இருக்குங்காலையிலே
மாராசன்வாசலிலே மங்களகாரியத்தால்
கோவுக்குபழுட்டி கொண்டுவாவென்றழைத்தார்

அக்ஷணம்நிலகண்டன் அநேகமுட்டிசொப்பனிட்டு
பொன்போலிழைத்துமே போட்டான்பெருஞ்சூளை
சூளைகளைந்து சுட்டசிறுமுட்டி கட்டி
மகாராசன்வாசலிலே வைத்தானேகொண்டுவந்து
மகாராஜன் தான்பார்த்து மகிழ்ச்சியாய்குயவருக்கு
சொர்ணமணிமுத்தும் துகிலாடையுமுடுத்த
நிகரில்லாபூஷணத்தை நிலகண்டனுக்கருளி
போய்வாருமென்றுமே போகச்சிலவருள
வெகுமானம்பெற்றுமவன் வீதிவருகையிலே
அந்திகாலமாச்சுது ஆதித்தன்போய்மறைந்தான்
காற்றுமழையுங் கடுகிவருகுது
தேவதாசிவீதி தெருத்திண்ணையோரத்தில்
வந்துயிறங்கினன் வானமழைபோமளவும்
அந்தச்சமயத்தில் அவ்வீட்டுத்தாசியவள்
போஜனமுண்டுமே பொற்கலத்தைதான்கழுவி
ஜன்னல்கதவையவள் தான்திறந்துவூற்றினள்
மண்ணுடையான்தலைமேலே வந்துவிழுந்தது
சம்போசிவசங்கரனே ஜலந்தெளித்ததாரென்றார்
அவ்வார்த்தைதான்கேட்டு ஆரணங்குதாசியவள்
அஞ்சிப்பயந்துமே ஆரென்றுகேட்கலுற்றாள்
மண்ணுடையான்நான்காணும் வந்தேனிதுவழியாய்
வான்மழைக்குமாதரசே வந்துஒதுங்கினேன்
ஆரோதெரியாது அள்ளிசலந்தெளித்தார்
என்றதுகேட்டுமே ஏலப்பசுங்கிளியாள்
மெத்தப்பயந்துமவள் வீட்டினுள்கொண்டுசென்று
அபிஷேக மாட்டிவைத்தாள் ஆனந்தமாயனுக்கு
ஈரமுலர்த்தி இழைசேர்ந்தபட்டுடுத்தி
ஆபரணமிட்டு அலங்காரம்பண்ணினள்
போசனமிட்டுமவள் புட்பமுந்தான்கொடுத்தாள்
சந்தனந்தாம்பூலம் தான்கொடுத்தாள்தையலரும்
அன்றையராத்திரி அங்கிருந்துகுயவனவன்
மற்றநாட்காலையிலே வந்தானேவாழ்மனைக்கு

குயவனுக்கும் குயவன்மனையாளுக்கும் தர்க்கம்

குயவனுடதேவி கொம்பனையாள்கண்டாளாம்
கண்டுபுருஷனைக் கண்ணீரைத்தானிர்த்தாள்
கோவென்றசத்தமுடன் கூறியழுதாளாம்
ஆரோடேபோகம் அமர்ந்திருந்தீர்மன்னவரே
என்னைவிட்டுப்பிரிவதற்கு மனமுமைப் வருமோ
வேசியர்வீட்டிலே விளையாடிவந்தீரோ
உன்னுடனேபேசேனே உன்முகத்தைப்பாரேனே

பெற்றதகப்பனைப்போல் பிரியமுடன்பார்த்திருப்பேன்
குருக்களுடைமையா சொன்னீர் கொண்டுபோனவர்காண்
தாயில்லாப்பிள்ளைகளை தவிக்கவிடுத்தவர்கள்
சிசுவதைபண்ணவர்கள் ஸ்ரீவதைபண்ணவர்கள்
பெரும்பாவிசேருகிற பெருநரகில்சேர்ந்திடுவேன்
என்றுசபதமிட்டான் இளங்கொடியாளக்குயத்தி
இவ்வார்த்தைகேட்டுமவன் எறிபறக்குநீலகண்டன்
கண்கள்சிவந்துமே காந்தாளப்பட்டானும்
மெய்யானவார்த்தைதனை விளம்பினேன்மெய்வியற்கு
பொல்லாதவார்த்தையினாற் புலம்புகிறீளாறுசெய்வேன்
என்றுபயனஞ்சலித்து வருசொல்வான்நீலகண்டன்
இன்றுமுதலாக இனிநெடுநாள்வரைக்கும்
உன்னுடன்பேசினல் உனக்குத்தகப்பனென்றான்
அவ்வார்த்தைசொல்லினுலிசேபாவஞ்சொல்லுகிறேன்
அபயமென்றுவந்தவரை அடியாயப்பண்ணபாவி
பெரும்பாவிசேருகிற பெருநரகில்சேர்ந்திடுவேன்
என்றுசபதமிட்டான் இளமையநீலகண்டன்
அப்படியாக அநேககாலந்தானிருந்தார்

ஆதிசிவனும் பார்வதியும் பண்டாரவேஷமாகவந்து
இருவரையுமொருமைப்படுத்தி மோட்சமீதல்.

ஆதிசிவனுக்கும் ஆதிபராபரைக்கும்
பொறுத்தமுடியவில்லை பொல்லாச்சபதமிது
இருவரையும்பேசிவைக்க ஈஸ்வரனோர் வந்தாரும்
மெத்தப்பெரியவராய் மேல்நாட்டுச்சங்கமாய்
ஆண்டிப்பெரியவராய் ஆண்டவன்வடிவெடுத்தார்
அம்மையுமையவளும் ஆண்டிச்சிவடிவெடுத்தார்
விநாயகன்வீரன் வேல்பொருதுங்கந்தனுமே
அன்றுரித்தமான்தோலும் அழகானபுலித்தோலும்
கன்றுபுலித்தோலும் கைலாசமான்தோலும்
சடையுஞ்சடைமுடியும் தம்பிரானைப்போலாக
நீலகண்டனுக்காக நினைத்தாரிருவோரு
கதிரோனைப்பாத்திரமாய் கடுகெனவேகைபிடித்து
வாரார்பரமசிவன் வனமாய்வனங்கடந்து
காடுசெடியுங் கரியமலைதான்கடந்து
நீலகண்டன்வாசலுக்கு நிமலருமவந்துவிட்டார்
ஆடாபத்தாதி அறிவுள்ளபுண்ணியனே
என்பிள்ளைபெண்சாதி யிங்கிவர்களெல்லோரும்
பசியோடேநாங்கள்வந்தோம் பசியாற்றினுலுப்பும்
பிள்ளைபசியாற்றில் புண்ணியங்கள்வேணதுண்டு
குழந்தைபசியாற்றில் குமாரனைப்பெற்றிடுவாய்
உந்தனூர்முறையார் உன்னுடையபெண்சாதி

வாழ்ந்துசுகமாவீர் மகாதேவர்புண்ணியத்தால்
என்றல்லோசங்கமரும் செய்துவிட்டாரென்னிறு
வாங்கியனிக்குகொண்டு வணங்கியேதெண்டனிட்டான்
நல்லதுசங்கமரே நான்செய்தபாக்கியத்தால்
வந்தீர்களிப்போதான் வாழ்ந்துசுகமானேன்
பத்துநாழிகைப்பொழுதில் பசியாறீங்கள்வந்தால்
போசனமுண்பீர்காண் போய்வாருஞ்சங்கமரே

சங்கமர் நீலகண்டன் மனஞ்சோதித்தல்

என்றதுகேட்டுமவ ரேதுசொல்வார்சங்கமரும்
நான்-போசனம்பண்ணுகிற பொன்னைத்திருவோடு
இந்தவைத்துநானேபோறேன் எடுத்துமறவாமல்வையும்
வைத்திருந்தானவாரேன் உன்வசத்திலிருக்கட்டென்றார்
என்பாட்டனார்நாளையிலே பண்ணின திருவோடு
பாத்திரம்போய்விட்டால் பழிவருந்தருமென்றார்
என்றதுகேட்டு யேதுசொல்வான்நீலகண்டன்
ஆகுங்கேள்சங்கமரே ஐயாபெரியவரே
என்னுடையதேவியுடன் இவ்வார்த்தைசொன்னார்தா
சாதங்கறிவகைகள் சமைக்கவேசொல்லுமையா
பாவற்பயிர்பந்தலின்மேல் பாத்திரந்தனைவைத்தானையும்.
ஆண்மனைக்குள் நுழைந்து ஆச்சியனைத்தானழைத்து
மண்ணுடையான்வார்த்தைதனை [illegible]
பந்தலின்மேலாகப் பாத்திரங்களைத்தேடிப்பு
பாத்திரத்தைப்பார்த்திருவென்று பண்டாரந்தானடைந்தார்
செப்பிடத்தானே திருநீலகண்டன்வாழும்
அந்தெருவுதான்கடந்து அடுத்தகுள [illegible]வந்தார்
அக்கினிமூலைதனில் ஆதிசிவன்வந்தமர்ந்தார்
அந்தச்சமயத்தில் ஆதித்தன்போய்மறைந்தார்
சக்கலாதேவிமகன் சூரியன்தான்மறைந்தான்
குயவனிடதேவியரும் குடிவாழ்க்கைசெய்திருந்தாள்
அநேகநெடும்போது ஆனபிறகாக
மண்ணுடையான்தானழைத்து வாசலில்வந்துநின்று
பாவற்பந்தலைப்பார்த்தான் பாத்திரந்தனைக்காணோமென்று
தேவியெதிரில்வந்து திகைத்தாப்போல்நின்றிட்டான்
கைகட்டிநீலகண்டன் கண்காட்டிக்கேட்கிறான்
ஆரணங்குமாதுகன்னி யறியேனென்றுசாடைபண்ணார்
மனதுசஞ்சலமாக மண்ணெடுத்துப்பண்ணுகிறான்
பன்னீருக்காளெடுத்துப் பாத்திரம்பண்ணினான்
கடுகியேசூளைபோட்டு கவிழ்த்துவைத்தான்பந்தலிலே
ஒருபதுமம்மையுமாய் ஆதிசிவன்வாறாராம்
திருநீலன்மாளிகையில் சிவசிவாவென்றழைத்தார்
கடுகியேநீலகண்டன் கைக்குச்சலங்கொடுத்தான்

கைபூசிக்கொண்டு கடுகியேயுள் நுழைந்தார்
பாத்திரங்கொண்டுவந்தார் பண்டாரம்பார்த்துவிட்டார்
என்னுடையபாத்திரம் எங்கேயென்றார்சங்கமரும்
வைத்துநீர்போனபின்பு மாயமாய்போச்சுதையா
ஆகையாலாண்டவனே அட்சணமேசெய்துவைத்தேன்
என்றதுகேட்டு ஏதுசொல்வாசங்கமரும்
என்பாட்டனார்நாளையிலே பண்ணிவைத்தபாத்திரத்தை
ஏமாட்டிமோசம்பண்ணி இல்லையென்றுசொல்லலாமோ
மகாராசனிடத்தில்வாரும் வழக்குகளைச்சொல்வோம்
மடிபிடித்துசங்கமரும வாறாரேதானிழுத்து
முடிமன்னன்தன்சபைக்கு முன்பாகவந்துநின்றார்
பசித்தசெந்தன் றார்சார்கேட்க பகலைக்குவாருமென்றான்
வச்சிரத்தாலிழைந்த மாணிக்கபாத்திரத்தை
இவர்கையில்தான்கொடுத்து இஷ்டரிடம்போயிருந்தேன்
வந்துபின்னேகேட்டேனே மாபாவிகாணேமென்றான்
ஆகையினாலேதான் அழைத்துவந்தேனும்மிடத்தில்
அதிதிபரதேசி யாருமில்லையென்றனுக்கு
ஆண்டியுடைமையென்று அவரிடத்தில்நீர்கேட்டு
வாங்கியேதாருமென்றார் மகாராஜராஜாவே
என்றதுதான்கேட்டு ஏதுசொல்வான்மகாராசன்
ஆடாநீலகண்டா அறிவுகெட்டபாதகனே
பரதேசியுடைமையைநீ பரிக்கிறதுதருமமோடா
குயவன்குயத்தியனை கொப்பெனவேகட்டுமென்றார்
வெள்ளிப்பிரம்பாலே வீசியடியுமென்றார்
மாறியடியுமென்றார் அந்தகுயவனைத்தான்
இவ்வார்த்தைதான்கேட்டு ஏதுசொல்வான்மகாராசன்
எருக்கமலராலே எட்டியடித்தானே
உள்ளம்கடுங்கமேனி உதிரம்வடியுதங்கே
அப்போதுமகாராசனிடம் ஆண்டியவரேதுசொல்வார்
இங்கேஞ்சிலாசாண்டை யிட்டுகொண்டுபோறேனையா
கட்டவிழ்த்துவிட்டிடென்றார் கடிகிநீலகண்டனைதான்
அரண்மனையைத்தாண்டி அப்புறம்போகையிலே
ஆதிசிவனாரும அங்கேமனமகிழ்ந்து
ஈசன்ரிஷபத்திலே ஈஸ்வரிசிங்கத்திலே
பேழைவயிற்றோனும் பெருச்சாளிவாகனத்தில்
கந்தர்மயில்மேலே கடிகியேவந்துநின்றார்
தங்களுடவாகனத்தில் சாமிகளுமேறிவந்தார்
வந்தாரெதிராக மண்ணுலடையான்கண்டுவிட்டான்
சரணஞ்சரணமென்று சாஷ்டாங்கதெண்டனிட்டான்
குயவன்குயத்தியுட குறைகளைத்தீர்த்தாரும்
காட்சிகொடுத்து கைலாசம்போனாராம்

சீலைகண்டல்பேறுபெற்ற நிலமாகுமிவ்வனந்தான்
என்றதுகேட்டு ஏதுசொல்வானருச்சுனனும்
புண்ணியவனத்திலே போய்ஸ்நானம்பண்ணிவந்தால்
அங்கப்பாவந்தீரவே ஈஸ்வரனார்வரமளிப்பார்
என்று-பொய்கைதனிலே பொட்டென ஸ்நானம்செய்து
சிவனைநினைந்து திருநீறுக்காப்பணிந்து
அரனைநினைத்து அள்ளியிட்டான் வெண்ணீறு
பஞ்சாட்சரமணிந்து பகவானைப்பூசைசெய்து
அரகராவென்று அடித்தானே செயகண்டிகை
ஓம்நமசிவாயவென்றும் ஒலித்தானே சங்குதனை
ஒருவன்சிவனேயென்ன உலகம்சிவனேயென்னும்
அரகராவென்றுசொல்லி அந்தவனந்தாண்டினான்
மற்றுமொருவனத்தில் வாரானிருவருமாய்
இந்தவனமாருடைய தென்றானிளவிஜயன்

சபாபிருகவனங்கடந்து ஊர்க்குருவிவனம்வருதல்.

ஊர்க்குருவிபேறுபெற்ற வனமென்றுரைத்தமனும்
வாயில்லாச்சிவன் மாயேறும்பட்சிகள்தான்
எந்தவிதமாய்த்தான் ஈசனைக்கண்டதுகாண்
அந்தவிசயத்தை ஆண்டவனே சொல்லுமென்றார்

பிராமணன் அர்ச்சுனனுக்கு ஊர்க்குருவி வரலாறுகூறுதல்

அப்போபிராமணனும் அருச்சுனற்கு வகுத்துசொல்வான்
ஊர்க்குருவிபட்சியிது ஆண்டானும்பெண்ணுமாக
இந்தவனமதனி லிருந்துவாழுமந்நாளில்
பிள்ளைகள்பெற்றிருக்கப் பெருந்தவனங்களிலே
போவார்வருவார் குஞ்சுகளையெடுத்துக்கொள்வார்
இரைதேடிவருவதற்குள் எடுத்துக்கொண்டுபோவார்கள்
கூண்டினிடமாகக் குருவிவந்துபார்த்தவுடன்
அழுதுபுலம்பியே ஆயாசப்பட்டிருக்கும்
மறுதரமொருதரமும் மைந்தனுண்டாயிருக்கும்
பெண்குருவியானது புருஷனுக்கேதுசொல்லும்
என்புருஷாயென்கணவா என்வார்த்தைநீகேளும்
நான்பெற்றபிள்ளையெல்லாம் நமனுக்கிரைகொடுத்தேன்
போவார்வருவாரெந்தன் பிள்ளையைக்கொண்டுபோனார்
இப்போதுபிள் பெற்றால் எவராகிலுமெடுப்பார்
ஆசைகள்தோணுது ஆணழகாவென்னசெய்வேன்
எங்கேநான்பெற்றெடுப்பேன் எனக்கறியச்சொல்லுமென்றார்
ஆணும்கேள்பெண்மயிலே ஆணங்கேயொருவார்த்தை
இந்தவனத்திலே இங்கேகுளிகுளித்தால்
நமக்குஅன்னங்கிடையாது அன்னமேநீகேளு
சமுத்திரக்கரைபோம் தாவுண்டுபிள்ளைபெற

இவ்வார்த்தைதான்கேட்டு ஏதுசொல்லும்பெண்குருவி
அலைபெருகித்தண்ணீர்வந்தால் அடித்துக்கொண்டுபோய்விடுமே
இப்போதும்பிள்ளைபெற்று ஏமாந்துபோவேனே
என்றதுகேட்டு ஏதுசெல்லும்ஆண்குருவி
இவ்விடத்திற்பிள்ளைபெற்றால் ஏதுகுற்றம்வந்தாலும்
சமுத்திராசருடன் சண்டைகள்செய்திடுவேன்
யுத்தங்கள்செய்திடுவேன் உன்பிள்ளைவாங்கிடுவேன்
என்று-தலையிலடித்துமே சத்தியங்கள்செய்திடுமாம்
சபதங்கள்பண்ணினதை சமுத்திராசன்கேட்டு
இது-எவ்வளவுணர்க்குருவி என்னுடன்சண்டைபண்ண
சொல்லாதவார்த்தையைச் சொல்லுது சிட்டினங்கள்
ஆண்மையைப்பார்ப்போமென அவ்வருணன்தானிருந்தான்
அப்போதுசிட்டினத்தில் அழகானபெண்குருவி
செத்தையைத்தான்பொறுக்கி சிறுவீடுகட்டிடுமாம்
இருமுட்டையிட்டு இருந்துஅடைகாக்க
பின்னுமடைகாத்துப் பெற்றதிருக்குஞ்சுகளை
கொப்பெனவேதான்பறந்து குழந்தைக்கிரைதேடும்
இப்படியாகவே யிருக்கின்றவேளையிலே
தாயுந்தகப்பனும் தானில்லாவேளையிலே
சமுத்திராசனவன் தண்ணீர்பெருகிவந்து
குழந்தையிரண்டையும் கொம்பெனவேகொண்டேகி
பாதாளந்தன்னிலே பத்திரம்பண்ணினானாம்
பட்சிசமர்த்துகளைப் பார்ப்போமென்றுதானிருந்தார்
அந்தச்சமயத்தில் அழகானபெண்குருவி
குழந்தைக்கிரைதேடிக் கொண்டுவந்துபார்க்கையிலே
மக்களைக்காணாமல் மருகிப்புலம்புது
மார்பிலேயுந்தோளிலேயும் வண்ணமுகத்திலேயும்
அறைந்துபுலம்புது ஐயோமகனேயென்று
மக்களைப்பறிகொடுத்து மண்மேலேதங்குவேனோ
மைந்தனைப்பறிகொடுத்து வயிற்றிலறைந்துசொல்லும்
பாவிகெடுத்தாயெந்தன் பாலகரைக்கொல்லவென்று
என்றும்பகையாளி யேற்பட்டானெந்தனுக்கு
புதல்வனைப்பறிகொடுத்து புலம்புதுபெண்குருவி
ஐயையோதெய்வமென்று அலையிதுபெண்குருவி
அந்தச்சமயத்திலாண்குருவியேதுசொல்லும்
மனதுசலியாதே மக்களைவாங்கித்தாரேன்
சமுத்திராசருடன் சண்டைமிகச்செய்து
புதல்வரைவாங்கித்தாரேன் புலம்பாதேபெண்மயிலே
என்றுயெழுந்தது இயலானஆண்குருவி
மூக்கினாற்பனைலழித்து முனையாலெழுதுகுது
என்னவென்றுஓலை யெழுகுதுசிட்டினந்தான்

காக்காய்க்குருவி கழுகுகள்பருந்துகளாம்
மாடப்புறவாம் மயிலுங்குயிலினமாம்
காடைகுருவிகளாம் கவுதாரிபேடைகளும்
அன்னமயிலாழ்வாரும் ஆனைமயிலினமும்
உளிகழுகுமுதல் கோட்டானும் ஆந்தைகளும்
நிலகண்டநாழிகைக்கு ஓடியேவாருங்களென்று
சமுத்திராசருடன் சண்டைபண்ணபோகவேணும்
என்னுடையினத்தார்கள் எல்லோரும்வாங்களென்று
வருந்தியெழுதியே வாயசத்தைதானழைத்து
ஓலையைக்கொடுத்து உண்மையில்சொல்லி
தெய்வலோகத்தார்க்கும் சேதிசொல்லிவாருமென்ன
வாயுவேகமாக வருகுதுவாயசந்தான்
அவனியிலுள்ளவர்க்கும் அந்தரமுள்ளவர்க்கும்
செப்பித்திரும்புகையில் திருமாலிருக்குமிடம்
மாயனைத்தெண்டனிட்டு வணங்கியேயேதுசொல்லும்
தன்குலராசனுக்கும் சமுத்திராசனுக்கும்
யுத்தங்களாகிறதாம் உனக்குப்பெருமாளே
என்னைவரவழைத்தார் நானுமேபோய்ச்சேரவேணும்
சாஷ்டாங்கதெண்டனிட்டு சாமிக்குரைத்தது
குலுங்கச்சிரித்துக் கொப்பெனவேவிடைகொடுத்தார்
பிரமருடவாகனம் பேடன்னத்தோரினமும்
கந்தருடவாகனம் கானமயிலினமும்
மன்மதவாகனமும் வர்ணக்கிளியினமும்
சனியினுடவாகனம் சர்த்தனவாயசமும்
அவரவர்தேவரண்டை அடிபணிந்துதெண்டனிட்டு
சமுத்திராசனண்டை சண்டைசெய்யப்போறோமென்றார்
அமரருடைக்குமென்று ஆலோலமுப்பினது
ஆகையாலண்டவனே அடியேனும்போகவேணும்
எங்களுக்குச்சேவருளும் என்றுபணிந்தது
அந்தண்டதேவர்களும் ஆச்சரியப்பட்டார்கள்
சமுத்திராசருடன் சண்டைகளெப்படியோ
இப்புதுமைபார்ப்போமென்று இயலானதேவரெல்லாம்
நாமும்வருகிறோம் நடவுங்கள்முன்னேயென்றார்
தெய்வலோகப்பட்சி திரும்புதுபூமியிலே
தனித்தனிபட்சியெல்லாம் சமுத்திரக்கரையோரம்
தன்குலத்துராசருக்கு சரணமிடும்பட்சியெல்லாம்
அப்போதுசிட்டினந்தான் அனைவருக்குமேதுசொல்லும்
சமுத்திரக்கரையோரம் தாவுதேடிப்பிள்ளைபெற்றால்
அலைபெருகிதண்ணீர்வந்து அடித்துக்கொண்டுபோனது
என்னுடையபிள்ளையினை எடுத்துக்கொண்டுபோனது
ஆகையாலுங்களையும் அவசியம்தானழைத்தேன்

வாருமென்றபோதையிலே வந்தீர்கள் தயவுசெய்து
சமுத்திராசருடன் சண்டைகள்செய்திடுங்கள்
என்னுடையபிள்ளையை எவ்விதமும்வாங்கிடுங்கள்
உகந்து அனைவோர்க்கும் உபசாரஞ்செய்கையிலே
அத்தண்டபட்சிகட்கும் அதிககோபமுண்டாகி
காக்காயொருவரிசை கழுகுமொருவரிசை
அன்னமொருவரிசை ஆழ்வாரொருவரிசை
பருந்துமொருவரிசை பச்சைக்கிளியொருவரிசை
மயிலுமொருவரிசை வல்லூறொருவரிசை
குயிலுமொருவரிசை குருவியொருவரிசை
காடையொருவரிசை கவுதாரியொருவரிசை
புல்புல்லொருவரிசை புறாக்கலொருவரிசை
உள்ளானொருவரிசை ஊர்க்குருவியொருவரிசை
நாரையொருவரிசை நாகணவாயொருவரிசை
கொக்குமொருவரிசை கோட்டானொருவரிசை
அந்தச்சமயத்தில் அனேகவிதபட்சியெல்லாம்
அந்தப்புறங்களிலே அவ்வகுப்பாய்ச்சேர்ந்திருப்பார்
அப்போதுமூவர்களும் அயிராவதத்தோனும்
முப்பத்துமுக்கோடி தேவர்முனிவர்களும்
ஆகாயமார்க்கத்தில் அந்தாய்நின்றுகொண்டு
பட்சிகள்நின்றிருக்கும் பாவனையைப்பார்த்தார்கள்
எழும்பியேஅந்தரமாய் கட்டிப்பறக்கிறது
இருபக்கம்சிறக்கையிலே எடுத்துஜலங்கொண்டுவந்து
பாரெல்லாம்நீர்தளும்ப பறந்துதெளிக்கிறது
அரைநாழிக்கொள்ளேயிலே அடியோடேவற்றிவிட
சமுத்திரமானதெல்லாம் தண்ணீர்வறண்டுவிட
சமுத்திராசன் சகிக்கமுடியாமல்
தேவர்கள்தலைவனுடன் செப்பிமுறையிட்டார்
அத்தண்டபேரும் அனைவரும்வந்திறங்கி
சிட்டினத்தைதானழைத்து செப்புவார்தேவரெல்லாம்
உன்-தனயனைவாங்கித்தாரோம் சமுத்திரநீருண்டுபண்ணும்
எப்போதும்போலேநீ வரம்படுத்தும்சமுத்திரத்தை
என்றுசொல்லப்பட்சிகள் யெல்லாயெல்லாமொருமித்து
மயிலையருகழைத்து வார்த்தைகளேதுசொல்லும்
கந்தருக்குச்சொன்னீரானால் கைவேலாலுண்டுசெய்வார்
என்றுசொல்லிமயிலினங்க ளெல்லாமொருமித்து
வேலவன்றனபாதத்தில் விழுந்துமுறையிட்டு
ஆண்டவனேயென்சாமி அடியேனால்முடியாது
நீர்நினைத்தாலிட்சணமே நீரும்பெருகிவிடும்
அடியேனைப்பற்றியே அலைகடலுண்டுபண்ணும்
என்றுபணிந்து இறங்கியேதொழுதுநிற்க

கர்த்தர்மனமகிழ்ந்து கடுகியேவில்வளைத்து
வில்லெடுத்துநாணிபூட்டி வேலெடுத்துமந்திரித்து
அங்கடலில்நீரையெல்லாம் அம்பிலொருமுத்தாக
பூமியதிரவே போய்பாயும்வேலிதுதான்
மண்ணிலுள்ளநீரையெல்லாம் வழித்தொருமுத்தாக
மூக்கால்வளர்ந்து முனைந்துகடல்பெருக
சந்தோஷப்பட்டானே சமுத்திராஜனவன்
குருவியுடபிள்ளையை கொண்டுவந்துதந்தாரும்
ஆதிசிவனாரும் அதிசயரந்தந்தாராம்
முப்பத்துமுக்கோடி தேவர்முனிவரெல்லாம்
சுகமாகசெல்வத் துடனேயிருப்பீரென்று
வாழ்த்திவிடைகொடுத்து மகாதேவர்போய்நடந்தார்
ஊர்க்குருவிபெருவெற்ற ஒக்கும்வனமிதுதான்
என்றதுகேட்டு எழில்விஜயராஜாவும்
உற்றதுக்கேட்டு உள்ளமிகமகிழ்ந்தார்
அந்தச்சமயம் அருச்சுனராசரிடம்
போகவிடைதாருமெனப் புகன்றான்பிராமணனும்
போய்வாருமென்றுசொல்லி போகலுற்றான்போர்விஜயன்

கக-வது ஊர்க்குருவிவனம் முற்றிற்று.

கஉ-வது காளபயிரவவனம்.

பன்னிரண்டாம்வருஷம் பிறந்ததுபஞ்சவர்க்கு
கூடைதலைமேலே குடிவாழ்க்கைகானகத்தில்
கோலிவைத்தமோடு கூடைதன்மேலேவைத்தார்
அந்தவனத்தைவிட்டு அப்புறம்போனார்கள்
காளபயிரவ வனத்திலேகாவலர்கள்
அங்கேகுடித்தனமாய் ஐவர்குடியிருந்தார்
காண்டாவனமெரித்த காளையருச்சுனனும்
காளைபயிரவ கானகத்தில்வந்தமர்ந்தான்
அங்கேதவமுனிகள் அநேகம்பேர்பாரு
சாமியென்றுவந்தோமே தவசுகுலைந்ததையா
சிவனேயென்றுவந்தோமே சிந்தைகுலைந்ததையா
என்றுமனங்கலங்கி எப்போதும்போயிருந்தார்
அந்தரிஷிகளண்டை அருச்சுனன்தவஞ்செய்தான்
அங்கிருக்கும்ரிஷிகள் அநேகம்பெரியவர்கள்
இத்தனைகாலமட்டும் இருந்துதவம்பண்ணினோம்
இருந்துதவம்பண்ணி ஈஸ்வரனும்வந்ததில்லை
ஆதிசிவனாரை ஆண்டவரைக்காணவில்லை
பாமசிவனாரை பார்க்கஅரிதாகும்

கைலாசவாசலிலே கடுகதவம்பண்ணினாலே
பரமசிவனாரும் பாக்கியந்தந்திடுவார்
சுகமாகவாழ்ந்திடுவீர் துரிதமாயேகுமென
இவ்வார்த்தைதான்கேட்டு இயலானவூர்விஜயன்
எல்லோர்க்குஞ்சரணமிட்டு எழில்விஜயன்போய்நடந்தான்
கடுகிநடந்தானே கைலாசபருவதத்தில்
பொய்கையில்ஸ்நானம்பண்ணி பூசைதவமுடித்து
காளபயிரவனைக் கருதித்தியானம்பண்ணி
எழுபதடிகம்பம் எழில்விஜயன்நாட்டினான்
எழுபதடிகம்பத்தின்மேலேழுயிளநீரைவைத்தான்
ஏழுயிளநீரின்மேல் ஏழுவிளாம்பழத்தைவைத்தான்
ஏழுவிளாம்பழத்தின்மேல் எலுமிச்சங்கனியைவைத்தான்
எலுமிச்சங்கனியின்மேல் ஏழுகொட்டைபாக்குவைத்தான்
கொட்டைபாக்குமேலேழு குண்டுமணியைவைத்தான்
ஏழுகுண்டுமணியின்மேல் ஏழுகடுகுவைத்தான்
ஏழுகடுகதன்மேல் ஏழுசெப்பூசிவைத்தான்
ஏழுசெப்பூசியின்மேல் ஏழுசெவ்வலரிவைத்தான்
ஏழுசெவ்வலரியின்மேல் ஏறினான்தேர்விசயன்
ஒருக்காலேதானூன்றி ஒருக்கால்முழங்காலில்வைத்தான்
கண்ணிரண்டுமூடியே கர்த்தன்மேல்தியானமானான்
அரகரா அரனேயென்று அடித்தான்செயகண்டிகை
ஓம்நமசிவாயவென்று ஒலித்தானே சங்குதனை
ஒருவன்சிவனேயென்றால் உலகம்சிவனேயென்னும்
அருந்தவசுபண்ணுகிறான் அருச்சுனராசனுமை
அகோரத்தபசுபண்ணான் ஆண்டவனைக்காணவென்று
ஆதிசிவனார்க்கு அருச்சுனன்செய்ததவம்
பொறுத்துமுடியவில்லை போர்விசயன்செய்ததவம்
ஆதிசிவனார்க்கு அக்கினியாய்வீசுது
காலனைக்காலாலுதைத்த கைலாசநாதரவர்
கோபம்பெரிதாகி கொப்பெனவேயேதுசொல்வார்
ஆடாதாவனே அழையுங்கள்மாயவரை
எமன்பிரமாவை இங்கேயழையுமென்றார்
விண்ணாட்டுத்தேவனை விரைந்தோடியழையுமென்றார்
விக்கினவிநாயகனை வேலனையழையுமென்றார்
ஓடியழைத்து ஒருநொடியில்வாங்களென்றார்
அவ்வார்த்தைதான்கேட்டு அதிவிரைவாய்ஓடிவந்தான்
வைகுந்தம்ஓடிவந்து மாயனைத்தெண்டனிட்டு
ஆதிசிவனார் அழைத்துவரச்சொன்னாரென்றார்
அமராவதியாளும் ஆயிரங்கண்ணனுக்கு
எமலோகமாளும் எமதர்மராசனுக்கு
பிரமலோகந்தன்னிற் பிரமதேவனவர்க்கும்

வசிஷ்டரும்வால்மீகர் மகாதவமுடையவர்க்கும்
அந்தண்டதேவர்முதல் அனைவருக்குஞ்சொல்லினான்
சிவனார்வரவழைத்தார் சீக்கிரம்வாருமென்றான்
அவ்வார்த்தைதான்கேட்டு அவரவர்பயணமானார்
வாழ்கருடனேறியங்கு வந்துவிட்டார்மாயவனார்
மத்தகசமேறியங்கு வந்துவிட்டாரிந்திரனார்
எமன்கடாவிலேறி ஈசாருகில்வந்தான்
அன்றுபிரமாவும் அன்னத்தின்மீதில்வந்தார்
கானமயிலேறிக் கந்தரும்வந்துவிட்டார்
மூஷிகவாகனத்தில் முன்னோனும்வந்துவிட்டார்
முப்பத்துமுக்கோடி முனிவரும்வந்துவிட்டார்
ஆதிசிவன்பக்கலிலே அனைவருமவந்துவிட்டார்
வந்துபணிந்தார்கள் மகாதேவர்பக்கலிலே
அத்தியுரித்தவனார் ஆதிசிவனேதுசொல்வார்
மாயன்பெருமாளே வார்த்தையொன்றுகேட்டிரோ
ஆரோதெரியாது ஆதிகைலாசம்வந்தான்
எவனோதெரியாது இங்கேதவம்பண்ணுகிறான்
கைலாசம்தன்னிலேதான் கடிகிவாரநாயமுண்டோ
கைலைக்குயப்பாலே கானகந்தன்னிலேதான்
கருதித்தவம்பண்ணக்கால் காட்சிவரந்திடுவோம்
இங்கேதவம்புரிய எர்க்குமோசொல்லுமென்றார்
இவன் ஆரோதெரியாது ஆண்மையாய்வந்துவிட்டான்
என் தலைமாட்டிலின்று சத்தங்கள்போடுகிறான்
ஆரோதெரியாது அறிந்துவந்துசொல்லுமென்றார்
மாயன்பெருமாளும் வார்த்தையங்கேதுசொல்வார்
பாண்டுமகாராசன்பெற்ற பஞ்சவர்களைவருண்டு
குந்திமாதேவிபெற்ற குலமணிகளைவருண்டு
காலிலேசட்சத்திரம் நயனவிழிபார்வையுள்ளோன்
மீசைமுறுக்கழகன் விழியிற்கருப்பழகன்
தோளில்துளசிமாலை தொப்புளிலமிர்தகலசம்
பல்லில்பாசவினை பாதத்திற்செந்தாமரைப்பூ
பஞ்சவரிலிவனொருவன் பார்த்திபனென்றார்காண்
இடதுகால்பொம்மைவிருது வலதுகால்வீரதண்டை
சலவிருதுகுலவிருது சமர்த்துகள்படைத்தவன்காண்
சிவபூசைகுருபூசை சிவன்பாதமறவான்காண்
என்னவரம்வேண்டி யிங்குவந்தானென்றறியேன்
என்றதுதான்கேட்டு யேதுசொல்வாரீஸ்வரரும்
தருமர்தம்பியானாலும் சமர்த்துடையோனானாலும்
கைலாயந்தன்னிலே கடிகிவாராயமுண்டோ
இவன் இந்தவிதமாயிருந்து எததவம்பண்ணிலும்
வருந்தியிருந்தாலும் வரமருளப்போறேனோ

தவசைக்கெடுத்திடுவேன் தருமர்தம்பியர்ச்சுனரை
என்றுமகாதேவர் எரிபறந்துகண்சிவந்து
வாயுராசன்றன்னையே வாவென்றழைத்தாரும்
அருச்சுனன்செய்யுமந்த அருந்தபசகம்பமதை
தவசுநிலைகம்பமதை சமுத்திரத்திற்போடுமென்றார்
அரைநாழிகொள்ளையிலே அதமாக்கிவாருமென்றார்
என்றதுதான்கேட்டு எழுந்தானேவாயுராசன்
ஆயன்பெருமாளும் அவ்வார்த்தைதானறிந்தார்
கையோசம்வந்ததென்று கரியமாலப்போது
அருச்சுனராருக்கு அவத்தம்வரநாளாச்சே
காக்கவேணுமென்று கரியமாலோடிவந்தார்
மாய்கையாய்வந்தாரே வாள்விஜயன்முன்னாலே
காண்டிபாவருச்சுனரே கையோசம்வந்ததடா
ஆதிபரமசிவன் அதிககோபங்கொண்டாரே
வாயுராசன்தன்னையிப்போ அனுப்பினார்மகாதேவர்
தவசுநிலைகம்பமதை சமுத்திரத்திற்போடவாரான்
வாயுராசனுக்கு வலுவாயிருப்பாயா
என்றதுதான்கேட்டு எழில்விஜயனேதுசொல்வான்
உம்மையேநம்பியே உம்பர்புரம்வந்தேன்
ஆரைச்சதமென்பேன் அன்னியரைத்தஞ்சமென்பேன்
எவரைச்சதமென்பேன் இனியாரைத்தஞ்சமென்பேன்
உள்ளங்கைநெல்லிப்பழம் உருக்குலைந்துபோகாதோ
தோளில்ஜெபமாலை தொண்டழிந்துபோகாதோ
பெட்டியிலேபூஷணம் பெருமைகுலையாதோ
காக்கக்கடனுனக்கு கரியமாலெம்பெருமாள்
அண்ணருந்தம்பியரும் அனுப்பினாருன்னைநம்பி
ஆரைநம்பியிங்குவந்தேன் ஆதிகைலாசம்
என்னமாயிருந்தாலும் ஈஸ்வரனுமெந்தனுக்கு
வந்தவினைமாற்றி வரமருளச்செய்யுமையா
என்றுவணங்கினான் இயலானவாள்விஜயன்
சிந்தைமனங்குளிர்ந்து ஸ்ரீராமரென்னசெய்தார்
தருமர்தம்பியர்ச்சுனன்றன் தவசுநிலைக்கம்பமது
வாயுராசன்வந்து வலுமைபாராட்டிக்கிறதும்
ஆதிசிவன்வந்து அசக்கிவலிக்கிறதும்
தேவாதிதேவரொன்றாய்ச் சேர்ந்துவசக்கிறதும்
அருச்சுனன்தவசுநிலை அசையாமலிருக்கவென்று
மாயவனார்வரங்கொடுத்து வந்துவிட்டார்கைலையிலே
ஆருமறியாமல் ஆதிசிவனருகில்வந்தார்
அந்தச்சமயத்திலே ஆங்காரவாயுராசன்
மண்ணும்விண்ணும்தானதிர வாறானேவாயுராசன்
தெற்கேயிருந்து திசைவடக்குமுன்பாக

இறைந்துவந்துமோதினான் இளவிசையன் தவசடியை
அப்புறந்தூக்கிப்புறந்தான் அசையாமல்தானிருக்கும்
மறுகாலொருதாமும் வந்துஅறைந்தானும்
சாயாமல்நின்றது தவசுநிலைகம்பமது
தன்னாலேயாகாமல் சங்கரிக்கமுடியாமல்
திரும்பினான்வாயுராஜன் சிவனாற்குசேதிசொல்ல
அர்ச்சுனரைப்பார்த்து அதிகப்பிரியமுமாய்
என்னிதுவல்லபிரான் என்றுமனமகிழ்ந்து
அருச்சுனாவுந்தனக்கு அஸ்திரந்தாரேனென்றார்
வாயுவினஸ்திரத்தை வாள்விஜயன்கைகொடுத்தான்
வாங்கிநமஸ்கரித்து வாள்விஜயனேதுசொல்வான்
தேவாஅப்பவந்தீர்த்தான் என்தவரைநீழிக்க
என்றதுகேட்டு ஏதுசொல்வான்வாயுராஜன்
ஆதிசிவனழைத்து அனுப்பினார்வுந்தனிடம்
தவசுநிலைகம்பத்தை சமுத்திரத்தில்போடுமென்றார்
ஆகையாலிங்குவந்தேன் அசக்கினேன்கம்பமதை
என்னால்முடியவில்லை இளவிசயாவுனைசெயிக்க
ஆதிசிவன்வந்திடுவார் அதிகவரந்தந்திடுவார்
என்றுரைக்கையிலே இளவிசயனேதுசொல்வான்
உம்பர்பிரானுக்கு ஒருவார்த்தைசொல்லுமையா
என்னவென்றுசொன்னா லெழில்விஜயனர்ச்சுனனும்
கிருபைவைத்துபாசுபதம் கீடிக்குத்தாருமையா
வேண்டுவரங்கள்தனை விமலரேதாருமையா
கேட்டவரங்கள் கிருபைவைத்துதாருமையா
வரந்தான்தந்தாலொழிய மலையைவிட்டுப்போவதில்லை
தவசுநிலையைவிட்டு தனஞ்செயனும்போவதில்லை
ஆண்டவனேஐயாவே அசட்டையாய்நீயிருந்தால்
மண்டையிளப்பேனென்று மகாதேவருக்குரையும்
தலையையுடைப்பேனென்று சங்கரற்குநீயுரையும்
என்றுவிசய னெடுத்துரைப்பானப்போது
வாழ்த்திவிடைபெற்று வருகிறான்வாயுராஜன்
ஆதிசிவனாற்கு அடிபணிந்துதெண்டனிட்டு
மான்மழுதரித்ததேவா மலர்ப்பாதம்சரணமையா
அருச்சுனன்தவசழிக்க ஆண்டவனேமுடியாது
உம்பர்பிரானே உம்மாலுமாகாது
காட்சிதாராவிடிலோ காண்டீபத்தாலடிப்பானென்றான்
வரங்கள்கொடாவிடிலோ மண்டையிளப்பேனென்றான்
என்றதுதான்கேட்டு ஈஸ்பரனார்கோபமானார்
கேட்டீரோமாயவரே கெர்வத்துடன்சொன்னது
மண்டையுடைக்கவும் வரம்வாங்கும்வல்லவனோ
காண்டீபத்தாலடித்து கடுகிவரம்வாங்குவனோ

தலையையுடைப்பே னென்று தனஞ்செயனையிப்போது
மண்டைதனையுடைத்து வல்லுயிரைவாங்கவேண்டும்
என்றுபரமசிவன் எதிர்பார்த்துகண்சிவந்து
ஆடாயிடிபகவான் ஆதிவிரைவாய்வாருமென்றான்
ஏழிடியுங்கூடியொரு பேரிடியாயிடித்து
அருச்சுனன்தன் தலையை அறுபதுசக்கலாக்கி
கொன்றுஅதமாக்கிக் கொப்பெனவேவாருமென்றான்
அவ்வார்த்தைதான்கேட்டு ஆங்காரயிடிபகவான்
அஷ்டகிரிபர்வதங்கள் அதிர்ந்துநடுக்கமுற
எழுந்தானிடிபகவான் ஏழுலகந்தானதிர
அந்தச்சமயத்தில் அரியாமரோடிவந்தார்
அர்ச்சுனபார்த்தீபா ஆதிசிவன்கோபமானார்
இடிபகவான் தன்னை ஈஸ்வரனனுப்பினார்
தலையையுடைக்கவென்று தான்வாரானிடிபகவான்
தப்பித்துக்கொள்ளுமென சாமியவர்போய்விட்டார்
அந்தச்சமயத்தில் ஆங்காரயிடிபகவான்
தெய்வலோகந்தானதிர தேவர்கிடுகிடென்ன
பாதாளஆதிசேடன் பயந்துகிடுகிடென்ன
கெற்பங்கிடுகிடென்ன கின்னரர்கமரிகொள்ள
அஷ்டகிரிபர்வதங்கள் அதிர்ந்துகிடுகிடென்ன
எட்டுதிசைநடுங்க ஏழுலகந்தத்தளிக்க
ஏழிடியுங்கூடியொரு பேரிடியாய்த்தானிடித்து
அருச்சுனற்குநேராக ஆகாசமீதிருந்து
உருதியாய்ப்பலருங்கூடி உச்சியிலேதானிடித்தான்
வாட்டுமிடிபகவான் தன்றலைவாள்விஜயன்
இடிபகவான்வருகையிலே ஏழில்விஜயனென்னசெய்தான்
ஒஞ்சரித்துதானிருந்து ஒருபக்கமிடிக்கவே
கண்முழிபிதுங்குது தண்ணீருந்தான்வடிய
இளர்ப்புந்தளிர்ப்புமா யிருக்குதடிதேவருக்கு
மெச்சினேன்மருமகனே விட்டுவிட்டுயென்னையென்றார்
என்மகளைமின்னொளியை ஈந்திடுவேந்தனுக்கு
இப்போதுவுந்தனுக்கு இடியாஸ்திரந்தாரேனென்றான்
அவ்வார்த்தைதான்கேட்டு அருச்சுனனேதுசொல்வான்
இனிமேல்கலியுகத்தில் எங்கேயிருந்தாலும்
அருச்சுனனென்றுசொன்னால் அப்பாலேநீர்போரீரோ
என்பேர்ச்சொன்னக்கா லெழுகாதம்போரீரோ
அவசியமாய்ப்போரேனென்று ஆணையிட்டானிடிபகவான்
எவனுப்பவந்தீர்காண் என்னையிடித்துக்கொல்ல
என்றதுகேட்டுமே ஏதுசொல்வானிடிபகவான்
ஆதிசிவனனுப்பினனுன்னிடத்தில்
ஆங்காரத்துடனேவந்து அகப்பட்டேனுன்கையில்

சத்தியவானென் தலையை தப்பவிட்டாய்மகாராசா
உனை—புண்ணியத்தாலே பிழைத்துமேநான்போறேன்
அவ்வார்த்தைதான்கேட்டு அருச்சுனனேதுசொல்வான்
ஆதிசிவனுற்கு அடிபணிந்தேனென்றுசொல்லு
ஈதுவருத்தங்கள் எண்ணபிடர்செய்தாலும்
அர்ச்சனென்தவத்துக்கு அழிவுவரப்போரதில்லை
ஈவரன்னையில் சந்தவிதபாணுலும்
வாங்காக்கவல்லவீரான் வாள்விசயனென்றுசொல்லும்
இடிபகவானுக்குரைத்து எழில்விசயன்தானனுப்பி
அரனைமறனாலும் அரன்மேலேதியானமாகுன்
சிவனைமறவாலும் சிவன்மேலேதியானமாகுன்
அந்தசமயத்தில் ஆதிசிவனரிடத்தில்
வந்தானிடிபகவான் வணங்கியேநமஸ்கரித்தான்
ஆண்டவனேஐயாவே அடியேனொருவிண்ணப்பம்
உன்வார்த்தைகேட்டுப்போய் உயிரிழக்கலாச்சே
ஒழிபுங்கூடியொரு பேரியாய்த்தணிந்தேன்
இறங்கித்தலைசாய்ந்து என்னைப்பிடித்துக்கொண்டான்
சத்தியவானர்ச்சனனும் தப்பவிட்டானென் தலையை
ஏதுசீர்செய்தாலு இளைத்துவிடானர்ச்சனனும்
வாம்வாங்கிப்போகவல்லான் வாள்விஜயனர்ச்சுனனும்
அவனை—சித்தமதில்நினைக்கத் தேகம்நடுங்குதையா
பின்னும்நினைவுகொண்டால் பிராணன்பதைக்குதையா
என்றுசொல்லஇடிபகவான் ஈசனதற்குரைப்பார்
அத்தனைக்கும்வல்லவனோ ஆண்பிள்ளையர்ச்சுனனோ
அரைநாழிகொள்ளையிலே அதமடக்கிப்போடுகிறேன்
அனேகமானசெல்லுகளை ஆண்டவருண்டுபண்ணூர்
செல்லுகளோடுங்கூடும்போய் சீக்கிரம்விசயனுடை
சரீரமதிலெங்குஞ் சல்லடைக்கண்களாக
துளைத்துவிட்டுவாருமென்று சொன்னார்பாசுபாணி
வருகுதுசெல்லதுதான் வாள்விஜயன் தன்னருகே
அந்தச்சமயத்திலே அரிராமகோடிவந்தார்
அர்ச்சுனுவாள்விசயர் அவகேடுவந்ததடா
ஆண்டவன்கோபமதாய் அனேகஞ்செல்லனுப்பிவைத்தார்
எச்சரிக்கையாகவே இருங்காணருச்சுனரே
என்றதுசொல்லியே எம்பெருமாளேகிவிட்டார்
அந்தச்சமயத்திலே அனேகமானசெல்லுகள்
சுரேந்திரன்மைந்தனையுஞ் சூழ்ந்ததுசெல்லுகள்தான்
கண்டானேயர்ச்சுனனுங் காண்டீபந்தான்வளைத்தான்
வில்வளைத்துநாரிபூட்டி வில்லைக்குணத்தொனித்தான்
அக்கினியாஸ்திரத்தை அருச்சுனனுச்சரித்து
மார்புனவாங்கினன் வீர்விட்டானக்கினியை

அர்ச்சுனன் தபசுநிலைக் கம்பத்தருகாக
அக்கினிவருகுது அண்டமுடியவில்லை
செல்லுகளண்டாமல் செந்தணலாய்ப்பத்துகுது
பார்த்துபயந்து பறந்ததுசெல்லுகள் தான்
சங்கரன் தன்னருகே சரணமிட்டேதுசொல்லும்
ஐயாவேசுவ்பரரே ஆண்டவரேநீர்கேளும்
அர்ச்சுனன் தன்னருகே அக்கினி வளருகுது
ஆற்றமுடியாமல் ஐயாவேவந்துவிட்டோம்
ஆதிசிவன்கேட்டு அதிககோபமுண்டாகி
அத்தனைக்கும்வல்லவனே அருச்சுனராசனுந்தான்
என்றுபரமசிவன் எரிபறந்துகோபமுடன்
வருணபகவானை வாருமென்றுதானழைத்து
யானையுடகால்பெருமன் யானைமழைபெய்புமெனக்
கட்டளையிட்டு கடிகியேபோமென்றார்
ஆதிசிவன்வார்த்தை அவ்வருணன்தவறாமல்
சமுத்திரத்தின்நீரையுண்டு தான்வருதமேகங்களும்
கார்மேககற்பமும் கருத்தெழும்புறது
ஆனைக்கால்போலவே அவ்வருணன்மழைபொழிய
அந்தச்சமயத்தில் ஆபருமோடிவந்தார்
அருச்சுனவாள்விசையா ஆண்டவனார்கோபமதாய்
வருணபகவானை மழைபொழிய அனுப்பினார்
எச்சரிக்கையாக யிருமென்றுதானடந்தார்
அந்தச்சமயத்தில் ஆங்காரவருணராசன்
மேகமெழும்பி மின்னல்வருகையிலே
கண்டானேவாள்விசயன் கனமோசம்வருகுதென்று
வில்வளைத்துநாரிபூட்டி வில்லைக்குணத்தொனித்தான்
சங்கரன்மாரிபோலே சரமேற்சரம்பொழிந்தான்
அம்பினால்மூடுபந்தல் அருச்சுனன்போட்டுவிட்டான்
வானமழைபொழியாமல் வாள்சரத்தால்பந்தலிட்டான்
வருணபகவானும் வந்துமழைபொழிந்தான்
வெள்ளமாய்த்தான்பெருக வேணமழைபொழிந்தான்
அருச்சுனன்வளர்த்தின அக்கினிக்குச்சேதமில்லை
வருணபகவானும் மனதுமிகக்குளிர்ந்து
சந்தோஷப்பட்டானும் தார்விசயனர்ச்சுனன்மேல்
என்னிலும்வல்லபிரா னென்றுமனமகிழ்ந்து
வருணாஸ்திரத்தை வாள்விசயன்கைக்கொடுத்தான்
வாங்கியேவாள்விசயன் வருணனுக்கேதுசொல்வான்
ஆரனுப்பநீர்வந்தீர் அமரதுசெய்யவென்று
என்றதுகேட்டு எதுசொல்வான்வருணராசன்
ஆதிசிவனார் அனுப்பினார்வந்தேனென்றான்
எழில்விசயாவுனைசெயிக்க யென்னாலமுடியாது

ஈசனார் தன்தமக்கு இவ்வார்த்தைசொல்லப்போறேன்
அனல்வருணரேரே அரனார்க்கெடுத்துரையும்
கோடிசரணமும் கும்பிட்டேனென்றுசொல்லும்
அகச்சாடல்செய்வதேதோ அருச்சுனன்மேல்கோபமேதோ
கடுகியேவர்தனக்கு காட்சிதரச்சொல்லுமையா
பொய்யாருமென்று பொட்டெனவேசரணமிட்டான்
வாயுவேகமாகவே வருணராஜன்வந்துவிட்டான்
ஆதிசிவனுக்கு அடிவணங்கித்தெண்டனிட்டான்
அருச்சுனன்தனையெழுப்பிக்க ஆராலுமுடியாது
உம்பர்பிரானேரே உம்மாலுமுடியாது
அத்தனைக்கும்வல்லபிரா னைகயிறைலிங்குவந்தான்
சேரினவார்த்தைநீர் கொடுத்தனுப்புமைவரே
என்றதுகேட்டு ஈஸ்வரனார்கோபமானார்
வாள்விஜயன் தன்னுடைய மனமுடிக்கழிக்கிறேன்பார்
கழுகுகளுங்கூளிகளும் கடுகியேவுண்டுபண்ணூர்
அருச்சுனன்மாங்கிஷத்தை அடங்கலுமழிக்கிறேன்பார்
கவ்விப்பிடுங்கியே கடுகியேவுண்டுபண்ணூர்
இமையோர்பிரானும் இன்னமேதுண்டுபண்ணூர்
கருவண்டுசெவ்வண்டு கணக்கில்லாதுண்டுபண்ணூர்
கொட்டுகிறகுளவியை கோடியவருண்டுபண்ணூர்
தேவேந்திரன்மகனுடலைத் துளையாய்த்துளையுமென்றார்
அதாசணைநாழிகையில் அருச்சுனனைக்கொல்லுமென
மகாதேவர்சொல்லருள வருகுதுசேனைகள்தான்
குளவிகளும் ஈகளும் கூட்டமாய்வருகுதங்கே
தனமோசம்வருகுதென்று கரியமால்தானறிந்து
அருச்சுனராஜனண்டை அரிராமமோடிவந்தார்
காண்டீபா வருச்சுனனே கழுகுகள்வருகுதடா
குளவிகழுகுகளும் கூளிகளும்வண்டுகளும்
அநேகம்வருகுது அங்கந்துளைப்படுத்த
எச்சரிக்கையாகவே இருங்காணுமர்ச்சுனனே
என்றதுகேட்டு இந்திரன்மகனேதுரைப்பான்
அடியேனுலேதாகும் ஐயாபெருமாளே.
உன்வலிமையாலே உம்பர்புரம்வந்தேனே
எந்தவிதத்திலேயும் ஈடேறப்பாருமையா
வணங்கிசரணமிட்டான் மாயன்பெருமாளை

தாணியளந்தவரும் சங்கோஷப்பட்டாரும்
கழுதைகளும்கூளிகளும் கவ்விசைகொண்டாலும்
அருச்சுனன்தேகத்துக்கு அழிவில்லாதேயிருக்க
என்றுவரமளித்து எம்பெருமாளும்போய்நடந்தார்
வந்துபிடுங்கிற்று வான்விஜயன்தேகமெல்லாம்
சல்லடைக்கண்போலே சதைப்பத்தைகாப்படுத்தும்
எப்போதும்போலே எற்பதுக்தேகமெல்லாம்
கைகள்நகம்பேர்ந்து கடித்தபல்லுங்கூர்மழுங்கி
மூக்குகள்தானொடிந்து மூண்டங்களாயோடுகுது
ஆதிசிவனருகில் அடிபணிந்துதெண்டனிட்டு
கைகட்டிவாய்புதைத்து கழுதைகள்முறையிடும்
எங்களாலானமட்டும் எழில்விஜயன்தேகமதை
சல்லடைக்கண்களைப்போல் சதையைக்குலைத்திடுவோம்
சதையைத்துளைத்திடுவோம் சதையைப்பிடுங்கிடுவோம்
குப்பல்குப்பலாகவேதான் குவிப்போமேமாங்கிஷத்தை
குவித்தரைநாழிகைக்குள் கூடிவிடுந்தேகமதில்
துளைத்தரைநாழிகைக்குள் தோன்றுமுடல்முன்போல்
பின்னுஞ்சதைகவ்விப் பிடுங்கியெறிந்திடுவோம்
அருச்சுனன்தேகமதை அழித்தோமழியவில்லை
கடித்தபல்லுங்கூர்மழுங்கி கைகள்நகம்பேர்ந்துதையா
எங்களால்முடியாது இளவிஜயனைஜெயிக்க
ஆராலுமுடியாது அர்ச்சுனனைஜெயிக்க
கோரினவரத்தை கொடுத்துவிடும்ஆண்டவரே
அவ்வார்த்தைகேட்டு ஆதிசிவனேதுசொல்வார்
எத்தனைநாள்தவசிருந்தும் ஏனென்றுகேட்பேனோ
என்றுபரமசிவன் இருந்தார்சிம்மாதனத்தில்
கற்பூரமண்டபத்தில் கர்த்தர்கொலுவிருந்தார்
மாயன்பெருமாளு மடிபடியுமோடிவந்தார்
அர்ச்சுனபார்த்திபா ஆதிசிவன்மோசஞ்செய்தார்
கற்பூரக்கொடிமுடியைக் கனலாற்கொளுத்திவிட்டால்
கலகத்தைசெய்துவிட்டால் காட்சிதனைத்தந்திடுவார்
என்றதுசொல்லி எம்பெருமாள்போய்நடந்தார்
அப்போதருச்சுனனும் ஆனமுகனேதுசெய்வான்
வில்லுனைத்துநாரிபூட்டி விசையைக்குணத்தொனித்தான்
அக்கினிபாணமதை அருச்சுனனுச்சரித்து
மந்திரத்தையுச்சரித்து மண்டபத்தைக்கொளுத்துமென்று

மார்புரவாங்கியே தோள்புரவிட்டுவிட்டான்
வந்ததுபாணம் மகாதேவர்மண்டபத்தில்
கற்பூரமண்டபத்தைக் கடுகிக்கொளுத்திடவே
மண்டபந்தானெரிய மகாதேவர்பார்த்துவிட்டார்
பார்த்தீரோமாயவரே பார்த்திபன்றன் வலுமை
என்-வீட்டைக்கொளுத்தியே வேணவாம்வாங்கவந்தான்
இப்படிசெய்தவர்களெவர்களையுங்காணறியேன்
சதுர்யுகமட்டும் தவசுகள்பண்ணினாலும்
அருச்சுனனுக்குநான் அரியவரந்தருவதில்லை
கற்பூரமண்டபத்தைக் கடுகவேவிட்டெழுந்து
சாம்பிராணிமண்டபத்தில் சாமிவந்துகொலுவிருந்தார்
சாம்பிராணிமண்டபத்தைத் தணலாய்க்கொளுத்துமென்றார்
சொல்லிநடந்தாரே சுவாமிபெருமாளும்
மதுகாலருச்சுனனும் வரிவில்வளைத்துக்கொண்டு
அக்கினியாஸ்திரத்தை அருச்சுனன்முடுக்கிவிட்டான்
சாம்பிராணிமண்டபத்தைத் தணலாயுருக்கிடுது
கண்டார்மகாதேவர் கடுகியங்கேதுசொல்வார்
கண்டீர்களோதேவர்களே காண்டிபனாண்மைதனை
என்-வீட்டைக்கொளுத்தியே வேணவாம்வாங்கவந்தான்
இந்தவாண்மையுள்ளவனை எங்குமேகானறியேன்
வெண்ணீறுமண்டபத்தில் விமலரும்போய்நடந்தார்
மாயன்பெருமாளும் மாயமாயோடிவந்து
அருச்சுனுபார்த்திபா அதிகமோசம்வந்ததடா
விபூதிமண்டபத்தில் வேந்தரும்வந்தமர்ந்தார்
அப்பெரியமண்டபத்தை அதமாக்கிப்போடுமென்றார்
அவ்வார்த்தைசொல்லி அரிராமர்போய்நடந்தார்
வில்வளைத்துநாரிபூட்டி வில்லுநுனைத்தொனித்தான்
வருணபகவான் வாமனித்த அஸ்திரத்தை
மந்திரஜபமிட்டு வாங்கினான்மார்புர
வந்துவிழுந்தது மயேசுவரன்மண்டபத்தில்
வானமழைபோலாக வந்துபொழிந்திடவும்
வெண்ணீறுமண்டபமுமத்தக்கரைந்திடவே
கண்டார்மகாதேவர் கண்கொள்ளாக்கோபமுடன்
மாயன்பெருமானே அருச்சுனன் ஆண்மைதனை
கண்டீரோமாயவரே காண்டீபனாண்மைதனை
எத்தனைமண்டபத்தை இப்படிக்காத்திவிட்டான்

இப்படிப்பட்டவனுக்கு எப்படிவரமருள
இங்கிருந்தோமானால் இப்படிக்குப்பண்ணுகிறான்
பாதாளமண்டபத்தில் பரமசிவன்போகவென்று
எழுந்தார்மகாதேவர் எல்லோருங்கூடவர
அந்தசமயத்திலே அரிராமரோடிவந்து
அர்ச்சுனபார்த்திபா அதிகமோசம்வந்ததடா
பாதாளமண்டபத்தில் பரமசிவன்போருன்காண்
போய்விட்டாராமானால் பிற்பாடுகாணொணாது
காணக்கிடையாது கர்த்தருடசேர்வை
போகாமலேதடுத்தால் பெருமானைக்கண்டிடலாம்
என்றதுசொல்லி எம்பெருமாள்போய்நடந்தார்
மாயவனார்போனபின்பு வான்விஜயனேதுசொல்வான்
காண்டிபன்வில்வளைத்து கணையெடுத்துவுச்சரித்தான்
கடிகிமறித்துவிடும் என்றுகணைதொடுத்தான்
வந்துதடுத்ததது வாள்விஜயன்விட்டபாணம்
முக்கண்ணுடையவரை முன்னேதடுத்ததுகாண்
கண்டார்பரமசிவம் கண்கொள்ளாக்கோபமுடன்
கண்டிரோதேவர்களே காண்டிடன்ஆண்மைகளை
இப்படிப்பட்டவனுக்கு எப்படிவரங்கொடுப்பேன்
என்றதுகேட்டு ஏதுசொல்வார்தேவரெல்லாம்
தருமர்தம்பியர்ச்சுனர்க்கு சமர்த்துகள்மெத்தவுண்டு
இவருடனெதிர்த்தவர்கள் எவரும்பிழைப்பதில்லை
காட்சிதந்தாலல்லாது கனமோசம்வந்துவிடும்
என்றதுகேட்டு ஏதுசொல்வாரீஸ்வரரும்
அருச்சுனன்சமர்த்துகளை ஆண்மைகளைக்காணுகிறேன்
தவசுநிலைக்கம்பத்தை தரையோடமிழ்த்துகிறேன்
என்றுபரமசிவன் எமனைத்தானழைத்து
எமதர்மராசரே நீர் ஏனம்போல்வடிவெடுத்து
அர்ச்சுனன்தன்னருகில் அபயமிட்டுஓடுமென்றார்
கடுகியனுப்பினார் கடவுளுமவனையங்கே
எமதர்மராசன் ஏனம்போல்வடிவெடுத்தான்
பன்றிவடிவெடுத்து பார்த்தனருகில்வந்தான்
அபயமபயமென்று அழுதுபுலம்பிவாரான
அபயமென்றசத்தம் அருச்சுனன்கேட்டுவிட்டான்
அபயக்குரல்கேட்டால் ஆதரிக்கவேணுமென்று
அலகம்புஅஸ்திரத்தை அருச்சுனன்விட்டுவிட்டான்

காட்டுபன்றிதன்னையுமே கம்பத்தில்கட்டுமென்றான்
மந்திரமாய்ப்பிட்டு வாங்கினானருச்சுனனும்
வந்தே அலையிரந்தான் வளைந்துமேகட்டுகுது
கம்பத்துடனேதான் கட்டியேபோட்டது
கட்டுண்டான்காலன் காண்டிபன்தன்சரத்தால்
அக்கச்சம்பத்தில் ஆதிசிவனெழுந்தார்
மெத்தப்பெரியவராய் வேடன்வடிவெடுத்தார்
பிரமதேவன்தானும் பெரியதொருவேடானார்
விக்கினவிநாயகர் வேடன்வடிவெடுத்தார்
சூர்குலம்வேரறுத்த சுப்பிரமணியர்வேடானார்
அமராபதியாளும் அங்கபிரான்வேடானார்
அடியனந்தமாயவரும் அங்கேஒருவேடானார்
அர்ச்சுனனைவெல்லவென்று அனைவரும்வேடானார்
சவுபரியைத்தானழைத்து இப்போ [illegible]மென்றார்
சவுபரியாள்தன்னுடனே ஏழுபேர்வேடானார்
வாறார்வடிவெடுத்து வான்விஜயன்தன்னருகே
காற்செருப்புந்தோல்தல்லாவும் கைவிலதுப்பாக்கிகளும்
மான்வலையுஞ்சில்லாக்கோல் மருந்து[illegible]பதுண்டுகளும்
வெட்டைகுண்டுதுப்பாக்கி சேரிசமும்தோளில்வைத்து
சின்னவேடன்பெரியவேடன் சிவனுங்கிழவேடானார்
பொன்னாற்றமக்கடித்துப் புறப்பட்டார்வேடரெல்லாம்
மற்றுமுள்ளதேவதைகள் வயிரவனார்வடிவெடுத்தார்
கருநாயுஞ்செந்நாயும் கணக்கில்லாநாய்களவா
காட்டைவளைத்தார்கள் கருநாயைசக்திவிட்டார்
அம்புவில்லாயுதமும் ஆண்டவனார்கைப்பிடித்து
வாறார்கள்வேடரெல்லாம் வளைத்துதாத்திபல்லோ
அத்தண்டவேடுவரும் அருச்சுனனருகில்வந்து
ஆர்காணுஞ்சங்கமே அறிவைப்படைத்தவரே
பதிதாய்த்தபசுபண்ணி புத்திமெத்தகற்றவரே
தீரப்படித்தவரே தெளிவறிந்தசங்கமமே
ஏழைகண்டாய்வேடுவனென் எட்டுநாள்காத்திருந்தேன்
காத்திருந்திவ்வனமதிற் கண்ணயாமேயய்துவிட்டேன்
காயம்பட்டுயேனம் ஓடியேவந்ததிங்கே
ஏமம்வந்தசாடையிது இப்போதடிபிடித்து
அடிபிடித்தவந்தேதம்காம் [illegible]ருசங்கமமே
கம்பத்துடனேநீர் கட்டிவை[illegible]காரியமேன்

பசியோடிருக்கிறோம் பன்றிதனைவிட்டுவிடும்
பிள்ளைகளுங்குட்டிகளும் பெரும்பசியாய்ப்புலம்புகிறோம்
கட்டவிழ்த்துவிட்டுவிடும் கடுகப்புசித்திடுவோம்
என்றுசொல்லிக்கொண்டு ஈஸ்வரனார்தான்வரவே
காண்டிபனருச்சுனனுங் கடுகியேஏதுசொல்வான்
ஆரடாவேடுவனே அப்புறத்தேபோய்விடுங்காண்
அபயக்குரல்போட்டால் ஆதரிப்பேனல்லாமல்
இனிமேல்விடுவேனென்று எண்ணாதேயுன்மனதில்
பன்றியைத்தின்றாலே பசியாறிப்போவாயோ
குழந்தைகட்குமுந்தனுக்குங் குலத்தார்க்கும்போதுபோகாண்
தன்னைப்போல்சிவன்களை தான்கொல்லஎண்ணுவாரோ
சிவனாரைநோக்கியே செய்கிறேன்தவசுநிலே
எதிரிட்டுக்கொள்ளாதே இடையுங்காண்வேடுவரே
அரகரஅரனேயென்று அடித்தானேசெயகண்டிகை
சம்பேசிவனேயென்று தொனித்தானேசங்குதனை
ஆதிசிவனும் அருச்சுனற்கதுசொல்வார்
எத்தனைசொன்னாலும் இரங்கலேபோவுன்மனது
தருமம்நினைத்தாக்கால் சாமிவந்துதுணையாவார்
வயிறுபசிதீர்த்தாக்கால் மகாதேவர்துணையாவார்
உன்-தாயார்தகப்பனுக்குந் தமயற்கும்தம்பியற்கும்
ஒருகோடிமோட்சமுண்டு உற்சாகஞ்செய்யுமென்றார்
அவ்வார்த்தைதான்கேட்டு அருச்சுனரேதுசொல்வார்
ஒருகாலுரைத்தேனே மறுகாலுரைப்பேனோ
தபசுநிலேவேளையிலே சத்தங்கள்போடாதே
சந்திரசூரியர்களிதவறிநிலைதப்பினாலும்
காலம்பிரண்டு கலியுகம்வந்தாலும்
நறுக்கிப்பிழிந்துயென்னை நரகத்திற்போட்டாலும்
வாயாரச்சொன்னசொல்லு மறந்துவிடப்போறதில்லை
ஆதரிப்பேனல்லாமல் அலையவிடப்போறதில்லை
மறுவார்த்தைபேசாதே வல்லுபிணைவாங்கிடுவேன்
எதிரேவறவேண்டாம் இடையதிலும்வேடுவரே
அரகரா அரனேயென்றான் அர்ச்மேலேதியின்மானுன்
அப்போதுபரமசிவன் அருச்சுனற்குயேதுசொல்வார்
நான்.ஏழையென்றோசங்கமரே என்னைமிரட்டுறாய்
என்னைத்துரத்திவிட்டுடன் பன்[illegible]னென்றே
என்னைமிரட்டுகிறாய் இவ்வார்த்தைதா[illegible]றிவேன்

நான்போவேனென்று என்றதேயுன்மனதில்
ஆறுபேர்வேடுவர்கள் அருங்கிளியாள்வேடுவர்சி
உத்தமரேநீயொருவன் உகந்தமேகூடியல்லோ
பன்றிதனைச்சுட்டு பங்கிட்டுக்கொள்வோம்வா
பங்குபோட்டுத்தின்று பசியாறிக்கொள்ளுமென்று
என்றதைக்கேட்டு யேதுசொல்வார்சங்கமரும்
ஜாதிக்குத்தக்கபுத்தி தானிருக்கும்வேடருக்கு
என்றுசொல்லவேடரு மேதுசொல்வாரப்போது
ஆண்டிப்பயலுக்கு அறிவுகிடையாது
பசிக்குதெனவேண்டி பன்றிமேலம்புதொட்டேன்
தப்பித்துஓடிவரக் கம்பத்தில்கட்டலாமோ
கீழேயிறங்கிவாடா கேடுகெட்டசங்கமனே
என்சமர்த்துமுன்சமர்த்தும் இப்போதெரியுமடா
சண்டைக்குவாடாநீ சமர்த்துள்ளசங்கமனே
என்றவுடன்கம்பம்விட்டு இறங்கினான்வாள்விசயன்
வாள்விசயன்றன்முதுகில் மச்சரேகைபார்க்கவென்று
பாமசிவனும்வந்து பார்த்தனுடன்சண்டைபண்ணார்
ஆண்டவனென்றறியாமல் அடித்தான்காண்வில்லாலே
பாமருங்கீழ்விழுந்து பார்த்தனையெடுத்துக்கொண்டார்
பார்வதியாள்பார்த்தாளே பார்த்தனிடமச்சரேகை
பார்த்தீபனென்று பார்வதியாள்பேர்கொடுத்தாள்
பாசுபதாஸ்திரம் பாமருந்தான்கொடுத்தார்
அனேகவரம்பெற்று அர்ச்சுனனுந்தான்வாரான்
அண்ணனிடம்வந்து ஆசையுடனுரைத்தான்
பன்னிரண்டுவருஷம் பாரவனத்திருந்து
ஐவர்பஞ்சபாண்டவரே ஆரணியம்விட்டுநீங்கள்
அக்கியாதவாசம் அருந்தபசுசெல்லுமென்று
இச்சையுடனுரைத்து எம்பெருமான்பயணமானார்
வட்டமாங்கருடனேறி மாயவரும்போகலுற்றார்
துவாரகாபுரிநோக்கி சுவாமியவர்போகலுற்றார்
அப்பால்பஞ்சபாண்டவர்கள் ஆரணியம்விட்டலவோ
பாமருடதன்தயவால் பன்னிரண்டுவருஷஞ்சென்று
வனவாசமேயிருந்து வந்தார்கள்பஞ்சவர்கள்
ஐவர்பஞ்சபாண்டவர்கள் ஆரணியம்விட்டலவோ
நாடேவருகிறார் ராமருடத[illegible]

பாரிலுள்ளஆடவரும் மாதரும்மன்னவரும்
ஆரியரும்மற்றோரும் பாலர்களுந்தான்படிக்க
முன்னாளில்மூதோர் மொழிந்தவனவாசகதை
இன்னாளிற்போற்ற வெழுதாவெழுத்ததனால்
அச்சுக்கூடத்ததிப ரனேகரிதனையில்
உச்சிதமாயச்சிலிகை யோங்கிப்பதிப்பித்தார்கள்
அட்டதிக்கும்புகழ அச்சிலிதைத்தானியற்றி
கற்றோருமற்றோருங் களிப்பாய்ப்படிப்பதற்கு
சொற்குற்றமில்லாமல் சுத்தப்பிரதியதாய்
தப்பிதங்களைத்திருத்தி தன்னாலியன்றமட்டும்
காற்றிசையோர்போற்ற கைலாயமுதலியார்தன்
நிரஞ்சனவிலாசப்பிரசில் சேர்வையுடனச்சடிக்க
இக்கதைதனிலே எழுத்துப்பிழையிருந்தாலும்
தப்புப்பிழைதிருத்தி தயவுடனிரட்சிக்கவும்
ஆல்போற்றழைத்து அறுகுபோல்வேரூன்றி
பால்போனிருகிக்கப் பாரில்நிலைத்தான்வாழி
மூங்கில்போல்சுற்றம் முசியாமல்தான்வாழி
ஒக்கிபோல்வேத முயர்பலவுந்தான்வாழி
வாழிவாழியென்று வாமலித்தார்செல்வாரூர்

விருத்தம்.

இப்பெருங்கதையை யுரைத்தவர்படித்தோர்
மொழிகேட்டோர்பொருள்விரித் துரைத்தோர்
செப்பருமன்பாற் கேட்டவோரிதன்பேர்
செப்பினோர் நினைவிற்றீர்க்கே
எப்பெருஞ்சிறப்பு மைந்தரும்வாழ்வு
மிசைத்ததீர்க் காயுசுமுளராய்
ஒப்பருங்கதியி னிலைபெறவிளங்கி
யும்பரும்புகழ வாழ்குவரே.

பஞ்சபாண்டவர் வனவாசம்.

முற்றிற்று.

புதிய புத்தக விளம்பரம்

வெகுகாலமாக வெளிவர எதிர்பார்த்துக் கொண்டிருந்த

அரிய சரித்திரங்கள்! அரிய சரித்திரங்கள்!!

உலகெங்கும் புகழோங்கப்பெற்ற தமிழ் நாடகாசிரியர்

ஸ்ரீலஸ்ரீ T. T. சங்கரதாஸ் சுவாமி அவர்களால்

இயற்றப்பெற்றவை

வெளியாகி விட்டது! வெளியாகிவிட்டது!!

ஸதி அநுசூயா	ஸ்காந்தம்
அபிமன்யு சுந்தரி	கிருஷ்ண லீலா
சுலோசனா ஸதி	இலங்கா தகனம்
பிரஹ்லாதா	தாராசசாங்கம்
சீமந்தனி	குலேபகாவலி
மிருச்சகடி	தோத்திரப்பிரபந்தத்திரட்டு

பரமானந்தப் பக்தி சங்கீர்த்தனை

முதலிய நாடகப் புத்தகம் வாங்க முயலுவோர் எமது விலா[illegible] புத்தகங்களை வாங்கும்படியாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன்.

கு. மாயாண்டி பிள்ளை,

மனோன்மணி விலாசம் பிரஸ்,

வடக்குமாசிவீதி, மதுரை.